# ஆதாம் ஏவாள்

பட்டுக்கோட்டை பிரபாகர்



L
TION
APAK
TUKK

# ஆதாம்
# ஏவாள்

## 1

நிற்க ஓர் உறுதியான இடம் தாருங்கள். இந்த உலகத்தையே நகர்த்திக் காட்டுகிறேன்.

—ஆர்க்கிமிடீஸ்

நகரம் பனி போர்த்திய கொசு வலையைக் கிழித்தெறிந்துவிட்டு பல்லவனின் டீஸல் முகர்ந்து கிடுகிடுக்கத் துவங்கிவிட்டது. இளைப்பாறல் முடிந்து பொதிகளைச் சுமந்தன சாலைக் கழுதைகள். பஸ் நிறுத்தங்களில் மக்கள் காலை அவசரத்தில் 'உள்ளே' போய்ப் படிக்காமல் மேய்ந்த நுனிப்புல்களுடன் யூகம் சேர்த்து சிலாகித்து, நடுவில் பஸ் வருகிறதா, பாக்கெட்டில் பர்ஸ் இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டார்கள். அங்கங்கே இன்னும்கூட அணைக்க மறந்துபோன ஸோடியம் வேபர்கள் பிரயோஜனமில்லாமல் விழித்துக் கொண்டிருந்தன. அழகான டிராக்ஸ் ஜீப்களில் டிராஃபிக் போலீஸ்காரர்கள் தெருமுனைகள் தேர்வு செய்து நிறுத்தி, ஆள் பார்த்து வண்டிகளை ஓரங்

கட்டச் சொல்லி லைசென்ஸோ, ஆர். ஸி. புக்கோ. இன்ஷ்யூரன்ஸ் காகிதமோ அல்லது 'I Promise to pay' என்று அரசாங்கம் அச்சடித்த காகிதமோ கேட்கத் துவங்கினார்கள்.

உயரமாக சாரம் கட்டி, பிறந்த பலனை அடைய வேண்டும் என்றால் ஸெல்லுலார் போன் வாங்கச் சொல்லி எட்டாவது தாண்டாத ஆசாமிகள் ஆங்கிலத்தில் போர்டு எழுதினார்கள். உலகத்தையே புரட்டிவிடக் கூடிய நெம்புகோல் கவிதையை எழுதுவதற்காக ஜிப்பா தைத்துப் போட்டுக் கொண்டு ஒரு கூட்டம் பெட்டிக் கடைகளில் கோல்ட் ஃபிளேக் கிங் சைஸ் வாங்கியது. மூன்று நட்சத்திர ஓட்டல் அறைகளில் சிக்கனுக்கு ஆர்டர் செய்துவிட்டு ரெஞ்சீவிக்கும், சரத்குமாருக்கும் கதை பண்ணுவதற்காக டிஸ்கஷனில் உட்கார்ந்தவர்கள் முதல் ரவுண்டாகத் தற்கால அரசியலை நான்கு திசைகளிலும் எச்சரிக்கையாகப் பார்த்துக் கொண்டு பேசினார்கள்.

பஸ் பயணப் பெண்களுக்கு ஆபீசரின் நற்சான்றிதழ், கைனெடிக் ஹோண்டாவுக்கு லோன், திரும்பும் போது மறக்காமல் வாங்க வேண்டிய சிக்கரி கலந்த காப்பித்தூள், வரும் ஞாயிறு தோழியின் ரிசப்ஷனுக்குச் செய்யும் பரிசுப் பொருள், பதினைந்து நாளாகத் தொடர்ந்த வாலிபன் நீட்டிய காதல் (?) கடிதம், இரண்டாவது பெண்ணின் ஆங்கிலத்திற்குத் தர வேண்டிய சத்துணவு, எழுபது ரூபாய் டிஸ்கவுண்ட்டில் கிடைக்கிற பாலி காட்டன் சேலை, சமீபகாலமாக அவர் அடிக்கடி குடிக்கிற சிகரெட் என்று பஞ்சமில்லாத கவலைகள் உள்ளே இருந்தாலும், டி. வி. தொடர்களின் நாயகிகளுக்காகக் கிடைத்த ஆசாமிகளிடமெல்லாம் விசனப்பட்டார்கள்.

பாரீஸ் கார்னரில் மக்கள் கொத்தாக ஒரு போராட்டம் மாதிரி சாலையில் புகுந்து பஸ்களுக்குக் கைகாட்டியபடி அவசரமாகக் கடந்து இந்தப் பக்கம் வந்தார்கள். இந்தப்



பக்கத்துக் கும்பல் ஒரு தயக்க வாகனத்திற்காகக் காத்திருந்து, பிளாட்பாரங்களில் பாதியை பெல்ட், ரிப்பன், வளையல், பழம் என்று கடைக்காரர்கள் பங்கு போட்டிருக்க, வீதியில் பார்த்துப் பார்த்துப் பாதம் வைத்து நடப்பவர்களுக்கு ஜிம்னாஸ்டிக்ஸ் தானாக வந்துவிடும். புது மனைவிகளுடன் நடக்கிற புருஷர்களுக்குக் கண்டிப்பாக இரத்த அழுத்தம் அதிகரிக்கும்.

அந்த நெரிசலிலும் அவன் மட்டும் தனியாகத் தெரிந்தான்.

கறுப்பு பேண்ட்டும், க்ரீம் கலர் முழுக்கை சட்டையும் மெரூன் கலரில் ஒரு டையும் கட்டியிருந்தான். பாலீஷ் செய்யப்பட்ட ஷூ. ரேஸர் விளம்பர இளைஞன் மாதிரி சுத்தமான ஷேவிங். விளக்கு முகம் போல தாடை நடுவில் ஒரு சின்ன பள்ளம். கறுகறுப்பான அழகு மீசை. நவீன ஸ்டைலில் முடிகளைத் தவிர கண்களிலும் புன்னகை இருந்தது.

சாலையோரமாக நின்றிருந்த அவன் தன் முதுகிலும், மார்பிலும் அழகான பொம்மைகளைக் கட்டியிருந்தான். அதே பொம்மைகளை இரண்டு கைகளிலும் பிடித்திருந்தான். ஒரு அடி உயரத்தில் இருந்த அந்த பொம்மை அழகாக வண்ணமயமாக இருந்தது. அங்கே நடப்பவர்கள் கடப்பவர்கள் அத்தனை பேரையும் ஒரு விநாடி பிரேக் போட்டு நிறுத்தியது.

அவன் பொம்மையைக் கவனிக்கும் நபர்களைக் கவனித்தான். அனுபவத்தில் அவனுக்கு நபர்களைத் தெரியும். வேடிக்கை மட்டும் பார்த்துவிட்டு நகர்பவன் யார், விலாவாரியாக விசாரித்து விட்டு அருகில் கமெண்ட் அடித்துவிட்டு நடப்பவன் யார், எதுவும் கேட்காமல் 'ஹவ்மச்?' என்று மட்டும் கேட்டு, சொல்லப்படும் தொகையை உடனே எடுத்துக் கொடுத்து பொம்மையோடு கடப்பவன் யார் என்று அவனால் யூகத்தில் சொல்ல முடியும்.

இதேபோல பத்தடி தள்ளி இதே யூனிஃபார்மில் பொம்மை விற்கிற சகநண்பர்களிடம் இவன் பந்தயமே கட்டி ஜெயிப்பதுண்டு.

இப்போது அவன் பார்வை பொம்மையை உன்னிப் பாகக் கவனிக்கும் நெற்றியில் நாமம் போட்ட மாமாவின் மேல் விழுந்தது. கையில் பிளாஸ்டிக் கூடையில் காய்கறி களில் பிரதானமாய் காலிஃபிளவர் நிறைய இடத்தை அடைத்திருக்க, ஒடிக்கப்பட்ட புடலங்காய் நீட்டிக் கொண்டி ருந்தது.

"வாங்கோ சார். ஜஸ்ட் ஹண்ரட் ருபீஸ்தான். வாங்கிக்கறேளா?" என்றான்.

"நூறு ரூபாயா?"

"காஸ்ட்டைப் பார்க்காதிங்கோ சார். குவாலிட் டியைப் பாருங்கோ. இது பிளாஸ்டிக் இல்லை சார், உடையாது. தெறிக்காது, ப்யூர் ரப்பர் மெட்டீரியல். மேல கொடுத்திருக்கிற லைனிங் எல்லாம் ஃபைபர் மெட்டீரியல். இதை நீங்க எப்படி வேணாலும் போட்டுப் புரட்டி அழுக்கு பண்ணிட்டு துணி துவைக்கிற மாதிரி தண்ணி ஊத்திக் கழுவலாம் சார். குழந்தைங்க எடுத்து விளையாடின நேரம் போக உங்காத்து ஷோகேஸ்லவைக்கலாம். என்ன ஒரு ப்ளசென்ட் கலர்ஸ் பாருங்கோ. வீட்ல எதாச்சும் கோபம்னு வைங்கோ இந்த பொம்மை முகத்தை ரெண்டு நிமிஷம் பார்த்தா தியானம் செஞ்ச மாதிரி ஆயிடும் சார்."

"ஆனா நூறு ரூபா அதிகமில்லை?"

மாமா கையில் வாங்கி பொம்மையை அதன் ஜாயிண்டு களில் ஆராய்ந்து பார்த்தார்.

"நூத்தி இருபத்தஞ்சி ரூபான்னு வித்துட்டிருந்தோம் சார். இன்னைக்கும் நாளைக்கும் மட்டும்தான் ப்ரமோஷன் சேல்ஸ்னு சொல்லி கம்பெனில நூறு ரூபாய்க்கு விக்கச்



சொல்லிருக்காங்க. நாளன்னைக்கு வந்து கேட்டீங்கன்னா இதோட விலை நூற்றி இருபத்தியஞ்சுதான்."

மாமா தன் மடியிலிருந்து ஜவுளிக்கடையில் தந்த ஒரு லேடீஸ் பர்சை எடுத்துத் திறந்து முக்கால் மனதுடன் நூறு ரூபாயை எடுத்து, அது ஒற்றைத்தாள்தானா என்று தட்டிப் பார்த்து விட்டுக் கொடுத்தார்.

அவன் அந்த பொம்மையை ஒரு பாலிதீன் கேரிபேகில் போட்டு அவர் கையில் கொடுத்துவிட்டு அடுத்ததாக அந்த சரிதார் பெண்ணைக் குறி வைத்து, "ஜஸ்ட் பாருங்க மேடம். உங்க கார்ல பின்பக்கம் ஷோவா இதை வைக்க லாம். பியூட்டிஃபுல்லா இருக்கும்" என்று ஆரம்பித்தான்.

மத்தியானம் ஒன்றேகாலுக்கு அங்கே ஜன அடர்த்தி கொஞ்சம் குறைந்திருக்க, பொம்மைகள் அணிந்த விமல நாதன் இவனிடம் வந்து, "சத்யா, உனக்கு டைம் ஆகலை?" என்றான்.

சத்யபிரகாஷ் என்கிற சத்யா மணிகட்டில் நேரம் பார்த்து, "அட, ஆமாம் விமல்" என்றான்.

"அப்ப புறப்பட வேண்டியதுதானே?"

"ஒம்போது வித்துட்டேன். இன்னும் ஒண்ணு வித்துட்டா பத்தாய்டும். கமிஷனும் ரவுண்ட் ஃபிகரா கிடைக்குமேன்னு பார்க்கறேன்."

விமல் தன் சிகரெட் பெட்டியை எடுத்து ஒன்றை உருவி கொண்டு இவனுக்கு நீட்ட, "இல்லை. வேணாம்" என்றான் சத்யா.

"என்னாச்சு?"

"நிறுத்திடலாம்னு ஒரு யோசனை."

"சபதமா இல்லை சவாலா?"

''கணக்குப் போட்டுப் பார்த்தா பகீருங்குது விமல். நிறுத்தினா மாசம் இருநூறு ரூபா மிச்சப்படும்.''

''ஹெல்த் பாழாகுதுன்னு சொல்லு நியாயம்.''

''அதுவும்தான்.

''அப்படி காசை மிச்சம் பண்ணி என்னய்யா பண்றே? ஒரு ரம் உண்டா? ரங்கீலா உண்டா? ராத்திரி ரவுண்ட்-அப் உண்டா? சொல்லுய்யா சாமியாரே!''

சத்யா கோபப்பட்டு அவன் சட்டையைப் பிடிக்கிற ரகமில்லை. மென்மையாகப் புன்னகைத்துக் கொண்டு அந்த இளைஞனிடம், 'ஆர் யு இண்ட்ரெஸ்டட் சார்? எ லிட்டில் ஸ்வீட் ஆஃப் ஜஸ்ட் எ ஹண்ட்ரட் ரூபி நோட்.'' என்று வியாபாரம் ஆரம்பித்தான்.

இளைஞன் தன் கண்ணாடியைக் கழற்றித் துடைத்தபடி கேட்ட ஐம்பது கேள்விகளுக்குப் பொறுமையாகப் பதில் சொல்லி கடைசியாகப் பொம்மையை விற்றுவிட்டான்.

தன்னிடமிருந்த மிச்ச பொம்மைகளை ஓரமாக வைத்திருந்த அட்டைப் பெட்டியில் போட்டுக் கட்டினான். தன் டையை அவிழ்த்துச் சுருட்டி பேண்ட் பாக்கெட்டில் வைத்துக் கொண்டு முதலிரண்டு பட்டன்களைக் கழற்றி உள்ளே ஊதிக் கொண்டு மறுபடி நேரம் பார்த்துப் பதறினான்.

''விமல், நான் வரட்டுமா?''

''ஒரு நாள் நீ குளிக்கிறப்ப வந்து பார்க்கணும்யா.''

''என்ன?''

''எத்தனை மச்சமிருக்குன்னு. நீயும், நானும் ஒரே டைம்தான் வந்து நின்னோம். பத்து வித்துட்டியே. நம்ம கிட்ட மூணுதான் போணியாகியிருக்கு. பேசியே அசத்திடறே. நாலு முழம் நீளத்துக்கு டைட்டில் வெச்சிக்கிட்டு ஒரு இந்திப் படம் வந்திருக்கு. நல்லாருக்காம். வர்றியா?''



''இல்லைம்மா. நீ போய்ட்டு வா.''

''என்ன பண்ணப்போறே ஈவினிங்?''

''வேலை இருக்குப்பா.''

''நாத்து நடணுமா? களை எடுக்கணுமா?''

''உங்கிட்ட பேசிட்டு நிக்க நேரமில்லை விமல் வர்றேன். டைமாச்சு. நாளைக்குப் பார்க்கலாம்.''

சத்யா மீண்டும் ஒருமுறை தன் கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டு ஓரமாக நிறுத்தியிருந்த தன் சைக்கிளின் கேரியரில் அட்டைப் பெட்டியை வைத்துக் கட்டிக் கொண்டு புறப்பட்டான். சாலையின் அவசரப் போக்குவரத்து வெள்ளத்தில் கலந்து துடிப்போடு மிதிக்கத் துவங்கினான்.

நிமிடங்களில் அவன் அந்த நிறுவனத்தின் அலுவலகத்தில் இருந்தான்.

'மல்டி ஸ்டார் மார்க்கெட்டிங் கம்பெனி' என்கிற அந்த நிறுவனம் சொந்தமாகப் பொருள் எதையும் தயாரிப்பதில்லை. பொம்மை, பிளாஸ்க், பிளாஸ்டிக் கேரியர், புக் ஷெல்ஃப், ரீடிங் லைட், ஃபோல்டிங் குடை என்று புதுப்புது பொருள்களை மார்க்கெட்டிங் செய்து தருகிற பொறுப்பை மட்டும் ஏற்றுக் கொள்ளும்.

சுறுசுறுப்பான, திறமையான இளைஞர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கு எப்படி சாதுரியமாக விற்பனை செய்வதென்று பாடம் நடத்தி, பொருளைக் கொடுத்தனுப்பும். விற்பனை செய்கிற பொருள்களுக்குக் கமிஷன். கமிஷன் சதவிகிதம் பொருளுக்குப் பொருள் மாறுபடும். சிலவற்றுர்குப் பத்து சதவிகிதம். சிலவற்றுக்குப் பதினைந்து.

சத்யா ஒரு அறையில் மிச்ச பொம்மைகளை ஒப்படைத்து, அவன் பத்து விற்றிருக்கிறான் என்பதற்கான வவுச்சர் பெற்றுக்கொண்டு, கம்ப்யூட்டர் முன்பாகக் கண்ணாடி அணிந்து வண்ணநிலவனின் 'ரெயினீஸ் அய்யர் தெரு' படித்துக் கொண்டிருந்த சங்கீதா முன்பு வந்து நின்றான்.

பத்து சதவிகிதக் கணக்கில் தன் கமிஷன் நூறு ரூபாய் போக மீதித் தொகையையும், வவுச்சரையும் அவளிடம் வைத்து, "எக்ஸ்க்யூஸ் மி. எண்டர் பண்ணிட்டா நான் போய்டுவேன். எனக்கு நேரமாச்சி" என்றான்.

அவள், "ஸாரி", என்று புத்தகத்தைக் கவிழ்த்துவிட்டு கம்ப்யூட்டரில் பதிவு செய்து கொண்டு, பணத்திற்கு ஒரு ரசீது கொடுத்தாள்.

"சத்யா, இன்னிக்கு நிச்சயம் அஞ்சி நிமிஷம் லேட்டாத்தான் போகப் போறீங்க. நிதானமாப் போங்க" என்று அவள் சொன்னதை முதுகில் வாங்கிக் கொண்ட சத்யா அங்கிருந்த ஒரு அறைக்குள் நுழைந்து யூனிஃபார்ம் கழற்றி விட்டு அங்கே மாட்டி வைத்திருந்த தனது ஜீன்ஸ் பேண்ட்டையும், டி-ஷர்ட்டையும் அணிந்து கொண்டான். கண்ணாடியில் பார்த்து விரல்களால் கோதிக் கொண்டு வெளியேறினான்.

"சாயாவனம் கேட்டனே சத்யா" என்ற சங்கீதாவின் குரலுக்கு, "கண்டிப்பா நாளைக்கு எடுத்துட்டு வர்றேன்" என்றபடி விரைந்து சைக்கிளில் கிட்டத்தட்ட தாவி அமர்ந்து மிதித்தான்.

மூன்றாவது நிமிடம் அந்தக் காம்பௌண்டில் அவன் சைக்கிள் நுழைந்தது. ஆஸ்பெஸ்டாஸ் வேய்ந்த ஷெட்டில் ஏராளமான சைக்கிள்களும், ஸ்கூட்டர்களும் நின்றிருக்க, தன்னுடையதை இடம் பார்த்து நிறுத்திப் பூட்டிவிட்டு, கட்டிடத்தை நோக்கி ஓட்டமாக விரைந்தான்.



படிகள் ஏறினான். வராந்தாவில் நடந்தான்.

அந்த வகுப்பறையில் புரொபஸர் கையில் அட்டெண்டன்ஸ் புக் வைத்து, "எல். சத்யபிரகாஷ்! வரல்லையா?" என்றபோது...

"எஸ் சார்!" என்று வாசலில் மூச்சிரைத்தான்.

## 2

**விண்ணப்பித்துப் பூப்பதில்லை பூக்கள்.**
**—ஆல்ஃப்ரெட் ஐன்ஜர்**

அந்த வகுப்பறையில் சினிமா தியேட்டர்போல படிப்படியாய் உயரம் அமைத்து டெஸ்க்குகள் போடப்பட்டிருந்தன. யாருக்கும் முன் நபரின் தலை மறைக்காமல் போர்டு தெரியும். குரூப் போட்டோ எடுக்க சௌகரியமாக மாணவர்களும், மாணவிகளும் அமர்ந்திருந்தார்கள். நான்கு மின்விசிறிகள் சுழன்று கொண்டிருந்தன.

"யெஸ், கமின்" என்றார் புரொபசர் சீனிவாசன். வாசலில் நின்றிருந்த சத்யாவைப் பார்த்து.

"தேங்க்யூ சார்" என்றுவிட்டு சத்ய பிரகாஷ் படிகள் ஏறி, தனபால் உள்ளே நகர்ந்து இடம் தர, அவனருகில் அமர்ந்து கர்சீப் எடுத்து முகத்தில் வியர்வை துடைத்துக் கொண்டான்.

முன் டெஸ்க்கிலிருந்து திரும்பாமல் ஒரு ரகசிய கை மட்டும் நீட்டினாள் வினோதினி. கையில் சிக்லெட் பாக்கெட் இருந்தது.

"வேணாம்" என்றான் சத்யா.

தனபால் இரண்டு எடுத்து வாயில் போட்டுக்கொண்டு. 'ஏன் லேட்டு?'' என்றான் சன்னக் குரலில்.

''டிராஃபிக்.''

''பேசாம லைப்ரரிக்குப் போய் ரெஸ்ட் எடுத்துட்டு அடுத்த அவர் வரலாமில்ல? நம்ம ஜென்டில்மேன் கிளாசை மிஸ் பண்ணினா தப்பே இல்லை. கிளாஸ் ஆரம்பிக்கிறதுக்கு முன்னாடியே கொட்டாவி வருதுடா.

புரொபசர் சீனிவாசன் ஒரு மணி நேரத்தில் முப்பது, நாப்பது தடவையாவது 'ஜென்டில்மேன்' என்கிற வார்த்தையை உபயோகிப்பதால், அதுவே அவரின் பட்டப் பெயரானது.

குண்டான ஒரு லெக்சரருக்கு டபுள் டெக்கர், கண்ணாடி அணிந்து சதா அதைக் கழற்றி கையில் வைத்துக் கொள்ளும் இன்னொரு லெக்சரருக்கு 'Glass bra,' பாய்ண்ட் என்கிற வார்த்தையை சும்மா உபயோகிக்கும் மற்றொரு லெக்சரருக்கு 'பாய்ண்ட்டு பாய்ண்ட்'— என்று காரண காரியத்தோடு பெயர்கள் சூட்டி, அங்கே எந்த மாணவனுக்கும் எந்த லெக்சரரின் நிஜப் பெயரும் தெரியாது.

அட்டெண்டன்ஸ் புத்தகத்தை மூடி வைத்த புரொபசர் சீனிவாசன் தன் டை அடித்த மீசைக்குக் கீழே சிரித்து, ''ஜென்டில்மேன்'' என்றார்.

அந்த வகுப்பில் முப்பத்தி நாலு ஆண்களோடு ஒன்பது பெண்களும் படித்தாலும் அவர் 'ஜென்டில்மென்' சொல்வதில்லை.

தனபாலுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த ஜோசப் தன் பஸ் டிக்கெட் எடுத்து அதன் பின்புறம் பேனாவில் ஒரு சின்ன கோடு போட்டு தனபாலைத் தொட்டு, ''பந்தயம் கட்டறியா? நான் ஒத்தைப் படைன்றேன்'' என்றான்.



''ரைட்மா. நான் ரெட்டைப் படைன்றேன். என்ன பந்தயம்?''

''ஒரு ஹேவர்ட்ஸ் ஃபைவ் தவுஸண்ட்.''

''ஓ.கே.'' என்றான் தனபால்.

சீனிவாசன் லாரல் (ஹார்டி) போல சாய்ந்து நின்று தன் கோட்டை ஒதுக்கி இடுப்பில் கை வைத்து நாடகத்தனமான கை அசைவுகளோடு பாடத்தை ஆரம்பித்தார். ''வெல் ஜென்டில்மேன், நவ் வி ஆர் கோயிங் டு டீல் வித் ஐ எம் எஃப்! ஆஸ் யு ஹாவ் ஆல்ரெடி கான் த்ரூ த பேஸிக் ஃபாக்டர்ஸ் இன் யுவர் டிகிரி கோர்ஸ் இடசெல்ஃப் ஜென்டில்மேன், ஹியர் வி கோ இன்டு டீட்டெய்ல்ஸ்...''

அவர் 'ஜென்டில்மேன்' என்று உபயோகிக்கும் போதெல்லாம் ஜோசப்பின் பேனா பால் கணக்கு மாதிரி அருகருகே சின்னக் கோடுகள் போட்டன. தனபால் அதை மேற்பார்வை செய்து கொண்டான்.

சத்யா இந்த விளையாட்டுகளில் நாட்டமில்லாமல் பாடத்தை கவனித்து, தப்பாமல் குறிப்புகள் எழுதிக் கொண்டிருந்தான்.

இன்னொரு பெஞ்சில் பார்வையை மட்டும் புரொபசரின் மேல் பதித்துக் கொண்டு அதிகமாக உதடு பிரிக்காமல் சன்னக்குரல்களில் பேசிக் கொண்டார்கள்.

''ஜென்டில்மேன் வீட்டுக்குப் போயிருக்கியா நீ?''

''இல்லையே. பொண்ணு நல்லாருப்பாளா? பார்த்திருக்கியா?''

''பார்த்திருக்கேன். அஞ்சால் அலுப்பு மருந்து கேஸ். அப்பதான் துவச்சி தொங்கவிட்ட மாதிரி செம சொங்கிப்பா. ஊதுபத்திக் குச்சிக்கு கை, கால் முளைச்சி பார்த்ததில்லைன்னா சார் வீட்டுக்குப் போய்ப் பாரு.''

"பின்ன ஏண்டா வாரம் ஒரு தடவை போயிடறே?"

"கன்னுக்குட்டிதான் நல்லால்லைன்னு சொன்னேன்.

"பாவி! அப்பளம், ஊறுகா கொடுத்தே மாமியை பிராக்கெட் போட்டுட்டியா மச்சி? டேய், சொல்டா."

"போன வாரம் வரைக்கும் அப்படி ஒரு முயற்சி இருந்திச்சு. அப்புறம் பினாயில் போட்டுக் கழுவித் துடைச்சி சந்தனம் பூசியாச்சு."

"ஏண்டா?"

"போன வாரம் போயிருந்தப்ப மாமி என்னைக் கூப்புட்டு கேக்க சங்கடமா இருக்குன்னாங்க, 'சும்மா கேளுங்க மாமி, நான் வேற, நீங்க வேறயா?'ன்னு டயலாக் வுட்டேன்."

"கூடவே ஜொள்ளும் வுட்டியா?"

"அது வழக்கமா விடறதுதானே. ரெண்டு பாக்கெட்ல யும் ரெண்டு கர்சீப் வெச்சிக்கிறது வேற எதுக்கு?"

"கம் டு த மேட்டர். மாமி என்ன கேட்டாங்க?"

"இன்னைக்கு வீட்ல திவசம். சுத்தமா மறந்துட்டேன்' கடைக்குப் போய் நாலு வெத்தலை மட்டும் வாங்கிட்டு வந்துடறிங்களா 'தம்பி'ன்னாங்க."

"தம்பி?"

"அந்த வார்த்தைதான் வெடிகுண்டா எனக்குள்ளே வெடுச்சுது."

"ஆழ்ந்த அனுதாபங்கள். பாவம் நீ! எத்தனைக் கட்டு அப்பளம் கொடுத்தே! எத்தனை பாட்டில் ஊறுகா! தக்காளி சாஸ், பருப்புப் பொடின்னு ... ரொம்பதான் செலவு பண்ணிட்டே இல்ல?"

"ஒரு அக்காவுக்கு தம்பி செஞ்ச சீருல கணக்கு பார்க்கக் கூடாது."



இன்னொரு டெஸ்க்கில் ஜானகிராமன் என்பவன் தன் அருகில் அமர்ந்திருந்த மாலதியிடம், "அய்யய்யோ! பதினைஞ்சி நிமிஷம் தொடர்ந்து ஒழுங்கா பாடம் நடத்த விட்டுட்டமே. இதுக்குமேல வாங்கிக்கிட்டா மூளை வெடிச்சிடாது?" என்றான்.

"எதாச்சும் பண்ணு ஜானகி. எனக்கும் தலை வலிக்குது" என்றாள் அவள்.

"இரு" என்றான். தன் பேண்ட் பாக்கெட்டில் இருந்து தீப்பெட்டி எடுத்தான். டெஸ்க்குக்கு அடியில் மறைவாக வைத்து தீக்குச்சி எடுத்துத் தயாராக வைத்துக் கொண்டான்.

புரொபசர் போர்டு பக்கம் திரும்பி தான் எழுதியதைச் சுட்டிக்காட்டி பாடத்தைத் தொடர்ந்தபோது...

'சர்ரக்' என்று குச்சி கிழித்து, உடனே அணைத்துப் போட்டுவிட்டு கைகளைக் கட்டிக் கொண்டான்.

புரொபசர் கோபமாகத் திரும்பினார்.

"யாரு? கிளாசுக்குள்ளே ஸ்மோக் பண்றது யாரு?"

வகுப்பறை முழுக்க அமைதியாக இருந்தது.

"என்னை ஏமாத்த முடியாது." மூக்கால் காற்றை உறிஞ்சிப் பார்த்து, "கந்தக ஸ்மெல். இப்ப தீக்குச்சி உரசின சத்தம் கேட்டது. ஸம்படி ஈஸ் ஸ்மோக்கிங். ஹூ ஈஸ் இட்?"

யாரும் பதில் பேசவில்லை.

"ஜென்டில்மென், யு மஸ்ட் ஹேவ் சம் பேஸிக் டிஸிப்ளின் ஹியர். உங்களை சிகரெட் குடிக்க வேணாம்னு யார் சொன்னது. வெளில போய் பாக்கெட் பாக்கெட்டா ஊதித் தள்ளுங்க. யார் தடுத்தாங்க? நோ! நாட் இன்சைட்

தி கிளாஸ். யார் அது? எனக்குத் தெரிஞ்சாகணும். ஹூ ஈஸ் தட் ஜென்டில்மேன்?'' தொண்டை நரம்புகள் அசையக் கத்தினார்.

ஜோசப் தன் கணக்கில் மேலும் இரண்டு கோடுகள் போட்டான்.

தனபால் அவன் காதோரம் அதை ஆட்சேபித்தான். ''கடைசியா சொன்னது ஜென்டில்மேன் இல்லை, ஜென்டில் மேன், அது நம்ம கணக்குக்கு வராது ஜோசப்.''

''ஓ.கே. ஓ.கே'' என்றான் ஜோசப்.

வகுப்பறை மீண்டும் அமைதிப் புரட்சி செய்யவே, புரொபசர் தன் புத்தகத்தை மூடினார்.

''ஹெட் ஆஃப் தி டிபார்ட்மென்ட் நான், அந்தப் பதவிக்குக் கூட நீங்க மரியாதை கொடுக்கலை. என்னுடைய கண்டனத்தைப் பதிவு பண்ண விரும்புறேன். ஐ வாக் அவுட் ஜென்டில்மென்'' என்று கூறிவிட்டு விடுவிடுவென்று நடந்து போனதும்... மாலதியும், ஜானகிராமனும் கைகுலுக்கிக் கொண்டார்கள். செருப்புகள் சரசரக்க எல்லாரும் எழுந்தார்கள்.

''நான்தான் ஜெயிச்சேன்'' என்று உடம்பை அசைத்து விண்ணைக் குத்திக் கத்தினான் ஜோசப். ''எந்திரி தனபால் இப்பவே அடுத்த அவர் ஆரம்பிக்கிறதுக்குள்ளே போய்ட்டு வந்துடலாம்.''

''நீயும் வர்றியா சத்யா?'' என்றான் தனபால்.

''எங்க?''

''இன்னிக்கு நம்ம ஜென்டில்மென் எத்தனை தடவை சொல்வாருன்னு ஒத்தையா, ரெட்டையா பந்தயம் கட்டினோம். ராஸ்கல் இவன் ஜெயிச்சித் தொலைச்சுட்டான். ஒரு பாட்டில் பீர் வாங்கித் தரணும். நீயும், நானும் டீ சாப்பிடலாம். வா.''



''நான் வரலை, நீங்க போய்ட்டு வாங்க.''

வகுப்பறையை விட்டு வெளியே வந்தவர்களில் ஒரு குழு கான்டீனுக்கு நடந்தது. ஒரு குழு மர நிழலில் அமர்ந்து தம்மடித்து அரட்டையடித்தது. சில உருப்படாதவை லைப்ரரிக்குச் சென்றன.

சத்யா நடந்து ஒரு மர நிழலில் அமர்ந்து மரத்தில் முதுகு சாய்த்துக் கொண்டான். தன் துப்பட்டாவைச் சரி செய்தபடி வந்து அவனருகில் அமர்ந்தாள் வினோதினி.

''ஜானகிராமனோட வேலைதானே சத்யா? நல்லா நடத்திட்டிருந்தார். மூட் அவுட் செஞ்சுட்டான். ஈவினிங் காலேஜ்ல மொத்தமே நமக்கு நாலு மணி நேரம்தான். அதிலயும் அடிக்கடி இப்படி வேஸ்ட் பண்ணிடறாங்க.''

''எக்னாமிக்ஸ்ன்றதால வி டோண்ட் மிஸ் மச் புக் பார்த்ததும் படிச்சிக்கலாம். நல்ல வேளையா? நாம் சயின்ஸ் சப்ஜெக்ட்ஸ் எதுவும் பண்ணலைன்னு நினைச்சுக்கோ வினோதினி.''

''உங்க ஹாஸ்டல்ல நேத்து எவனோ திருடன் வந்துட்டானாமே? அப்படியா? சுவாமிநாதன் சொன்னான்''

''மூணு ரூம்ல வாட்ச் போய்டுச்சி. நிறைய ரூம்ல கழட்டி மாட்டியிருந்த பேண்ட்,சட்டை நிறைய போய்டுச்சி. என்னோட ஒரு சட்டை போய்டுச்சி. ஜன்னல் வழியா கம்பி விட்டு திறமையா திருடியிருக்கான்.''

''சட்டைல பணம் எதுவும் வெச்சிருந்திங்களா?''

'முப்பது ரூபாதான் இருந்திச்சி பாக்கெட்ல. எனக்கு அது கூட கவலை இல்லை. அமெரிக்கன் லைப்ரரியோட மெம்பர்ஷிப் கார்டும் அம்மாவுக்கு எழுதி போஸ்ட் பண்றதுக்குத் தயாரா ஒரு கவரும் வெச்சிருந்தேன். அதுவும் சட்டையோட போய்டுச்சி.''

"தபாலை விடுங்க. மறுபடி எழுதிக்கலாம். மறுபடி கார்டு வாங்கறது கஷ்டம் இல்ல?"

"இல்லை வினோதினி. காணாமப் போயிடுச்சுன்னு எழுதிக் கொடுத்து வேற மெம்பர்ஷிப் கார்டு வாங்கிக்கலாம். என்னைப் பொறுத்த வரைக்கும் தபால் போனதுதான் கஷ்டமா இருக்கு. அஞ்சி பக்கத்துக்கு எழுதியிருந்தேன்."

"அன்புள்ள அம்மா, நலம், நலமா? இப்பவும் செலவுக்கு ஐநூறு ரூபாய் பணம் அனுப்பவும். இப்படிக்கு சத்ய பிரகாஷ்—இவ்வளவுதானே மேட்டர்? இப்படித்தானே யாரும் எழுதுவாங்க? இதை அஞ்சி பக்கத்துக்கு எழுத என்ன இருக்கு?"

சத்யா சிரித்தான். "இல்லை வினோதினி. நான் இது வரைக்கும் ஒரு தடவைகூட பணம் கேட்டு எங்கம்மாவுக்கு எழுதினதில்லை. அவங்களும் அனுப்பினதில்லை."

"பின்னே செலவுக்கு என்ன பண்றிங்க? ஃபீஸ், புக்ஸ், மெஸ் பில், இதெல்லாம்?"

"நானே சமாளிச்சுக்கறேன்."

"சமாளிச்சுக்கிறதுன்னா?"

"காலைல அஞ்சு மணிக்கெல்லாம் எந்திருச்சிடுவேன். ஆறு மணிக்கு ரெடியாகிடுவேன். மத்தியானம் ரெண்டு மணிக்குதானே காலேஜ். நடுவுல முழுசா எட்டு மணி நேரம் இருக்கே. பத்து மணி வரைக்கும் ஒரு வக்கீல் வீட்டுக்குப் போய் டைப் அடிக்க வேண்டிய கோர்ட் பேப்பர்ஸ் டைப் பண்ணிக் கொடுப்பேன். அப்புறம் ஒரு மார்க்கெட்டிங் கம்பெனில பார்ட்—டைம் ஸேல்ஸ்மேன் வேலை."

"மை குட்னஸ். நீங்களும் எங்களை மாதிரி ரெகுலர் காலேஜ்ல சீட் கிடைக்காமதான் ஈவினிங் காலேஜ்ல படிக்கிறிங்கன்னு நினைச்சிட்டிருந்தேன். சிம்ப்ளி யு ஆர்



கிரேட் சத்யா" என்றாள் வினோதினி. "ஆமாம் அம்மாவுக்கு அஞ்சி பக்கத்துக்கு என்ன எழுதுவிங்க?"

"நானாச்சும் பரவாயில்லைங்க! எங்கம்மா எட்டு பக்கத்துக்குக் குறைஞ்சி ஒரு லெட்டரும் எழுதினதில்லை."

"சொல்லுங்களேன். என்ன எழுதிக்குவீங்க அப்படி?"

"எல்லாமே லவ் லெட்டர்ஸ் வினோதினி" என்றான்! சத்யா.

# 3

ஒரு சிந்தனையைவிட அபாயமானது வேறெதுவு மில்லை- அதாவது உன்னிடம் ஒரே ஒரு சிந்தனை மட்டுமே இருந்தால்.

—அலைன்

வினோதினி தன் தோள்களைகளை அலட்சியமாய் உயர்த்தி, கைகளை விரித்து நாடகமாக "வாட் சத்யா, எந்த அம்மாவுக்குத்தான் தன் பிள்ளை மேல் லவ் இருக்காது. இல்லை எந்தப் பிள்ளைக்குத்தான் தன் அம்மா மேல் லவ் இருக்காது? பக்கம் பக்கமா லெட்டர் எழுதிக்கிற அளவுக்கு என்ன அப்படி ஸ்பெஷல்னு கேட்டேன்' என்றாள்.

தன் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு இவனைப் பார்த்த அவளின் ஒற்றை மூக்குத்தியின் கல்லில் மர இலைகள் வடிகட்டியனுப்பிய ஒரு சூரியக் கதிர் நொண்டியடித்தது.

சத்யா பதில் பேசாமல் சிரித்தபடி கல்லூரிக் கட்டிடத்தின் உச்சியில் வரிசையாக இராணுவ வீரர்களைப் போல உட்கார்ந்திருந்த காக்கைகளைப் பார்த்தான்.

அவை உட்கார்ந்திருக்கின்றனவா, இல்லை. நின்று கொண்டிருக்கின்றனவா என்று உள்ளே கேள்வி எழுந்தது பூனை, நாய், புலி, சிங்கம், யானை இவை எல்லாம் நிற்கும், உட்காரும், படுக்கும். பறவை உட்காருமா? மடங்கல் இல்லையே காக்கையிடம் எனில் காக்கா நிற்கிறது என்று தானே சொல்ல வேண்டும் நாம்? ஏன் உட்கார்ந்திருப்பதாகச் சொல்கிறோம்.

"வினோதினி அந்த பில்டிங்குக்கு மேல் காக்கா எல்லாம் என்ன செய்யுது?" என்றான் சத்யா.

வினோதினி திரும்பிப் பார்த்து விட்டு "சும்மா உக்காந்திருக்கு" என்றாள்.

"உட்காந்திருக்கா, நின்னுக்கிட்டிருக்கா?"

"என்னது?"

"காக்காவால் உக்கார முடியுமா? அதோட ரெண்டு காலால நிக்குது. பின்னே ஏன் அது உக்காந்திருக்கிறதாச் சொல்றோம்."

"அய்யோ! அறுக்காதிங்க சத்யா!"

"என்ன எழுதிக்குவோம் பக்கம் பக்கமான்னு கேட்டியில்ல. இப்போ இந்த நிமிஷம் என் மனசுல ஏற்பட்ட இந்த காக்கா கேள்வியை அம்மாவுக்கு எழுதற லெட்டர்ல எழுதுவேன் வினோதினி. நடந்த நிகழ்ச்சிகள், என் சௌகரியங்கள் தாண்டி, என் சிந்தனைகள் நுணுக்கமான எண்ணங்கள் எல்லாத்தையும் எழுதுவேன். அப்படித்தான் அவங்களும்."

"டைரி எழுதற மாதிரி இல்ல?"

"நீ டைரி எழுதுவியா?"

"ம்கூம்."

"ஏன், அப்படி ஆர்வமே இல்லையா?"



"ஆர்வம் இருக்கு. ஆனா பயம்."

"என்ன பயம்?"

"யாராச்சும் எடுத்துப் படிச்சிட்டா? அதனால எழுதறதே இல்லை."

"டைரி எழுதறவங்களைப் பத்தி நான் சீரியஸா யோசிச்சு வெச்சிருக்கேன் வினோதினி. உன்னை மாதிரி அடுத்தவங்களுக்குத் தெரிஞ்சிடக் கூடாதுன்னு கொஞ்சம் பேர் எழுதறதில்லை. அதை மீறி எழுதறவங்களுக்கெல்லாம் அந்த பயம் இல்லைன்னு சொல்லிட முடியாது. என்னைக் காச்சும் யாராச்சும் படிச்சாலும் தன் டைரி தன்னைப் பத்தின உயர்வான இமேஜை ஏற்படுத்தணும்னு ஒரு அந்தரங்க விருப்பத்தோட டீசண்டான விஷயங்களை மட்டும் சிலபேர் பதிவு பண்ணுவாங்க. நூறு சதவிகிதம் நேர்மையா, உண்மையா டைரி எழுதறவங்க ரொம்ப கொஞ்சம் பேர் தான்."

"நீங்க டைரி எழுதுவிங்களா சத்யா?"

"எழுதுவேன்"

"நீங்க சொன்னதில நீங்க எந்த ரகம்"

"என்னைப் பத்தி நானே முழுக்க தெரிஞ்சிக்கிறதுக்கு என் டைரி எனக்கு உதவும். என் பழைய டைரியை நானே அடிக்கடி படிக்சுப் பார்த்து ரசிப்பேன்."

"எதை?"

"ஒரு மனுஷ மனசோட விநோதமான தன்மைகளை நினைச்சு."

"புரியலை சத்யா."

"என் டைரியை யாராச்சும் எடுத்துப் படிச்சா மண்டை சுத்தும். என்னைப் பத்தி ஒரு முடிவுக்கு வர முடியாம குழம்பிப் போய்டுவான். சத்யா ஒரு ஹீரோவா,

வில்லனா, பஃபூனா, ஞானியா, அசடா, புத்திசாலியா, பைத்தியமான்னு புரிஞ்சுக்க முடியாது. அந்த நாள், அந்த சம்பவத்தின்போது நான் எப்படி இருந்தேன். எப்படி உணர்ந்தேனனு நூறு சதவிகிதம் உண்மையா பதிவு செஞ்சி வெச்சிடுவேன்.''

''உங்க டைரி ரொம்ப இன்ட்ரஸ்டிங்கா இருக்கும்னு மட்டும் நல்லாப் புரியுது. ஒருநாள் உங்க ஹாஸ்டலுக்கு வந்து திருடிட்டு வந்து படிச்சிப் பார்க்கறேன்.''

''அவ்வளவு கஷ்டப்பட வேணாம். உனக்கு தைரியம் இருந்தா நானே தர்ரேன். படிச்சிப் பாரு.''

''கொடுக்கறதுக்கு உங்களுக்குத் தானே தைரியம் வேணும். படிக்கிறதுக்கு எதுக்கு தைரியம்?''

சத்யா சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறீங்க?''

''உண்மையா இருக்கறதுக்கு தைரியம் வேணுமா? உண்மையைச் சந்திக்கிறதுக்கு தைரியம் வேணுமா? உண்மையா இருக்கறதுக்கு பக்குவம் மட்டும் போதும் வினோதினி உண்மையை சந்திக்கிறதுக்குதான் எக்கச்சக்கமான தைரியம் வேணும் ஏன்னா உண்மைங்கிறது பல சமயங்கள்ல அசிங்கமா இருக்கும். அதிர்ச்சியா இருக்கும்.''

''கையெடுத்துக் கும்புடறேன் ஆளை விட்டுடுங்க. உங்க லெவல் வேற, என் லெவல் வேற அம்மாவுக்கு பக்கம் பக்கமா எழுதறதுக்கு என்ன விஷயம் இருக்க முடியும்னு தெரியாத்தனமா கேட்டுத் தொலைச்சுட்டேன். வேற பேசுவமே.''

''சரி.''

''என்ன சினிமா பார்த்திங்க கடைசியா?''

''பியூட்டிஃபுல் ஸ்ட்ரேன்ஜர்.''



எங்க ஓடுது?''

''தியேட்டர்ல ஓடலை. நான் ஃபிலிம் சொசைட்டில மெம்பர் ஃபிலிம் சேம்பர் தியேட்டர்ல போட்ருந்தாங்க. போலண்ட் நாட்டுப் படம். வீடியோஸ்கோப்.''

''அடுத்த அவர் கிளாஸ் போறதுக்கு முன்னாடி ஐ பேட்லி நீட் எ காஃபி. காண்டீன் போய்ட்டு வந்துடறேன் சத்யா.''

வினோதினி எழுந்து அவனை விட்டு நாலடி விலகியதும் குக்கர் போல் நீளமாகப் பெருமூச்சு விட்டு நடந்தாள்.

ஃ ஃ ஃ

அந்த ஹாஸ்டலில் மொத்தம் தொண்ணூறு அறைகள் மூன்று மாடிகள். 'ப' வடிவத்தில் கட்டிடம் கட்டிடத்தின் வெளிப்புறத்தில் என்றோ, யாரோ நட்ட வரிசையான தூங்குமூஞ்சி மரங்கள்.

மாலை ஆறரை மணிக்குச் சூரிய வெளிச்சத்தின் கடைசிச் சொட்டு மட்டுமே பிரதேசத்தில் பாக்கியிருக்க, மரங்களின் பொடி இலைகள் ஏதோ குற்றம் செய்துவிட்டதைப் போலத் தலைகளைத் தொங்கப் போட்டிருந்தன.

மூன்று முனை கட்டிடத்திற்கு நடுவில் இருந்த கிரவுண்டில் நெட் கட்டி பேட்மிண்ட்டனும், வாலிபாலும் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

அங்கங்கே சிமெண்ட் பெஞ்ச்களில், மரங்களின் அடியில் கைலி கட்டின மாணவர்கள் படிப்புத் தவிர, மற்ற எல்லா விஷயங்களைப் பற்றியும் பேசிக் கொண்டிருக்க, நான்கில் இரண்டு பேர் கையில் தப்பாமல் சிகரெட் புகைந்தது.

மாலைக் கல்லூரி முடிந்து தனபாலுடன் பேசியபடி ஹாஸ்டலை நோக்கி வந்து கொண்டிருந்தான் சத்யா.

"கவனிச்சியா சத்யா, ரெண்டு நாளா தீபக் காலேஜுக்கு வரலை."

"ஆமாம், அவன் என்னைக்கு ரெகுலரா வந்திருக்கான்?"

"ரெண்டு நாளா ஆஷாவும் காலேஜுக்கு வரலை."

"அநாவசியமா முடிச்சுப் போடாதே தனபால்."

"தீபக் புதுசா மாருதி ஜென் வாங்கியிருக்கான் சத்யா."

"அதனால?"

"அவனுக்குப் பெங்களூர்ல ஒரு கெஸ்ட் ஹவுஸ் இருக்குப்பா."

"இப்ப என்ன சொல்ல வர்றே?"

"போனவாரம் ஆஷாவுக்குப் பர்த் டே வந்திச்சி இல்ல· எல்லாருக்கும் சாக்லேட் கொடுத்தாளா, நீகூட அவ நோட்ல ஒரு வாழ்த்துக் கவிதை எழுதி கையெழுத்துப் போட்டியே."

"அதுக்கென்ன?"

"அப்ப அவ போட்ருந்த சுரிதாரோட விலை இரண்டாயிரம் ரூபா. ஸ்பெஷலா டிசைன் செஞ்சது. ஆர்டர் கொடுத்து வாங்கினது. அதை வாங்கிக் கொடுத்தது தீபக். அது உனக்குத் தெரியுமா தெரியாதா?"

"தெரியாதுப்பா."

"நம்ம கிளாஸ்ல அத்தனை பேருக்கும் தெரியும். உனக்குத் தெரியாதுன்னு சொல்றியே."

"தனபால், என்னை விட்டுவிடு. எனக்கு இதில எல்லாம் இன்ட்ரெஸ்ட் இல்லை."



"உன்னை யாரையாச்சும் பெங்களூருக்குக் கூட்டிட்டுப் போகச் சொன்னாங்களா சத்யா? நாட்டு நடப்பு தெரிஞ்சு வெச்சுக்க வேணாமா?"

"வேணாம் தனபால். வம்புக்கு அலையாதே. நீ விளையாட்டா எதையாச்சும் கொளுத்திப் போட்டுட்டுப் போயிடுவே. பின்னாடி அந்தப் பெண்ணோட வாழ்க்கையையே அது பாதிக்கும்."

"ஆஷா தீபக்கோட பெங்களூர் போயிருக்கான்னு நான் சொல்றேன். நீ இல்லைன்னு சொல்றியா?"

"உனக்கு நிச்சயமாத் தெரியுமா?"

"ஒன் ப்ளஸ் ஒன் ஈஸ் ஈக்வல் டு ட்டூ."

"எல்லா சந்தர்ப்பத்திலயும் ஒண்ணும் ஒண்ணும் சேர்ந்தா ரெண்டாகணும்னு அவசியம் இல்லை தனபால். தோசைக்கல் மேல ஒரு கரண்டி தோசை மாவு ஊத்து· அதுக்கு மேல இன்னொரு கரண்டி மாவு ஊத்து. பரப்பு· இப்ப உனக்குக் கிடைக்கிறது ரெண்டு தோசை இல்லை; ஒரு தோசைதான்."

"இது சும்மா வறட்டு வாதம். நான் பந்தயக் கட்டத் தயார். தீபக்கும், ஆஷாவும் புதுக் கார்ல பெங்களூர் போயிருக்காங்க சத்யா. நான் நிரூபிக்கிறேன். என்ன பந்தயம் கட்றே?"

"நான்சென்ஸ். அப்படியே போயிருந்தாலும் இது அவங்களோட சொந்த விஷயம் தனபால். நீ பந்தயம் கட்டி விளையாடறது நாகரீகமே இல்லை."

"பந்தயம் கட்றது நாகரீகமில்லைன்னு சொன்னியே, ஒத்துக்கறேன். ஆனா அடுத்தவங்க சொந்த விஷயம்னு நாம கண்டுக்காம எல்லா சமயத்திலயும் ஒதுங்கிக்கணும்னு அவசியம் இல்லை. ரோட்ல நீ போய்க்கிட்டு இருக்கே.

ஒரு சின்னபையனை ஒரு ஆள் பப்ளிக்கா போட்டு அடிக்கிறான். அது அவங்க சொந்த விஷயம்னு நீ பாட்டுக்குப் போய்டுவியா? நின்னு, அடிக்கிறதைத் தடுத்து, ஏன்யா அவனைப் போட்டு அடிக்கிறேன்னு கேக்க மாட்டியா?''

''இதுவும் அதுவும் ஒண்ணா?''

''நிச்சயமா. தீபக் எப்படிப்பட்டவன்னு உனக்குத் தெரியுமா?''

''தெரியும்.''

''என்ன தெரியும், சொல்லு.''

''பணக்காரன், எம்.எல்.ஏ. மகன்கிற மமதை உண்டு. தினமும் ஒரு கார்ல வர்றவன். காலேஜுக்குப் பொழுது போக்கா வர்றவன். அலட்டல் ஆசாமி. சிகரெட், தண்ணி எல்லாம் காலேஜ் காம்ப்பவுண்டுக்குள்ளேயே அடிப்பான். தகராறு பிடிச்சவன்.''

''இவ்வளவுதானே உனக்குத் தெரியும்? லேட்டஸ்ட்டா இன்னொரு புது விளையாட்டு ஆரம்பிச்சிருக்கான். லவ் கேம். ஆள் செலக்ட் பண்ணி லவ் பண்றது மாதிரி நடிச்சி, நம்ப வெச்சி, யூஸ் பண்ணிட்டு வேஸ்ட் பேப்பர் மாதிரி எறிஞ்சிறடது.''

''அப்படியா?'' என்றான் ஆச்சரியத்துடன் சத்யா.

''இந்த விளையாட்டைக் காலேஜுக்கு வெளில வெச்சிட்டிருந்தான். இப்ப உள்ளேயே ஆரம்பிச்சிட்டான். இப்ப அவன் வலைல விழுந்திருக்கிறது ஆஷா. பாவம்! ரொம்ப அப்பாவிப் பொண்ணு சத்யா.''

ஒரு சின்ன 'திடுக்' சத்யாவுக்குள் பரவியது.

பேசியபடி இருவரும் ஹாஸ்டலுக்குள் நுழைய, ஹாஸ்டல் ஆபீசிலிருந்து சிவா கைதட்டி, ''சத்யா, உனக்குப் போன்'' என்றான்.



# 4

எல்லா வண்ணங்களும் ஒப்புக் கொள்ளும். இருட்டில் மட்டும்.

—ஃப்ரான்சிஸ் பேக்கன்

ஹாஸ்டலின் ஆபீஸ் அறைக்கு வந்த சத்யா, ''யாரு சிவா?'' என்றபடி தனியாகக் கிடத்தப்பட்டிருந்த ரிசீவரை எடுத்துக் கொண்டான்.

''டாக்டர் கிரி'' என்ற சிவா தான் வைத்திருந்த சினிமா பத்திரிகையின் நடுப்பக்க கலர் ஸ்டில்லை அவனுக்கு காட்டி,''பத்திரிகைகளுக்கும் சென்சார் வரணும் போலிருக்கு'' என்றான்.

''ஹலோ டாக்டர், குட் ஈவினிங்,''

''குட் ஈவினிங் சத்யா.''

''எப்ப சார் வந்தீங்க டெல்லிலேர்ந்து?''

''இன்னைக்கு மார்னிங்தான் வந்தேன்.''

''என்ன சார் ஆச்சு? மினிஸ்டரைப் பார்க்க முடிஞ்சுதா?''

''ஒரு வாரம் தங்கியிருந்தோம் சத்யா. இங்க இருக்கிற முக்கியமான வேலைகளை எல்லாம் போட்டுட்டு மொத்தம் இருபத்தி நாலு பேர் ஹோட்டல்ல ரூம் போட்டுத் தங்கி பத்து நிமிஷ அப்பாயிண்ட் மெண்ட்டுக்காகப் போராடினோம். மினிஸ்டர் ரொம்ப பிஸி. அவரால பத்து நிமிஷம் ஒதுக்க முடியலை.''

''நீங்க தப்பு பண்ணிட்டீங்க டாக்டர்.''

''என்ன சத்யா?''

"உங்க கோரிக்கையோட ஒரு பெட்டியில பத்து லட்சம் பணத்தோட வெய்ட் பண்றதா தகவல் கொடுத்திருந்தீங்கன்னா உடனே அப்பாயிண்ட்மெண்ட் கிடைச்சிருக்கும்."

"அது சரி, நீ சொல்றது நூத்துக்கு நூறு நடைமுறை உண்மைதான் சத்யா. நம்ம நாட்டு அரசியல்வாதிகளோட மதிப்பு சர்வதேச லெவல்ல எப்பவோ குட்டிச்சுவராயிடுச்சு. ஏற்கனவே அரசாங்கம் நியமிச்ச கமிஷனே சொல்லிடுச்சி. நம்ம பெரும்பாலான அரசியல்வாதிகளுக்கும் ரவுடிகளுக்கும் தொடர்பு இருக்குன்னு. இப்ப சி. பி. ஐ. அறிக்கைல ஆளுங் கட்சி, எதிர்க் கட்சின்னு எல்லா தலைவர்கள் பேரும் அடிபடுது லஞ்சக் குற்றச்சாட்டில. இந்த லட்சணத்தில ஒரு தேர்தலை வேற சந்திக்கப் போறோம்."

"டாக்டர் சமீபத்தில இந்த எலெக்ஷனைப் பத்தி ஒரு கவிதை படிச்சேன்."

"என்ன சொல்லு."

"இங்கே நம் மக்களாட்சிக்கும், மாட்டுப்பொங்கலுக்கும் அதிக வித்தியாசமில்லை, மூக்கணாங்கயிறை புதிதாக மாற்றுகிறோம்.அவ்வளவுதான்!"

"அற்புதம் சத்யா. மாட்டுக்கு என்னைக்கும் விடுதலை கிடையாது, கொம்புக்கு கலர் கலரா பெயிண்ட் அடிக்கலாம். கழுத்துக்கு மாலை போடலாம். மூக்கணாங் கயிறை மட்டும் எடுத்துடறதில்லையே. பியூட்டிஃபுல்!"

"சரி, கடைசில ஒரு காரியமும் நடக்காம திரும்பிட்டிங்களா?"

"மினிஸ்டரோட பி. ஏ. வைப் பார்த்துட்டோம். விவரமா எடுத்துச் சொல்லி ஃபைலைக் கொடுத்துட்டு வந்திருக்கோம். உற்சாகமாதான் பேசினாரு, சொல்றேன்னிருக்கார். மினிஸ்டர்கிட்ட ஒரு மாசம் கழிச்சு அப்பாயிண்ட்மெண்ட் வாங்கித் தர்றேன்னிருக்கார்."



"அப்போ ஒரு மாசம் வரைக்கும் அந்த ஃபைலை யாரும் தொடப்போறதில்லைன்னு அர்த்தம். அதுவரைக்கும் நீங்க கொடுத்த ஃபைல் தொலைஞ்சி போகாம இருக்க ஆண்டவன்தான் அருள் புரியணும்."

"சத்யா, ஞாயிற்றுக்கிழமை பக்கத்தில தையூர் கிராமத்துக்கும் போறோம். வர்றியா?"

"கண்டிப்பா. எங்க டாக்டர் இருக்கு அது?"

"பழைய மகாபலிபுரம் ரோட்ல கேளம்பாக்கம்னு இருக்கு. அங்கேருந்து கொஞ்சம் உள்ளே போகணும். சின்ன கிராமம்தான்."

"அவேர்னெஸ் புரோக்ராமா இல்லை பிளட் சாம்ப்பிள் கலெக்ட் பண்றமா சார்?"

"ரெண்டும்தான்."

"காலைல எத்தனை மணிக்கு உங்க வீட்ல இருக்கணும் டாக்டர்?"

"ஒன்பது மணிக்கு."

"கரெக்ட்டா வந்துடறேன் டாக்டர்."

"நான் சும்மா தகவலாத்தான் சொல்ல வந்தேன். உனக்கு முக்கியமா படிக்க வேண்டிய வேலைகள் இருந்தா, அதைப் பாருப்பா."

"அதெல்லாம் ஒண்ணும் பிரச்சினை இல்லை டாக்டர். நீங்க பண்ணிட்ருக்கிற நல்ல விஷயத்தில என்னால முடிஞ்ச அளவுக்கு ஈடுபடுத்திக்கிறதை ஒரு பாக்யமா... இல்லை, இல்லை... ஒரு கடமையாகக்கூட நினைக்கிறேன் டாக்டர்."

"அப்போ சரி சண்டே பார்க்கலாம். டெல்லில இன்னும் ரெண்டு மூணு கூத்து நடந்திச்சு. அதெல்லாம் சொல்றேன். மனுஷ மனம் எப்படி எல்லாம் விசித்திரமா

வேலை செய்யுதுன்னு ஆச்சரியப்பட்டேன் சத்யா. ஐ கேன் ஷேர் தோஸ் தாட்ஸ் ஒன்லி வித் யு.''

''உங்களோட பேசிட்டிருக்கிறதுன்னா எனக்கு சாப்பாடு கூட வேணாம் டாக்டர். ஞாயிற்றுக்கிழமை இன்னும் ரெண்டு நாள் தள்ளியிருக்கேன்னு எரிச்சலா இருக்கு.''

''அதுக்கு நடுவுலயே உன்னை வரச் சொல்லிடுவேன் ஈவினிங்ஸ்ல நான் ஃப்ரீதான். ஆனா உன்னோட படிப்பு நேரத்தைத் திருடிக்கிறதுக்கு மனசு வரலை சத்யா. ஓகே, லெட்ஸ் மீட் ஆன் சண்டே.''

''நைன் ஓ கிளாக்'' என்று வைத்தான் சத்யா.

அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த சிவாவிடம் ''என்ன சிவா சிரிக்கிறே?'' என்றான்.

''அந்த டாக்டருக்கும் வேற வேலை இல்லை. உனக்கும் வேற வேலை இல்லை. அந்தாளு ஒழுங்கா கிளினிக் வெச்சி நடத்திட்டிருந்தாரு. என்ன கூட்டம் அலை மோதும் தெரியுமா? திடீர்னு சமுகத்துக்கு சேவை செய்றேன்னு இறங்கிட்டாரு. அவரோட பிராக்டிஸ் செஞ்சவங்க எல்லாம் ஸ்டார் ஹோட்டல் மாதிரி நாலு மாடி வெச்சு ஹாஸ்பிடல் கட்டிட்டாங்க. எவன் எப்படிப் போனா இவருக்கு என்னய்யா?'' என்றான் சிவா.

பதில் பேசாமல் புன்னகைத்தான் சத்யா.

''பெரிய கிருஷ்ணர் வேஷம் போட்ட என்.டி. ராமாராவ்னு நினைப்பு உனக்கு! மந்தகாசமா ஒரு புன்னகை செஞ்சிடுவே. உனக்கொரு பழமொழி தெரியுமா சத்யா?''

''என்ன?''

''அம்மணக்குண்டியா எல்லாரும் சுத்தற ஊர்ல கோமணம் கட்டிக்கிட்டுத் திரியறது முட்டாள்தனம்.''



''உண்மைதான் சிவா, அப்படித்தான் எல்லாரும் ஆரம்பத்தில் திரிஞ்சோம். அப்புறம் இலை, தழைகளை வெச்சி ஆடை தச்சி நம்ம உடம்பை மறைச்சிக்கிட்டோம். அப்படி முதல் தடவை இலையால தன்னை மறைச்சிகிட்டு வந்து நின்னவனை முட்டாள்னுதான் அப்பவும் சொல்லியிருப்பாங்க. அபபுறம் எல்லாரும் கோமணம் கட்டிட்டாங்களே சிவா. இப்ப நிலைமை வேறப்பா. எல்லாரும் நல்லபடியா கோமணம் கட்டிக்கிட்டு திரிஞ்சிட்டிருந்தப்ப, சில பேரு அதை அவுத்துப் போட்டுட்டுத் திரிய ஆரம்பிச்சிட்டாங்க. அதுக்காகக் கவலைப்படறது தப்பா சிவா?''

''நீயும், நானும் கவலைப்பட்டு என்ன ஆகப் போகுது சத்யா?''

''எதுக்காக புத்தகத்தில் கவர்ச்சியான படத்தைப் பார்த்துட்டு எங்கிட்ட பத்திரிகைகளுக்கு 'சென்சார் வரணும்'னு இப்ப சொன்னே சிவா?''

''நீயே பாரேன். இந்த ஸ்டில் எவ்வளவு மோசமா இருக்கு பாரு! இந்த புக்கை வீட்டுக்கு எடுத்துட்டுப் போய் போட முடியுமா?''

''கரெக்ட்டு! இப்படி பத்திரிகையில ஆபாசமான படங்கள் வர்றது சொசைட்டிக்கு நல்லதில்லைன்னு நீ கவலைப்பட்டியில்ல? என்ன செய்யப் போறேங்கிறது அப்புறம். பொறுப்பா கவலைப்பட்டியில்ல, அதே மாதிரிதான் டாக்டர் கிரியும் கவலைப்படறார். நீயும், நானும் கவலைப்படறதைத் தாண்டி எதுவும் செய்யறதில்லை. அவரால முடிஞ்ச அளவுக்கு ஏதோ செய்றார். நீ அவரை என்கரேஜ் பண்ண வேணாம் சிவா. டிஸ்கரேஜ் பண்ணாம இரு, போதும்.''

சற்று தள்ளி நின்று தம்மடித்தபடி இவர்கள் பேசுவதை கேட்டுக் கொண்டிருந்த தனபால் அருகில் வந்து சத்யா தோளில் கை வைத்து, ''எமோஷனலாகாதே சத்யா. இவனுக்கு மெஸ்சுக்கு காய்கறி வாங்கற கணக்கையே டேலி

பண்ணத் தெரியாது. இவன்கிட்டல்லாம் எதுக்கு விளக்கம் சொல்லிட்டிருக்கே வா'' என்றான்.

''தனபால், அநாவசியத்துக்கு நீ என்னை இன்சல்ட் பண்றே. இது நல்லால்லை, சொல்லிட்டேன்'' என்றான் சிவா விரலை நீட்டி

''என்னடா, என்ன செய்வே, உன் வேலை என்னவோ அதைப் பாருடா. சத்யாவைக் கிண்டல் பண்றதுக்கு நீ யார்றா? அவன் ஃபிரண்டா? எங்ககூட படிக்கிறியா? அநாவசியத்துக்கு முறைக்கிற வேலை வெச்சிக்கிட்டா, செவுல் பேந்துடும், ஜாக்கிரதை. வா சத்யா, இவன் ஒரு மனுஷன்னு பேசிக்கிட்டு.''

தனபால் சத்யாவை இழுத்துக் கொண்டு நடந்தான்.

சிவா அவர்கள் முதுகை முறைத்துக் கொண்டிருந்தான்.

சத்யாவும், தனபாலும் படிகள் ஏறி இரண்டாவது மாடியிலிருந்த அவர்கள் அறைக்கு நடந்தார்கள்.

சத்யா அமைதியாக நடந்தான்.

''அப்செட் ஆயிட்டியா சத்யா?''

''ஆமாம் கொஞ்சம் அப்செட் ஆய்ட்டேன்தான் தனபால். சினிமால ஹீரோன்றவன் நல்லவனா இருக்கணும், சமுதாயத்துக்கு நல்லது செய்யணும், எல்லார்கிட்டயும் அன்பா இருக்கணும்னு சில கோட்பாடுகள் இருக்கு தனபால் அதைக் கடைப்பிடிக்கிற ஹீரோவுக்குத்தான் விசில் அடிப்பாங்க. கை தட்டு வாங்க. அதே கோட்பாடுகள் நிஜத்தில் ஒரு மனுஷன் வாழ்ந்துட்டிருந்தா, அவன் ஹீரோ இல்லை, பைத்தியக்காரன் இல்லையா?''

சாவி போட்டு அவர்களின் அறைப் பூட்டைத் திறந்து, கதவைத் தள்ளி உள்ளே வந்தபடி தனபால், ''இந்த சிவா சொன்னதுக்கு ஏன் சத்யா இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கறே?'' என்றான்.



''இல்லை தனபால், இந்த சிவா இன்னைக்கு சமூகத்தோட பிரதிநிதி. இன்னைக்கு முக்கால்வாசிப் பேர் சிந்தனை இப்படித்தான் இருக்கு. டாக்டர் கிரி நிஜமாவே ஒரு ஜெம் தெரியுமா? தன் சொந்தக் காசில் ஒரு ஃபவுண்டேஷன் ஆரம்பிச்சி என்னவெல்லாம் பண்ணிட்டிருக்கார் தெரியுமா? இவரை மாதிரி ஆளுங்க ஒரு சொசைட்டிக்குக் கிடைக்கிறது அபூர்வம் தனபால். எய்ட்ஸ் இன்னைக்கு சமுதாயத்தில் புகுந்திருக்கிற கரையான் தெரியுமா? சரியான அவேர்னெஸ் இன்னும் நம்ம ஜனங்களுக்கு முழுசா வரலை. இப்போ ஓரளவுக்காவது எய்ட்ஸ் பத்தி ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டிருக்குன்னா அதுக்கு டாக்டர் கிரியும் ஒரு காரணம். அவரைப் பூப்போட்டு கும்புட வேணாம். இழிவு படுத்திப் பேசாம இருக்கலாமே...''

''விடு சத்யா. நாம உக்காந்து அசிங்கம் பண்றது காந்தியோட சிலைன்னு காக்காவுக்குத் தெரியுமா? இல்லை, காக்கா அசிங்கம் பண்ணி வெச்சிருக்கிறதால காந்தியோட மரியாதை குறைஞ்சிடுமா? சிவா சொன்னதுக்கு அப்செட் ஆனா நீ தான் பெரிய முட்டாள். விடு. நான் குளிக்கப் போறேன். கொஞ்சம் துவைக்கணும். உன் சட்டை ஏதாவது துவைக்க வேண்டியிருந்தா கொடு, சேர்த்து துவைச்சுட்டு வந்துடறேன்'' என்ற தன்பால் கட்டிலுக்கு அடியிலிருந்த பிளாஸ்டிக் பக்கெட் எடுத்து வைத்து, தன் சட்டை, பேண்ட்டைக் கழற்றி அதில் போட்டு, இடுப்பில் துண்டு சுற்றிக் கொண்டான்.

''எனக்கு துவைக்க வேண்டியது எதுவும் இல்லை'' என்றான் சத்யா. தன் சட்டையைக் கழற்றி ஹேங்கரில் மாட்டி கொடியில் தொங்க விட்டான். லுங்கிக்கு மாறினான்.

தனபால் போனதும் கதவை மூடி விட்டு தன் நாற்காலியில் அமர்ந்து மேஜை விளக்கைப் போட்டுக் கொண்டான்.

மேஜை டிராயரை இழுத்து முந்தாநாள் தன் அம்மா விடமிருந்து வந்த கடிதத்தை எடுத்தான்.

அம்மாவின் கடிதங்களை எத்தனை தரம் வேண்டுமானாலும் படிக்கலாம். ஒவ்வொரு முறை படிக்கும் போதும் முதல் தடவை படிப்பது போன்ற ஒரு உணர்வு ஏன் ஏற்படுகிறதென்று சத்யாவுக்குப் புரிவதில்லை.

சத்யா அந்தக் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தான்.

'என் சத்யாவுக்கு...

நலமா?

இது உன் உடல் சௌகரியங்களை ஒருபோதும் விசாரிக்காது என்று உனக்கே தெரியும். 'நலமா' என்றால் 'உன் மனம் நலமா?' என்று எப்போதும் விரிவாக்கம் செய்து கொள்.

ஒரு வாரமாக நான் நலமில்லை. உனக்குச் சொன்ன அதே அர்த்தத்தில் தான் இதைக் குறிப்பிடுகிறேன்.

கொஞ்ச நாட்களாக எனக்கொரு எண்ணம் வந்து போகிறது—உன்னை நான் விரைவில் பிரியப் போகிறேன் என்று...'

மேலே படிக்க இயலாமல் கண்களில் ததும்பின துளிகள்

## 5

சட்டம் என்பது அடித்தளமில்லாத பள்ளம்
—டாக்டர் அர்புத்நாட்

புறங்கையால் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு தன் அம்மா எழுதிய அந்தக் கடிதத்தை மீண்டும் முதலிலிருந்து படிக்கத் துவங்கினான்.



'என் சத்யாவுக்கு...

நலமா?

இது உன் உடல் சௌகரியங்களை ஒருபோதும் விசாரிக்காது என்று உனக்கே தெரியும். "நலமா" என்றால் 'உன் மனம் நலமா?' என்று எப்போதும் விரிவாக்கம் செய்து கொள்.

ஒரு வாரமாக நான் நலமில்லை. உனக்குச் சொன்ன அதே அர்த்தத்தில்தான் இதைக் குறிப்பிடுகிறேன்.

கொஞ்ச நாட்களாக எனக்கொரு எண்ணம் வந்து போகிறது—உன்னை நான் விரைவில் பிரியப்போகிறேன் என்று...

ஆமாம் சத்யா நான் என் மரணத்தைப் பற்றி யோசிக்க ஆரம்பித்திருக்கிறேன். அது ஒன்றும் நினைத்தாலே வந்து விடப் போவதில்லை. மரணத்தைப் பற்றி நினைப்பது ஆபத்தான விஷயமோ, அருவையான விஷயமோ இல்லை. இன்னும் சொல்லப் போனால் அது ஆரோக்கியமான விஷயம்.

நம் வாழ்க்கை என்பதைச் சற்று அலசலாக யோசித்துப் பார் சத்யா கடந்த காலம் தரும் நம்பிக்கைகளையும், எச்சரிக்கைகளையும் சுமந்து கொண்டு எதிர்காலக் கனவுகளோடும், கற்பனைகளோடும் தொடர்கிற பயணம் இது.

எதிர்கால நிகழ்ச்சிகளுக்காக எத்தனையோ திட்டமிடுகிறோம் கல்யாணத்தைப் பற்றி யோசித்து பொருள் சேர்க்கிறோம். வேலையோ, தொழிலோ அமைய வேண்டும் என்கிற எதிர்பார்ப்பில் படிக்கிறோம். நேர்முகத் தேர்வுக்குப் போகிறோம். கல்யாணத் தேதி நிச்சயமானதுமே பிறக்கப்போகிற குழந்தைக்கு எல்.கே.ஜி. அட்மிஷனுக்குச் சொல்லி வைக்கிறோம். சொந்த வீடு கனவில் பணத்திற்கு அலைகிறோம்.

இவை எல்லாம் எதிர்காலத் திட்ட மிடல்கள். எல்லாச் சமயங்களிலும் திட்டமிட்டபடி எல்லாம் நடந்து விடுகின்றனவா? இல்லையே. படிப்பை முடிக்க முடியாமல் போகலாம். அல்லது தேர்வில் தோற்றுவிடலாம். கல்யாணம் அமையாமலேயே போகலாம். குழந்தை பிறக்காமலேயே போகலாம். வீடு கட்ட முடியாமலேயே போகலாம்.

நிச்சயமில்லாத ஆயிரம் விஷயங்களுக்காக எத்தனை திட்டமிடுகிறோம். ஆனால் மிக மிக மிக நிச்சயமான ஒரு விஷயம் நமது வாழ்வில் நடக்கப் போவது எதுவென்று பார்த்தால்... மரணம் மட்டும்தான்.

கால நிர்ணயம் நமக்குத் தெரியாது. இந்த விநாடியே நிகழலாம். இருபது நாட்களில் நிகழலாம். இருபது வருடங்களில் நிகழலாம். என்று வேண்டுமானாலும் நிகழ்ந்து விட்டுப் போகட்டும். ஆனால் மரணம் என்பது நிச்சயமான ஒன்றுதானே?

அந்த நிச்சயமான நிகழ்ச்சிக்காக என்னைத் தயார் படுத்திக் கொள்வதில் தப்பென்ன இருக்கிறது? யோசித்து திட்டமிட்டுக் கொள்வதில் பதைப்புக்கு இடம் ஏது? வருத்தம் மட்டும் ஏற்படலாம்.

அதனால்தான் என் மரணத்தைப் பற்றி யோசிக்கும் போது கொஞ்சம் எனக்கு வருத்தமாக இருக்கிறது சத்யா.

என் வருத்தம் எந்த மாதிரியானது என்பதை நான் தெளிவுபடுத்தியாக வேண்டும்.

நான் என் வாழ்க்கையில் கொண்டிருந்த லட்சியங்களை கனவுகளை, கற்பனைகளை நினைத்துப் பார்க்கிறேன். அவற்றில் எத்தனை சதவிகிதம் நிறைவேறின என்று கணக்குப் போட்டுப் பார்க்கிறேன். நீண்ட பெருமூச்சே வெளிப் படுகிறது.

உனக்குத் தெரியுமா சத்யா, முன்பே சொல்லியிருக்கிறேனா இல்லை எழுதியிருக்கிறேனா? நான் ஒரு ஐ. ஏ. எஸ்



அதிகாரியாக வர வேண்டும் என்பதுதான் என் பள்ளி நாட்களின் கனவு. வீட்டின் சமையலறைக் கதவுக்குப் பின்புறம் சாக்பீஸால் 'கலெக்டர் ஜானகி' என்று எழுதி வைத்தது நினைவிருக்கிறது.

ஆனால் பள்ளிப் படிப்போடு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு... கலெக்டர் சமையலறைக் கதவுக்குப் பின்னால் நிறுத்தப் பட்டு விட்டார்.

திடீரென்று அம்மா இறந்து போனதால் ஏழு பேர் கொண்ட குடும்பத்திற்குச் சமைத்துப் போட ஆளில்லாமல் போய், நான் ஒருத்தி மட்டுமே பெண்ணாய் இருந்து தொலைத்ததால், என் கையிலிருந்து பேனா பிடுங்கப்பட்டு கரண்டி கொடுக்கப்பட்டது.

அப்போது எனக்கு ஆர்வம் இருந்த அளவுக்கு பக்குவம் இல்லை. தைரியம் இல்லை. உறுதி இல்லை. பின் நாட்களில் நினைத்துப்பார்த்தபோது, நன்றியில்லாத, பாசமில்லாத ஒரு கூட்டத்திற்குச் சமைத்துப் போடுவதற்காக என் சொந்தக் கனவுகளைப் புதைத்துக் கொண்டது முட்டாள்தனமென்று பட்டது.

ரொம்பத் தாமதமான விழிப்பு உணர்வு அது விதைக்கின்ற நேரத்தில் விதைக்காமல் விட்டுவிட்டு, விதை அழுகிப் போனபிறகு புலம்புவது போன்ற பிரயோசனமில்லாத விழிப்பு உணர்வு.

சமையலறை என்பது ஆக்கபூர்வமான இடமா? அழிவு பூர்வமான இடமா? மேலோட்டமாக பதில் சொல்பவர்கள். உணவுப் பொருள்கள் உருவாவதால் அதை ஆக்கபூர்வமான இடமாகக் குறிப்பிடலாம். ஆழமாக யோசித்தால்...அது அழிவு பூர்வமான இடம், யாருக்கு? பெண்ணுக்கு சிறையில் முரட்டுத்தனமான கைதிகளுக்கு அவர்கள் ஓட முடியாதபடி காலில் இரும்புக் குண்டை சங்கிலியால் கட்டுவார்கள் தெரியுமா?

அந்த இரும்புக்குண்டை இழுத்துக் கொண்டு அந்தக் கைதி நடக்கலாம். ஆனால் ஓட முடியாது. அப்படித்தான் பெண்ணுக்கு சமையலறை ஒரு இரும்புக்குண்டு நிஜத்தில் அது இரும்பால் ஆனதில்லை. வழிவழியாக வந்த பழக்கத்தால் ஆனது.

அம்பை எழுதிய ஒரு சிறுகதைத் தொகுப்பை உனக்கு நான் சிபாரிசு செய்திருந்தேன். நீ படித்தாயா, இல்லையா என்று தெரியாது. 'வீட்டின் மூலையில் ஒரு சமையலறை' என்பது புத்தகப் பெயர். அதில் ஒரு கதையில் சமையலறையிலேயே தன் வாழ்நாள் முழுவதையும் செலவிடும் ஒரு பெண்மணி சொல்வாள்...

'நான் பத்து வயசு தொடங்கி தோசை சுடறேன். நாப்பது வருஷத்துல ஒரு நாளைக்கு இருபது மேனிக்கு எவ்வளவு தோசை...!'

அவளைப் பார்க்க வந்த பெண் மனசுக்குள் கணக்குப் போடுவாள்.

'ஒரு வருடத்துக்கு ஏழாயிரத்து முன்னூறு தோசைகள் நாற்பது வருடங்களில் இரண்டு லட்சத்துத் தொண்ணூற்றி ரெண்டாயிரம் தோசைகள். இது தவிர இட்லிகள், வடைகள், அப்பங்கள், பொரியல்கள். குழம்புகள்...எவ்வளவு முறை சோறு வடித்திருப்பாள்? எவ்வளவு கிலோ அரிசி சமைத்திருப்பாள்?'

இப்படிக் கணக்கிட்டு அதிசயப்பட, அவள் ஒருத்திதான் இங்கே அப்படியா? எத்தனை லட்சக்கணக்கான பேர் இந்த இயக்கத்தில்!

அத்தனைப் பெண்களும் சுட்ட மொத்த தோசைகளின் கணக்கைப் போட கம்ப்யூட்டரே திணறும் சத்யா.

நூலோடு தொடர்பு இருக்கும்வரை தான் காற்றாடிக்கு திசை சொந்தம். அது அறுந்து விட்டால், காற்றாடியின் திசையைத் தீர்மானிப்பது காற்று. காற்றாடி அதன் விளையாட்டுப் பொருளாகி விடும். குப்பென்று மேலே சுழற்றி எழுப்பும். திடீரென்று அமைதியாகத் தொய்ந்து விழச் செய்யும். மறுபடி சுழற்றி விடும்.



அப்படித்தான் ஆயிற்று என் வாழ்க்கையும்.

இது என் வாழ்வின் புலம்பல் அல்ல.

வாழ்க்கையை உனக்குப் புரிய வைக்கும் உத்தேசம். உன் வாழ்க்கையைச் செவ்வனே திட்டமிடத் தூண்டுகின்ற முயற்சி. அல்லது எதையுமே எதிர்பார்க்காத வெறும் சிந்தனைப் பதிவுகள்.

இதில் நீ எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள். ஆனால் என்னால் எனக்குள் சுழல்வதை உன்னிடத்தில் இப்படி எழுத்துக்களாகக் கொட்டாமல் இருக்க முடியவில்லை.

என் ஒரே வடிகால் நீதானே சத்யா, வேறெங்கே என் எண்ணங்களை வடிக்க முடியும், சொல்.

டாக்டர் கிரியைப் பற்றியும், அவர் செய்துவரும் சமூகப் பணிகளைப் பற்றியும் சென்ற கடிதத்தில் எழுதியிருந்தாய். மிகவும் சந்தோஷமாக இருந்தது.

இப்படியும் சில மனித நேயமிக்க மனிதர்கள் இன்னும் இருந்து கொண்டுதானிருக்கிறார்கள். அவருடைய பணிகளில் நீ உதவி வருவதும் மகிழ்ச்சியான விஷயம்தான்.

அடுத்தமுறை நீ வரும்போது முடிந்தால் டாக்டர் கிரியையும் அழைத்துக் கொண்டு வாயேன். அவரைப் பார்த்து இரண்டு கைகளையும் கூப்ப வேண்டும் போலிருக்கிறது.

'உன் பாடங்களை நன்றாகப் படித்துக் கொண்டிருக்கிறாயா?'—என்று சம்பிரதாயமாக விசாரிக்க விருப்ப

மில்லை. உன் கல்லூரிப் பாடங்களைப் பற்றி எனக்குக் கவலையுமில்லை. வாழ்க்கையைப் படித்துக் கொண்டிருக்கிறாய் நீ. அது போதும் எனக்கு. உன்னைச் சுற்றி நல்ல மனிதர்களை என்னால் பார்க்க முடிகிறது. அது போதும் எனக்கு.

நீ என்னவாக வரப் போகிறாய் என்று எனக்கு எதிர் பார்ப்பில்லை. என்னவாக வந்தாலும் நல்ல மனிதனாக இருப்பாய் என்கிற நம்பிக்கை எனக்குண்டு.

இது பெரிய கடல். நீ நீந்தத் தெரிந்த மீன் குஞ்சு. பாதையையும் பயணத்தையும் நீயேதான் தீர்மானித்தாக வேண்டும்.

இன்னும் எழுத எவ்வளவோ இருக்கிறது. ரொம்ப நரம் எழுதினால் புஜத்தில் வலி எடுக்கிறது சத்யா. அதனால் இத்தோடு இந்தக் கடிதத்தை முடித்துக் கொள்கிறேனே.

அன்பான,
உன் அம்மா.

கடிதத்தைப் படித்து முடித்ததும் வேறு ஏதோ உலகத்திற்குப் பயணம் செய்து திரும்பியதைப் போலத்தான் இருந்தது சத்யாவுக்கு.

தன் அம்மாவின் முகத்தை ஒரு தரம் பார்க்க வேண்டும் போல தோன்றியது.

மேஜை டிராயரிலிருந்து டைரி எடுத்தும் பார்த்தான்.

கல்யாண கோலத்தில் அம்மாவும், அப்பாவும்.

பட்டுப்புடவை கட்டி, ஏராள நகைகள் பூட்டி, எக்கச்சக்கமாய் மை அப்பி, முகம் முழுக்க மருட்சியுடன்...அழகான அம்மா.



கல்யாண வாழ்க்கையைப் பற்றி எல்லாப் பெண்களையும் போல எத்தனை நூறு கற்பனைகள் செய்திருப்பாள்! அதெல்லாம் பதுக்கிக் கொண்டு மருட்சியை மட்டுமே இந்தக் கண்கள் ஏன் வெளிப்படுத்துகின்றன?

கல்யாணத்திற்கு முன்பே அப்பாவைப் பற்றி ஏதோ ஒரு அசரீரி அவளுக்கு மட்டும் ஒலித்திருக்க வேண்டும்.

அவன் பார்வை அம்மா அருகில் கம்பீரமாக நிற்கும் அப்பாவின் முகத்திற்கு நகர்ந்தது.

இந்த முகம் ஒரு சந்தோஷ வெளிப்பாடாய்த் தெரியவில்லை. ஒரு வேட்டைக்காரன் ஒரு புலியைச் சுட்டு வீழ்த்திய பிறகு, அதன் தலைமேல் கால் வைத்தபடி புகைப் படம் எடுத்துக் கொள்ளும்போது, அது வேட்டைக்காரனின் முகத்தில் எத்தனை ஆணவமும், வெற்றிக் களிப்பும் இருக்கும்? அப்படித்தான் இருக்கிறது இந்த முகம்.

சாகும்வரையில் அப்பா வேட்டைக்காரனாகவே இருந்து விட்டார். அம்மா அடிபட்ட புலியாகவே இருந்து விட்டாள். புலிக்கு சுதந்திரம் கிடைத்த போது வயதாகிப் போய் சக்தியிழந்த கிழப் புலியாகி விட்டது. இந்தப் புலியால் நினைவுகளை நக்கிக் கொள்ள மட்டுமே முடியும். அது தான் முடிகிறது.

அறைக் கதவைத் தட்டி சிந்தனையைக் கலைத்தான் தனபால் எழுந்து சென்று கதவைத் திறந்ததும் "டேய். நம்ம ஹாஸ்டல்ல திருடிட்டிருந்தவனைப் பிடிச்சிட்டாங்க. ஆபீஸ் வாசல்ல கட்டிப் போட்டு தர்ம அடி கொடுத்திட்டிருக்காங்க, போய் ரெண்டு கொடுக்கறதுன்னா கொடு!" என்றான்.

# 6

**எனக்குப் மரணத்தைப் பற்றி பயமேதுமில்லை. அது நிகழும்போது நான் அங்கே இருக்க விரும்ப வில்லை. அவ்வளவுதான்.**

**—வுட்டி ஆலன்**

அந்தப் பையனுக்குப் பதினெட்டு அல்லது பத்தொன் பது வயதிருக்கலாம். மூக்கு சில்லு உடைந்து ரத்தம் ஒழுகி சட்டையை நனைத்துக் கொண்டிருக்க, மரத்தில் அவனைக் கட்டிப் போட்டிருந்தார்கள்.

அவனால் தலையை நிமிர்த்திப் பார்க்கக்கூட இயலா மல் தலை துவண்டிருக்க... அந்த மாணவர்கள் ஆக்ரோஷ மாக அடித்துக் கொண்டிருந்தார்கள்.

தன் அறையிலிருந்து விரைந்து வந்து அந்தக் காட்சி யைப் பார்த்த சத்யாவுக்குப் பகீரென்றது. அடி வயிறு கலங்கியது.

''டேடேடேய்... நிறுத்துங்கடா! எதுக்குடா அவனை இப்படிப் போட்டு சித்ரவதை பண்றீங்க?'' இவன் கொடுத்த குரல் அவர்களின் கோபக் கூச்சலில் எடுபடவே இல்லை.

மீண்டும் மீண்டும் கத்தி, அடிப்பவர்களின் கையைப் பிடித்துத் தடுத்து, நடுவில் புகுந்து அந்தப் பையனை மறைத்தபடி நின்று குரலுயர்த்திக் கூச்சல் போட்டதும் தான் அவர்கள் நின்றார்கள். ஒரு சின்ன அமைதி இடை வெளி ஏற்பட்டது.

''சத்யா, உனக்குத் தெரியாது. இந்தப் பொறுக்கி ராஸ்கல்தான் பல மாசமா நம்ம ஹாஸ்டல்ல திருடிட்டு இருந்திருக்கான். இன்னைக்கு ஜாவா மதிராஜ் இல்ல, அவன் ரூம்ல ஜன்னல் வழியா கம்பி வுட்டு ஒரு சட்டையை



எடுத்துட்டிருந்தப்ப கையும் களவுமா மாட்டிட்டான். எடுத்த மத்த சாமான் எல்லாம் எங்கடான்னு கேட்டா பதில் சொல்ல மாட்டேங்கறான். நீ நகர்ந்துக்க. இன்னும் ரெண்டு ரவுண்டு பட்டாசு வெடிச்சா அண்ணன் உண்மை யைக் கக்கிடுவாரு'' என்றான் ரமணி.

''ரைட்டுப்பா. இவன் திருடினான். நீங்க பிடிச்சிட் டீங்க. பேசாம போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போய் ஒப்படைக்கிறதை விட்டுட்டு நீங்க ஏண்டா அடிச்சி விசாரிக் கிறீங்க? தப்புடா! ரொம்ப தப்பு!''

''என்ன தப்பு? என் வாட்ச் போய்டுச்சி. தெரியுமில்ல? ஆயிரத்தி நானூறு ரூபா கொடுத்து வாங்கின புது வாட்ச்சு. ஒரு வாரம்கூட கட்டலை. எப்படி இருக்கும் எனக்கு?''

''ரைட்டுப்பா. அதுக்காக? என்னோட சட்டைகூடதான் திருட்டுப் போச்சு. முறைன்னு ஒண்ணு இருக்கில்ல ரமணி.''

''இவனைக் கொண்டு போய்ப் போலீஸ் ஸ்டேஷன்ல விட்டுட்டு வா. ஒரு மணி நேரத்துல வேற ஒரு ஏரியால திருடிட்டிருப்பான். மாமூல் வாங்கிட்டு வுட்டுடுவாங்க சத்யா.''

''எல்லாப் போலீஸ்காரங்களும் அப்படி இல்லை ரமணி. இப்படிப் போட்டு அடிக்கிறதுக்கு நமக்கு உரிமை இல் லைப்பா, கொஞ்சம் இரு.''

சத்யா அந்தப் பையன் பக்கம் திரும்பினான்.

அவன் வலி தாங்காமல் முனகியபடி,வாயால் சுவாசித்த வாறு தலையைத் தொங்கப் போட்டிருந்தான்.

''ஏண்டா இந்த வயசுல உனக்கு இந்தத் திருட்டுப் புத்தி? ம்? எதுக்கு இப்படி அடி வாங்கறே? இந்த ஹாஸ் டல்ல இருந்து எடுத்த சாமான்களை எல்லாம் திருப்பிக் கொடுத்துடறேன்னு சொல்லு, மேற்கொண்டு உன்னை

யாரும் அடிக்காம, ஸ்டேஷன்ல ஒப்படைக்காம நான் பார்த்துக்கறேன். என்ன, எல்லாத்தையும் திருப்பிக் கொடுத்துடறியா?''

அந்தப் பையன் நிமிர்ந்து அரைக்கண்களால் பார்த்தான். அவனைக் கட்டியிருந்த கயிறை அவிழ்த்துவிட்டால் லொடக்கென்று விழுந்துவிடுவான் போலிருந்தது. பெரிய முயற்சியில் திக்கிப் பேசினான்.

''ச... ச... சார், சத்தியமாச் சொல்றேன். இந்த ஹாஸ்டல்ல நான் இன்னிக்குதான் மொதல் தடவையா திருடினேன். இதுக்கு முன்னாடி இங்க வந்ததே இல்லை சார்.''

''நிஜமாவா?''

''எங்கம்மா மேல சத்தியமா சார்.''

ரமணியிடம் திரும்பி, ''இதான் ஃபர்ஸ்ட் டைம்னு சொல்றானே ரமணி'' என்றான் சத்யா.

''அவன் சொல்றதை நம்பிடுவியா நீ? திருடறவனுக்குப் பொய் சொல்றது பெரிய விஷயமா? நீ நகரு, நாங்க பார்த்துக்கறோம்.''

''இவ்வளவு அடி வாங்கினப்புறம் ஒருத்தன் பொய் சொல்ல மாட்டான் ரமணி. இவனை முதல்ல அவுத்துவிடு. இதுக்கு மேல் அடி விழுந்தா தாங்க மாட்டான். எதாச்சும் விபரீதமாயிடப் போகுது. போலீஸ்ல ஒப்படைச்சிடுங்க.''

''உன்னை மாதிரி பத்துப் பேரு இளிச்சவாயனா இரக்கப்படறதாலதான் நாட்ல இவனை மாதிரி திருடனுங்க பெருகிடறாங்க. நீ ரூமுக்குப் போ. அவனைப் பிடிச்சது நாங்க. என்ன செய்யணும்னு நாங்க முடிவு பண்ணிக்கிறோம். நீ ஒண்ணும் எங்களுக்கு அட்வைஸ் பண்ண வேண்டியதில்லை'' என்றான் முகத்தை முறைப்பாய் வைத்துக்கொண்டு ரமணி.



''இரக்கப்படறது இளிச்சவாய்த்தனம் இல்லை ரமணி. மனுஷ குணம். உனக்கு இப்ப இந்தக் கூட்டத்துக்கு நடுவில ஒரு ஹீரோவா உன்னைக் காட்டிக்கணும். உன் பொருள் பத்தின கவலை ரெண்டாம் பட்சம்தான். நீ ஆவேசப் படறது நியாயம் ரமணி. ஆனா இந்த மாதிரி சாதாரண காலங்கள்ல மட்டும் ஆவேசப்பட்டு நிறுத்திக்கறியே... நாம் எல்லாம் கட்டற வரிப் பணத்தை ஊழல் பண்ணி கோடி கோடியா கொள்ளையடிக்கிற அரசியல்வாதிகள், அதிகாரிகள் பக்கம் உன் ஆவேசம் திரும்ப மாட்டேங்குதே. அங்கே கொள்ளை போறதும் உன் பணம்தான் அந்த உணர்வு ஏன் வரலை. புஸ்தகத்தில் ஊழல் பத்தின செய்தியை மட்டும் படிச்சிட்டு அங்கலாய்க்கிறதோட நிறுத்திக்கிறியே அது என்ன நியாயம்?''

ரமணி எல்லோர் முன்னிலையிலும் தான் அவமானப் படுத்தப்பட்டதாக உணர்ந்தான். சத்யாவை நோக்கி வந்தான். விரலைச் சொடுக்கினான்.

''இத பாரு. காலேஜ் கருத்தரங்கத்தில் மேடையில பேசுவியே, அங்க வெச்சுக்க இதெல்லாம் எங்கிட்ட வேணாம். மரியாதையா சொல்றேன். நீ போய்டு. இல்லைன்னா அநாவசியமா உனக்கும் எனக்கும் பிரச்சினை வரும். இவனை என்ன பண்ணணும்னு நான் பார்த்துக்கறேன்.''

சூழ்நிலை இறுகுவதை உணர்ந்த சத்யா அந்தப் பையனிடம், ''டேய் நிஜமா நீ இங்கே பல தடவை திருடியிருந்தா இப்பவே எல்லாத்தையும் ஒத்துக்கோ. இல்லைன்னா இவங்க விடமாட்டாங்க அப்புறம் உன் இஷ்டம்'' என்றான்.

''சார், நீங்க ஒருத்தர்தான் என்மேல பரிவு காட்றிங்க. சாமி சத்தியமா சொல்றேன் நான் பொய் சொல்லலை. இன்னைக்குதான் முதல் தடவையா இங்க திருடினேன். சார்,

நீங்க என்னை விடச் சொல்லுங்க சார். வலிக்குது சார். ரொம்ப அடிச்சிட்டாங்க சார்.

சத்யா ரமணியைப் பார்த்தான்.

"உன் வேலையைப் பார்த்துக் கிட்டுப் போன்னு சொன்னேன்."

சத்யா விருட்டென்று அந்தக் கூட்டத்திலிருந்து விலகி நடந்தான். அடி தாங்காமல் அந்தப் பையன் அலறுவதைக் கேட்டபடி நடந்தான்.

ஹாஸ்டல் அலுவலகத்திற்கு வந்து. "சிவா, போன் பண்ணிக்கிறேன்" என்று ரிசீவரை எடுத்து, "நம்ம ஏரியா போலீஸ் ஸ்டேஷன் நம்பர் என்ன தெரியுமா?" என்றான்.

ஃ ஃ ஃ

டாக்டர் கிரியின் வீட்டு வாசலில் சைக்கிளை நிறுத்தி இறங்கினான் சத்யா.

வாட்ச்மேன் அறிமுகப் புன்னகையுடன் ஒரு கதவைத் திறந்து விட்டதும், சைக்கிளைத் தள்ளிக்கொண்டு உள்ளே நடந்தான்.

அந்த கார்ப்பாதை கால் வட்டமாக வளைந்து போர்ட்டிகோ வரை சென்றது. இரண்டு பக்கங்களிலும் முக்கோணமாக செங்கல் புதைத்து வெள்ளையடித்து எல்லை கட்டப்பட்டிருந்தது இரண்டு எல்லைகளின் ஓரங் களிலும் வரிசையாகப் பூச்செடிகள். பிறகு பசேல் என்ற புல்வெளி, புல்வெளியில் ஒரு பக்கமாக நிழல் வர்ண நீட்டல் தாங்கிய இரும்பு ஊஞ்சல்.

சத்யாவுக்கு டாக்டர் கிரியின் வீட்டின் உள்புற அமைப்பைக் காட்டிலும், வெளிப்புற அமைப்பு மிகவும் பிடிக்கும், குறிப்பாக அந்தப் பராமரிக்கப்படும் புல்வெளியில் ஊஞ்சல்.



வீட்டிற்குள்ளே இவனோடு டாக்டர் ஏதாவது விவாதிக்கத் துவங்கினால், அது மாலை நேரமாக இருந்தால், "டாக்டர், தோட்டத்தில் உக்காந்து பேசலாமா?" என்று இவனே கேட்டு விடுவான்.

சத்யா போனபோது போர்டிகோவில் டாடா சியாரா வண்டியை டிரைவர் மருது துடைத்துக் கொண்டிருந்தான்.

"வாங்க சார், வணக்கம்" என்றான் அவன்,

"வணக்கம் டாக்டர் ரெடியாயிட்டாரா?" என்றபடி சைக்கிளை நிறுத்தி ஸ்டாண்ட் போட்டுப் பூட்டினான். சாவியைப் பத்திரமாக பேண்ட் பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டு வீட்டுக்குள் நடந்தான்.

சிறிய ரிசப்ஷனில் கம்பவுண்டர் சாரதி நின்றபடி பேப்பர் படித்துக் கொண்டிருந்தான்.

உள்ளே ஹாலில் டாக்டர் யாருடனோ போனில் பேசிக் கொண்டிருப்பது மெதுவாகக் கேட்டது.

"வாங்க சத்யா" என்ற சாரதி. "பேப்பர் பார்க்கறீங் களா?" என்று பாதி நீட்ட முன் வந்தான்.

"படிச்சிட்டேன்" என்றவன் சோபாவில் உட்கார்ந்து டீப்பாய் மேலிருந்த மருத்துவ சம்பந்தப்பட்ட இதழ்களில் ஒன்றை எடுத்துப் புரட்டினான்.

"சாரதி" என்று உள்ளேயிருந்து டாக்டரின் மனைவி திலகாவின் குரல் கேட்டதும். "தோ வந்துட்டன்ம்மா" என்று பேப்பரை குப்பை மாதிரி மடக்கிப் போட்டுவிட்டு உள்ளே ஓடினான் சாரதி.

சத்யா அந்தப் பேப்பரை எடுத்து அதன் மடிப்புகளில் சரியாக நீவி விட்டு மடித்து வைத்துவிட்டு தான் வைத் திருந்த இதழைப் படிக்கத் துவங்கினான்.

சாரதி வெளியே வந்து, ''டாக்டர் உங்களை உள்ளே கூப்பிடறார்'' என்றான்.

உள்ளே வந்தபோது டாக்டர் கிரி இன்னும் போனில் பேசிக் கொண்டிருந்தாலும், கண்களால் அவனை வரவேற்று திலகா கையில் வைத்திருந்த காபியைச் சுட்டிக் காட்டினார்.

''நேரா உள்ளே வரவேண்டியது தானே?'' என்று காபியை ஆற்றி நுரை பொங்க டவராவில் வைத்து நீட்டினாள் திலகா.

''இல்லம்மா. இப்பதான் ஹாஸ்டல்ல...''

''பரவாயில்லை சாப்பிடு. இல்லைன்னா டாக்டர் என்னை ஒரு வழி பண்ணிடுவாரு.

வாங்கி எச்சில் படாமல் பருகிவிட்டு அவள் கையில் கொடுக்காமல், மூலையில் இருந்த வாஷ்பேசினுக்குச் சென்று அவள் சொல்லச் சொல்லக் கேட்காமல் கழுவி சமையலறைக்குள் சென்று அதன் மேடையில் வைத்துவிட்டு வந்தான்.

டாக்டர் கிரி போனை வைத்துவிட்டு, ''குட்மார்னிங் சத்யா என்று அவனைப் புன்னகைத்து மாடிப்பக்கம் பார்த்து ''திவ்யா, நாங்க புறப்படப் போறோம். வர்றியா?'' என்றார்.

சத்யா பதிலுக்கு குட்மார்னிங் சொல்லிவிட்டு அவரைப் பார்த்து விழிக்க, ''என்னை பார்க்கறே? என் ஃபிரண்டோட டாட்டர் வந்திருக்கா. அவளுக்கு என்னோட ப்ராஜெக்ட்டைச் சொன்னேன். ரொம்ப இண்ட்ரெஸ்ட் ஆயிடுச்சு. அவளும் வர்றாளாம் நம்மோட திவ்யா!'' என்று மீண்டும் மாடிப்பக்கம் குரல் கொடுத்தார் டாக்டர் கிரி.

'வந்துட்டேன் அங்கிள்'' என்று குரல் கொடுத்துவிட்டு மாடிப்படிகளில் துள்ளலாக இறங்கி வந்தாள் சுரிதார் அணிந்திருந்த திவ்யா. வந்து நின்று சின்னதாக மூச்சிரைத்து, ''நான் ரெடி'' என்ற பிறகுதான் சத்யாவைப் பார்த்தாள்.



சத்யா ஒரு திடீர் பிரமிப்பால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தான்.

# 7

யாரையும் எதிரியாக நினைக்காதே. ஆனால், அறிமுகமில்லாதவனை நேசிக்காதே.

—ஸ்டெல்லா பென்சன்

அந்த பெண் திவ்யாவிடம் உற்சாகம் துள்ளிக் கொண்டிருந்தது. ஆளை அடித்துப் போடும் அலங்காரமில்லாமல், பளபளா உடையணியாமல், ஜ்வலிக்கின்ற ஆபரணங்கள் பூட்டாமல்...இலையுதிர் காலத்தில் இடைவெளி இல்லாமல், ஓசையும் இல்லாமல் மௌனமாக மரத்திலிருந்து உதிரும் இலைகளைப்போல ஒரு மௌன அழகு அவளிடமிருந்து இதமான அதிர்வுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

நெற்றியில் சிறு கறுப்பு ஸ்டிக்கர் பொட்டு. பம்மென்று பொங்கிய நெளிக் கூந்தலை அழகாகக் கத்தரித்துக் கட்டுப்படுத்தியிருந்தாலும் எங்கும் பிசிறுகள் வெண்ணெயில் செய்த கன்னங்கள். ஓவியன் கத்தரித்து ஒட்டின சின்ன உதடுகள். காதுகளில் தங்கத்தில் தொங்கல்கள். கழுத்தில் ஒரு சின்ன செயின். சுரிதாரின் மேல் துப்பட்டாவை பூணூல் மாதிரி குறுக்கே போட்டு இடுப்பருகில் முடிச்சிப் போடப்பட்டிருந்தாள்.

இந்த பெண்ணுக்கு எந்த இடத்திலும் இரண்டாவது நிமிடம் ஒரு கௌரவமான அங்கீகாரம் கிடைத்துவிடும்.

இவள் பஸ் ஸ்டாப்பில் நின்றால் எந்தப் பொறுக்கியும் கிட்டே வந்து 'என்னம்மா கண்ணு, வர்றியா ஜாலியா சினிமா போலாம்?' என்று கேட்க மாட்டான். ஆனால் தூரத்தில் நின்று உற்றுப் பார்ப்பான். ஆட்டோக்காரன் 'எங்க மேடம் போகணும்?' என்பான். ரியர் வியூ கண்ணாடியை அட்ஜஸ்ட் செய்யாமல் நேராய்ப் பார்த்து ஓட்டுவான். பொது இடத்தில் ஏதாவது பிரச்சினை மற்ற பெண்களுக்கு நடுவில் இவள் கேட்காமலேயே தலைமைப் பதவி கிடைத்துவிடும். 'நீங்களே எடுத்துச் சொல்லுங்க' என்று இவளைப் பார்த்துப் பேசுவார்கள்.

அழகு, அடக்கம், எளிமை, கம்பீரம், அறிவு எல்லாமே வெளிப்படும் விதமாக ஓர் இளமை முகத்தை இதுவரை சந்திக்காததால், அவள் முகத்தைப் பார்த்ததில் சத்யாவுக்கு உள்ளுக்குள் ஓர் உணர்வுத் திணறல் ஏற்பட்டது.

''திவ்யா, இது சத்யா. காலைல நான் பேசிட்டிருந்தனே, இவனைப் பத்தித்தான். ஒரு காலேஜ் ஸ்டூடண்ட்டுக்கு வேண்டிய ஒரு தகுதி கூட கிடையாது பாரேன். பங்க் ஸ்டைல் ஹேர்கட் இல்லை. பாக்கெட்ல சிகரெட் இல்லை. அவனவன் எந்த சில்பான்ஸ்படியும்னு பைக்லயும், கார்லயும் அலைஞ்சிட்டிருந்தா, இவனைப் பாரு என்னோட குப்பை கொட்டிட்டிருக்கான். சொந்தமா முன்னேற யோசிக்கிறதை விட்டுட்டு... சோஷியல் அவேர்னெஸ் உண்டு பண்றானாம். இவன் உருப்படுவான்றே?''

டாக்டர் கிரியின் உரிமையான இந்தக் கிண்டலுக்கு திவ்யா அழகாகப் புன்னகைத்து, அவ்வப்போது விழிகளை விரித்து, கன்ன மேடுகளில் ஜன்னல் ஒளியை மின்னலாக்கிக் கொண்டிருந்தாள்.

சத்யாவுக்கு டாக்டரிடம் இந்த வகை சுயகிண்டல் ரொம்பப் பிடிக்கும். தன்னையே ஒரு மூன்றாம் மனிதப்



பார்வையில் நகைச்சுவையாக விமர்சித்துக் கொள்வதில், அடுத்த நபருக்கு அந்த சந்தர்ப்பத்தை அளிக்காத ஒரு சாமர்த்தியமும் ஒளிந்திருப்பதை வெகுவாக ரசிப்பான்.

'ஹலோ, ஐ'ம் திவ்யா''. என்றாள் அவனைப் பார்த்து.

''ஹலோ'' என்றாள்.

''திலகா திவ்யாவுக்கு காபி கொடு சீக்கிரம். நாங்க புறப்படறோம்'' என்ற கிரி ஒலித்த போனை எடுக்க நகர... தனித்து விடப்பட்ட இவர்கள் இருவரும் ஏதாவது பேச வேண்டிய கட்டாயத்திற்குள்ளானார்கள்.

''நீங்க எங்க இருக்கீங்க?'' என்றான் சத்யா.

''அசோக் நகர்ல, டான் கிரானைட்ஸ்னு கேள்விப் பட்டிருக்கீங்களா? டி. ஏ. டபிள்யூ. என்!'' அவள் விழிகள் பட்டாம்பூச்சிகளாய் அலைந்தன.

''ஸாரி, கேள்விப்பட்டதில்லை.''

''ஸோ வாட்? டி. ஜி. ஸ்ரீகாந்த் என் டாடி. டி. ஜி' அவர் இனிஷியல் இல்லை. 'டான் கிரானைட்ஸ் ஸ்ரீகாந்த்'னு தான் எல்லாரும் சொல்வாங்க. சில பேரு 'டி.ஜி.எஸ்'னு சொல்வாங்க. கேபிடல் மார்க்கெட் புக்ல கிரானைட் இண்டஸ்ட்ரி பத்தி என் டாடி ஒரு கட்டுரைத் தொடர் எழுதிட்டிருக்கார்.''

நினைவு வந்து புருவங்களை உயர்த்தினான் சத்யா.

''மைகாட்! நான் படிச்சிருக்கேங்க. அந்த 'டி.ஜி எஸ்' உங்க அப்பாதானா? கிரானைட் இண்டஸ்ட்ரில ரொம்பப் பெரிய புள்ளியாச்சே. என்னால நம்பவே முடியலைங்க.''

''ஏங்க, பெரிய புள்ளிங்களுக்கு குழந்தை, குட்டிங்கல் லாம் இருக்க மாட்டாங்களா?''

''அதில்லை, எவ்வளவு பெரிய இடத்துப் பொண்ணு நீங்க. கொஞ்சம் கூட பந்தா இல்லாம இயல்பாய் பேசறீங் களே, அதைச் சொன்னேன்.''

போனை வைத்து விட்டு வந்த கிரி, "சத்யா, ஒரு பத்து தலைமுறைக்குத் தேவையான பந்தாவை இவங்கப்பன் சேர்த்து வெச்சிருக்கான். இந்தத் தறுதலை எப்படியோ அந்தக் குடும்பத்தில தப்பிப் பொறந்துடுச்சி" என்றார்.

"அங்கிள்!" செல்லமாகச் சிணுங்கி தரையை உதைத்தாள்.

"அப்பனை சொன்னதும் கோபம் பொத்துக்கிட்டு வந்துருச்சாக்கும்?"

"அவரு உங்க ஃபிரண்டு. எப்படி வேணாலும் சொல்லிக்கங்க. என்னைப் போய் தறுதலைன்னு எப்படிச் சொல்லலாம் நீங்க?"

"தறுதலைதானே நீ? எப்படின்னு சொன்னா நீயே ஒத்துக்குவே. உங்க வீட்ல எத்தனை கார் இருக்கு?"

"ஏன் அங்க்கிள் அதெல்லாம்?"

"சும்மா சொல்லு. நான் தெரிஞ்சுக்கணும்."

"அஞ்சி கார் இருக்கு."

"ரைட்டு. உனக்குன்னு எதாச்சும் பொறுப்பு இருக்கா? அதாவது இந்த ஆபீசைப் பார்த்துக்கணும். இந்தத் தொழிலைக் கவனிக்கணும், சமையல் செய்யணும், அது இதுன்னு எதாச்சும் உனக்கு வேலை இருக்கா வீட்ல?"

"எதுவும் இல்லை. எல்லாத்துக்கும் ஆளுங்க இருக்காங்க. டாடியோட ஆபீஸ்ல அட்மினிஸ்ட்ரேஷன் கத்துக்கறேன்னு சொன்னா டாடி கேக்கமாட்டேங்கறார். கொஞ்ச நாளைக்கு பொறுப்பு இல்லாம ஃப்ரீயா இருன்னு சொல்லிட்டார். பொறுப்பு இல்லாம சும்மா இருக்கறது தான் சுமைன்னு அவருக்கு சொன்னாலும் புரிய மாட்டேங்குது. நான் என்ன செய்யட்டும்?"



"இரு ஆக, கார் இருக்கு. கத்தை கத்தையா பணம் இருக்கு. இருபத்தி நாலு மணி நேரமும் உன் கைல இருக்கு. அப்படி இருக்கிறப்ப என்ன செய்யணும் நீ?"

"என்ன செய்யணும்?"

"நாலு பாய் ஃப்ரெண்ட்ஸ், போனாப் போகுதுன்னு ரெண்டு கர்ள் ஃபிரண்ட்ஸ் வெச்சிக்கிட்டு காரெடுத்துக்கிட்டு ஹெல்த் கிளப்பு ஸ்டார் ஹோட்டல் டிஸ்கொதே ஹால், ஸ்விம்மிங் பூல், ஐஸ்க்ரீம் பார்லர், பீச் ரிசார்ட்ஸ், டிரைவ்-இன் தியேட்டர், போட்டிங் கிளப்—இப்படி ஊர் சுத்தறதை விட்டுட்டு... பரத நாட்டியம் கத்துக்கறதும், கர்நாடிக் மியூசிக் கச்சேரிக்குப் போறதும், அமெரிக்கன் செண்டர் லைப்ரரிக்குப் போய் யாருக்கும் புரியாத புக்ஸ் படிக்கிறதும், மூவி கிளப்ஸ்ல சேர்ந்து வெளி நாட்டுப் படங்கள் பார்க்கறதும்... இதெல்லாம் தறுதலை செய்யற காரியம் இல்லாம வேற என்னவாம்?"

புன்னகைத்த திவ்யா, "நல்லவேளை, நீங்க நிஜமாத்தான் திட்றிங்களோன்னு நான் பயந்தே போய்ட்டேன் அங்கிள்" என்றாள்.

திலகா கொண்டு வந்து கொடுத்த காபியை வாங்கிக் கொண்டு, "இவருக்கு?" என்றாள் சத்யாவைக் காட்டி.

"நான் இப்பத்தான் சாப்ட்டேங்க."

"மத்தியானம் லன்ச்சுக்கு வந்துடுவிங்க இல்ல?" என்றாள் திலகா, அவர்களோடு வாசலுக்கு நடந்தபடி.

"வந்துடுவோம். இன்னைக்கு சத்யாவும் நம்ம வீட்ல லன்ச் சாப்பிடறான்."

"இல்லை சார். நான் ஹாஸ்டலுக்குப் போயிடறேன்."

"அட, சும்மா இருய்யா. உன் ஹாஸ்டல் சோத்தைத் தான் அன்னைக்கு ஒருநாள் சாப்பிட்டுப் பார்த்தனே. ஒரு

நாளைக்காவது அந்த தண்டனை இல்லாம நிம்மதியா இரேன். ஆனா ஹாஸ்ட்டல்கள்ல பொதுவா ஏன் மோசமா சாப்பாடு போடறாங்கன்னு யோசிச்சுப் பார்த்தேன். ஒரு விதத்தில் அவங்க மாணவர்களுக்கு நல்லது பண்றாங்க''

''என்ன டாக்டர் அது?''

''படிப்பு முடிச்சிட்டு நீங்க இந்த சொசைட்டிக்கு வர்றப்போ, இங்கே நடக்கற பல அநியாயங்களைப் பொறுத்துக்கிட்டுப் போறதுக்கு நிறைய பொறுமையும், சகிப்புத் தன்மையும் தேவைப்படுதில்லையா, அதை மாணவப் பருவத்திலேயே வளர்த்து விட்டுடறாங்க. அவங்க நல்ல சாப்பாடு பொட்டு அதனால உங்களுக்கெல் லாம் வீரமும், ரோஷமும் பொங்கி நாட்ல நடக்கற அநியாயங்களைத் தட்டிக் கேக்க ஆரம்பிச்சிட்டா என்ன பண்றது? அதனாலதான்.''

திவ்யா வாய்விட்டுச் சிரிக்கும்போது இன்னும் அழகாய் இருந்தாள்.

காரில் முன்புறம் கம்பவுண்டர் சாரதி ஏறிக் கொண்டான். பின்புறம் ஒரு பக்கம் திவ்யாவும், ஒரு பக்கம் சத்யாவும் அமர, நடுவில் கிரி அமர்ந்து கொண் டார்.

''மருது, தையூர் போகணும். எந்த ரூட்ல போகப் போறே?''

''பழைய மகாபலிபுரம் ரூட்ல போக வேண்டியதுதான் சார்''

''அது ரூட் கொஞ்சம் மோசமா இருக்கும்டா. ஒண்ணு செய்யி. புது மகாபலிபுரம் ரூட்ல போ. வி. ஜி. பி. கோல்டன் பீச் எல்லாம் தாண்டினதும் சோழிங்க நல்லூருக்கு ரைட்ல ஒரு ரோடு திரும்பும். அதில் ரெண்டு கிலோ மீட்டர் வந்தேன்னா ஓல்ட் மகாபலிபுரம் ரோடு பிடிச் 



டலாம். அப்புறம் செம்மஞ்சேரி, கேளம்பாக்கம் வந்து தையூர் திரும்பிக்கலாம்'' என்றார் கிரி.

கார் புறப்பட்டு ஓடத் துவங்கியது.

''அங்கிள், நீங்க கிண்டலடிக்கிறதைப் பார்த்தா மாணவ சமுதாயம் இப்போ பொறுப்பில்லாம கையைக் கட்டிக்கிட்டு உக்காந்திருக்குன்னு சொல்றிங்களா?'' என்றாள் திவ்யா.

''நிச்சயமா!'' என்றார் கிரி.

''எப்படிச் சொல்றிங்க? அவங்க. படிக்க வேண்டிய வங்க. படிக்கிற சமயத்துல அவங்க கான்செண்ட்ரேஷன் முழுக்க 'படிப்புல மட்டும்தான் இருக்க முடியும். அவங் களைப் போய் சமூக அநீதிகளைக் கண்டிக்கக் கூப்புட்டா எப்படி?''

''நீ பேசறது ஐடியல், நான் பேசறது பிராக்டிகல், ஒரு மாணவனுக்கு அதிக கவனம் படிப்புல இருக்கணும். நியாயம். ஆனா இருபத்தி நாலு மணி நேரமும் ஒருத்தன் படிச்சுக்கிட்டே இருக்கானா? அப்படி இருக்க முடியுமா? இன்னைக்கு ஸ்டூடண்ட்ஸ் காலேஜுக்கு வர்றது படிப்புக் காகவா? ஏதோ கொஞ்சம் பேர்தான் உணர்ந்து அப்படி வர்றான். மிச்சம் பேர் எல்லாம் வேற வேற நோக்கத் தோட வர்றான். டிகிரி வாங்கினாதான் அந்தஸ்தா கல்யாணப் பத்திரிகைல போட்டுக்க முடியும்னு கொஞ்சம் பேரு. அப்பதான் ஏதாச்சும் டீசண்ட்டான வேலை கிடைக்கும்னு கொஞ்சம் பேரு. ஜாலியா பொழுதைப் போக்கலாம்னு கொஞ்சம் பேரு. அறிவை வளர்த்துக் கறதுக்காக வர்றவனைத் தேடித்தான் பிடிக்கணும். மாணவர்களோட எவ்வளவு மேன் அவர்ஸ் வேஸ்ட்டாப் போகுதுன்னு நீயே யோசிச்சுப் பாரும்மா.''

''அந்த வயசுக்கே உரிய ஜாலி இல்லாம எப்படி இருக்க முடியும் அங்கிள்?''

"அய்யோ, நல்லா ஜாலியா இருக்கட்டும். அப்படித் தான் இருக்கணும். சினிமாவுக்குப் போகட்டும். டான்ஸ் ஆடட்டும். கானா பாடட்டும். உற்சாகமா துள்ளிக் குதிக்கட்டும் இதெல்லாம் ஒரு பகுதியா இருக்கணுமே ஒழிய இதுவே முழு நேர வேலையாகக் கூடாது. மாணவ சக்தி எவ்வளவு பெரிய சக்தி தெரியுமா? ஒரு பஸ் டிரைவர் ஒரு ஸ்டுடண்ட்டை அடிச்சுட்டா, அரை மணி நேரத்தில் சிடில இருக்கிற அத்தனை காலேஜ் ஸ்டுடண்ட்சும் ஒரு இடத்தில திரண்டு நிக்கிறாங்களா, இல்லையா? இந்த ஃபோர்ஸ் ஏன் ஒரு நல்ல விஷயத்துக்குக் கூடறதில்லை? ஹாஸ்டல் சாப்பாட்டுல உரப்பு பத்தலைன்னு காலேஜ் ஸ்ட்ரைக் நடத்தறாங்களே ஒழிய, ஊர்ல தண்ணி இல்லைன்னா கவர்ன்மென்ட் ஆபீஸ் முன்னாடி ஸ்ட்ரைக் நடத்தறதில்லையே...ஏன்?"

"நான் சொல்றேன்" என்றாள் திவ்யா.

அவளுடைய பதிலுக்காகக் காத்திருந்தான் சத்யா.

# 8

**உண்மைகளை உதாசீனப்படுத்துவதுதான் நடைமுறை அரசியல்.**

**—ஹென்றி புரூக்ஸ் ஆடம்ஸ்**

"சொல்லு திவ்யா, உப்பு பெறாத விஷயத்துக்கெல்லாம் ஸ்ட்ரைக் செய்ற மாணவர்கள் ஊர் பிரச்சினைகளுக்காக கொதித்து எழறதில்லையே, ஏன்?" என்றார் டாக்டர் கிரி, தனக்கே உரிய கிண்டல் தொனியில்.

"அப்படி ஒட்டுமொத்தமா அவங்க சமுதாயப் பிரச்சினைகள்ல கலந்துகிட்டதே இல்லைன்னு சொல்ல



முடியாது அங்கிள். ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்தில மாணவர்கள் பங்கு அதிகம் இருந்திச்சு. இலங்கைல நடந்த வன்முறைச் சம்பவங்களுக்கு எதிரா மாணவர்கள் ஊர்வலம் போகலையா? அறுபத்தி ஒம்பது சதவிகித இடஒதுக்கீடு பிரச்சினைல மாணவர்கள் குரல் ஒலிக்கலையா?" என்றாள் திவ்யா.

"மாநில அளவிலான, தேசிய அளவிலான ஒட்டுமொத்த மக்களையும் பாதிக்கிற பிரச்சினைகள்ல எல்லா மக்களும் எதிர்ப்பு காட்றப்ப அவங்களும் காட்றாங்க அதில என்ன இருக்கு?"

"வேற என்ன செய்யணும் அவங்க?"

"அதாவது...ஜனசக்தி திரண்டா ஒரு காரியத்தைச் சாதிக்க முடியும்னு வைச்சிக்கோ, அந்தக் காரியத்தை மாணவர்கள் சாதிச்சுக் காட்டணும். உதாரணமா ... ஒரு ஊர்ல ஒரு பாலம் உடைஞ்சி கிடக்கு. பல பேரு அதை ரிப்பேர் செய்யச் சொல்லி பெட்டிஷன் போட்டும் காரியம் நடக்கலை. வெறுத்துப்போய் ஜனங்க எல்லாரும் சப்-கலெக்டர் ஆபீஸ் முன்னாடி கூட்டமா கூடி உண்ணாவிரதம் இருந்தா என்ன ஆகும்?"

"அந்தப் பிரச்சினை அதிகாரிகளோட உடனடி கவனத்துக்கு வரும். பத்திரிகைகள் மூலமா செய்தி பரவிடக் கூடாது, மக்கள் போராட்டம் பெரிசாகிடக் கூடாதுன்னு கவலைப்பட்டு அந்தப் பாலப் பிரச்சினையைத் தீர்க்க உடனே முன் வருவாங்க," என்றான் சத்யா.

"வருவாங்க இல்லையா? ஆனா ஜனங்க ஒண்ணு கூடி எல்லா விஷயத்துக்கும் வருவாங்களான்னு யோசி, அந்தப் பிரச்சினையால தனக்கும் ஏதாவது ஒரு பாதிப்பு இருந்தா தான் வருவான். குடி தண்ணிரில சாக்கடை கலந்துரிச்சின்னா...இப்ப இதுஎல்லாரோட பிரச்சினை. ஒரு ஃபாக்டரியோட கழிவுனால விவசாய நிலம் பாதிக்கப்படுதுன்னா

இது விவசாயியோட பிரச்சினை மட்டும்தான். தண்ணிப் பிரச்சினைக்கு எல்லாரும் வருவான். விவசாயி பிரச்சினைக்கு விவசாயி மட்டும்தான் வருவான். அந்த மாதிரி நான் சொன்ன பாலம் பிரச்சினைக்கு அந்தப் பாலத்தை உபயோகிக்கிறவனுக்குத்தான் அக்கறை இருக்கும். அதனால ஒரு சமுதாயப் பிரச்சினைக்கு எல்லா மக்களையும் அத்தனை லேசில ஒருங்கிணைக்க முடியாது. ஆனா ஒருங்கிணைஞ்சி ஒரு குரூப் இருக்குன்னா அது மாணவ சமுதாயம். ஒவ்வொருத்தரா சொல்லிவிட்டுக் கூட்ட வேண்டியதில்லை. ஏற்கனவே ஆர்கனைஸ்டா இருக்காங்க அவங்க. இதே பாலம் பிரச்சினைக்கு அந்த ஊர்ல உள்ள காலேஜ் ஸ்டுடண்ட்ஸ் ஆர்.டி.ஓ. ஆபீஸ் முன்னாடி திரண்டு கோரிக்கை வெச்சா... எவ்வளவு ஸ்பீடா காரியம் நடக்கும்?''

''கரெக்ட்டுதான். ஆனா படிக்கிற பையன்க மனசுல வன்முறையை விதைக்கிற மாதிரி ஆகாதா டாக்டர்?'' என்றாள் திவ்யா.

''வன்முறையா? நான் எங்கம்மா அப்படிச் சொன்னேன்?''

'மாணவர்கள் இணைஞ்சி பொது மக்கள் பிரச்சினைக்காகப் போராடணும்னு சொன்னிங்களே...''

''ஆமாம் போராட்டம்னா வன்முறைதானா? காந்திஜி நடத்தின போராட்டங்கள்ல வன்முறை இருந்திச்சா?''

''அமைதி வழிப் போராட்டம் எல்லாம் இன்னிக்கு சரிப் பட்டு வருமா சார்?''

''என்னைக்கும் சரிப்பட்டு வரும். போராட்டத்தோட நோக்கத்தில சத்தியம் இருக்கணும். ஒரு வீட்டை எடுத்துக்கோ. மிரட்டியும் திருத்த முடியாத குழந்தையை அன்பால திருத்த முடியும். அப்படித்தான் நாடும் இன்னைக்கு அமைதி வழிப் போராட்டங்களை வலுவாக



நடத்தவோ, வழி நடத்தவோ நல்ல தலைவர்கள் குறைஞ்சு போயிட்டதுதான் நம்ம துரதிர்ஷ்டம்.''

''எனக்கென்னவோ மாணவர்களை இந்த மாதிரி போராட்டம், அது இதுன்னு அரசியலுக்குக் கூப்பிடறது சரியான்னு தெரியலை' என்றாள் திவ்யா.

''ப்ளஸ்ட்டூ முடிச்சுட்டு காலேஜில நுழையறப்ப ஒருத்தனுக்கு வயசு பதினெட்டு ஆயிடுதுங்க திவ்யா. இன்னைக்கு ஓட்டுரிமை பதினெட்டு வயசுலேர்ந்து இருக்கே. எப்ப ஒருத்தன் ஓட்டுப் போட தகுதி அடையறானோ அப்பவே அவன் அரசியலுக்கு வந்தாச்சு. டாக்டர் ஒண்ணும் மாணவர்களைக் கட்சில சேர்ந்து கொடி பிடிச்சிக்கிட்டு ஊர்வலம் போகச் சொல்லலை. கட்சி அரசியல் அவங்க மேல திணிக்கப்படறதில எனக்கும் சம்மதம் இல்லை. எல்லாக் கட்சிகள்லயும் மாணவர் அணி இருக்கு. காலேஜ் எலெக்ஷன்ல கட்சிகள் தலையிட்டு செலவு பண்ணுது. கட்சி சார்ந்த மாணவர்கள் நிக்கிறாங்க. பொதுத் தேர்தல் தோத்துப் போற அளவுக்கு காலேஜ் தேர்தல்கள் பிரம்மாண்டமா நடத்தப்படுது. இந்த மாதிரி எல்லாம் மாணவ சக்தி எக்ஸ்ப்ளாய்ட் பண்ணப்படறதுக்கு, டாக்டர் சொல்ற மாதிரி சமுதாயப் பிரச்சினைகளுக்காக மாணவர்கள் போராடறதில தப்பு இல்லைங்க' என்றான் சத்யா.

''யப்பாடா! எனக்கு ஒரு ஓட்டு இருக்கு'' என்று சிரித்தார் கிரி.

''அங்கிள், நீங்க சொல்றதை நான் மறுக்கலை. நடைமுறைல சாத்தியமா? சத்யா சார் சொன்ன மாதிரி ஒரு காலேஜுக்குள்ளே கட்சிகள் வந்தாச்சு. கட்சி ரீதியா மாணவர்கள் பிரிஞ்சி நிக்கிறாங்க. சமுதாயப் பிரச்சினைக்குப் போராட மட்டும் எப்படி இணைவாங்க? நீங்க சொன்ன அந்த பாலம் பிரச்சினையையே எடுத்துக்கங்க. பாலம் சரி செய்யாததுக்கு யார் பொறுப்பு? ஆளும்

கட்சி. சரியா? அந்தப் போராட்டதுக்கு ஆளுங்கட்சியை ஆதரிக்கிற மாணவர்கள் எப்படிக் கலந்துக்குவாங்க?'' என்றாள் திவ்யா.

''வேலிட் கொஷ்சன்'' என்றான் சத்யா.

''எந்த ஒரு விஷயத்தையும் நடைமுறையில சிந்திக்கிறப்ப ஆயிரத்தி எட்டு பிரச்சினைகள் வந்து நிக்கத்தான் செய்யும். இப்ப இருக்கிற மோசமான சோஷியல் செட்டப்பை வெச்சிக்கிட்டு யாருமே எதுக்குமே பிராக்டிகல் சொல்யூஷன்ஸ் கொடுக்க முடியாது. இப்போதைக்கு நாம மூணு பேருமா சேர்ந்து ஒரே ஒரு காரியம் தான் செய்யலாம்''என்றார் டாக்டர்.

''என்ன டாக்டர்?''

''காரை ஓரமா நிறுத்தச் சொல்லி அந்தக் கடையில ஜில்லுன்னு கூல் ட்ரிங் குடிக்கலாம், காரை நிறுத்துப்பா'' என்றார் கிரி சிரித்தபடி.

''அந்தரத்திலேர்ந்து தொப்புன்னு கீழே போட்டது மாதிரி இருக்கு'' என்றாள் திவ்யா.

கார் நின்றதும், அனைவரும் இறங்கினார்கள்.

சாரதி சென்று எல்லோருக்கும் குளிர்பான பாட்டில்களை வாங்கி வந்து கொடுத்தான். ஸ்ட்ரா வழியாகப் பருகத் துவங்கினார்கள்.

மீண்டும் கார் புறப்பட்டதும்...

''அங்கிள், இந்த டாபிக் போதும்.''

''நான் வாயையே திறக்கலைப்பா. நீங்க ஏதாச்சும் பேசிக்கங்க. நான் தூங்கற மாதிரி கேட்டுக்கறேன்.''

''இந்த டாபிக் போதும்னுதான் சொன்னேன். உங்களைப் பேசவே வேணாம்னு சொல்லலை அங்கிள். உங்



களோட பேசிட்டிருக்கிறப்ப எவ்வளவு எனர்ஜெடிக்கா இருக்கு தெரியுமா?''

''பார்றா! ஒரு கூல்ட்ரிங் என்னல்லாம் பொய் பேச வைக்குது பாரு!''

''சார், அவங்க சொல்றது நிஜம் தான். உங்களைச் சந்திச்சிட்டுப் போற அன்னைக்கெல்லாம் என்னால சரியாத் தூங்க முடியாது.''

''போட்டு அறுத்துட்டானே மனுஷன்னு திட்டிட்டே இருப்பியா?''

''இல்லை சார். நீங்க சொன்னதை எல்லாம் நினைச்சுப் பார்த்துட்டே இருப்பேன் சார்.''

''எப்படியோ என்னால உன் தூக்கத்தைக் கெடுக்க முடியுது.''

''அங்கிள்.''

''என்னம்மா?''

''இப்ப சொல்லுங்களேன். நீங்க பண்ணிட்டிருக்கிற—ப்ராஜெக்ட் என்ன?''

''அது ஏம்மா இப்ப, போரடிக்கும் ஏதாச்சும் சினிமா கதை பத்திப் பேசுங்களேன். இண்டரெஸ்ட்டிங்கா இருக்கும்.''

''ரொம்பதான் பிகு பண்ணாதிங்க அங்கிள்.''

''இதில பிகு என்ன இருக்கு? நான் கவர்ன்மெண்ட் ஹாஸ்பிடல்ல வேலை பார்த்துட்டிருந்தேன். தனியாவும் கிளினிக் வெச்சிருந்தேன். அந்த 'எய்ட்ஸ்' மேட்டர்ல எனக்கு இண்ட்ரெஸ்ட் ஏற்பட்டுச்சி. அதைப்பத்தி முழுக்க படிச்சேன். வெளிநாட்டுக்கெல்லாம் போய் ஸ்பெஷல் கோர்சஸ் அட்டெண்ட் செஞ்சிட்டு வந்தேன். நம்ம நாட்லயும் 'எய்ட்ஸ்' ஏற்படுத்தற 'ஹெச்.ஐ.வி.' கிருமி வேகமா

பரவிட்டிருக்கின்ற உண்மை என்னை அறைஞ்சது. இதை ஒழிக்கிறதும், தடுக்கறதுமே முழுநேரமா செய்யலாம்னு பட்டுது. என் வேலையை ரிசைன் செஞ்சேன். கிளினிக்கை 'ஹெச். ஐ. வி. அட்டாக் ஆனவங்களுக்கு மட்டும்னு மாத்தி னேன். இதுக்காக ஒரு ஃபவுண்டேஷன் ஆரம்பிச்சி நிறைய வேலைகள் பண்ணிட்டிருக்கேன். அதில ஒண்ணு மக்கள் கிட்ட அவேர்னெஸ் ஏற்படுத்த ப்ரோக்ராம்ஸ் ஒவ்வொரு ஞாயித்துக்கிழமையும் ஒரு சின்ன ஊரை செலக்ட் பண்ணிக் கிறேன். அந்த ஊருக்குப் போய் எய்ட்ஸ் பத்தி விளக்கம் சொல்றேன். அப்படியே என்னோட சர்வேக்காக பலபேர் கிட்ட ரத்தம் சாம்ப்பிள் எடுத்துக்குவேன். சத்யாவுக்கு வேற பொழைப்பு இல்லாம என்னோட சேர்ந்துகிட்டாப்ல. இப்ப சத்யாவே பாதி டாக்டர். ஹெச்.ஐ.வி.' கிருமி பத்தி சத்யா ஒரு புத்தகமே எழுதற அளவு தெரிஞ்சி வெச் சிட்டாப்ல. எனக்கே லேட்டஸ்ட் தகவல்கள் தருவாப்ல.''

''நம்பாதிங்க திவ்யா. டாக்டர் ரொம்ப சொல்றாரு.'

''அங்கிள், எனக்கொரு சந்தேகம்.''

''கேளும்மா.''

''அதான் அரசாங்கமே நோட்டீஸ் அடிச்சி விநியோகிக் குது. ரேடியோல சொல்லுது. டி. வில. சொல்லுது. சினிமாப் படம் எடுத்துப் போடுது. அங்கங்கே விளம்பர போர்டுகள் வைக்குது. அது பத்தாதா?''

''பத்தாதும்மா. அரசாங்கமே கண் சிகிச்சை முகாம்கள் அப்பப்ப நடத்தினாலும் பொதுச்சேவை நிறுவனங்கள் தனிப்பட்ட முறையில் இலவச கண் சிகிச்சை முகாம்கள் நடத்தற மாதிரி...பிரச்சாரம் இன்னும் தேவைங்கிறது என் கருத்து. 'ஹெச்.ஐ.வி.'க்கும் 'எய்ட்ஸ்'க்கும் என்ன வித்தியாசம் திவ்யா?' சொல்லேன்.''

''எய்ட்ஸ்—இது நோயோட பேரு. 'ஹெச்.ஐ.வி.'— இது அதை உருவாக்கற கிருமி பேரு!''



''தப்பு திவ்யா. நீ சொன்ன இத்தனை அரசாங்க பிரச்சாரங்களுக்கு அப்புறமும் உனக்கே சரியாத் தெரியலை பாரு. 'எய்ட்ஸ்'ன்றது நோய் இல்லை. அது பலவித நோய்களை உருவாக்கக்கூடிய உடம்போட நிலை! 'ஹெச்.ஐ.வி.' கிருமியோட செயலால ரொம்ப பாதிக்கப் பட்டு சீரியஸான ஒரு நிலைதான் எய்ட்ஸ். இந்த மாதிரி நிறைய சரியான தகவல்கள் மக்களுக்குப் போய்ச் சேரணும். அதான் என் நோக்கம்.''

காரின் வேகம் குறைந்தது.

இவர்கள் பேச்சை நிறுத்தி சாலையைப் பார்த்தார்கள்.

சாலையில் சற்றுமுன்தான் அந்த விபத்து நிகழ்ந்திருக்க வேண்டும்.

ஒரு லாரியும் காரும் எதிரெதிராக மோதிக் கொண் டிருந்தது. இன்னும் கூட்டம் எதுவும் கூடவில்லை.

இவர்கள் காரை விட்டு இறங்கி ஓடினார்கள்.

நசுங்கிப் போன அந்தக் காருக்குள்ளிருந்து ஒரு பெண்ணின் ஹீனமான குரல் கேட்டது.

## 9

கஷ்டமான கேள்வியைக் கேட்பது சுலபம்
—டபிள்யூ. ஹெச். ஆடென்

விபத்துக்குள்ளான காரின் டிரைவர் சீட்டில் அமர்ந் திருந்த அந்தப் பெண்ணின் நெற்றியிலிருந்து ரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. காரின் கதவும், முன்புறமும் நசுங்கி அவளின் ஒரு கால் எக்கச்சக்கமாய் சிக்கியிருந்தது.

ஹீனமாகக் குரல் கொடுத்துக் கொண்டிருந்த அவள் குரல் தேய்ந்து மயக்கமடைந்துவிட்டாள்.

சத்யா, சாரதி, மருது எல்லோருமாகச் சேர்ந்து காரின் நசுங்கின கதவை உடைத்தெடுத்தார்கள்.

காரில் வைத்திருந்த தனது முதலுதவிப் பெட்டியுடன் ஓடி வந்தார் கிரி.

சிக்கலை நீக்கி அந்தப் பெண்ணின் காலை விடுவித்து, தூக்கி வெளியே சாலையோரமாய்ப் படுக்க வைத்தார்கள்.

டாக்டர் கிரி அவசரமாகச் சில முதலுதவிகள். செய்து பஞ்சு வைத்து கட்டுகள் போட்டார்.

"தையல் போட்டாகணும். நிறைய பிளட் போய்டுச்சி. பிளட் ஏத்தணும். உடனடியா இவளை ஹாஸ்பிடலைஸ் செய்யணும்" என்றார் கிரி.

"நீலாங்கரையில ஒரு ஹாஸ்பிடல் பார்த்தேன். மருது, நம்ம வண்டியைத் திருப்பி எடுத்துட்டு வா" என்றான் சத்யா. "லாரி டிரைவருக்கு என்ன ஆச்சுன்னு பார்க்கலையே" என்றவன் முகப்பு நசுங்கி சாய்வால் நின்ற லாரியில் பரபரப்பாக ஏறிப்பார்த்துவிட்டு இறங்கினான்.

"அவன் மேலதான் மிஸ்டேக். ராங் சைடுல வந்திருக்கான். அதனால அப்படியே போட்டுட்டு ஓடிட்டான் போலருக்கு" என்றாள் திவ்யா.

"திவ்யா. காருக்குள்ளே இந்தப் பெண்ணோட ஹேண்ட் பேகைப் பார்த்தமாதிரி ஞாபகம் அதை எடுங்களேன்."

திவ்யா எடுத்து வந்து திறந்தாள். உள்ளே விலாச அட்டை ஏதாவது இருக்கிறதா என்று ஆராய்ந்தாள். இருந்தது.

மருது காரைத் திருப்பிக் கொண்டு வந்துவிட, அந்தப் பெண்ணை ஏற்றிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு விரைந்தார்கள்.



இவர்கள் போன ஆஸ்பத்திரியில் ஆக்சிடெண்ட் கேஸ் எடுப்பதில்லை என்று சொல்லப்பட. வேறு ஒரு ஆஸ்பத்திரி சென்று அவளை அட்மிஷன் போட்டு, டூட்டியில் இருந்த டாக்டரிடம் தன் ஆலோசனைகளைச் சொல்லி உடனடி சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தார் கிரி.

சத்யாவும். திவ்யாவும் ஆஸ்பத்திரியின் ரிசப்ஷனுக்கு வந்தார்கள்.

"அந்த அட்ரஸ் கொடுங்க திவ்யா."

அந்த விலாச அட்டையில் ஜனார்த்தனன் என்பவரின் மாம்பலம் விலாசமும், போன் நம்பரும் இருந்தது.

அனுமதி பெற்று போனை எடுத்து அந்த எண்ணைத் தொடர்பு கொண்டான் சத்யா.

"ஹலோ?" என்றது எதிர்முனை.

"மிஸ்டர் ஜனார்த்தனன் இருக்காரா?"

"ஜனார்த்தனன்தான் பேசறேன். நீங்க யாரு?"

"சார், என் பேரு சத்யா. உங்க கிட்ட மெரூன் கலர் ஃபியட் கார் இருக்கா?"

"ஆமாம். ஏன்?"

"அதோட நம்பர் டி. என். ஜீரோ, செவன், டி, ஃபைவ், ட்டு, த்ரீ, ஃபைவா?

"ஆமாம் சார், என்ன விஷயம்?"

"பதற வேணாம் சார். இன்னைக்குக் காலைல அந்த வண்டியே எடுத்துட்டுப் போயிருக்கிறது யார் சார்?"

"என் வைஃப் எடுத்துட்டு போயிருக்கா சார். என்ன விஷயம்? சீக்கிரம் சொல்லுங்க. காருக்கு எதாச்சும் ஆக்சிடென்ட்டா?"

"பயப்படற மாதிரி பெருசா இல்லை சார். ஒரு சின்ன விபத்து தான். உங்க மிசஸ் ப்ளூ கலர் சேலை கட்டிருந்தாங்களா இன்னைக்கு"

"ஆமாம்."

"இங்கே திருவான்மியூர்ல பாலாஜி ஹாஸ்பிடல்லேர்ந்து பேசறேன் சார். உங்க மிசஸை இங்க கொண்டாந்து அட்மிட் பண்ணியிருந்கோம். தயவு செஞ்சி நீங்க பதற வேணாம். அவங்களுக்கு மேஜரா எதுவும் இல்லை. நெத்தில அடி பட்ருந்திச்சி. எங்களோட டாக்டர் இருந்ததால உடனடியா ஃபர்ஸ்ட் எய்ட் பண்ணிட்டு இங்க கொண்டாந்துட்டோம். தையல் போடறாங்க. படபடப்பில்லாம புறப்பட்டு வாங்க சார். பாலாஜி ஹாஸ்பிடல் எங்க இருக்குன்னு சொல்றேன். திருவான்மியூர் பஸ் டெர்மினஸ் தாண்டி லெஃப்ட்ல..."

திவ்யா, அவன் நிதானமாகவும், பொறுப்பாகவும் போனில் பேசுவதை ரசித்தபடி நின்று கொண்டிருந்தாள்.

சத்யா போனை வைத்துவிட்டு 103 எண்களை அழைத்து, "டிராஃபிக் போலீசா?" என்று கேட்டு விபத்தைப் பற்றிச் சொல்லி, விபத்து நடந்திருக்கும் இடத்தைத் தெளிவாகச் சொல்லி, பாதிப்புக்கு உண்டான பெண்ணை ஆஸ்பத்திரியில் சேர்த்திருப்பதையும் சொன்னான்.

போனை வைத்துவிட்டு, "நான் என்னதான் உண்மையைச் சொன்னாலும், அவங்க ஹஸ்பண்ட் திக் திக்குன்னுதான் புறப்பட்டு வருவார். பெரிய அளவுல நடந்த விபத்தை, தான் அதிர்ச்சியடைஞ்சிடக் கூடாதுன்னு குறைச்சி சொல்லியிருக்காங்கன்னு அவரா கற்பனை பண்ணி பதறிக்கிட்டுதான் வருவார்" என்றான்.

"அவ்வளவு ரத்தத்தைப் பார்த்தது எனக்கே படபடன்னுதான் இருக்கு. அப்படி உக்காரலாமா?" என்ற



திவ்யா அங்கே போட்டிருந்த பிளாஸ்டிக் நாற்காலிகளில் ஒன்றில் அமர்ந்து தன் நெற்றியைப் பிடித்துக் கொண்டாள்.

சத்யா வெளியே சென்று பிளாஸ்டிக் கப்பில் சூடாகக் காபி வாங்கி வந்து அவனிடம் தந்தான்.

"இதைக் குடிங்க. ரொம்ப படபடப்பா இருந்தா கொஞ்ச நேரம் படுத்துக்கறிங்களா? பக்கத்தில காமன் வார்டுல ரெண்டு, மூணு பெட் காலியாத்தான் இருக்கு. பத்து நிமிஷம் படுத்து எந்திரிச்சா சரியாய்டும்."

"அந்த அளவுக்கு இல்லை தேங்க்ஸ்" காபியைப் பருகி முடித்த அவளிடம் காலி கப்புக்கு அவன் கைநீட்ட, அது மரியாதை இல்லை என்று நினைத்த திவ்யா, "பரவாயில்லை" என்று எழுந்து ஓரத்தில் இருந்த குப்பைத் தொட்டியில் போட்டாள்.

டாக்டர் கிரி கர்சீப்பில் கைகளைத் துடைத்தபடி இவர்களிடம் வந்து, "மொத்தம் இருபத்தி ரெண்டு தையல் கால்லயும், நெத்திலயும். ப்ளட் வேணாம்னு முடிவு பண்ணிட்டோம். டெக்ஸ்ட்ரோஸ் மட்டும் ஏத்தச் சொல்லியிருக்கேன். அந்தப் பொண்ணு கழுத்துல தாலி இருக்கு. அவளோட ஹஸ்பண்ட் யாருன்னு விசாரிச்சி..."

"தகவல் கொடுத்துட்டேன். வந்துட்ருக்கார் டாக்டர். டிராஃபிக் போலீசுக்கும் சொல்லிட்டேன். டாக்டர், நீங்க தையூருக்குப் புறப்படுங்க. நான் இங்க இருந்து ஜனார்த்தனன் வந்ததும் பேசிட்டு அப்புறம் பஸ்ல புறப்பட்டு வர்றேன்."

"சரி" என்ற டாக்டர் திவ்யாவின் முகம் பார்த்து, "ரொம்ப டல்லாயிட்டியே. நீ வேணும்னா வீடடுக்குப் போயிடறியா திவ்யா? இன்னொரு தடவை என்னோட ஜாய்ன் பண்ணிக்கலாமே" என்றார்.

"சார், அதான் நல்லது. நிறைய ரத்தம் பார்த்ததில ரொம்ப அப்செட் ஆகிட்டாங்க. படபடப்பா வருதுன்னு சொன்னாங்க. காபி வாங்கிக் கொடுத்தேன். ஷி நீட்ஸ் ரெஸ்ட்."

"அப்படியா திவ்யா?" என்ற கிரி அவளின் கையைப் பிடித்து பல்ஸ் பார்த்தார்.

"இல்லை. பரவால்லே அங்கிள். சரியாய்டும்."

"நோ நோ. வேணாம். நாம புறப்பட்டப்ப இருந்த மூடு போய்டுச்சி எல்லாருக்கும். அங்க வந்து வெயில்ல வேற அலையணும். நீ வரவேணாம். வீட்டுக்குப் போயி டும்மா. தனியாப் போக வேணாம். சத்யா, நீ ஒண்ணு பண்றியா?"

"சொல்லுங்க டாக்டர்."

"அந்தம்மா ஹஸ்பண்ட் வந்ததும் விபரம் சொல்லி ஹேண்ட்பேக் ஒப்படைச்சுட்டு ஒரு ஆட்டோ பிடிச்சி திவ்யாவை அவங்க வீட்ல விட்டுட்டு நீயும் ஹாஸ்டல் போய்டு."

"சரி டாக்டர்."

கிரியும், சாரதியும் புறப்பட்டுப் போனார்கள். அங்கி ருந்த பத்திரிகை ஒன்றைப் புரட்டிக் கொண்டு உட்கார்ந் திருந்தாள் திவ்யா.

சத்யா ஆஸ்பத்திரி வாசலுக்கு வந்து கைகளைக் கட்டிக் கொண்டு நின்று காத்திருந்தான்.

கொஞ்ச நேரத்தில் ஒரு ஆட்டோவிலிருந்து சிலர் பர பரப்பாக இறங்கி வர, அதில் பிரதானமாக இருந்த முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க இளைஞனிடம் சத்யா போய், "மிஸ்டர் ஜனார்த்தனன்?" என்றான்.

"நான்தான்."



"உங்களுக்கு போன் செஞ்சது நான்தான் வாங்க."

அவரை அழைத்துச் சென்று அந்தப் பெண்ணைப் படுக்க வைத்திருந்த அறைக்குள் விட்டான். அவள் மயக் கத்தில்தான் இன்னும் இருந்தாள்.

சத்யா விபரங்களைச் சொல்லி ஹேண்ட்பேகை ஒப்படைத்தான். ஜனார்த்தனன் இவன் விலாசம், டாக்டர் கிரியின் விலாசம் எல்லாம் வாங்கிக் கொண்டு நூறு தடவை யாவது நன்றி சொல்லியிருப்பார்.

பிறகு திவ்யாவுடன் இவன் ஆட்டோவில் புறப்பட்ட போது, திவ்யாவுக்கு படபடப்பு சுத்தமாக அடங்கி யிருந்தது.

தனியாகவே போய்விட முடியும் என்று உணர்ந்தாள். ஆனால் சத்யா உடன் வருவதை ஏனோ மறுக்கத் தோன்ற வில்லை.

காலையில் அறிமுகமானதில் இருந்து சத்யாவின் தெளி வான சிந்தனைகளும், கண்ணியமான பேச்சும், பொறுப் பான செயல்களும் அவன்மேல் நல்லதொரு மதிப்பை விதைத்திருந்தன.

ஆட்டோ ஓடிக் கொண்டிருக்க, "இப்ப எப்படிங்க இருக்கு?" என்றான் அக்கறையுடன் சத்யா.

"ஃபீலிங் பெட்டர். இதுக்கு முன்னாடி ஒரு ஆக்சி டெண்ட்டையும் இவ்வளவு கிட்டத்துல போய்ப் பார்த்த தில்லைங்க. கார்ல, பஸ்ல போறப்ப வழில பார்த்துட்டு உடனே கிராஸ் பண்ணிடுவோம். சினிமால கூட ரத்தம் பீய்ச்சியடிக்கிற மாதிரி சீன் வந்தா தலையைக் குனிஞ்சுக்கு வேன். இன்னைக்கு நேரடியாப் பார்த்ததால ஒரு மாதிரி ஆய்டுச்சி. அந்த ஸ்பாட்லயே லேசா மயக்கம் வர்ற மாதிரி ஆயிடுச்சி. சொன்னா அந்தப் பொண்ணை கவனிக் கிறது கெட்டுப் போயிடும்னு கட்டுப்படுத்திக்கிட்டு இருந் துட்டேன்."

"உங்க நிலைமை தெரியாம உங்களையும் சேர்த்து வேலை வாங்கிட்டேன்.''

"அதனால என்ன? ஏங்க சத்யா, அவ்வளவு ரத்தத்தைப் பார்த்தப்போ உங்களுக்கு கொஞ்சம்கூட படபடப்பா வரல்லையா?''

"இல்லைங்க. பொதுவாவே எனக்குக் கொஞ்சம் தைரியம் அதிகம். சில விஷயங்களை கற்பனை செஞ்சி பார்த்து மனோபலத்தை அதிகப்படுத்திக்க முடியும்னு ஒரு கட்டுரைல முந்தி படிச்சிட்டு, அதை அனுபவிச்சும் பார்த்திருக்கேன்.

"எப்படி அது, புரியலையே."

"உதாரணமா ஒரு பரிட்சையில நான் எதிர்பார்த்த மார்க் வராம குறைஞ்சதுல ஏமாற்றமா இருந்தா... ஃபெயிலாப் போனவன் மனநிலை எப்படி இருக்கும்னு கற்பனை செஞ்சி பார்ப்பேன். என் ஏமாற்றம் பெரிசாப் படாது. அந்த மாதிரி விபத்துல ரத்தம் பார்த்ததும்... ஜாலியன் வாலாபாக் படுகொலைகள் நடந்த இடத்தில் எத்தனை ரத்தம் இருந்திருக்கும்னு கற்பனை செஞ்சி பார்த்தேன்'' என்றவன் அவள் முகத்தைப் பார்த்து, அவள் கண்கள் கலங்கியிருப்பதைக் கண்டு "என்னாச்சுங்க?'' என்றான்.

## 10

சுதந்திரத்தை இழந்து அதிகாரத்தை அடைய
விரும்புவது ஒரு வினோதமான விருப்பம்தான்.
—ஃப்ரான்சிஸ் பேகன்

திடீரென்று ஏன் அவள் கண் கலங்குகிறாள் என்று புரியாமல் திவ்யாவைப் பார்த்தான் சத்யா.



அவள் காற்றில் அலைந்த கூந்தல் இழைகளை ஒதுக்கியபடி சாலையைப் பார்க்கத் துவங்கினாள். அவளின் திடீர் கலக்கத்திற்குக் காரணத்தை மறுபடி கேட்பது நாகரீகமாக இருக்காதென்பதால் சத்யாவும் சிக்னலுக்காக நின்ற மற்ற வாகனங்களைப் பார்த்தான்.

இவர்களின் ஆட்டோவுக்கு மிகப் பக்கத்தில் வந்து நின்ற காரில் ஜன்னலோரமாய் இருந்த அந்தக் குழந்தை சத்யாவைப் பார்த்துச் சிரித்தது.

இவனும் சிரித்துக் கையசைத்தான் குழந்தையும் கையசைத்தது. அந்தப் பிஞ்சுக் கையின் அசைவும், குழந்தை முகத்தில் ததும்பின உற்சாகப் புன்னகையும் மனதில் ஒரு சுகம் சேர்த்தது.

தன் குழந்தை யாரையோ பார்த்துச் சிரித்துக் கையசைப்பதையும், அந்த யாரோவும் பதிலுக்குக் கையசைப்பதையும் அப்போதுதான் கவனித்த குழந்தையை மடியில் வைத்திருந்த அந்தப் பெண் சட்டென்று குழந்தையை அந்தப் பக்கம் இழுத்துக் கொண்டு சரசரவென்று கதவின் கண்ணாடியை ஏற்றி விட்டு விட்டாள்.

அந்தச் செயல் சத்யா, திவ்யா இருவரையும் தாக்கியது. ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள வைத்தது. சிக்னல் கிடைத்து வாகனங்கள் சீறின.

"ஏங்க சத்யா அந்தம்மா அப்படி நடந்துகிட்டாங்க?',

"முன்னே பின்னே தெரியாத யார் கிட்டயோ நம்ம குழந்தை சிரிக்கிறதான்னு நினைச்சிருக்கலாம்.''

"அதான் ஏன்? இப்ப என்ன நடந்துடிச்சு?'' காரணமே இல்லாம அந்தக் குழந்தைக்கு ஒரு எச்சரிக்கை கொடுத்துட்டாங்க. குழந்தைக்கு எதுவும் புரியாது. ஆனா ஒரு ஏமாற்றம் அதன் மனசுல இறங்கியிருக்குமா இல்லையா? குழந்தை விளையாடிட்டிருக்கிறப்ப அதோட கைல இருக்கிற

கிலுகிலுப்பையைப் பிடுங்கற மாதிரிதான் அது உணர்ந்திருக்கும். இல்லையா?'' என்றாள்.

''கரெக்ட். இந்தக் கொழந்தை கொஞ்சம் வளர்ந்ததும் 'இத பாரு, நம்ம ஜனங்களைத் தவிர வேற யார் கிட்டயும் நீ பேசக் கூடாது!' ன்னு அந்தம்மா உத்தரவா சொல்லத் தான் போறாங்க.''

''இப்படித்தான் எங்கம்மாவும், அப்பாவும் சொன்னாங்க. ஒரு பணக்கார வீட்ல குழந்தையாப் பொறக்கறது அந்தக் குழந்தையோட வாழ்க்கை வசதிக்கு சௌகரியமா இருக்கலாங்க. ஆனா அந்தக் குழந்தையோட தனி மனித வளர்ச்சிக்கு அந்த வீட்ல நிறைய தடைகள் இருக்கும். இது என் கருத்து மட்டுமில்லை. அனுபவம்'' என்றாள் திவ்யா?''

''எப்படிச் சொல்றீங்க திவ்யா?''

''ஒரு பணக்கார வீட்ல குழந்தையை உடனே தனிப்படுத்திடுவாங்க. அதை வளர்க்கிற விதத்தில, அந்தக் குழந்தைக்கு சமுதாயத்தோட இன்னொரு பகுதியைக் கண்ல காட்றதே இல்லை. கஷ்டம், துன்பம், போராட்டம், ஏமாற்றம் இதுக்கெல்லாம் அர்த்தம் புரியாமலே அவங்க வளர்ந்துடுவாங்க. மத்தவங்க பார்வையில ஒரு பணக்கார வீட்டுக் குழந்தை அதிர்ஷ்டம் செஞ்ச குழந்தை ஆனா அந்தக் குழந்தையைப் பொறுத்தவரைக்கும், அது ரொம்பப் பாவம்.''

''நீங்க என்ன சொல்ல வர்றிங்கன்னு எனக்கு இன்னும். சரியாப் புரியலைங்க. பணக்கார வீடுகள்ல எல்லாம் குழந்தைகளைச் சரியா வளர்க்கத் தெரியலைன்னு பொதுப்படையா சொல்ல முடியாதுங்க.''

''சத்யா, தப்பா எடுத்துக்காதீங்க. நீங்க ஒரு பணக்கார வீட்டுப் பையனா''

''இல்லை.''



''நான் அப்படி இல்லை. கோடீஸ்வரன் வீட்டுப் பொண்ணு, நான் அனுபவத்தில் சொல்றது சரியா இருக்குமா? இல்லை நீங்க தள்ளி நின்னு உங்க பார்வையில சொல்றது சரியா இருக்குமா? தயவு செஞ்சி நான் மமதையாப் பேசறேன்னு நினைச்சிடாதீங்க.''

ஆட்டோ அசோக் நகர் வந்து மேற்கொண்டு செல்ல வேண்டிய திசைக்குத் தயங்க, திவ்யா வழி சொன்னாள்.

ஆட்டோ ஒரு பெரிய பங்களாவை நெருங்க. ஆட்டோவில் இவளைப் பார்த்த வாட்ச்மேன் அவசரமாக கேட்டைத் திறந்தான்.

ஆட்டோ தனிப்பாதையில் ஓடி போர்ட்டிகோவில் நின்றது. அவள் தன் கைப்பையிலிருந்து பணம் எடுத்துக் கொடுத்துவிட்டு, இன்னும் இறங்காமல் உள்ளேயே உட்கார்ந்திருந்த இவனைப் பார்த்து, ''என்ன சார், இறங்குங்க'' என்றாள்.

''நான் இதே ஆட்டோல போய் பஸ் ஸடாப்ல இறங்கிக்கறேன்.''

''நோ, நோ. வீட்டுக்குள்ளே வந்துட்டு ஒரு லைம்ஜூஸ் மட்டுமாவது சாப்பிட்டுட்டுப் புறப்படலாம். ப்ளீஸ் கம்!''

இறங்கிக் கொண்டு அந்த பங்களாவின் அமைப்பைப் பார்த்து வியந்தான்.

முகப்பு முழுக்க கிரானைட் போர்த்தப்பட்டிருந்தது. போர்ட்டிகோவில் நின்றிருந்த மூன்று கார்களும் அந்த பங்களாப் பெண்ணுக்கு லிப்ஸ்டிக் போட்டதுபோல எடுப்பாகத் தெரிந்தன.

சில பங்களாக்கள் மனதில் அழகுணர்ச்சியை ஏற்படுத்தி ரசிக்கச் செய்யும். அந்த பங்களாக்களின் சொந்தக்காரர் பற்றி நினைப்பே வராது. எவ்வளவு ரசனையோடு கட்டி

யிருக்கிறார்கள், யார் இதன் ஆர்க்கி டெக்டோ என்றுதான் கேள்விகளை எழுப்பும்.

ஆனால் சில பங்களாக்கள் அதன் அமைப்பால் மிரட்டும் ஒரு தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தும். 'அய்யய்யோ!' என்று விழிகளை அகலப்படுத்தி பிரமிக்க வைக்கும். இந்த பங்களாவின் சொந்தக்காரர் யாராக இருக்கும் என்கிற கேள்வியைத்தான் முதலில் எழுப்பும்.

சத்யாவின் மனதில் இப்போது இரண்டாவது வகை உணர்வுகளே வியாபித்துக் கொண்டிருந்தன.

"உள்ளே வாங்க."

அவளைப் பின் தொடர்ந்த சத்யா அவள் தன் செருப்புகளை விலக்காமல் நடப்பதால், தானும் அப்படியே நடக்கலாமா அல்லது விலக்கிவிட்டு நடப்பதா என்று தடுமாற...

"பரவால்லை. சும்மா அப்படியே வாங்க" என்றாள்.

"இருக்கட்டும்" என்று இவன் ஓரமாகக் கழற்றிவிட்டு நடக்க... ராஜஸ்தான் மார்பிள் பாதங்களில் ஐஸ் கட்டியை வைத்துத் தேய்த்தன.

யூனிஃபார்ம் அணிந்த வேலைக்காரர்களை சத்யா இதுவரை சினிமாக்களில் மட்டுமே சந்தித்திருந்தான். 'ஒரு வீட்டில் வேலை பார்ப்பவர்களுக்கு யூனிஃபார்மா, இது சினிமாவுக்கான மிகை' என்றுதான் அதைப் பற்றி நினைத்திருந்தான்.

இப்போது நிஜத்தில் பார்க்க... அவனால் விழிகள் விரிவதைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

"மாயப்பன்," என்று அழைத்து வந்தவனிடம், "ரெண்டு லைம்ஜூஸ் மாடிக்கு கொடுத்து அனுப்பு" என்றாள்.

அந்த ஹால், அதன் அமைப்பு, அங்கே இருக்கும் விலை உயர்ந்த அலங்காரப் பொருள்கள் எல்லாமே அவன்



பிரமிப்பை வளர்த்துக் கொண்டிருக்க... அதையெல்லாம் விட, 'இத்தனை' பெரிய கோடீஸ்வர வீட்டுப் பெண் இத்தனை இயல்பாக, மென்மையாக, மரியாதையோடு பழகுவதா? என்கிற பிரமிப்பும் கூடவே தொடர்ந்து கொண்டிருந்தது.

"வாங்க சத்யா," என்று அவள் வெல்வெட் விரித்த படிகளில் ஏறினாள். தொடர்ந்தான்.

மாடியில் ஒரு விசாலமான மற்றொரு ஹாலில் இருந்த சோபாவில் அவனை உட்காரச் சொல்லி கை காட்டிவிட்டு இவளும் எதிர்ப்புறம் அமர்ந்தாள்.

ஏதோ போன் சன்னமாய் ஒலிப்பது கேட்டது. தன் கைப் பையைத் திறந்து உள்ளிருந்து சின்ன செல்லுலார் போன் எடுத்துக் காதில் வைத்துக் கொண்டு, "திவ்யா" என்றாள்.

இந்த பங்களாப் பெண் எதற்காகக் கண் கலங்கினாள் என்று அவனுள் கேள்வி வந்து போனது.

"இல்லை மம்மி, நான் வீட்லேர்ந்துதான் பேசறேன். நோம்மா, நான் வரலை, ஸாரி... இல்லம்மா. கம்ப்பெல் பண்ணாதே. விட்டுடேன்"

போனை மறுபடி கைப்பைக்குள் வைத்துக்கொண்டாள். கைகளைக் கட்டிக் கொண்டு அவனைப் பார்த்தாள்.

"இந்த வீட்ல எத்தனை பேர், இருக்கிங்க?" என்றான் ஏதாவது பேச வேண்டுமென்று.

"அப்பா, அம்மா, நான், அவ்வளவுதான். இந்த பங்களால எத்தனை ரூம்ஸ் இருக்கு தெரியுமா? ஒம்போது ரூம்ஸ். ரீடிங் ரூம், கேம்ஸ் ரூம், பார்ட்டி ஹால், கெஸ்ட் ரூம்னு தனித்தனியா இருக்கு. இதெல்லாம் வசதிக்காக இல்லைங்க. எங்கப்பா அந்தஸ்தைக் காட்டிக்கிறதுக்காக.

இவ்வளவு பெரிய பங்களாவா, இத்தனை ரூம்ஸா, இத்தனை வேலைக்காரங்களான்னு நீங்க பிரமிக்க வேணாமா? அதுக்காக எங்க மூணு பேருக்கு சர்வீஸ் பண்றதுக்கு இந்த வீட்ல மொத்தம் பதினாலு பேர் வேலை பார்க்கறாங்க. இத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு கொடுத்திருக்கிற ஒரே காரணத்தாலதான் என்னால இந்த பங்களாவைப் பொறுத்துக்க முடியும்.

அவள் இப்படித் தன் சொந்த பங்களாவைப் பற்றிக் கிண்டலாகப் பேசியது ரசிக்கும்படி இருந்தது.

"என் பங்களாவைப் பார்த்துப் பிரமிக்க வைக்கிறதுக்காக நான் உங்களை உள்ளே கூப்புடலைங்க சத்யா. இந்த இடத்தோட அமைப்பே உங்க மனசுல சில பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கா இல்லையா? இதே பங்களால வசிக்கிற என் மனசுல எவ்வளவு பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கும்னு நீங்க புரிஞ்சுக்கணும். என்னோட சிந்தனைகள் காரணமா நான் இந்த வீட்ல ஒட்டாம விலகி நிக்கிறேங்க. அது ஒரு பெரிய அவஸ்தை உங்களுக்கு அவசரமாப் போகணுமா?"

"இல்லை."

"உங்ககிட்ட கொஞ்சம் என்னைப் பத்தி விவரமாப் பேசணும் மாதிரி ஃபீல் பண்றேன் பேசலாமா?"

"சொல்லுங்க."

"அம்மா இருக்காங்க. அப்பா இருக்காங்க. பங்களா இருக்கு. கார் இருக்கு. பதினாலு வேலைக்காரங்க இருக்காங்க. ஆனா... நான் சந்தோஷமா இல்லைங்க, ஐ ஃபீல் வெரி லோன்லி. இந்தச் சூழ்நிலைக்கு என்னை மிஸ்ஃபிட்டா உணர்றேன்."

லைம்ஜூஸ் ஒரு சக்கர வண்டியில் தள்ளிக் கொண்டு வந்து டீப்பாய் மேல் வட்ட பிளேட்டுகள் வைத்து, அதன் மேல் மரியாதையாக வைத்துவிட்டு விலகினான் ஒருவன்.



"எடுத்துக்கங்க."

எடுத்துப் பருகினான்.

"எங்கப்பாவும், அம்மாவும் என்னை வளர்த்த விதம் எனக்குப் பிடிக்கலைங்க. நான் வளர்ந்து நிக்கிற விதம் அவங்களுக்குப் பிடிக்கலை. நிறைய முரண்பாடுகள் தினம் உராய்வுகள்."

அவள் இடைவெளி விட்டு சிந்தனையில் ஆழ்ந்தாள்.

சத்யா கர்சீப் எடுத்து உதடுகளை ஒற்றிக் கொண்டான்.

"இப்ப போன் வந்துச்சே, எங்கம்மாதான் பேசினாங்க. எங்களுக்கு மகாபலிபுரம் பக்கத்திலே பதினைஞ்சு ஏக்கர்ல ஒரு தோட்டம் இருக்கு. அங்க ஃபார்ம் ஹவுஸ் இருக்கு. அதுவும் பங்களாதான். இதுல பாதி இருக்கும். ஒவ்வொரு சண்டேயும் அப்பா, அம்மா போய்டுவாங்க. தனியா இல்லை, அவங்க ஃபிரெண்ட்சோட. குறைச்சலா நூறு பேராவது சேர்ந்துடுவாங்க. பார்ட்டி நடக்கும். அதுக்குத்தான் கூப்புட்டாங்க. எனக்குப் பிடிக்கிறதில்லை எங்கம்மாவுக்கு என் மேலே உள்ள குறைகள்ல ஒண்ணு சொல்லவா? நான் வைன் சாப்பிட்டு பழகணுமாம்!" என்றாள் திவ்யா.

# 11

வன்முறையை அதற்குச் சொந்தமான மனதிலேயே வைத்திரு.

—பிரியான் ஆல்டிஸ்

திவ்யா சொன்ன தகவலை சத்யாவால் நம்ப முடியவில்லை. எந்தத் தாயாவது தன் மகள் மது அருந்தவில்லையே என்று வருத்தப்படுவாளா?

"நிஜமாதான் சொல்றிங்களா?" என்றான்.

திவ்யா ஓசையின்றி சிரித்துக் கொண்டாள்.

"இந்த வீட்ல இது மாதிரி நிறைய ஆச்சரியங்கள் இருக்குங்க சத்யா. பணக்காரங்க சமூகத்தில நிறைய சலுகை எடுத்துக்கற மாதிரி கலாச்சாரத்திலயும் சில சலுகைகள் எடுத்துக்கறாங்க. எங்கம்மா சாதாரணமா வீட்லயே தினம் ராத்திரி மது சாப்பிடுவாங்க."

"இதை எப்படி உங்கப்பா அனுமதிக்கிறார்?"

"அனுமதிக்கிறதா? கத்துக் கொடுத்ததே அவர்தானே? அதான் சொன்னனே. இது வேற மாதிரியான வீடு. உங்களுக்கு எல்லாமே அதிர்ச்சியாத்தான் இருக்கும். வீட்ல நான், அம்மா, அப்பா மூணே பேர்தான். மூணு பேரும் தீவுத் தீவா இருக்கோம். எங்கப்பாவோட ஒரே ப்ளஸ் பாய்ண்ட் என்ன தெரியுமா? ஹி நோஸ் தவுஸண்ட் ட்ரிக்ஸ் டு மேக் மணி. இப்ப நாங்க இருக்கிற நிலைமை எத்தனையோ லட்சம் பேருக்குபிரமிப்பு உண்டாக்கும். ஆனா அவருக்கு இது ரொம்ப சாதாரணமாப்படும். இன்னும் எங்கேயோ போக வேண்டிருக்கும்மா'ன்னு சொல்வார். டாடா, பிர்லா, அம்பானின்னுதான் அவர் உதாரணம் காட்டுவார். எப்பவுமே வானம் நோக்கின பார்வை. இன்றைய நிலைமைக்கு சந்தோஷப் பட்டுக்கணும்னா பார்வை கீழ் நோக்கிப் போகணுங்க. அது அவர்கிட்ட கிடையாது."

"பொதுவா இப்ப இருக்கிற நிலைமையை விட இன்னும் முன்னேறணுங்கறதைத்தானே யாரும் லட்சியமா வெச்சுக்கறது நல்லது. அப்பதானே அந்த லட்சியத்தை நோக்கி உழைக்கிறதுக்கு ஒரு ஆர்வம் ஏற்படும். உங்கப் பாவோட லட்சியங்கள்ல தப்பிருக்கிறதா எனக்குப் படலையே."



"ஏன் சத்யா, பணம் குவிக்கிறதுதான் முன்னேற்றமா? அது ஒண்ணைத்தான் லட்சியமா வெச்சுக்கணுமா?"

"பொதுவா அப்படித்தான் இருக்குங்க. சில பேருக்கு டாக்டராகி சேவை செய்யணும்னு லட்சியம் இருக்கும். சில பேருக்கு சினிமால நடிக்கணும்னு கலை சம்பந்தப்பட்ட லட்சியம் இருக்கும். சில பேருக்கு அரசியல் பெரிய ஆளா இந்த மாதிரி தனிப்பட்ட லட்சியங்களுக்கு தனித் திறமைகள் வேணும். பொதுவா எல்லாருக்கும் பணம்தான் லட்சியமா இருக்கு."

"சரி. உங்க லட்சியம் என்னங்க சத்யா?"

"'எனக்கு பணம் அப்படீங்கற ஒரு லட்சியம் கண்டிப்பா உண்டுங்க. எனக்கு நிறைய பணம் சம்பாதிக்கணும்னு நோக்கம் இருக்கு. ஆனா பட்டு மெத்தையில ஏ. சி. ரூம்ல தூங்கி சுகம் அனுபவிக்கிறதுக்காக இல்லை. விதவிதமான கார்ல பவனி வர்றதுக்காக இல்லை."

"பின்னே வேற எதுக்கு உங்களுக்கு பணம்?"

"என் அம்மாவோட சில ஆசைகளை நிறைவேத்தறதுக் காக. என்னோட வேற சில லட்சியங்களை நிறைவேத் தறதுக்காக."

"சொல்லக்கூடிய லட்சியமா இருந்தா சொல்லுங் களேன்."

"திவ்யா எனக்கு சின்ன வயசிலேர்ந்தே இந்த சமூகத்தைப் பத்தி அக்கறையான கவலை உண்டு. எத்த னையோ ஆயிரக்கணக்கான தியாக உள்ளங்கள் தன்னலம் பார்க்காம செயல்பட்டதாலதான் இந்த சமுதாயத்துக்கு கணக்கில்லாத நன்மைகள் கிடைச்சிருக்கு. இன்னைக்கு விஞ்ஞான வளர்ச்சியோட பயன்களை சந்தோஷமா நாம் அனுபவிக்கிறோம். ஆனா ஒவ்வொரு விஞ்ஞானக் கண்டு -பிடிப்பும் ஒருநாள் முயற்சில கிடைச்சிடலை. ஏரோப்

ளான்ல பறக்க காசு மட்டும் இருந்தா இன்னைக்குப் போதும். ஒரு ஏரோப்ளானைப் பறக்க வைச்சதில எத்தனை பேரோட கடுமையான உழைப்பும், முயற்சியும் இருந்திருக்குன்னு மறந்துடக் கூடாதுங்க. நாமே அனுபவிச்சு சந்தோஷப்படறது ஒரு வகைங்க. மத்தவங்க அனுபவிக்கிறதுக்கு வழி அமைச்சுக் கொடுக்கறதில ஒரு சந்தோஷம் இருக்குங்க. என் வாழ்க்கைல இந்த சமூகத்துக்கு என்னால முடிஞ்சது ஏதாவது செய்யணும்னு ஆசை. அரசாங்கத்தால ஓரளவுதாங்க செய்ய முடியும்.

அந்த ஓரளவு செய்றதுக்கும் லஞ்சம் வாங்காத, ஊழல் செய்யாத அரசியல்வாதிகள் நமக்குக் கிடைச்சாதான் முடியும். முழுக்க முழுக்க இலவசமா சிகிச்சை தர்ற, எல்லா வசதிகளும் கொண்ட ஒரு ஹாஸ்பிடல், எல்லாப் படிப்பையும் இலவசமா தர்ற ஒரு காலேஜ். உடல் ஊனமுற்றவங்களுக்காகவும். அனாதைகளுக்காகவும், வயசானவங்களுக்காகவும் தனித்தனி இல்லங்கள்... இந்த மாதிரி நிறைய ஆசைகள் இருக்கு. இதுக்கெல்லாம் கோடிக் கணக்குல பணம் வேணாமா? அதனால என் லட்சியத்தில பணம் இருக்குங்க.''

மனம் நெகிழ்ந்த நிலையில் அவன் சொல்வதையே பார்த்துக் கொண்டிருந்த திவ்யாவின் உதடுகள் அவளையுமறியாமல் ''யு ஆர் கிரேட் சத்யா'' என்று முணுமுணுத்தன.

''என்னங்க?'' என்றான் புரியாமல்.

''ரொம்ப சந்தோஷமா இருக்கு— ரொம்ப நாளைக்கப்புறம் ஒரு நல்ல மனுஷனோட அறிமுகம் கிடைச்சதுக்கு. உங்க லட்சியங்களை நிறைவேத்தறதுக்காக நீங்க பணம் சம்பாரிக்க ஆசைப்படறதுக்கும், எங்கப்பா மேலமேல பணம் சம்பாரிக்க ஆசைப்படறதுக்கும் வித்தியாசம் இருக்குங்க. நீங்க சொன்ன லட்சியங்கள் எல்லாம் அவருக்குக் கிடையாது. அவரோட அந்தஸ்து உயர்ந்துகிட்டே இருக்



கணும். ஏழைங்க எல்லாம் அவரைப் பார்த்து பிரமிக்கணுங்கிறது இதுவரைக்கும் அவருக்கு இருந்த ஆசை.

எல்லா பணக்காரங்களுமே அவரைப் பார்த்து பிரமிக்கணுங்கறதுதான் இப்ப இவருக்கு இருக்கிற ஆசை. நீங்க சொல்ற மாதிரியான சமூகப்பணிகள் எல்லாம் இப்ப இவர் நினைச்சா உடனே நிறைவேத்திட முடியும். ஆனா மனசு இல்லை. சில டொனேஷன்ஸ் அப்பப்ப செஞ்சிட்டுதான் இருக்கார்.

ஆனா அது மனசிலேர்ந்து செய்ற உதவிகள் இல்லை. விளம்பரத்துக்காகவும், இன்கம்டாக்ஸ்ல வரி விலக்கு வாங்கறதுக்காகவும் செய்ற உதவிகள். சமூகத்தில எப்பவும் இந்த முரண்பாடு உண்டுங்க. மனசு இருக்கறவங்களுக்கு வாய்ப்பு இருக்காது. வாய்ப்பு இருக்கறவங்களுக்கு மனசு இருக்காது'' என்று பெருமூச்சு விட்டாள் திவ்யா.

ஒரு சின்ன அமைதி விழுந்தது.

இந்தப் பெண்ணுக்கு எப்படி இந்த மாதிரி சிந்தனைகள் ஏற்பட்டன என்று அவனுக்குள் ஆச்சரியமாக இருந்தது.

ஒரு கோடீஸ்வரனின் ஒரே மகளுக்கு பணம் என்பது முள்ளாய் உறுத்துவது வியப்புதான். தன் அப்பா, அம்மா பற்றி இத்தனை வெளிப்படையாய் விமரிசிப்பது மற்றும் ஒரு வியப்பு. அதையும் இன்றுதான் அறிமுகமான என்னிடம் இத்தனை இயல்பாக ஏன் பகிர்ந்து கொள்கிறாள்?

''திவ்யா, நான் எதையும் மனசுல வெச்சுக்காம கேட்டுடறது வழக்கம். நீங்க சொல்ற விஷயங்கள் நியாயமானதாக இருக்கலாம், ஆனா அதிக அறிமுகம் இல்லாத என்கிட்ட இவ்வளவு பர்சனலான விஷயங்களைப் பேசறது நியாமானதா எனக்குப் படலைங்க.''

''சத்யா. உங்களை எனக்கு இன்னைக்குத்தான் அறிமுகம்னு நீங்களே நினைச்சுக்கிட்டா எப்படி? டாக்டர்

கிரி அங்க்கிள் மூலமா எப்பவோ நீங்க எனக்கு அறிமுக மாயாச்சுங்க. நான் அவரைப் பார்க்கற ஒவ்வொரு சந்திப்புலயும் எப்படியும் உங்க பேச்சு வந்திடும். டாக்டரோட விமர்சனப்படி இந்த சமூகத்தில நீங்க தப்பிப் பொறந்துட்டவர், உங்களைப் பத்தி நிறைய சொல்லி யிருக்கார். உங்க குடும்பப் பின்னணியை சரியா சொன்ன தில்லை. ஆனா உங்க குணங்களைப்பத்திச் சொல்லியிருக் கார்.

"அப்படியா?"

"உங்க படிப்புச் செலவுக்காக நீங்க என்னென்ன செய்துகிட்டு இருக்கிங்கன்னு சொல்லிருக்கார். புது ப்ராடக்ட்ஸ் மார்க்கெட்டிங் பண்ற கம்பெனில சேர்ந்து கௌரவம் பார்க்காம பப்ளிக்ல நின்னு வியாபாரம் பண்றது தெரியும். ஒரு வக்கீல்கிட்ட பார்ட் டைமா டைப் அடிச்சிக் கொடுக்கறது தெரியும். ஞாயிற்றுக்கிழமைகள்ல டாக்டர் கிரியோட ப்ராஜெக்ட்ல உதவி பண்றது தெரியும். நீங்க படிக்கிற ஈவினிங் காலேஜ்லயும் ஹாஸ்டல்லயும் திமோஸ்ட் டிசிபிளிண்ட் ஸ்டுடண்ட்னு தெரியும். இதெல்லாம் அறிமுகம் இல்லையா? முகம் மட்டும்தான் பாக்கியிருந்திச்சு. அந்த அறிமுகம்தான் இன்னிக்குக் கிடைச்சது. உங்க முகத்தை முந்திக்கிட்டு உங்க மனசு எனக்கு அறிமுக மாய்ட்டதால நான் இயல்பா பலநாள் பழகியவ மாதிரி பேச ஆரம்பிச்சுட்டேன். அது உங்களை சங்கடப்படுத்தி யிருந்தா...ஸாரி."

"என்னங்க இதுக்கெல்லாம் ஸாரி கேக்கறிங்க? என்னைப்பத்தி உங்களுக்குத் தெரியும்னு எனக்குத் தெரியாதில்லையா? அதனாலதான் அந்தக் கேள்வி வந்திச்சு. இப்ப கிளியர்ட்."

"ஆனா என்னைப் பத்தி உங்களுக்கு நிறைய தெரியாது. ஏன், சில விஷயங்களை டாக்டருக்கே தெரியாது.



"இல்லைங்க. ஆச்சரியப் படுத்தறிங்க. பல புது விஷயங் களைக் கத்துத் தர்றிங்க."

"அப்படி என்ன கத்துக் கொடுத்துட்டேன்?"

"கோடீஸ்வர வீட்டுப் பொண்ணுன்னா மண்டை நிறைய மமதையோடதான் இருப்பாங்கன்ற என் பொது வான கருத்தை மாத்திக்க வெச்சிருக்கிங்களே, உண்மையில நீங்க என்னை ஆச்சரியப்படுத்தத்தான் செய்றிங்க திவ்யா" என்றவன் வாட்ச்சில் நேரம் பார்த்தான்.

"என்ன, நேரமாச்சா?"

"இல்லை. சும்மா தான் நேரம் பார்த்தேன்."

"வேற ஏதாச்சும் ப்ரோக்ராம் இருந்தா சொல்லிடுங்க சத்யா."

"அப்படி இருந்தா சொல்லிடுவேன்.

திவ்யா தன் வாட்ச்சில் நேரம் பார்த்துக் கொண்டு, "டைம் ஃபார் லஞ்ச். பசிக்கலை?" என்றாள்.

"நீங்க கொடுத்த ஜூஸ் கொஞ்சம் மறக்கடிச்சிருக்கு."

"நாம ரெண்டு பேரும் வெளில எங்கேயாவது போய் லஞ்ச் சாப்பிடலாமா? உங்களுக்கு அதில எதாச்சும் தயக்கம் இருக்கா?"

"சாப்பிடலாங்க" என்றான் சத்யா.

"ரெண்டு நிமிஷம் எனக்காக காத்திருக்க முடியுமா? இந்த டிரெஸ் கொஞ்சம் டைட்டா இருக்கு. வேற மாத்திட்டு வந்துடறேன்."

"சரி"

ஆத—

திவ்யா தன் அறைக்குப் போகும் முன்பு அவன் அந்த இரண்டு நிமிடத்தைக் கழிப்பதற்காக சில பத்திரிகைகளைக் கொடுத்துவிட்டுச் சென்றாள்.

சத்யாவுக்கு அந்தப் பத்திரிகைகளில் நாட்டமில்லை திவ்யாவைப் பற்றி ஒரு இதமான எண்ண அலைகள் தத்தளித்துக் கொண்டிருந்தன.

அவன் கல்லூரியில் சந்தித்துள்ள பணக்காரப் பெண் கள் வேறு வகை சாலைகளில் சந்தித்துள்ள பணக்காரப் பெண்கள் வேறு வகை. இவள் முற்றிலும் மாறானவள்.

அது மட்டுமல்ல, அவன் கருத்துக்களைக் கொண்டிருப் பவள். ஒரு பெண்ணிடம் என்னென்ன குணங்கள் இருக்க வேண்டுமென்று அவன் மனதில் சிந்தனை உண்டோ, அவை எல்லாம் கொண்டிருப்பவள்.

ஒரு அழகான பெண் அறிவாகவும், அடக்கமாகவும், அன்பாகவும் அமைந்திருப்பது அபூர்வமான விஷயம்.

‘‘போலாமா?’’

அவள் குரல் கேட்டு நிமிர்ந்தான்.

கருநீல நிறப் புடவையில் இருந்த அவளை புன் சிரிப்போடு பார்த்ததும். சத்யாவுக்குள் புதுப்புனல் பாய்ந்தது. உற்சாகம் அலையடித்தது.

‘‘திவ்யா. சொல்லிடட்டுமா? தேக்கி வைக்காம சொல்லிடட்டுமா?’’

‘‘என்ன?’’

‘‘நீங்க ரொம்ப அழகா இருக்கிங்க. அதிலயும் புடவையில இன்னும் அழகா இருக்கிங்க’’ என்றான் படபட வென்று சத்யா.

# 12

நிறைய மக்கள் சிலருக்கு ஆதரவாக ஓட்டுப் போடுவதைக் காட்டிலும் சிலருக்கு எதிராக ஓட்டுப் போடுவதால்தான் சிலருக்கு தேர்தல் வெற்றிகள் கிடைக்கின்றன.

—ஃப்ராங்க்ளின் பி. ஆடம்ஸ்

காலேஜ் காண்டீனில் சத்யா காபி பருகிக் கொண் டிருக்க, தனபால் சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தான்.

அங்கங்கே மாணவர்கள் குழுவாக அமர்ந்து இரைச்ச லாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு பகுதியிலும் மேகமூட்டமாக சிகரெட் புகை சுழன்று கொண் டிருந்தது. ஸ்பீக்கர்களிலிருந்து கொட்டின இந்திப் பாடலை யாரும் கேட்பதாக இல்லை.

‘‘ஏன் தனபால், கொஞ்ச காலம் சத்தமில்லாம இருந்திச்சு, இப்ப மறுபடி தமிழ்நாட்ல இந்திப் படங்களும் பாட்டுகளும் பாபுலராகிட்டிருக்கு இல்ல?’’ என்றான் சத்யா.

‘‘நான் கேட்ட கேள்வி வேற, நீ சொல்ற பதில் வேற.’’

‘‘என்ன கேட்டே நீ?’’

‘‘கொஞ்ச நாளா உன் முகம் ரொம்ப உற்சாகமா இருக்கேன்னு கேடடேன்.’’

‘‘ஒருத்தன் சோகமா இருந்தாதான் கேள்வி கேக்கணும். உற்சாகமாக இருந்தாக் கூடவா கேக்கணும்?’’

‘‘சாதாரணமான உற்சாகத்தில இருந்தா கேக்க மாட்டானே அதிகப்படியான உற்சாகமால்ல இருக்கு இது: நடவடிக்கைகள்லயும் மாற்றம் தெரியுதே கண்ணு.’’

"என்ன மாற்றம் இருக்கு?"

"கொஞ்சம் டீக்கா ட்ரெஸ் பண்ற மாதிரி இருக்கு. வெளில புறப்பட்டா கண்ணாடி பார்த்துக்காம செருப்பு போடறதில்லை."

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை."

"சத்யா, யார்கிட்ட ரீல் விடறே? உன் ரூம்மேட்டுடா நான் படுத்தா அடுத்த நிமிஷம் தூங்கிப் போற நீ இப்பல்லாம் ராத்திரி பூரா புரண்டுகிட்டு இருக்கே தெரியுமா?"

"கொசு!"

"இப்பதான் ஒரு மாசமா கொசு புதுசா நம்ம ஹாஸ்டலுக்கு வருதா பிரதர்? சரி, குளிக்கிறப்போ வழக்கமா நீ பாட்டெல்லாம் பாடறதில்லை. இப்ப பாடாம குளிக்கிறதேயில்லை. அதுவும் சூப்பர் சூப்பர் லவ் சாங்ஸ் உன் முகத்தில் நீ எவ்வளவு மறைச்சாலும் ஒரு பசலை தெரியுது சத்யா. சும்மா சொல்லு. ஆர் யு இன் லவ் வித் சம்படி?"

"சேச்சே. அப்படில்லாம் எதுவுமில்லை."

"இப்படிக் கேட்டா ஒத்துக்க மாட்டே. யாரோ ஒரு பொண்ணு உனக்குள்ளே வந்து உன்னை அவஸ்தை பண்ணிட்டிருக்கா. உண்மையா, இல்லையா? இதுக்கும் இல்லைன்னு சொன்னா ஒரே குத்தா குத்தி தாடையைப் பேத்துடுவேன் ராஸ்கல்."

சத்யா மென்மையாகப் புன்னகைத்தான்.

"என்னடா மாயகிருஷ்ணன் மாதிரி சிரிப்பு! உண்டா. இல்லையா?"

"உங்கிட்ட எதை நான் மறைச்சிருக்கேன் தனபால், ஆமாம், எனக்குள்ளே எனக்கே தெரியாம சில மாற்றங்களை உணர முடியுது."



"யார் அவ?"

"இது வெறும் மரியாதை மாதிரிதான் தனபால். ஒரு ஆச்சரியமான அபிமானம்னுகூடச் சொல்லலாம்."

"உன்னோட தவிப்புக்கு என்ன பேர் சூட்டறதுன்னு நான் முடிவு பண்ணிக்கிறேன். பார்ட்டி யாருன்னு சட்டுன்னு சொல்லு."

"என்னடா பார்ட்டி, கீர்ட்டின்னெல்லாம் சொல்றே?"

"யப்பா! எவ்வளவு கோபம் வருது! அப்போ 'எஸ். ஓ. வி. ஈ.' தான். நோ அதர் சான்ஸ் அட் ஆல். நம்ம காலேஜ்ல உன்னை இம்ப்ரெஸ் பண்ற மாதிரி எனக்குத் தெரிஞ்சு யாரும் இல்லையே."

"நம்ம காலேஜ் இல்லை."

"வேற யாரு? சீக்கிரம் சொல்லு! தவிப்புல விக்கலே வந்துடுச்சி பாரு" என்று நிஜமாகவே விக்கின தனபால் எழுந்து அடுத்த மேஜையில் இருந்த தண்ணீர் குடித்துவிட்டு வந்து, "எந்திரி, இந்த மாதிரி விஷயத்தை இந்த சந்தைக் கடைல பேச முடியாது. வா" என்று சத்யாவின் கரம் பற்றி எழுப்பினான்.

இருவரும் மரங்களின் நிழல்களில் நடந்தார்கள். பாஸ்கட் பால் கிரவுண்டைக் கடந்து காலேஜ் ஸ்டேடியத்தின் படிக்கட்டுகளில் ஏறினார்கள்.

"இப்ப கடகடன்னு ரோலிங் ஷட்டர் உருள்ற மாதிரி எல்லாத்தையும் சொல்றே நீ. கமான். யார் அந்த லக்கி தேவதைன்னு முதல்ல சொல்லிடு."

தனபால் மற்றொரு சிகரெட் கொளுத்திக் கொண்டு கேலரியின் மேல் வரிசையில் தொட்டுக் கொண்டிருந்த மரக்கிளையின் நிழலில் அமர்ந்து மரத்திலிருந்து ஒரு சின்ன கிளை உடைத்துக் கொண்டு அங்கே சிந்தியிருந்த இலைத் துணுக்குகளை விசிறினான்.

அவனருகில் அமர்ந்தான் சத்யா.

இவன் கேள்விக்கு என்ன பதிலைச் சொல்வது?

இந்தக் கொஞ்ச நாட்களில், நான்கைந்து சந்திப்புகளில் திவ்யா என் மனதிற்கு மிக நெருக்கமாக வந்து சிம்மாசனமிட்டு அமர்ந்து கொண்டு விட்டதை எப்படித் துவங்கி இவனிடம் சொல்வது?

தோழமை எண்ணத்தில் பழகத் துவங்கினாலும். அதைத் தாண்டி ஏதோ எனக்கு மட்டும் உரிமையானவள் போல என் மனம் அவளைச் சொந்தம் கொண்டாடிக் கொண்டிருக்கும் வினோதத்திற்கு எனக்கே விடை புரியாத நிலையில் இவனிடம் என்ன சொல்வது?

'சேச்சே. அவள் எங்கே, நான் எங்கே' என்று எனக்குள் எச்சரிக்கை மணி ஒலித்துக் கொண்டிருந்தாலும்... 'இதென்ன அசட்டுத்தனம். என் கருத்துக்களோடு ஒத்துப் போகிற கருத்துக்கள் அவளிடம் இருப்பதால் ஏற்பட்ட ஒரு ஈர்ப்பை வைத்து மன மயக்கம் ஏன்?'' என்று நியாயமான கேள்வி எழுந்து கொண்டிருந்தாலும்...

திவ்யா என்னை உள்ளுக்குள் கலைத்துப் போட்டுவிட்ட உண்மையை எனக்குள்ளே மட்டுமாவது நான் ஒப்புக் கொள்வதுதான் நேர்மை. ஆனால் இவனிடம் எப்படிச் சொல்வது?

சத்யாவுக்குள் யோசனைகள் மோத...

"என்னடா, பரம ரகசியமா? சொல்ல மாட்டியா?'' என்றான் தனபால்.

''தனபால், நான் நேர்மையா சொல்லணும்னா, பெரிய குழப்பத்தில இருக்கேன். உங்ககிட்ட நான் பொய் சொல்ல விரும்பலை. அதே சமயம் நீ அர்த்தப்படுத்திக்கிறதும் முழு உண்மை இல்லை. திவ்யான்னு ஒரு பொண்ணை டாக்டர் கிரி ஒரு மாசம் முன்னாடி அறிமுகப்படுத்



வெச்சாரு. ரொம்ப பெரிய இடத்துப் பொண்ணு. ஆனா ரொம்ப இனிமையானவ. அவளும் பியூட்டிஃபுல். அவளோட சிந்தனைகளும் பியூட்டிஃபுல். அவளோட ஒவ்வொரு சந்திப்புலயும் அவமேல எனக்கு இருந்த மதிப்பு அதிகரிச்சிட்டே இருக்கு. திவ்யா இப்போ என்னோட முழுநேர சிந்தனையாய்ட்டது உண்மை. இதுவரைக்கும் சத்தியமா நான் என்னோட பர்சனல் வாழ்க்கையைப் பத்தி யோசிச்சிப் பார்த்ததில்லை. இப்ப ஆரம்பிச்சிருக்கேன். அதுக்கு திவ்யாதான் காரணங்கிறது உண்மை. ஆனா...''

''இருடா. கொஞ்சம் இரு. இவ்வளவு தூரம் நீட்டி முழக்கறதுக்கு சிம்ப்பிளா 'திவ்யாவை நான் லவ் பண்றேன்'னு சொன்னா முடிஞ்சுது.''

"அப்படி எல்லாம் என்னால ஒரு முடிவுக்கு வர முடியலை தனபால்.''

"இதபாரு, நீயும் குழம்பாதே, என்னையும் குழப்பாதே, லவ் மேட்டர்ல குதப்பமே கூடாது. ரொம்பத் தெளிவா இருக்கணும். உனக்கு அந்தத் திவ்யாவைப் பிடிச்சிருக்கா, இல்லையா?''

"அவளோட அறிவு, அழகு, அடக்கம் இதெல்லாம் என்னை அசத்துது.''

''நேராவே சொல்ல மாட்டியா? இதெல்லாம் சேர்ந்தது தானே அந்த திவ்யா? கேட்ட கேள்விக்குப் பதில், திவ்யாவை உனக்குப் பிடிச்சிருக்கா?''

"ஆமாம்.''

"அவளைப் பார்த்துக்கிட்டே இருக்கணும்னு தோணுதா?''

"ஆமாம்.''

"அவளோட பேசிக்கிட்டே இருக்கணும்னுதோணுதா?''

"ஆமாம்."

"எப்பப் பார்த்தாலும் அவ ஞாபகமாவே இருக்கா?"

"ஆமாம்."

"அவளை நினைச்சாலே மனசு உற்சாகமாகுதா?"

"ஆமாம்."

"அவளைப் பார்க்க முடியாமல் போனா ஏமாத்தமா இருக்கா?"

"ஆமாம்."

"அவளைக் கல்யாணம்பண்ணிக்கணும்னு தோணுதா?"

"ஆ..." என்று துவங்கினவன் நிறுத்தினான்.

"என்னாச்சு? ஒழுங்காதானே பதில் சொல்லிட்டிருந்தே, ஏன் பிரேக் போடறே?"

"இது ரொம்ப பேராசையாப் படுது தனபால்."

"உன் உணர்வுக்கு விளக்கம் யார் கேட்டது. நிஜ உணர்வு அதுதானே? அந்தத் திவ்யா உன் மனைவியா வந்தா சந்தோஷப்படுவியா, மாட்டியா?"

"சந்தோஷப்படுவேன்."

"பின்னே இதுதானேடா காதல்! மென்னு முழுங்கறியே."

"தயக்கமா இருக்கு தனபால். தப்பு பண்றமோன்னு தோணுது. தகுதி இல்லையோன்னு உறுத்தலா இருக்கு. அட்வாண்ட்டேஜ் எடுத்துக்கறேனோன்னு ஒரு குற்ற உணர்ச்சி. அவளோட அந்தஸ்து எங்கயோ இருக்கு தனபால்."

"அதெல்லாம் அப்புறம். அந்தத் திவ்யாவுக்கும் உன் மேல இதே சமாச்சாரம் உண்டா, அதைச் சொல்லு."



"தெரியலை. இயல்பா பேசிப் பழகறா. ஒரு நல்ல நட்பை நான்தான் ரகசியமா கொச்சைப்படுத்திட்டிருக்கேனோன்னு ஒரு சந்தேகம்கூட எனக்கு இருக்குது."

"சத்யா, இதில மட்டும் லேட் பண்ணிடாதே. சட்டுன்னு சொல்லிடு. நீ சொல்ல மாட்டியான்னுகூட அந்தப் பொண்ணு ஏக்கத்தில இருக்கலாம். பொதுவா பொண்ணுங்க அவங்க மனசை லேசுல வெளிக்காட்டிக்க மாட்டாங்க" என்றான் தனபால்.

சத்யா ஒரு பெருமூச்சை வெளியேற்றினான்.

திவ்யா, உன் கபடமில்லாத சிரிப்புக்குப் பின்னணியில் என் மீதான ஆசை இருக்கிறதா? உன் இயல்பான பேச்சுக்குள் என் மீதான அன்பு ஒளிந்திருக்கிறதா? என்னை நீ ஆட்டி வைத்துக் கொண்டிருப்பதைப் போல, உன்னையும் நான் ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிறேனோ? உனக்கும் என்னைப் போல கேள்விகளுடன், சந்தேகங்களுடன், தவிப்புகளுடன் ஒரு இம்சை ரகசியமாக நிகழ்ந்து கொண்டிருக்கிறதா?

இது தெரியாமல் என் மனதை எப்படி வெளிப்படுத்துவது?

"இங்கயா இருக்கீங்க?" என்ற வினோதினியின் குரல் கேட்டுத் திரும்பினான் சத்யா.

படபடப்பாய் இருந்த அவள் அருகில் வந்து, "சத்யா, நம்ம ஆஷா தற்கொலைக்கு முயற்சி பண்ணி கடைசி நிமிஷத்தில காப்பாத்திட்டாங்க. இப்ப ஆஸ்பத்திரில இருக்கா. உங்களைப் பார்த்துப் பேசணுமாம்" என்றாள்.

# 13

ஒரு திருமண ஜோடியில் நிச்சயம் ஒருவர் முட்டாள்.

—ஹென்றி ஃபீல்டிங்

''என்ன வினோதினி சொல்றே? நிஜமாவா?'' பதறினான் சத்யா.

''நான் எதுக்காகப் பொய் சொல்லணும்?'' என்றாள் வினோதினி.

சத்யா சட்டென்று எழுந்து கொண்டான்.

அவன் கையைப் பிடித்த தனபால், ''இரு சத்யா. இது ஏப்ரல் மாசங்கிறதை மறந்துட்டியா? இந்த வினோதினிக்கு வேற வேலை இல்லை. கிடைக்கிற ஆளையெல்லாம் ஏமாத்திட்டிருக்கா'' என்றான்.

''அய்யோ! நான் நிஜமாதான் சொல்றேன் சத்யா. இதில எல்லாம் விளையாடுவனா?'' என்றாள் பரிதவிப்புடன் வினோதினி.

அப்போதும் நம்பத் தயாரில்லாத தனபால், ''நேத்து ஈவினிங் நான் ஸ்பென்ஸர்ஸ்கிட்ட ஆஷாவைப் பார்த்தேன். பேசினேன். ஜாலியாப் பேசிட்டுப் போனா. என்னை ஐஸ்கிரீம் சாப்பிடறியான்னுகூட கேட்டா.''

''தலபால், ஆஷாவை நீங்க எப்பப் பார்த்தீங்க?''

''ஏழு மணி இருக்கும்.''

''ஹாஸ்டல்ல அவ விஷம் குடிச்சது ராத்திரி பத்து மணிக்கு அவளோட ரூம் மேட்சும், வார்டனும் சேர்ந்து ஹாஸ்பிடல்ல கொண்டு போய்ச் சேர்த்து... ராத்திரி பூரா போராடி பிழைக்க வெச்சிருக்காங்க. வேணும்னா ஹாஸ்டல் ஸ்டூடண்ட் யாரை வேணாலும் கூப்புட்டுக் கேளுங்க. நான் ஹாஸ்பிடல் போய்ப் பார்த்துட்டு நேரா சத்யாவைத் தேடிக்கிட்டு வர்றேன்.''



''தனபால், வினோதினி இவ்வளவு தூரம் விளையாட மாட்டா. வா, போய்ப் பார்த்துட்டு வந்துடலாம்'' என்றான் சத்யா.

ஆட்டோ பிடித்து மூன்று பேரும் அதில் ஆஸ்பத்திரிக்குப் பயணித்தபோது தனபால் குரலைக் குறைத்துக் கேட்டான். ''என்னாச்சு? ஏன் தற்கொலை வரைக்கும் போனா ஆஷா?''

''தீபக்'' என்றாள் வினோதினி ஒற்றை வார்த்தையாக.

''நினைச்சேன். அப்படித்தான் இருக்கணும்னு நினைச்சேன். மைனர் கை கழுவிட்டாராக்கும்?''

''வயதைக் கழுவச் சொல்லி பணம் கொடுத்திருக்கான் ராஸ்கல்.''

''மைகாட்!'' என்றான் சத்யா. அவனைப் பத்தி காலேஜ் பூரா தெரியும். தெரிஞ்சும் எதுக்காக அவனோட பழகினா இவ?''

''அய்யோ! நானும் மத்த ஃபிரண்ட்சும் எவ்வளவு சொன்னோம் தெரியுமா? அவ கேக்கலை. முட்டாள்தனமா நம்பினா, கண்டிப்பா மேரேஜ் பண்ணிக்கிறேன்னு சொல்லிருக்காருன்னு சொல்லி எங்க வாயை அடைச்சிட்டா. இப்ப என்னை ஏன் காப்பாத்தினிங்கன்னு அழுவறா.''

''என்ன சாப்பிட்டாளாம்?''

''மூட்டைப்பூச்சி மருந்தோ, என்னவோ.''

''வயத்தில இருக்கிற கருவுக்கு பிராப்ளமாயிடுமே.''

"டாக்டர்ஸ் எடுத்துச் சொல்லி நேத்து டி என். சி. பண்ணிட்டாங்க. ஒரு சின்ன உயிரைக் கொன்னுட்டனேன்னு அதுக்கு வேற அழுவறா. ஹாஸ்டல்ல இப்ப எல்லாருக்கும் தெரிஞ்சி போச்சி. ஊர்ல இருக்கிற பேரண்ட்சுக்கு யாராச்சும் தகவல் கொடுத்துட்டா என்ன பண்றதுன்னு தவிப்பு வேற."

"ஹாஸ்பிடல்ல சேர்த்து இவ்வளவு நடந்திருக்கிறப்ப வார்டன் பேரண்ட்சுக்கு தகவல் கொடுத்திருப்பாங்களே" என்றான் தனபால்.

"வேற எதாச்சும் விஷயம்னா தகவல் கொடுத்திருப்பாங்க. இது ரொம்ப சென்சிடிவான மேட்டராச்சே. சம்திங் வெரி வெரி பர்சனல் இல்லையா? அதனால ஆஷாவைக் கேட்டுக்கிட்டு அப்புறம் தகவல் கொடுக்கலாம்னு இருந்தாங்க. காலைல இவ தெளிவா சொல்லிட்டா ஊருக்கு தகவல் கொடுத்தா யாருக்கும் தெரியாம மறுபடி தற்கொலைக்கு முயற்சிப்பேன்னு சொல்லிட்டா."

எல்லாம் சரி. எதுக்கு சத்யாகிட்ட பேசணும்னு சொன்னா?"

"அவளுக்கு இப்ப ஆறுதல் வேணும். மேற்கொண்டு என்ன செய்யலாம்னு சரியான கைடன்ஸ் வேணும். சத்யாகிட்ட பேசினா பாசிடிவா நல்ல யோசனைகள் கிடைக்கும்னு நான்தான் அவகிட்ட சொன்னேன். 'கூட்டிட்டு வரமுடியுமா ப்ளீஸ்'னு கேட்டா சரின்னு வந்தேன்."

"இப்ப கூட யார் இருக்காங்க?"

"அவ ரூம்மேட் ஊர்மிளா இருக்கா."

அந்தத் தனியார் ஆஸ்பத்திரியில் வினோதினி வழி நடத்த சத்யாவும், தனபாலும் தொடர்ந்தார்கள். காரிடாரில் குச்சி பொருத்தின துணியால் டெட்டால் கலந்த



தண்ணீர் போட்டு ஒரு ஆயா துடைத்துக் கொண்டிருந்தாள். மாடிப்படிகளின் ஒவ்வொரு திருப்பச் சுவரிலும் ஏசுவின் படம் இருந்தது.

தனியறையில் கழுத்து வரை போர்த்தப்பட்டிருந்த தலை கலைந்த, முகம் கறுத்த ஆஷா சொட்டுச் சொட்டாக இறங்கிக் கொண்டிருந்த சலைன் பாக்கெட்டைப் பார்த்துக் கொண்டிருந்தவள் கதவுச் சத்தம் கேட்டுத் திரும்பினாள் அருகில் அமர்ந்திருந்த ஊர்மிளா எழுந்து கொண்டாள்.

இவர்கள் சென்று கட்டில் அருகில் அமைதியாக நிற்க, சத்யாவைப் பார்த்தும் ஆஷாவின் கண்கள் தானாக வழிந்தன.

"பார்த்திங்களா சத்யா, என்னை சாகவும் விடாம பண்ணிட்டாங்க" குரலடைத்துக் கொண்டது.

"நீ எதுவும் எமோஷனலாக வேணாம் ஆஷா. எதுவும் சொல்ல வேணாம். பூரா விபரமும் வினோதினி சொல்லி தெரிஞ்சுக்கிட்டோம். இப்ப எப்படி இருக்கு?" என்று ஊர்மிளாவிடம் கேட்டான் சத்யா.

"மூணு நாளைக்கு இங்க இருக்கணும்னு சொல்லிருக்கார் டாக்டர். நேத்து ராத்திரி பயகரமாதான் இருந்தது. மூணு தடவை ஸ்டமக் வாஷ் பண்ணாங்க. மத்தியானம் ரெண்டு மணிக்குதான் கண்ணைத் திறந்து பார்த்தா" என்றாள். ஊர்மிளா கண் கலங்க.

"தைரியமா இரு ஆஷா. மனக் கஷ்டம் பத்தாதுன்னு உடம்பையும் கஷ்டப்படுத்திக்கிட்டே இப்போ எதைப்பத்தியும் யோசிக்காம அமைதியா இரு. உனக்கு இப்ப வேண்டியதெல்லாம் கம்ப்ளீட் ரெஸ்ட் ஒண்ணுதான். ஹாஸ்பிடல்லேர்ந்து டிஸ்சார்ஜ் ஆனப்புறம் விபரமாப் பேசலாம், என்ன?"

அமைதியாகத் தலையசைத்தாள்.

"ஊர்மிளா. கொஞ்சம் வெளில வாயேன்."

சத்யா அறைக்கு வெளியே வராந்தாவுக்கு வர, மற்றவர்களும் வந்து விட்டார்கள்.

"என்ன வினோதினி நீ, இந்த சமயத்துல நான் என்ன ஆறுதல் சொல்ல ஆரம்பிச்சாலும் பொசுக்குன்னு அழுது உணர்ச்சிவசப்பட மாட்டாளா? யாருமே இப்ப எதைப் பத்தியும் ஆஷாகிட்ட பேசறது சரியில்லை. நாம் பேசிக்கலாம். இதெல்லாம் தீபக்குக்குத் தெரியுமா ஊர்மிளா?"

"தெரியாதுன்னு நினைக்கிறேன். ஒருவேளை தெரிஞ்சிருக்கலாம்."

"நேத்து என்ன நடந்துச்சி? என்ன சொன்னானாம் அவன்?"

"டிபிகல் வில்லன் மாதிரியே பேசினானாம். நியாயம் கேக்கறேன், அது இதுன்னு எதாச்சும் நடவடிக்கை எடுத்தா உயிரையே எடுத்துடுவேன்னு மிரட்டிருக்கான், அதுல பயந்து போய்தான் இப்படி ஒரு முடிவுக்கு வந்துட்டா. 'அவன் மினிஸ்டர் பையன், எல்லா லெவல்லயும் செல்வாக்கு உள்ளவன். அவன் மோசமானவன். அவன் சொல்றதை எல்லாம் நம்பாதே'ன்னு நான் தினமும் சொல்வேன் சத்யா. இவ காதுலயே போட்டுக்கலை. சுரிதார் மோதிரம், வாட்ச், மேக்கப் செட்டு, வாக்மேன் இப்படி ரெண்டு நாளைக்கு ஒரு பிரசண்ட்டேஷன் கொடுத்து இவளை பிரமிக்க வைச்சிட்டான் அந்த ராஸ்கல். ஒரு மாதிரி பிடிவாதமான மயக்கத்தில அவன் கூப்பிட்டப்ப எல்லாம் போயி, அவன் இஷ்டப்படி எல்லாம் நடந்துக்கிட்டு... இப்ப பாருங்க இந்த நிலைமைல இருக்கா."

கண்கள் கலங்கின சத்யாவுக்கு தனபாலைப் பார்த்தான்.

"இது பாவம்டா. ரொம்பப் பெரிய பாவம்."



"உனக்கு பாவம் தீபக் மாதிரி ஆளுங்களுக்கு பொழுது போக்கு"

ஊர்ல ஆஷாவோட அம்மா, அப்பா, தன் பொண்ணு சிடில காலேஜ்ல நல்லபடியா படிச்சிட்டிருக்குன்னு நினைச்சிட்டிருப்பாங்க. இங்க இவ எவ்வளவு பெரிய பிரச்சினையில இருக்கா, பாரு இதெல்லாம் அவங்களுக்குத் தெரிஞ்சா எவ்வளவு தூரம் நொந்து போவாங்க!"

"நொந்து போறதா? ஹார்ட் வீக்கா இருந்தா நின்னு டும்ப்பா. ஆஸ்பத்திரில உயிர் பிழைச்சி படுத்திருக்கிற ஒரு பொண்ணைப் பத்தி இந்தச் சூழ்நிலைல தப்பாப் பேசறது. நாகரிகம் இல்லைதான். ஆனாலும் சொல்றேன் சத்யா, இதெல்லாம் தேவையில்லாம நாமே இழுத்து விட்டுக்கற அநாவசியமான பிரச்சினை. அவன் உருப்படாத பொறுக்கின்னு அத்தனைப் பேர் அட்வைஸ் பண்ணிருக்காங்க அதையெல்லாம் மீறி என்னை அவன்மேல நம்பிக்கை? சரி காதலிச்சேம்மா. எதுக்காக அத்துமீறிப் போறதுக்கு இடம் கொடுக்கணும்? திமிர்தானே?" என்றான் தனபால்.

"கொஞ்சம் திமிர். கொஞ்சம் வயசுக்கே உள்ள வீக்னெஸ்" என்றாள் வினோதினி.

"மேற்கொண்டு காலேஜ்ல படிக்கப் போறதில்லையாம் இவ. ஒவ்வொருத்தர் முகத்தையும் எப்படி நிமிர்ந்து பார்க்கறதுன்னு சொல்றா" என்றாள் ஊர்மிளா.

"அது முட்டாள்தனம். இதுக்காக படிப்பைக் கெடுத்துக்கறதா?"

"இவளே கெஞ்சினாலும் காலேஜ்ல வெச்சுக்க மாட்டாங்க சத்யா. வார்டன் பிரின்சிபால்கிட்ட ரிப்போர்ட் பண்ணிருப்பாங்க. இவ ஹாஸ்பிடல்லேர்ந்து திரும்பினதும் பிரின்சிபால் கூப்பிட்டுப் பேசி டிசிப்ளினரி ஆக்ஷன்னு கைல டி.சி. கொடுத்து அனுப்பிச்சிடுவார்."

“இன்னும் நொத்துடுவா தனபால்.”

“சரிப்பா. காலேஜ்ல சில ரூல்ஸ் இருக்குதில்ல. இவ சொன்னாலும் இவ பேரண்ட்சுக்கு தகவல் கொடுக்காம இருப்பாங்களான்றது சந்தேகம்தான்.”

“ஊர்ல யார், யார் இருக்காங்க ஊர்மிளா? உனக்குத் தெரியுமா?”

“அம்மா, அப்பா, ரெண்டு தங்கச்சிங்க இருக்காங்க சத்யா. ஒருத்தி ப்ளஸ் ட்டூ, ஒருத்தி பத்தாவது, ஆஷா வோட அப்பாவுக்கு மூணு மாசம் முன்னாடிதான் ஓபன் ஹார்ட் சர்ஜரி செஞ்சாங்க.”

“கிழிஞ்சுது!” என்றான் தனபால்.

“இப்ப என்ன செய்றது சத்யா?” என்றாள் வினோதினி.

“ஊர்மிளா சொல்ற தகவல்களை வெச்சிப் பார்த்தா இந்த விஷயமெல்லாம் அவ குடும்பத்துக்குத் தெரியறது நல்லதா எனக்குப் படலை. ரெண்டு தங்கச்சிங்களோட எதிர்காலம் பாதிக்கப்படக்கூடாது. ஹார்ட் பேஷண்ட் டான அப்பாவால இந்த அதிர்ச்சியைத் தாங்க முடியாமப் போய் ஏதாச்சும் விபரீதமாயிடலாம்.”

“காலேஜைப் பொறுத்தவரைக்கும் இவளை இனி கண்டினியூ பண்ண விடமாட்டாங்க. ஹாஸ்டலை விட்டுப் போகச் சொல்லுவாங்க. இப்ப இவ இந்த கண்டிஷன்ல ஊருக்கு போக முடியாது. ஹாஸ்பிடலை விட்டு டிஸ்சார்ஜ் ஆனதும் எங்க போவான்னே புரியலை. ஒரே குழப்பமா இருக்கு” என்றாள் ஊர்மிளா.

“தனபால் நாம இப்ப பிரின்சிபாலைப் பார்த்துப் பேசலாம்” என்றான் சத்யா. சிந்தனையில் ஆழ்ந்தான். “அதுக்கு முன்னாடி தீபக்கைப் போயும் பார்க்கலாம்னு நினைக்கிறேன்.”



“அவனைப் பார்த்து...?” என்றான் தனபால்.

“இவ்வளவு நடந்திருக்கு. அதுக்கு காரணகர்த்தா அவன். மந்திரி பையன்னா தனி நியாயமா தனபால்? அவன் இதுக்கு சரியான பதில் சொல்லியாகணும்” என்றான் சத்யா உணர்ச்சி பூர்வமாக.

## 14

தவறான அபிப்பிராயங்களை வாசல் வழியாக வெளியே விரட்டுங்கள். ஆனால் அவை ஜன்னல் வழியாகத் திரும்பவும் வந்து விடும்.

—ஃப்ரெடெரிக் தி கிரேட்

அந்த ஆஸ்பத்திரியின் அருகில் இருந்த பொதுத் தொலைபேசியில் இருந்து தீபக்கைத் தொடர்பு கொள்ள முயன்றான். சத்யா. வீட்டில் இல்லை என்றார்கள் எங்கே போயிருக்கிறான் என்று தெரியாதென்றும், எப்போதும் வருவான் என்றும் தெரியாதென்று பொறுப்பில்லாமல் யாரோ பதில் சொன்னார்கள். நீங்கள் யார் பேசுவது என்று கேட்டுத் கொள்ளாமல் வைத்து விட்டார்கள்.

சத்யாவும் தனபாலும் மட்டும் புறப்பட்டு காலேஜின் லேடீஸ் ஹாஸ்டலுக்கு வந்து வார்டன் பர்வதத்தைச் சந்திக்க சீட்டெழுதி அனுப்பிவிட்டு வெளியே போட்டிருந்த வழவழப்பான மர பெஞ்சில் அமர்ந்து காத்திருந்தார்கள்.

அருகிலேயே இருந்த விசிட்டர் ஹாலில் நூல் மாலை போடப்பட்டிருந்த மகாத்மா தெரிந்தார். யாரோ ஒரு அப்பா தன் மகளிடம் உரக்கப் பேசிக் கொண்டிருந்தது. சுழலும் மின்விசிறியின் சத்தத்தையும் மீறி இவர்களுக்குக் கேட்டது.

"நல்லா படிச்சிட்டிருக்கியாம்மா?"

"நல்லா படிக்கிறேம்ப்பா."

"இதுல உங்கம்மா செஞ்சி கொடுத்திருக்கிற அதிரசமும், தேன்குழலும் இருக்கு எடுத்து வெச்சுக்கோ. உன் ஃபிரெண்ட்சுக்கெல்லாம் கொடு நிறையவே செஞ்சி கொடுத்திருக்கா."

"இதெல்லாம் தூக்கிட்டு வர வேணாம்னு போன தடவையே உங்ககிட்ட சொன்னேன்ல்ப்பா?"

"நீ விரும்பிச் சாப்பிடுவேன்னு தானேம்மா அம்மா ஆசையா செஞ்சி அனுப்பறா, ஏன் வேணாங்கறே?"

"இங்க இதெல்லாம் யாரும் சாப்பிடறதில்லைப்பா. சாக்லேட்சும், ஐஸ்கிரீமும்தான் சாப்புடுவாங்க. அதிரசம், சீடை, தேன்குழல்னு நான் எடுத்துக் கொடுத்தா கிண்டல் பண்றாங்கப்பா."

"இதில என்னம்மா கேவலம் இருக்கு?"

"இதெல்லாம் ஃபேஷன் இல்லைப்பா சொன்னா நீங்க புரிஞ்சுக்க மாட்டிங்க."

"போட்டுக்கற துணில ஃபேஷன் பார்க்கலாம் செஞ்சுக்கற அலங்காரத்துல ஃபேஷன் பார்க்கலாம். திங்கிறதில கூடவாம்மா ஃபேஷன் பார்க்கணும்? வாய்க்கு ருசியா நமக்குப் பிடிச்சதை சாப்புடறதுக்கு என்னம்மா இப்படித்தான் சரியா சாப்புடாம குச்சி மாதிரி உடம்பை வெச்சுக்கறியா?"

"அய்யோ! மெதுவாப் பேசுங்கப்பா. நான் நல்லாதான் சாப்புடறேன். ஸ்லிம்மா இருந்தாதான் அழகுப்பா."

"என்னவோ போம்மா. இங்க உன்னைத் தனியா விட்டுட்டு ஊர்ல நாங்க விதுக்கு விதுக்குன்னுதான் இருக்கோம்."



"இங்க ஹாஸ்டல்ல எவ்வளவு பேர் இருக்காங்க! நான் மட்டும் தனியாவா இருக்கேன்?"

"ஏம்மா, ஒண்ணு சொல்லட்டுமா?"

"என்னப்பா?"

"எவ்வளவு அழகா நீளமா கருகருன்னு உன் முடி இருக்கும். ஆம்பளைப் பையன் மாதிரி இத்துனூண்டா கத்திரிச்சி விட்டுட்டு செவப்பு சாயம் எல்லாம் பூசிருக்கியே. நல்லாவா இவருக்கு இதெல்லாம்?"

"சாயம் இல்லைப்பா, மருதாணி வாஷ். இப்ப யாருப்பா பின்னல் போடறாங்க? இதான்ப்பா ஃபேஷன் இதெல்லாம் உங்களுக்குந் புரியாது. சரி, வாங்க வெளில போய் டிபன் சாப்புடலாம். உங்களை அப்படியே பஸ் ஏத்தி விட்டுட்டு வந்துடறேன்."

ஜீன்ஸ் பேண்ட் போட்டு பாய்ஸ் கட் செய்திருந்த அந்தப் பெண்ணும், நாலு முழ வேஷ்டியணிந்து கணபதி ஜவுளி ஸ்டோர்ஸ் கொடுத்த மஞ்சள் பையோடு அந்தப் பெரியவரும் இவர்களைக் கடந்து போனதும் சத்யா பெருமூச்சுடன் சொன்னாள்.

"தனபால். இப்படித்தான் தப்புப் பண்றாங்க இவங்க."

"எதைச் சொல்றே."

"அந்தப் பொண்ணும், அவங்கப்பாவும் பேசிட்டிருந்ததைக் கேட்டே இல்லே? காலேஜ்ல படிக்கிறப்ப இவங்களை ஆட்டிப் படைக்கிற விஷயம் ஃபேஷன். அந்த அப்பா கேட்ட மாதிரி இவங்க டிரஸ் விஷயத்திலயும், மேக்கப் விஷயத்திலயும் மட்டும் ஃபேஷனை நிறுத்தறதில்லை. நாலஞ்சு பாய் ஃபிரெண்ட்ஸ் இருந்தாதான் ஃபேஷன்னு பண்ணிக்கிறாங்க. எவனாச்சும் போன் செய்யணும். எவனாச்சும் பைக்குல சினிமாவுக்கு அழைச்சிட்டுப் போகணும். இப்படி பாய்ஸோட எல்லை தாண்டிப் பழகறப்ப

ஒரு தனி மதிப்பு கிடைக்கும்னு சில பொண்ணுங்க நினைச்சுக்கறாங்க. அதை ஒரு பெருமையான விஷயமாவும் நினைச்சுக்கறாங்க. பசங்களோட சேர்ந்து பிக்னிக் போறது, சேர்ந்து தண்ணியடிக்கிறது, உடம்பு உரசிக்கிட்டு டான்ஸ் ஆடறது. சின்னச் சின்ன சில்மிஷங்களுக்கு அனுமதிக்கிறது இப்படி ஒவ்வொண்ணாக ஃபேஷன்ல சேர்த்து இப்ப செக்ஸ் வெச்சிக்கிறதையும் ஒரு ஃபேஷன் அயிட்டமா நினைச்சுக்க ஆரம்பிச்சிட்டாங்க. விளைவுகளைப் பத்தி யோசிக்கவிடாத பருவம் இது. பாதிப்புகளை நினைச்சுப் பார்க்கிற பக்குவம் இருக்கறதில்லை. நம்ம ஆஷாவை எடுத்துக்க. தீபக்கை ஆத்மார்த்தமா காதலிச்சிருப்பான்னு நினைக்கிறியா? நிச்சயமா இல்லை அவனோட சேர்ந்து சுத்தறதில மத்த பொண்ணுங்ககிட்டேர்ந்து தான் தனிப்பட்டுட்டதா நினைச்சிருப்பா அடுத்தவங்களைப் பொறாமைப்பட வைக்கிறதில ஒருவித சுகம். அது எவ்வளவு அபத்தமான சுகம்னு அடிபட்டதுக்கறப்புறம்தான் உணர்ந்திருப்பா.''

வார்டன் அறையிலிருந்து பியூன் வந்து, ''அம்மா உங்களை உள்ளே கூப்புட்டாங்க'' என்றான்.

வார்டன் பர்வதம் கொண்டை மேல் கனகாம்பரம் ஆர்ச் அமைத்திருந்தார். மஞ்சள் பூசிக் குளித்திருப்பது தெரிந்தது. வகிட்டின் துவக்கத்திலும் குங்குமம்.

''என்ன, சொல்லுங்க'' என்றார் பேனாவை மூடி வைத்தபடி.

''ஹாஸ்பிடல்ல ஆஷாவைப் பார்த்துட்டு வர்றோம் மேடம். புவர் கர்ள். அநாவசியமான பிரச்சினைகளை இழுத்து விட்டுக்கிட்டா. இந்த விஷயத்தில ஹாஸ்டலோட நிலைமை என்ன, காலேஜோட நிலைமை என்னன்னு தெரிஞ்சுக்க விரும்பறோம்'' என்றான் சத்யா.



''அவளுக்காகத் தனிப்பட்ட முறையில நான் இரக்கம் காட்டலாம். ஆனா ஒரு கல்வி நிறுவனம் இரக்கம் காட்ட முடியாது சத்யா.''

''அப்படின்னா?''

''பிரின்ஸிபால்கிட்ட நான் சம்பவத்தை ரிப்போர்ட் பண்ணாம இருக்க முடியாது. எல்லாத்தையும் சொல்லிட்டேன். காலேஜ், ஹாஸ்டல் ரெண்டு இடத்திலயும் உடனே டிஸ்மிஸ் பண்ணி ஆர்டர் போட்டுட்டார். ஊருக்கு எல்லாத்தையும் விபரமா லெட்டர்ல எழுதி ஒரு ஸ்டாஃபை அனுப்பி கொடுத்துட்டு வரச் சொன்னார். அந்த லெட்டர் தான் இப்ப எழுதி முடிச்சேன்.''

சத்யா அமைதியாக வார்டனைப் பார்த்தான்.

''வீட்டுக்குத் தெரிவிச்சா மறுபடி தற்கொலை செய்துகப் பார்ப்பேன்னு ஆஷா சொன்னாளாமே...'' என்றான் தனபால்.

''அதுக்காக? நாம இதை எல்லாம் அவ பேரண்ட்சுக்குச் சொல்லாம இருக்க முடியுமா? சின்ன விஷயமா இது? அவங்களைத் தந்தி கொடுத்து இங்க வரவழைச்சி சொல்லிடுங்கன்னுதான் பிரின்சிபால் சொன்னார். அவங்க என்னமோ ஏதோன்னு பதறிக்கிட்டு வருவாங்க. எப்படியும் அந்தப் பொண்ணைக் காப்பாத்தியாச்சு; அதனால அவங்களுக்குப் பக்குவமா விபரம் தெரியப்படுத்தணும்னு எடுத்துச் சொன்னது நான்தான்.''

''ஆஷாவோட குடும்பச் சூழ்நிலை உங்களுக்குத் தெரியுமா மேடம்?'' என்றான் சத்யா.

''தெரியாது.''

''அவங்கப்பாவுக்கு மூணு மாசம் முன்னாடி ஓபன் ஹார்ட் சர்ஜரி நடந்திருக்கு. ஆஷாவுக்கு வயசுக்கு வந்த

ரெண்டு தங்கச்சிங்க இருக்காங்க. இந்தச் சூழ்நிலைல இந்த விஷயம் எல்லாம் தெரிஞ்சா அவங்கப்பா உயிருக்கே ஆபத்தாயிடலாம். ஊர்ல விஷயம் பரவி அந்தக் குடும்பத்துக்கே கெட்ட பேரு. எதிர்காலத்தில ஆஷாவோட வாழ்க்கை மட்டுமில்லை, அவ தங்கச்சிங்க வாழ்க்கையும் பாதிக்கும்.''

''உண்மைதான். இதைப் பத்தியெல்லாம் பொறுப்பா யோசிக்க வேண்டியது யாரு? ஆஷாதானே? யோசிச்சாளா? வரம்பு மீறிப் பழகி கர்ப்பம் உண்டாகற வரைக்கும் போயி, தற்கொலை முயற்சில இறங்கினா... நாங்க எப்படி நடவடிக்கை எடுக்காம இருக்க முடியும்?''

''இது நியாயமான்னு புரியலை மேடம். ஒரு பொண்ணு தற்கொலை முயற்சி செய்றான்னா அவ மனசு எவ்வளவு வெறுத்துப் போயிருக்கும். மெனக்கெட்டு அவளைக் காப்பாத்தி, அவ படிப்பையும் கெடுத்து, பேரையும் கெடுத்து அவமானப்படுத்தறது பெரிய தண்டனை இல்லையா? தற்கொலைன்றதுதான் செஞ்ச தப்புகளை உணர்ந்து தனக்கு அவளே கொடுத்துக்க நினைச்ச தண்டனை. உயர்ந்தபட்ச தண்டனை. அந்த தண்டனை நியாயமில்லைன்னு உணர்ந்துதானே காப்பாத்தினிங்க?''

''ஒரு பொண்ணை சாக விட்டுட முடியுமா?''

''ஆக...அவ வாழணும்னுதானே காப்பாத்தினிங்க?''

''ஆமாம்.''

''இந்த மாதிரி காலேஜை விட்டு டிஸ்மிஸ் செஞ்சி, ஊருக்குத் தெரிவிச்சி, இங்க சில பேருக்குத் தெரிஞ்சதை ஊருக்கு பல பேருக்குத் தெரிவிச்சி, அவமேல ஒரு அவமான முத்திரையைக் குத்தி...அவளை நடைப்பிணமா வீட்ல இருக்கச் சொல்றிங்களா? இதான் காப்பாத்தி வாழ வைக்கிறதா?''

''சத்யா, என்ன செய்யணும்னு சொல்றிங்க?''



''இப்போ ஆஷாவுக்குத் தேவை ஆறுதல்! நல்ல புத்திமதிகள்! ஆதரவு! அவ எதிர்காலத்துக்கு படிப்பு உதவும் அதைத் தடை செய்யலாமா?''

''அதெப்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்காம இருக்க முடியும்?''

''என்ன ஒழுங்கு நடவடிக்கை? அவ என்ன செஞ்சா?''

''என்ன செஞ்சாளா? அவளேதான் சொல்றாளே கதை கதையா. காலேஜ்ல தீபக்கோட சுத்தி லூட்டியடிச்சிருக்கா. தப்பு பண்ணியிருக்கா. கன்சீவ் ஆயிட்டா. வெளில தெரிஞ்சிடக் கூடாதுன்னு தற்கொலை முயற்சி, இத்தனை இருக்கே...''

''எல்லாமே அவ சொன்னதுதான். இல்லையா?''

''ஆமாம்.''

''இந்தக் காலேஜ்ல இவ செஞ்ச இதே தப்பை இன்னும் எத்தனையோ பொண்ணுங்க செய்துகிட்டு இல்லையா? இவ ஒருத்திதான் இந்த மாதிரி தப்பு செஞ்சாளா மேடம்?''

''இது என்ன பேச்சு? மாட்டிக்கிறப்பதானே தண்டனைன்னு வருது.''

''அப்போ மாட்டிக்காம எது வேணும்னாலும் செய்யலாமா?''

''இது குதர்க்கமான வாதம்.''

''சரி, நியாயமான வாதமா கேக்கறேன். தீபக்கோட அத்துமீறிப் பழகினதால தப்பாயிடுச்சுன்னு அவ சொன்னதை நிர்வாகம் நம்பித்தானே இந்த நடவடிக்கை எடுத்திருக்கு?''

''ஆமாம்.''

"ரைட்டு. அப்போ இதுக்குக் காரணமான தீபக் மேல ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருக்கீங்களா? இல்லைன்னா கண்டிப்பா எடுத்தாகணும் மேடம்!'' என்றான் சத்யா தீர்மானமான குரலில்.

## 15

திருமண வாழ்வில் சிக்கலான பகுதியானது காலை உணவு நேரம்.

—ஏ. பி. ஹெர்பெர்ட்

சத்யா கேட்ட கேள்வி வார்டன் பர்வதத்தைத் திணற டித்தது. எச்சில் விழுங்கினார்.

"சொல்லுங்க மேடம் ஆஷா மேல இந்த அளவுக்கு நிர்வாகம் நடவடிக்கை எடுக்குதுன்னா, அதுக்குக் காரண மான தீபக் மேலயும் இதே அளவுக்கு நடவடிக்கை எடுத் தாகணும் மேடம். அதுதானே நியாயம்?"

"சத்யா, நீங்க இதுபத்தி என்னைக் கேக்காதிங்க. நடவடிக்கை எடுக்கற உரிமையும் எடுக்காம இருக்கிற உரிமையும் பிரின்சிபால்கிட்டதான் இருக்கு."

"ரைட். அப்படின்னா நாங்க பிரின்சிபாலைப் பார்த்துப் பேசறோம். அவர் என்ன சொல்றார்னு வந்து சொல்றோம். அதுக்கப்புறம் ஆஷாவை ஹாஸ்டல்லேர்ந்து டிஸ்மிஸ் பண்ணுங்க. அதுக்கப்புறம் நீங்க எழுதின லெட்டரை ஆஷாவோட பேரண்ட்சுக்கு அனுப்பி வைக் கிறதைப்பத்தியும் முடிவெடுக்கலாம்,

பர்வதம் பெருமூச்சு வெளியேற்றினார்.



சத்யாவும், தனபாலும் கல்லூரிக் கட்டிடத்திற்கு மரங்கள் எல்லை காத்த பாதைகள் வழியாக நடந்தபோது விளையாட்டு மைதானத்தில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அங்கங்கே கார் பானெட்டுகளில் அமர்ந்து சிகரெட். புகை பரப்பி உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

"என்ன சத்யா நினைக்கிறே?"

"தப்பு தனபால் நடந்து முடிஞ்சதும் தப்பு. இனிமே நடக்கப் போறதும் தப்பு."

"ஆஷா மேல ஆக்ஷன் எடுக்கறது அவங்களால தவிர்க்க முடியாது சத்யா. ஸ்டுடண்ட்ஸ் எல்லாருக்கும் தெரிஞ்சி டுச்சி. கண்டுக்காம விட்டுட்டா எல்லாருக்கும் தைரியம் வந்துடும்."

"அதுக்காக?"

"நான் பிரின்சிபாலா இருந்தாலும் நடவடிக்கை எடுக்கத்தான் செய்வேன் சத்யா· மேடம் சொன்ன மாதிரி தனிப்பட்ட முறையில இரக்கப்படலாம். ஒரு இன்ஸ்டி டியூஷன் இரக்கப்பட முடியாது."

"இல்லை தனபால், அப்ரோச் தப்பா இருக்கு. ஒரு வாதத்துக்காகக் கேக்கறேன். காலேஜ்ல படிக்கிற ஒரு பொண்ணு கல்யாணமாகி கர்ப்பம் ஆனா நடவடிக்கை எடுப்பாங்களா?"?

"அதெப்படி எடுப்பாங்க?"

"ஆஷாவைப் பொறுத்தவரை மெண்டலி மேரீட். இப்படிக் கல்யாணமாகாம வயத்துல கரு சுமக்கறது நியாயமா, பண்பாடான்னு கேட்டா, அதுக்கு வேற பதில். ஆனா அது ரொம்ப பர்சனல் மேட்டர்னு நான் நினைக் கிறேன். சரி, தப்புதான்னா இது உரிமைப் பிரச்சினைன்னு

நினைக்கிறேன். காலேஜ்ல. கிளாஸ்ல தீபக்கும், ஆஷாவும் கட்டிப் பிடிச்சிக்கிட்டு காதல் மயக்கத்தில இருந்தாங்கன்னு சொல்லு. அதை எல்லாரும் பார்த்தாங்கன்னு சொல்லு. அதுமேல் ஒழுங்கு நடவடிக்கை தாராளமா எடுக்கலாம். இப்ப தப்பு, அவளைப் பாதிக்கும். உயிரைக் காப்பாத்தினது வேஸ்ட் ஒரே செகண்ட்ல போய்ச் சேர இருந்தவளை மெனக்கெட்டு காப்பாத்தி ஒவ்வொரு செகண்டும் சாகடிக்கிற வேலை இது. ஒரு தற்கொலைக்கு பதிலா ஸ்லோ மர்டர்!''

தனபாலிடம் சொன்ன இதையே இப்படியே திரிசூர்ணம் போட்டிருந்த பிரின்சிபால் பத்மநாபனிடம் சத்யா சொன்ன போது அவருக்கு மூக்குக்குக் கீழே இல்லாத மீசையும் துடித்தது.

''இதோ பாருப்பா. எனக்கே லெக்சர் எடுக்கறியா? எதை எப்படிச் செய்யணும்னு எனக்குத் தெரியும். ஆஷாவை காலேஜ்லேர்ந்து டிஸ்மிஸ் பண்ணித்தான் ஆகணும்.''

''அப்படின்னா தீபக்கையும் டிஸ்மிஸ் பண்ணனும் சார்.''

''அது முடியாதுப்பா.''

''ஏன்? மந்திரி புள்ளையாச்சேன்னு பயமா? நாளைக்கு உங்க வீட்டுக்கு ஆட்டோல ஆளுங்க வருவாங்கன்னு கதிகலங்கறிங்களா?''

''அதெல்லாம் இல்லை.''

''பின்னே என்ன காரணம்னு சொல்லுங்க.''

''தீபக்கை என்ன காரணம் காட்டி டிஸ்மிஸ் பண்றது?''

''இதே ஒழுங்கு நடவடிக்கைதான்!.'



''ஆஷா செஞ்ச தப்புக்கு ஆதார பூர்வமா சாட்சியங்கள் இருக்குப்பா. தான் உண்டாகலைன்னு அவளால மறுக்க முடியாது. தற்கொலைக்கு முயற்சி பண்ணலைன்னு அவளால மறுக்க முடியாது. டாக்டர் சர்ட்டிஃபிகேட் இருக்கு. ஆஷா யாரோட தப்பு செஞ்சான்றது பத்தி நிர்வாகத்துக்கு அக்கறை இல்லை. அது தீபக்னு அவ சொல்றா. ரைட்டு, தீபக்தான்னு நிச்சயப்படுத்தி நான் எப்படி அவனை டிஸ்மிஸ் செய்ய முடியும்? அவன் அதை மறுக்கலாம் இல்லையா? காரணமில்லாம என்னை டிஸ்மிஸ் பண்ணி என்னை நிர்வாகம் அவமானப் படுத்திடுச்சின்னு தீபக் நம்மகாலேஜ் மேல கேஸ் போட்டா என்ன செய்றது.''

''என்ன சார் பேசறிங்க நீங்க? ஆஷா அந்த தீபக்கோட சுத்தினது காலேஜ்ல அத்தனை பேருக்கும் தெரியும். தற்கொலைக்கு முயற்சி பண்ண பொண்ணு ஒப்பனா அவன் பேரைச் சொல்றா. இதை மீறி எப்படி அவன் மறுக்க முடியும்?''

''சத்யா, நீ உணர்ச்சிவசப்பட்டுப் பேசறே. நான் நல்லா யோசிச்சுப் பேசறேன். ஒண்ணு பண்ணலாமா?''

''என்ன சார்?''

''தீபக்கை வரவழைக்கிறேன். உனக்கு முன்னாடியே விசாரிக்கிறேன். ஆஷாவை நான்தான் சார் கெடுத்தேன்னு அவன் சொல்லட்டும். அப்படிச் சொன்னா உடனே அவன் மேல நடவடிக்கை எடுக்கறேன்.''

''நிச்சயமாவா சார்?''

''நிச்சயமா,'' என்ற பிரின்சிபால் உடனே டெலிபோனை எடுத்து, குறித்து வைத்திருந்த எண் பார்த்து டயல் செய்து, ''ஹலோ, மிஸ்டர் தீபக் ப்ளீஸ்'' என்றார்.

''தீபக்தான் பேசறேன் யாரு?''

''பத்மநாபன் உன் காலேஜ் பிரின்சிபால் பேசறேன்.''

"ஹலோ சார். குட் ஈவினிங் என்ன சார் விஷயம்?"

"கொஞ்சம் காலேஜ் வரைக்கும் வந்துட்டுப் போக முடியுமா தீபக்?"

"நான் ஒரு பார்ட்டிக்கு புறப்பட்டுகிட்டு இருக்கனே சார்."

"கொஞ்சம் முக்கியமான விஷயம். உன் எதிர்காலம் சம்பந்தப்பட்ட விஷயம். இல்லைன்னா நானே போன் செய்ய மாட்டேன்."

"என்ன சார் சொல்றிங்க?"

உடனே என்னை வந்து பாரு. பத்து நிமிஷத்தில போய்டலாம். நேர்லதான் இதைப்பத்திப் பேச முடியும்."

"சரி சார், வர்ரேன், உடனே வர்ரேன்."

போனை வைத்த பிரின்சிபால், "அந்தப் பொண்ணு ஆஷா எப்படி இருக்கா? போய்ப் பார்த்திங்களா?" என்றார்.

"அபாயத்தைத் தாண்டிட்டா. ஆனா மனசளவில செத்துப் போயிட்டா."

"இந்தக் காலத்துப் பொண்ணுங்க ரொம்ப ஸ்பீட்! எதிலயும் ஸ்பீட்! ஒருத்தனை நம்புறதுல ஸ்பீட்! காதலிக்கிறதில ஸ்பீட்! இப்படித் தப்பு பண்றதில ஸ்பீட்!"

"ஒரு பொறுப்பான அப்பா ஸ்தானத்தில இருந்து யோசிங்க. ஆஷா தப்பு பண்ணிட்டா. கோபப்பட வேண்டிய விஷயம்தான். ஆனா ஒரு கட்டத்தில் மன்னிச்சாக வேண்டிய விஷயம் அவ எதிர்காலம் என்னன்னு யோசிச்சிங்களா?"

"அதை அவளும் அவ பேரண்ட்சும்தான் முடிவு செய்யணும்."



இவர்கள் பேச்சைத் தொடர...கதவு தட்டி உள்ளே வந்தான் தீபக். சிகரெட் நெடியடித்ததில் பிரின்சிபால் இருமினார். இவர்களைப் பார்த்துக் கொண்டு சூயிங்கம் மெல்லும் வாயைப் பிரிக்காமலேயே, "என்ன சார்?" என்றான்.

"உக்காருப்பா தீபக்."

"இருக்கட்டும், சொல்லுங்க" என்றான். குரலில் ஒரு விரோதம் முளைத்திருந்தது.

"நேத்து நம்ம காலேஜ்ல ஒரு அசம்பாவிதம் நடந்து போச்சு தீபக். உனக்குத் தெரிஞ்சிருக்கலாம்."

"என்ன சார் ஆச்சு? நான் நாலஞ்சு நாளா வேற ஒரு மேட்டர்ல பிஸி. இந்தப் பக்கமே வரலை.

"நேத்து லேடிஸ் ஹாஸ்டல்ல ஆஷா தற்கொலை பண்ணிக்கப் போய்ட்டா."

"அய்யய்யோ! அப்புறம்?"

"ரூம்மேட் பார்த்துட்டு வார்டனை எழுப்பி, எல்லோருமா ஹாஸ்பிடலுக்கு தூக்கிட்டுப் போயி...ராத்திரி ரொம்ப போராட்டத்துக்கப்புறம் டாக்டர்ஸ் அவ உயிரைக் காப்பாத்திட்டாங்க."

"நல்ல வேளை. என்னவாம்? எதுக்கு இப்படி அசட்டுத்தனமா ஒரு முடிவு எடுத்தா அந்தப் பொண்ணு?"

பத்மநாபன் ஒரு முறை சத்யாவைப் பார்த்துக் கொண்டார்.

ஆஷா ஒருத்தனோட எல்லை மீறிப் பழகினதில கர்ப்பமாயிட்டா, அந்தப் பையன் அவளை ஏத்துக்க மாட்டேன்னு சொல்லிட்டானாம். அதுல மனசொடிஞ்சு தற்கொலை பண்ணிக்கப் போய்ட்டா."

சத்யா குறுக்கிட்டு, "டாக்டர்ஸ் டெர்மினேட் பண்ணி கருவைக் கலைச்சிட்டாங்க" என்றான்.

"அடடா! இப்ப எப்படி இருக்கா?"

"பரவால்லை. இன்னும் மூணு நாளைக்கு ஹாஸ்பிடல்ல இருக்கணுமாம்."

"சத்யா ஆஷா எந்த ஹாஸ்பிடல்ல இருக்கான்னு உனக்குத் தெரியுமா? போறப்ப பார்த்துட்டுப் போறேன் நல்ல பொண்ணு சார். கள்ளம் கபடமில்லாம சிரிச்சுப் பழகுவா."

பிரின்சிபால் மேற்கொண்டு பேச்சைத் தொடர்வது எப்படி என்று யோசித்துத் தயங்கினார்.

"சரி, எதுக்கு சார் இதுக்கு ஸ்பெஷலா என்னைக் கூப்புட்டு சொல்றிங்க?" என்றான் தீபக்.

"தீபக், வார்டன்கிட்ட ஆஷா வாக்குமூலம் மாதிரி சொல்லியிருக்கா அதில, தான் கர்ப்பமானதுக்கும் மன சொடிஞ்சதுக்கும்... தீபக்தான் காரணம்னு சொல்லியிருக்காப்பா."

"என்னது?"

கடுங்கோபத்துடன் நாற்காலியைப் பின் தள்ளி எழுந்தான் தீபக்.

"ஆஷா சொன்னதுதான் இது."

"விளையாடறாளா அவ? ஒரு ஃபிரண்டா அவகிட்ட சிரிச்சுப் பேசினது தப்பாப் போச்சா? பெரிய இடத்துப் பையன்தானே இவன் பேரைச் சொல்லி வெச்சா எதாச்சும் பணம் செமத்தியா கிடைக்கும்னு பிளான் பண்றாளா அவ? நோ! எனக்கும் அவளுக்கும் ஜஸ்ட் ஃபிரெண்ஷிப் தான் சார். அதைத் தாண்டி வேற எந்தப் பழக்கமும் கிடையாது" என்றான் ஆத்திரமாக.



"ஏன் தீபக் ஒரு ஃபிரண்டுக்கு தினம் ஒரு பிரசன்டேஷன் யாராவது வாங்கிக் கொடுப்பாங்களா என்ன?" என்றான் சத்யா.

திரும்பி அவனை முறைத்தான் தீபக். அவன் உதடுகள் துடித்தன.

"என்னடா சொல்றே நீ?"

"தப்பு செய்யறதுக்கு இருக்கிற தைரியம் அதை ஒத்துக்கறதிலேயும் இருக்கணும்னு சொல்றேன்."

"யூ ராஸ்கல்!"

பாய்ச்சலாய் வந்த தீபக், சத்யாவின் சட்டையைப் பிடித்து முறுக்கி அவனைப் பளாரென்று அறைந்தான்.

## 16

தேவதையை யாரும் நேசிப்பதில்லை. அவள் காற்பதாவது வயதில்

—ஆர்தர் டபிள்யூ டி. ஹென்றி

சத்யாவைத் தீபக் மீண்டும் தாக்க முயன்றபோது சத்யா தன் கைகளை முகத்துக்கு நேராய்ப் பிடித்துத் தற்காத்துக் கொள்ள முற்பட்டானே ஒழிய, திருப்பித் தாக்கவில்லை.

அதற்குள் தனபாலும், பிரின்சிபாலுமாகச் சேர்ந்து தீபக்கை வலுவாகப் பற்றி தனியாகப் பிரித்து விட்டார்கள்.

தீபக் ஆவேசம் கலையாமல் சத்யாவை எரிக்கிற பார்வை பார்த்து.

'யார்கிட்ட பேசறோம்னு யோசிச்சுப் பேசுடா' என்னமோ நான்தான் ஆஷாவைக் கெடுத்த மாதிரிப் பேச

றியே... நீ என்ன வெளில விளக்கு பிடிச்சிக்கிட்டு காவலுக்கு நின்னியா? எலும்ப ஒவ்வொண்ணையும் கழட்டி எடுத்துடுவேன், ஜாக்கிரதை!" என்றான்.

அவனுடைய ஒவ்வொரு அமில வார்த்தையும் தனபாலை உசுப்பியது. ஆனால் சத்யா மௌனமாகப் புன்னகை புரிந்தான் பிரின்சிபாலைப் பார்த்தான்.

"என்ன சார் பார்த்திங்க இல்ல? உங்க கண் எதிர்லயே என்னை எப்படித் தாக்கினான்? நீங்க ரெண்டு பேரும் இல்லைன்னா என் கதி என்னவாகியிருக்கும்? எவ்வளவு மோசமா என்னைப் பேசினான் கேட்டிங்க இல்லையா? இது ஒழுக்கமான நடவடிக்கைல சேர்த்தியா? இது மேல டிசிப்ளினரி ஆக்ஷன் எடுக்கப் போறிங்கதானே?"

சத்யா அமைதியாகக் கேட்டாலும், பிரின்சிபாலைப் பதட்டம் தொற்றிக் கொண்டது. கைக்குட்டை உபயோகித்தார்.

"தீபக், நீ முதல்ல வீட்டுக்குப் போப்பா" என்றார்.

நகர்ந்தான் தீபக்.

"நில்லு தீபக்!" என்ற சத்யா, "சார், தெளிவா சொல்லுங்க. இப்ப இங்க இவன் நடந்து கிட்டதுக்கு இவன் மேல நீங்க ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் போறிங்களா, இல்லையா?"

"என்னது ஒழுங்கு நடவடிக்கையா? என் மேலயா? எடுத்துடுவாரா அவரு?" என்ற தீபக் பிரின்சிபாலை நெருங்கி, அவரின் டையின் முடிச்சைச் சரி செய்தபடி, "யோசிச்சு செய்ங்க சார்! அதாவது பின் விளைவுகளை யோசிச்சு செய்ங்கன்னு சொன்னேன். வர்றேன்" என்று விட்டு வேகமாக நடந்து வெளியேறினான்.

முழு டென்ஷனில் இருந்த பிரின்சிபால் பொத்தென்று நாற்காலியில் உட்கார்ந்தார். சத்யாவையும். தனபாலையும் பார்த்தார்.



"ஐ வாண்ட் ரெஸ்ட். போங்க. அப்புறம் பேசிக்கலாம்!"

"அவன்கிட்ட அடி வாங்கினது நான் சார். எனக்குதான் இப்ப ரெஸ்ட் வேணும். நீங்க என்ன செய்யப் போறிங்க, இப்ப எங்களுக்குத் தெரிஞ்சாகணும்."

"என்னை என்ன செய்யச் சொல்றிங்க?"

"தீபக் மேல ஒழுங்கு நடவடிக்கை எடுங்க சார். உங்க முன்னாடி கேவலமான கெட்ட வார்த்தை பேசறான். அடிக்கிறான். இப்படி ஒரு ரௌடிப் பையனை ஸ்டூடண்ட்டா தொடர விடறது நியாயமா? அவன் ஆஷா கிட்ட தப்பா நடந்துக்கலைன்னு சொல்லிட்டான். அதனால அந்த அடிப்படையில் அவன்மேல எந்த ஆக்ஷனும் எடுக்க முடியாது. ஆனா இப்ப நடந்து கிட்டதுக்கும் ஆக்ஷன் எடுக்கலைன்னா நியாயமா சார்?"

பிரின்சிபால் சில விநாடிகள் யோசித்தார்.

"நியாயமில்லைதான். பட் ஐ'ம் ஹெல்ப்லெஸ்!"

"அப்படின்னா? அவன்மேல நடவடிக்கை எடுக்கப் போறதில்லை நீங்க. அப்படித்தானே?"

"இது சின்ன விஷயம் இல்லை. என்ன சொல்லிட்டுப் போனான். கவனிச்சியா? விளைவுகளை யோசிக்கச் சொல்றான். அவனோட பின்னணி என்னன்னு எல்லாருக்கும் தெரியும் நாளைக்கு நம்ம காலேஜ்ல ஒரு பாம் வெடிச்சு சில உயிர்கள் சேதமாகறதுக்கு இன்னைக்கு நியாயத்தை போதிக்கிற மனச்சாட்சியைக் கொலை செஞ்சிடறது பெட்டர்னு எனக்குப் படுது."

"சபாஷ்?" கைதட்டினான் சத்யா, "ஒரு பொறுக்கிக்காக இவ்வளவு பெரிய இன்ஸ்டிடியூஷன் தலைமை பயப்படுது!"

“போதும் சத்யா, நீங்க ரெண்டு பேரும் போகலாம். எந்த விஷயத்தை எப்படி டீல் செய்யணும்னு எனக்குத் தெரியும்.”

“ரைட் சார். இப்ப சொல்லுங்க பாதிப்பு ஏற்படுத்தினவன்மேல எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாம பரிதவிக்கிற நீங்க... பாதிக்கப்பட்ட ஒரு அப்பாவிப் பொண்ணைப் பழிவாங்கறது சரியா? ப்ளீஸ்...ஆஷா மேல எந்த நடவடிக்கையும் எடுக்க வேணாம். அவ கொஞ்ச நாள் ஓய்வெடுத்துட்டு மறுபடி நம்மகாலேஜ்ல படிக்கட்டும் சார்.”

பிரின்சிபால் தன் நெற்றியைத் தடவியபடி யோசித்தார்.

“அதே மாதிரி ஆஷாவோட பேரண்ட்சுக்கு தகவல் தெரிவிக்கணுமா, வேணாமாங்கற முடிவை ஆஷா எடுத்துக்கட்டும் சார். நிர்வாகத்திலேர்ந்து லெட்டர் எதுவும் போக வேணாம். எப்படி காலேஜ்ல அசம்பாவிதம் எதுவும் நடந்துடக்கூடாதுன்னு தீபக் மேல் ஆக்ஷன் எடுக்கத் தயங்கறிங்களோ...அதே மாதிரி அவங்க குடும்பத்துல எந்த அசம்பாவிதமும் நடந்துடக் கூடாதுன்னுதான் நாங்க இவ்வளவு தூரம் கேக்கறோம்.”

பிரின்சிபால் தன் கண்ணாடியைத் துடைத்து அணிந்து கொண்டு, “ஆல்ரைட் நான் ஆஷாமேல எந்த ஆக்ஷனும் எடுக்கலை. இது இரக்கத்தினால எடுத்த முடிவு இல்லை. பாரபட்சம் இல்லாம நடந்துக்க முடியாத சூழ்நிலையில எடுத்த முடிவு” என்றார்.

“எப்படி இருந்தாலும் தேங்க்ஸ் சார்” என்றான் சத்யா.

ஃ ஃ ஃ

தலையணையைத் தன் மடியில் வைத்து அதன்மேல் கைகளை ஊன்றியபடி கட்டிலில் அமர்ந்திருந்தாள்



ஆஷா அவள் முகம் வெளிறியிருந்தது. உதடுகள் உலர்ந்திருந்தன. ஆஸ்பிடல் ஆயா டாய்லெட் அறையைச் சுத்தப் படுத்திவிட்டுப் போகும்போது நின்று, “ஏம்மா, யார் யாரோ வந்து பார்த்துட்டுப் போறாங்க, உங்கப்பா, அம்மா வரலையா? அவங்களுக்கு தகவல் கொடுத்தாச்சா இல்லையா?” என்றாள்.

நாற்காலியில் அமர்ந்திருந்த சத்யா, “ஆயா, பேசாம உங்க வேலையைப் பார்த்துட்டுப் போங்க” என்றான்.

அவள் மோவாயை வெடுக்கொன்று தோளில் இடித்துக் கொண்டு போனாள்.

“காலேஜ்லேர்ந்து தகவல் கொடுத்திருக்காங்களா சத்யா?” என்றாள் ஆஷா.

“கொடுக்க இருந்தாங்க. நாங்க போய் பிரன்சிபாலைப் பார்த்துப்பேசி நிறுத்திட்டோம். உன்னைக் காலேஜ்லேர்ந்து டிஸ்மிஸ் பண்ண இருந்தார். அதையும் தடுத்துட்டோம்.”

ஆஷா தன் நகங்களைப் பார்த்துக் கொண்டாள்.

“அவங்க மேல தப்பில்லையே எப்படியும் இனிமே நான் மேற்கொண்டு படிக்கப் போறதில்லை. அவங்க டிஸ்மிஸ் செஞ்சா என்ன?”

“என்ன ஆஷா இது அசட்டுத்தனமாப் பேசறே? இது உனக்கு ஃபைனல் இயர். எதுக்கு படிப்பைப் பாதியில விடணும்?”

“வாழ்க்கையே நாசமாயிடுச்சி, இதில படிச்சி என்ன செய்யப் போறேன். என்னை ஏன் காப்பாத்தினாங்கன்னு தான் இப்பவும் கோபமா இருக்கு.”

“இப்போ உன் மனநிலை அப்படித் தான் நினைக்கச் சொல்லும். ஆனா தப்பும்மா. தற்கொலைங்கிறது பெரிய தப்பு! என்ன ஆயிடிச்சி இப்ப? என்ன பெரிசா தப்பு

பண்ணிட்டே? தீபக்கை நம்பினே. நேசிச்சே கல்யாணம் தான் பண்ணிக்கப் போறமேன்னு சுதந்திரமாப் பழகினே அவன் ஏமாத்திட்டான். நடந்திருக்கிறது ஒரு மகத்தான நம்பிக்கை மோசடி! இதை நடத்தினவனே கவலையில்லாம இருக்கிறப்ப ஏமாந்து போன பாவத்துக்காக நீ உயிரையே போக்கிக்க நினைக்கிறது அதிகம் இல்லையா ஆஷா?''

''பாதிப்பு எனக்குத்தானே சத்யா? என்னைத் தொடர்ந்து படிக்கச் சொல்றிங்களே, எப்படி தலை நிமிர்ந்து என்னால நம்ம காலேஜ்ல நடக்க முடியும்? எல்லாருக்கும் தெரியும் இப்போ. என்னைப் பார்க்கறப்ப பேசாம இருப்பாங்க. நான் கடந்து போனதும் நிச்சயம் என்னைப்பத்திப் பேசுவாங்க. சொல்லுங்க, பேசுவாங் களா மாட்டாங்களா?''

சில வினாடி அமைதியாய் இருந்து, ''பேசுவாங்க ஆஷா. உண்மைதான். எத்தனை நாளைக்குப் பேசு வாங்க? கொஞ்ச நாள்ல சகஜமாயிடும். அந்த கொஞ்ச நாள் நீ தைரியமா சமாளிச்சுதான் ஆகணும். இத பாரு, அதிர்ஷ்டமோ, துரதிர்ஷ்டமோ இந்த தற்கொலை முயற்சி காரணமா உன் கர்ப்பத்தைக்கலைக்க வேண்டியதா இருந்து கலைச்சிட்டாங்க. இப்ப உனக்கு மனசுல மட்டும்தான் தீபக்கோட ஞாபகங்கள் இருக்கு. மறந்துடு நடுவுல நடந்த எல்லாத்தையும் மறந்துடு.''

''அவ்வளவு சுலபமா சத்யா?''

''இல்லைதான். வேற வழி?''

''அந்த ராஸ்கல் எப்படியெல்லாம் பேசினான் தெரியுமா? கிறங்கிட்டேன். பேசிப் பேசி என்னை நம்ப வச்சி... கடைசில தர்ட் ரேட் வில்லன் மாதிரி உதறிட்டான் சத்யா. அவனோட சுயமுகம் புரியாமப் போச்சு. கார்ல அழைச்சிட்டுப் போனதும், பிரசண்ட்ஸ் கொடுத்ததும்,



எனக்காக உருகி உருகிப் பேசினதும் நடிப்புன்னு நான் சந்தேகப்படவேயில்லை.''

''ஆஷா, அவனை பிரின்சிபால் வரவழைச்சி எனக்கு முன்னாடிதான் விசாரிச்சார். அப்படியே பிளேட்டை மாத்திப் பேசறான். யாரோடவோ கெட்டுப் போயிட்டு வசதியான பையன்றதால அவன் மேல நீ பழி போட றியாம்.''

''சொல்வான் இன்னும் சொல்வான். இதையேதான் எங்கிட்டயும் சொன்னான். சத்தியமா சொல்றேன். திடீர்னு புத்தி மாறி 'என்னை மன்னிச்சிடு, வா, கல்யாணம் செய்துக்கலாம்' னு வந்து அவன் நின்னாக்கூட, 'போடா பொறுக்கி நாயே'ன்னு மூஞ்சில துப்புவேன்.''

''சரி, சரி. எமோஷ்னலாகாதே'' என்றான் சத்யா.

நர்ஸ் உள்ளே வந்து, ''சார், உங்களை டாக்டர் கூப்புடறார்'' என்று சொல்லி விட்டுப் போனாள்.

சத்யா நடந்து டாக்டர் அறைக்கு வந்தான். டாக்டர் முக்கால் வழுக்கையில் இருந்தார்.

''அந்த பேஷண்ட் ஆஷாவோட பேரண்ட்ஸ் வர்றாங் களா சார்?''

''இல்லை சார். அவங்களுக்கு தகவல் தெரிவிக்கிறதா இல்லை. ஏன்னா அவ அப்பா ஒரு ஹார்ட் பேஷண்ட். ஏதாச்சும் விபரீதமாகலாம்.''

''அந்தப் பொண்ணுக்கு இப்ப யார் பொறுப்பு?''

''ஏன் டாக்டர்? நான் பொறுப்புன்னு வெச்சுக்கங் களேன். என்ன விஷயம்? சொல்லுங்க டாக்டர்.''

டாக்டர் சற்றுத் தயங்கிவிட்டு ''வெல். அந்தப் பொண்ணோட பிளட்டை டெஸ்ட் செஞ்சிப் பார்த்ததில

ஒரு அதிர்ச்சியான மேட்டர் தெரிய வந்திருக்கு சார். அந்தப் பொண்ணு ப்ளட்ல ஹெச். ஐ. வி. கிருமி இருக்குது சார்'' என்றார்.

சத்யா அதிர்ந்து போய் எழுந்து விட்டான்.

## 17

என்றுமே ஒரு சிறந்த போரும் இல்லை. மோசமான அமைதியும் இல்லை.

—பெஞ்சமின் ஃப்ராங்க்ளின்

டாக்டர் சொன்ன செய்தியின் அர்த்தத்தை மூளை வாங்கிக் கொண்டாலும் மனது வாங்கிக்கொள்ள மறுத்தது.

''டாக்டர். ஆர் யு ஷ்யூர்?'' என்றான் சத்யா நம்ப விரும்பாமல்.

''இவ்வளவு பெரிய தகவலை சரியா உறுதி செய்துக் காம நான் சொல்ல மாட்டேன் சார். அந்தப் பொண்ணுக்கு ரத்தம் ஏத்த வேண்டியிருக்கலாம்னு நினைச்சுதான் சோதனை செய்யச்சொன்னேன். முதல் சாம்பிளை டெஸ்ட் செஞ்சி பார்த்துட்டு லேப்ல கொடுத்த ரிப்போர்ட்டை நானும் நம்பலை. மறுபடியும் ஒரு ப்ளட் சாம்ப்பிள் எடுத்து இதுக்குதுன்னு ஸ்பெஷலா இருக்கிற லேபரட்டரிக்கு அனுப்பி ரிசல்ட் வாங்கினேன். அவங்களும் அதை கன்ஃபர்ம் செஞ்சுட்டதுக்கப்புறம்தான் நான் உங்களைக் கூப்புட்டுப் பேசிட்டிருக்கேன். நீங்க படிச்சவர். பாருங்களேன், இந்த லேப் ரிப்போர்ட்சை!''

டாக்டர் தன் மேஜையில் இருந்த ஆஷாவின் ரத்தப் பரிசோதனை அறிக்கைகளை சத்யாவிடம் எடுத்துக் கொடுத்தார்.



நடுங்கும் விரல்களால் வாங்கிப் படித்தான் சத்யா. அவனுக்குத் தொண்டை அடைத்தது.

டாக்டர் கிரியின் எய்ட்ஸ் ஆராய்ச்சிப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்த காரணத்தால் அவனால் அந்தப் பரிசோதனை அறிக்கைகளைச் சுலப மாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

'ஆஷாவைத் தன் சந்தோஷத்திற்காகத் திட்டம் போட்டு வசப்படுத்திப் பயன்படுத்திக் கொண்டதோடு மட்டுமில்லாமல், இத்தனை பெரிய பாதிப்புக்கு உள்ளாக்கி யிருக்கிறானே அந்த ராஸ்கல்!' என்று ஆத்திரம் முழுவதும் தீபக் பக்கம் திரும்பியது.

கூடவே இன்னொரு சிந்தனையும் அவனுள் மோதியது.

இப்போது ஆஷாவின் ரத்தத்தில் எய்ட்ஸ் என்னும் மோசமான உடல் நிலை பாதிப்பை ஏற்படுத்தப் போகிற ஹெச். ஐ. வி. கிருமிகள் இருக்கின்றன என்றால், அதற்குக் காரண கர்த்தாவான தீபக்கும் அதே கிருமிகளால் பாதிக் கப்பட்டிருக்கிறான் என்றுதானே அர்த்தம்? அடப்பாவமே!

தீபக் தான் உடலளவில் இத்தனை பெரிய பாதிப்பில் இருக்கிறோம் என்பதை உணராமல் ஆஷாவை மாதிரி இன்னும் எத்தனையோ பெண்களிடம் தன் பாதிப்பைப் பரப்பிக் கொண்டு இருப்பானே. ஆஷாவைப்போல இன்னும் பல பெண்கள் பாதிக்கப்படுவார்களே.

அது பிறகு முதலில் ஆஷாவைப் பற்றித்தான் சிந்திக்க வேண்டும். தற்கொலைக்கு முயன்ற ஒருத்தியைப் பிழைக்க வைத்து, அவள் பட்ட அவமானத்தை எல்லோருக்கும் தெரியச் செய்து, இப்போது உன் உடலில் கொடிய கிருமி கள் உள்ளன என்றும் சொன்னால்... பாவம்! அவள் மனது எத்தனை பாடுபடும்?

ஏற்கனவே என்னை எதற்காகக் காப்பாற்றினீர்கள் என்று புலம்பிக் கொண்டிருக்கிறாள் அவள்! இந்தச் செய்தியை அவளிடம் தெரிவித்தால் நிச்சயமாக மீண்டும் அவள் தற்கொலை செய்து கொள்ள முயற்சிப்பாளே...

கண்கலங்கி அமர்ந்திருந்த சத்யாவின் தோளைத் தொட்டார் அந்த டாக்டர்,

"இது நிச்சயமா அதிர்ச்சியான விஷயம்தான் மிஸ்டர் சத்யா. மனம் நொந்துபோன நிலையில் இருக்கிற அந்தப் பொண்ணுகிட்ட இப்போ இதைச் சொல்லவே கூடாது."

"யெஸ் டாக்டர்."

"ஆனா அவள்கிட்டே சொல்லாம மறைக்கிறதும் தப்பு. அந்தப் பொண்ணு மனசளவில் கொஞ்சம் தேறினதும் கண்டிப்பா எடுத்துச் சொல்லணும். இந்தக் கிருமிகள் வேகமா பரவாம இருக்கிறதுக்கு என்னென்ன வழிமுறைகள் மேற்கொள்ளணும்னு தெரியப்படுத்த வேண்டியது நம்ம கடமை.

ஒரு நோயாளிக்கு அவரோட நோயைத் தெரிவிக்காம இருக்கக்கூடாது. ஹெச்.ஐ.வி. பாஸிடிவ் உள்ள பேஷண்ட்ஸ் உலகையே வெறுத்துட்டு தாடி வளர்த்து. நிலைகுத்தின பார்வையோட வாழணும்னு அவசியமில்லை. அவங்களுக்கு நிறைய கவுன்சலிங் தேவை. அவங்க நம்பிக்கைகள் வளர்க்கப்படணும்."

"தெரியும் டாக்டர். எனக்கு இந்த எய்ட்ஸ் பத்தியும், ஹெச்.ஐ.வி. பாசிடிவ் பத்தியும் முழு விபரங்களும் தெரியும். நானே சில பேஷண்ட்சுக்கு கவுன்சலிங் பண்ணிருக்கேன்."

"அட! எப்படித் தெரியும்?"

"டாக்டர் கிரி இருக்காரில்லையா, அவர் ஒரு ஃபவுண்டேஷன் அமைச்சி பாஸிடிவ் பேஷண்ட்சுக்கு உதவிகள் பண்ணிட்டிருக்காரு. பல கிராமங்களுக்குப் போய் லெக்சர் கொடுத்து, தடுப்பு முறைகளை எடுத்துச் சொல்லி சர்வேக்காக ப்ளட் சாம்ப்பிள்ஸ் எடுத்துட்டு வருவாரு. அவரோட பணிகள்ல நான் அப்பப்ப உதவறதுண்டு. அதனால எனக்கு எல்லா விபரங்களும் தெரியும்."



"அப்போ ரொம்ப நல்லதாப் போச்சு. யு வில் டேக் கேர் ஆஃப் திஸ் கர்ள் இல்லையா?"

"நிச்சயமா."

"நாளைக்கு டிஸ்சார்ஜ் பண்ணிடறேன். ஒரு வாரம் கழிச்சி நீங்க டாக்டர் கிரிகிட்ட அழைச்சுட்டுப் போங்க. அவர் எப்படிப்பட்ட நபரையும் உற்சாகப்படுத்தறவர்னு கேள்விப்பட்டிருக்கேன். அப்படியா?"

"ஆமாம் சார். தனக்கு ஹெச்.ஐ.வி. பாசிடிவ்னு தெரிஞ்சி தற்கொலைக்குத் துணிஞ்ச ஒருத்தரைக் கன்வின்ஸ் செஞ்சப்போ நான் பக்கத்தில இருந்தேன். ஒரே மாசத்தில அவரோட பயம், கவலை எல்லாம் போயி, தனக்கு இப்படி ஒரு பாதிப்பு இருக்குன்றதையே மறந்துட்டு படு உற்சாகமா இருக்கார் அவர்."

"யு ஆர் ரைட் சத்யா. இந்தக் கிருமி உடம்புல செய்யற பாதிப்பை விட மனசுல செய்யற பாதிப்புதான் அதிகம். என்னமோ இந்த ஒரு கிருமிக்கு மட்டும்தான் மருந்து இல்லைன்னு நினைச்சிட்டிருக்காங்க. இன்னும்எத்தனையோ வியாதிகளுக்குச் சரியான மருந்துகள் இல்லை தெரியுமா? கேன்சரை இன்னும் நாம ஜெயிக்கலையே. எத்தனையோ தோல் வியாதிகளுக்கு வைத்தியம் கிடையாது. மருத்துவ ரீதியா ஹெச். ஐ. வி. கிருமி உள்ளே வந்தப்புறம் எட்டுலேர்ந்து பத்து வருஷத்தில எய்ட்ஸ் நிலைமைக்கு உடல் தள்ளப்படும்னு சொன்னாலும், சரியான டயட், எக்ஸர்சைஸ், யோகான்னு வாழ்க்கை முறையை மாத்தி அமைச்சுக்கிட்டா பதினைஞ்சி வருஷத்துக்கு மேல எய்ட்ஸ் நிலமையைத் தள்ளிப்போட முடியும்."

"அமெரிக்கால ஒரு லேடி பாதிப்புலேர்ந்து பதினெட்டு வருஷம் கழிச்சும் இன்னும் நல்லபடியா இருக்காங்க."

"பார்த்தீங்களா? இதையெல்லாம் பக்குவமா எடுத்துச் சொல்லி அந்தப் பொண்ணு மனசைத் தேத்த வேண்டிய பொறுப்பு உங்களோடது தான். அந்தப் பொண்ணோட வீட்டுக்கு..."

"அவ தற்கொலை முயற்சி மேற்கொண்டதையே தெரிவிக்கக் கூடாதுன்னு நினைச்சிட்டிருக்கிறேன். இதை எப்படி டாக்டர் தெரிவிக்க முடியும்? இதை நான் டைஜஸ்ட் பண்ணிக்கவே இன்னும் கஷ்டமா இருக்கு. அதெல்லாம் நான் பார்த்துக்கறேன் டாக்டர்."

"ஒ.கே." என்றார் டாக்டர்.

சத்யா சிந்தனையோடு எழுந்து கொண்டான்.

"அப்புறம் மிஸ்டர் சத்யா..."

"சொல்லுங்க டாக்டர்."

"ஆஷாவுக்கு இந்தப் பாதிப்பை ஏற்படுத்தினது யாருன்னு உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும் டாக்டர். தீபக்னு எங்க காலேஜ் ஸ்டூடண்ட்."

"அப்போ தீபக்கும் தன்னைப் பரிசோதனை பண்ணிக்க வேண்டியது அவசியம் சத்யா."

"ஆமாம் டாக்டர் அவனோட நன்மைக்காக இல்லைன்னாலும், அவனால மேற்கொண்டு பல பெண்கள் பாதிக்கப் படக் கூடாது. அதனால அவனுக்கு இந்தத் தகவலைத் தெரிவிச்சே ஆகணும். அந்தப் பொறுப்பையும் நானே எடுத்துக்கறேன் டாக்டர்."



டாக்டர் அறையிலிருந்து வெளியே வந்ததும் தளர்வாக நடந்தான் சத்யா. ஆஷாவின் அறைக்குள் இப்போது நுழைய விருப்பம் இல்லை.

ஆஸ்பத்திரியின் வாசலில் இருந்த மர நீழலில் வந்து நின்று கொண்டான். அங்கே நோயாளிகளைப் பார்க்க வந்தவர்கள் சிலர் நின்று சன்னக் குரல்களில் பேசிக் கொண்டிருந்தார்கள். தூரத்துக் குப்பைத் தொட்டியில் எச்சில் இலைகள் வழிந்தன. இரண்டு நாய்கள் அவற்றின் மேல் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தன. ஒரு ஆம்புலன்ஸ் வந்து நின்று, ரத்தம் சொட்டச் சொட்ட ஒரு ஆசாமியை நான்கைந்து பேர் கூக்குரல்களுடன் தூக்கிக் கொண்டு ஓடினார்கள். ஆக்ஸிடெண்ட். ஸ்பாட்லயே காலி. சும்மா ஒரு நம்பிக்கைல தூக்கிட்டு வந்திருக்காங்க என்று யாரோ யாரிடமோ சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

சத்யா ஒரு பெருமூச்சை வெளியேற்றினான்.

இதோ இந்த மனிதனுக்கு மரணம் முன்னறிவிப்பு எதுவும் கொடுக்காமலேயே வந்து விட்டது. இது ஒரு வகையில் நிம்மதியோ! இத்தனை வருடம் வரை உனக்கு வாழ்க்கை என்று எந்த கியாரண்டியும் யாருக்கும் இல்லை என்றாலும் எல்லோருக்குமே ரொம்ப காலம் நாம வாழப் போகிறோம் என்பது நம்பிக்கை.

அந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் வாழ்க்கை நகர்கிறது. ஆனால் இன்னும் பத்து வருடம்தான் உனக்கு வாழ்க்கை என்று மரணத்தேதியைத் தள்ளி அறிவித்தாலும், மனம் பலவீனப்பட்டு விடுகிறது. பத்து வருடங்கள் என்பது அப்போது பத்தே நிமிடங்களில் கழிந்து விடுவதுபோல ஒரு பிரமை ஏற்படுகிறது.

ஆஷாவுக்குப் போயா இப்படி இடி மாதிரி பிரச்சினை ஏன் இறங்க வேண்டும்? இன்றைய மனநிலையில் இருந்து

அவளைத் தேற்றவே சிரமப்பட வேண்டும். பிறகு அவளுக்கு இந்தப் பேரதிர்ச்சியைத் தந்து அதிலிருந்தும் தேற்றுவ தென்றால்... எப்படி? எப்படி?

அசாத்திய மனோதிடம் வேண்டும். அது அவளிடம் இருக்கிறதா? என் தலைமேல் இத்தனை பெரிய பொறுப்பு கள். அவற்றை நான் எப்படிச் செயல்படுத்தப் போகிறேன்?

முதலில்...ரகசியம் காக்க வேண்டும். இது மிகப் பெரிய ரகசியம். ஆஷாவின் அந்தரங்க ரகசியம். இது வெளியே பரவினால் அவள் உயிருக்கு நல்லதில்லை. தெளிவாக யோசித்து சில முடிவுகள் எடுக்க வேண்டும்.

நாளை டிஸ்சார்ஜ் செய்ததும் ஆஷாவை காலேஜ் ஹாஸ்டலுக்கு அழைத்துச் செல்வதா? அதை அவள் விரும்ப வில்லை. எல்லோரும் துக்கம் விசாரிப்பார்கள். உடனடி யாக அவளுக்கு சூழ்நிலை மாற்றம் தேவை என்ன செய்யலாம்.

சட்டென்று சத்யாவுக்கு திவ்யாவும், அவளின் அரண்மனை போன்ற பெரிய பங்களாவும் நினைவுக்கு வந்தன. சகல வசதிகளும் கொண்ட அந்த பங்களாவில் ஆஷா சில தினங்கள் ஓய்வெடுத்தால் அவள் மனநிலையில் மாற்றம் வரும்.

ஆனால்...அறிமுகமில்லாத ஒரு பெண்ணை தன் வீட்டில் தங்க வைக்க திவ்யா சம்மதித்தாலும், அவள் அப்பா விரும்ப வேண்டுமே.

"என்ன சத்யா, இங்க நிக்கிறீங்க?" என்று அவனிடம் வந்தாள் ஆஷா. "போரடிச்சுது. வாக் போறேன்னு "நர்ஸ்கிட்ட சொல்லிட்டு வந்தேன். ஆமா. ஏன் கண் எல்லாம் கலங்கியிருக்கு? டாக்டர் என்ன சொன்னார் சத்யா?" என்றாள்.

# 18

**நம்பிக்கைகளுடன் வாழ்பவன் இசை இல்லாம லேயே நடனமாடுவான்.**

**—ஜார்ஜ் ஹெர்பெர்ட்**

தன் எதிரில் நின்ற ஆஷாவைப் பார்த்தான் சத்யா.

தன் அம்மா அடிக்கடி சொல்லும் ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது.

"உனக்கு ஒரு தங்கச்சி இருந்திருக்கணும். பாவம்! அந்தப் பிஞ்சு உயிருக்குக் கொடுத்து வைக்கலை. பொறந்து மூணு மாசம் ஜோரா சிரிச்சிட்டிருந்தா. எவ்வளவு குண்டு தெரியுமா? தூக்கவே கஷ்டமா இருக்கும் நிறைய முடி, பெரிய கண்ணு, ஒரு ரூபா அகலத்துக்கு திருஷ்டிப் பொட்டு வைப்பேன்—கண்ணு பட்டுடக் கூடாதுன்னு ஆனாலும் பட்டுடுச்சி போலிருக்கு. ஜன்னி வந்து அந்த சின்ன சிசு கண்ணை மூடிருச்சுப்பா."

அந்த தங்கை பாப்பா அப்போது உயிர் தப்பியிருந் தால் இப்படித்தான் ஆஷா உயரத்திற்கு வளர்ந்து நிற்பாளோ? சத்யாவுக்குள் அமிலம் சுரந்தது. உணர்ச்சி களின் அதீத மோதல்களின்போது கண்கள் காட்டிக் கொடுக்கும் சாதனங்கள் ஆகிவிடுகின்றன.

"ஏன் சத்யா. கண் கலங்கறிங்க?"

"உன்னை நினைச்சிதாம்மா. 'திமிர் பிடிச்சி எல்லை மீறிப் பழகினதாலதான் இந்தப் பாதிப்பு. அனுபவிக்க வேண்டியதுதான்'னு பலபேர் பொறுப்பில்லாம சொல்ற மாதிரி என்னால நினைக்க முடியலை ஆஷா. நடந்து முடிஞ்சதைக் குத்திக் காட்டறதில என்னைக்குமே எனக்கு சம்மதம் இல்லை. எனக்கு உன் நிலைமையை நினைக்

கூறப்ப ஏற்படற பரிதாபத்தைச் சொல்லி உன்னைப் பலவீனப்படுத்தறது தப்புன்னு நல்லாத் தெரிஞ்சாலும்...''

அவனுக்குத் தொண்டை அடைக்க வேறு பக்கம் திரும்பிக் கொண்டான்.

''சத்யா, இப்ப என் மனசுல என்ன நினைக்கிறானோ அதை அப்படியே சொல்லட்டுமா? எங்கம்மாகிட்ட நான் அடிக்கடி 'ஏம்மா பெண் குழந்தைங்களாவே பெத்துத் தொலைச்சே?'' எனக்கு ஒரு அண்ணன் இருந்திருந்தா எவ்வளவு நல்லா இருந்திருக்கும்'னு கேப்பேன் உண்மையிலேயே எனக்கு ஒரு அண்ணன் இருந்திருந்தாக்கூட இந்த அளவுக்குப் பெரிய மனசோடா, கரிசனத்தோட பொறுப்போட நடந்துக்குமான்னு தெரியலை சத்யா.''

அவளும் உணர்ச்சி வசப்பட... சத்யா சுதாரித்துக் கொண்டு, ''சரி, வா, ரூமுக்குப் போலாம்'' என்றான்.

வார்டு அறைக்குள் வந்ததும் ஆஷா மறுபடி கேட்டாள். டாக்டர் என்ன சொன்னார் சத்யா?''

''நாளைக்குக் காலைல டிஸ்சார்ஜ் பண்றாராம்.''

''அதான். சொன்னாரா?''

''ஆமாம்.''

''சத்யா, நாளைக்கு டிஸ்சார்ஜ் ஆகி நான் ஹாஸ்டலுக்குப் போக விரும்பலை. என்னோட தர்ம சங்கடம் உங்களுக்குப் புரியும்னு நினைக்கிறேன்.''

''புரியுதும்மா.''

''இங்க மெட்ராஸ்ல எனக்கு சொந்தக்காரங்க யாரும் இல்லை. ஏதாச்சும் பிரைவேட் லேடீஸ் ஹாஸ்டல்ல ரூம் ஏற்பாடு பண்ண முடியுமா?''

''நான் வேற ஒரு யோசனை வெச்சிருக்கேன். காலைல உன்னை டிஸ் சார்ஜ் பண்றதுக்குள்ளே ஒரு முடிவுக்கு வந்துடலாம். நீ கொஞ்சம் ரெஸ்ட் எடு ஆஷா. நான் வெளில போய்ட்டு வந்துடறேன்.''



''ஒரு நிமிஷம் இருங்க சத்யா.''

''என்னம்மா?''

ஆஷா தன் கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலியைக் கழற்றினாள். அவனிடம் நீட்டினாள்.

''என்ன இது?''

''சிஸ்டர் வந்து ஹாஸ்பிடல் பில் கொடுத்துட்டுப் போனாங்க. மூவாயிரத்திச் சொச்சம். என்னோட ஹாஸ்டல் ஃபிரண்ட்ஸ் எல்லாரும் ஆளுக்குக் கொஞ்சமாப் போட்டு செட்டில் பண்றதாச் சொன்னாங்க. எனக்கு அது பிடிக்கலைங்க சத்யா எனக்காகத் துடிச்சிப் போய் செயல்பட்டு என் உயிரைக் காப்பாத்தினதே பெரிய விஷயம். அவங்களுக்கு நான் சுமையா இருக்க விரும்பலை. அதனால இதை வித்துடுங்க, ப்ளீஸ் இது ரெண்டு பவுன். ஒரு 'ஏழாயிரத்துக்காவது விக்க முடியும்னு நினைக்கிறேன்.''

அதை வாங்காமல் யோசனையில் ஆழ்ந்தான் சத்யா.

''என்ன யோசனை சத்யா?''

''என்னோட சேமிப்புக் கணக்குல பேங்க்ல எவ்வளவு பணம் இருக்குன்னு யோசிச்சேன். தேத்திட முடியும்னு நினைக்கிறேன். தங்க நகையை விக்க வேணாம்மா. கழுத்துல போடு. நான் அட்ஜஸ்ட் பண்ணிக்கறேன்.''

''ப்ளீஸ் சத்யா. நீங்க காட்ற அன்புக்கும் ஆதரவுக்கும் பதிலா நான் என்ன செய்யப் போறேன்னு புரியாம திணறிட்டு இருக்கேன். பண உதவி வேற செஞ்சி தயவு செஞ்சி என்னைக் கடனாளியாக்காதிங்க. எனக்கு கில்ட்டியா இருக்கும்.''

"இதுல என்ன இருக்கும்மா? அவசரத்துக்கு ஒரு உதவி தானே?"

"கரெக்ட்தான். உங்ககிட்ட பணம் தாலாபக்கமும் கொட்டிக் கிடந்தா நீங்க உதவி செய்றதும் சரி, நான் ஏத்து கறதும் சரி. நீங்க பணம் சம்பாரிக்க எவ்வளவு கஷ்டப் படறிங்கன்னு எனக்குத் தெரியும் சத்யா. நோ ஆர்க்யு மெண்ட்ஸ். இந்தாங்க."

தங்கச் சங்கிலியை வாங்கிக் கொண்டான்-சத்யா.

"ஆஸ்பிடல் பில் எங்கே?"

எடுத்துக் கொடுத்தாள்.

அந்தச் செயினைப் பார்த்தான். அதன் டாலரில் ஆங்கிலத்தில் அவள் பெயர் இருந்தது.

"நான் வயசுக்கு வந்தப்போ எங்கம்மா எனக்குப் போட்டது இது."

"ஒண்ணு செய்யறேன் ஆஷா. இதை வேணும்னா நான் அடகு வெச்சி பணம் வாங்கித் தர்றேனே. சென்ட்டி மெண்ட் வேல்யு வேற இதில் இருக்கு. அப்பத்தான் இதை மீட்கணும்னு ஒரு சின்ன துடிப்பு உங்களுக்கு இருக்கும். என்ன?"

"சரி" என்றாள் ஆஷா.

ஹாஸ்டலை விட்டு நடந்த சத்யா ஒரு பொதுத் தொலைபேசியில் இருந்து திவ்யாவைத் தொடர்பு கொண் டான்.

"ஹலோ சத்யா, எங்க நாலஞ்சு நாளா உங்க போனே இல்லை! என்மேல எதாச்சும் கோபமா?"

"சேச்சே! கோபப்படற மாதிரி என்ன செஞ்சிங்க நீங்க?"



"உங்களுக்குத் தெரியாம உங்களை போட்டோ எடுத்து கையில கொடுத்ததில என்னடா இவ ரொம்ப சுதந்திரம் எடுத்துக்கறாளேன்னு கோபம் வந்துடுச்சோன்னு நினைச்சேன்."

"நோ. நோ. உண்மையைச் சொன்னா சிலபேர் உரிமை பாராட்டினா எரிச்சலா இருக்கும். சிலபேர் உரிமை பாராட்டினா இன்னும் உரிமை எடுத்துக்கக் கூடாதான்னு ஏக்கமா இருக்கும். எனக்கு எரிச்சலும் ஏற்படலை. ஏக்கமும் ஏற்படலை."

"என்னதான் ஏற்பட்டுச்சி?"

"கேள்விகள்."

"என்ன கேள்விகள்?"

"விபரமா நேர்ல பேசலாமே."

"ஷ்யூர், எங்கே? எப்போ?"

"இப்போ! உடனே! முடியுமா?"

"என்ன சத்யா அவ்வளவு அர்ஜென்ட்?"

"எங்க காலேஜ் பொண்ணு ஒருத்திக்கு பெரிசா ஒரு ப்ராப்ளம் ஏற்பட்டுடுச்சி திவ்யா அவ சம்பந்தமாதான் நாலு நாளா கொஞ்சம் அலைச்சல்."

"உங்க காலேஜ்ல படிக்கிற எல்லாப் பொண்ணுங் களுக்கும் நீங்கதான் கார்டியனா?"

"உதவி தேவைப்படற ஒரு பொண்ணுக்கு உதவினா தப்பா? அதுக்கு இப்படி கிண்டல் செய்யணுமா?"

"இப்படி கிண்டல் செய்றதும் உரிமை எடுத்துக்கறதா வெச்சுக்கங்களேன். இப்ப எரிச்சல் வருதா இல்லை ஏக்கம் வருதா?"

"ரெண்டும் இல்லை. மறுபடி கேள்விகள்தான்."

"சரி என்ன அந்தக் கேள்விகள்னு நேர்ல தெரிஞ்சுக் கறேன். எங்கே சந்திக்கலாம் சத்யா?"

"நீங்களே சொல்லுங்க திவ்யா கொஞ்ச நேரம் பேசிட்டு ரெண்டு பேருமா டாக்டர் கிரியை சந்திக்கலாம்."

"சரி, இப்ப நீங்க எங்கேர்ந்து பேசறிங்க?"

"வள்ளுவர் கோட்டத்துக்குப் பக்கத்திலேர்ந்து."

"சரி. வள்ளுவர் கோட்டம் வாசல்ல வெய்ட் பண்ணுங்க. சொல்றேன். கிவ் மி ஃபிஃப்டீன் மினிட்ஸ் ப்ளீஸ்."

"சரி. பதட்டமா காரை ஓட்ட வேணாம். அஞ்சு நிமிஷம்லேட்டானாலும் பரவாயில்லை நிதானமா வாங்க!"

"ரைட்? இதுக்குப் பேர் என்ன?"

"எதுக்கு?"

"இப்படி அட்வைஸ் பண்றதுக்கு?"

"ஒரு அக்கறைதான்."

"வேற வார்த்தைகள்ல... உரிமை எடுத்துக்கறதுன்னும் இதைச் சொல்லலாம் இல்லையா சத்யா? இதுக்கு என் ரியாக்ஷ்ன் எரிச்சலா, ஏக்கமா, ரெண்டும் இல்லையான்னு கெஸ் பண்ணி வைங்க. நேர்ல பேசலாம்."

போனை வைத்ததும் நெஞ்சம் படபடப்பாக இருந்தது

ஆஷாவைப் பற்றிய அதிர்ச்சியான செய்திகள் உள்ளே அலைந்து கொண்டிருந்தாலும், அதையும் மீறி திவ்யாவிடம் பேசியதில் ஒரு இனிய உணர்வு படர்ந்தது.

இப்போதெல்லாம் அவளின் உரையாடல்களில் அப் பட்டமாக அன்பும், குறும்பும் தெரிகின்றன. ஆனால் பயமாக இருந்தது அவனுக்கு ஒரு நல்ல நட்பை தப்பாக



எடை போட்டுக் கொண்டு குழப்பக் கூடாது. ஆனால் இது நட்பு உரையாடலா? இல்லையே அதைத் தாண்டி... ஏதோ ஒரு ஈர்ப்பு இருக்கிறதே.

வேண்டாம். அநாவசியப் பேராசைகளும், மனக் கோட்டைகளும் எண்ணங்களை அலைக்கழித்து, சிதறடித்து நிம்மதியைக் கலைத்துவிடும். அவளின் நிலையே வேறு. என் நிலையே வேறு. விருப்பப்படுவதிலும் ஒரு நியாயம் இருக்க வேண்டும்.

அவள் நினைவால், குரலால் மனம் சஞ்சலமடைகிற தென்பதற்காக, அதே எண்ணங்களை மேலும் வளர்த்துக் கொண்டு உள்ளுக்குள் குளிர் காய்வது... வேண்டாத வேலை அதிகப்பிரசங்கித்தனம்.

தனக்குள்ளே தோன்றும் திவ்யா பற்றிய இனிய உணர்வுகளை அவன் என்னதான் அழுத்தமான வாதங் களால் சமாதானப்படுத்திக் கலைக்கப் பார்த்தாலும், எல்லாவற்றையும் மீறி தண்ணீரின் மேல் நிலையில் மிதக் கும் ரப்பர் பந்தைப் போல்... அவளைப் பற்றிய தித்திப் பான உணர்வுதான் சத்யா மனதில் மேலோங்கி நின்றது.

"வாங்க சத்யா. ஏறிக்கங்க" என்ற திவ்யாவின் குரலால் கலைந்த சத்யா. முன் இருக்கையிலா, பின் இருக் கையிலா என்று ஒரு விநாடி தயங்க...

திவ்யா காரின் முன்புற கதவைத் திறந்து விட்டாள். அவன் அமர்ந்து கதவு மூடியதும் புறப்பட்டாள்.

"ஒரு முக்கியமான விஷயம் இருக்குங்க சத்யா. உடனே சொல்லட்டுமா? கொஞ்ச நேரம் கழிச்சு சொல்லட்டுமா?" என்றாள் திவ்யா.

அவள் சேலையின் தலைப்பு காற்றில் லேசாக அவன் புஜத்தில் உரசிக் கொண்டிருந்தது.

## 19

ஒன்றுமில்லாததற்கெல்லாம் வீம்பாய் நிற்பவர்கள் எதற்கு வேண்டுமானாலும் வீழ்ந்து விடுவார்கள்.

—அலெக்ஸ் ஹாமில்டன்

கீர் வழுக்கலாய் ஓடிக் கொண்டிருந்தது.

திவ்யாவின் அருகாமை சத்யாவுக்குள் ஒரு பரபரப்பைத் தோற்றுவித்திருந்தது. மனம் ஒரு நிலையில் இல்லை.

'ஒரு முக்கியமான விஷயம் இருக்குங்க சத்யா. உடனே சொல்லட்டுமா. கொஞ்ச நேரம் கழிச்சு சொல்லட்டுமா?'—என்ற அவளின் கேள்வி அவனுக்குள் என்னென்னவோ எண்ணங்களை ஏற்படுத்தின.

அவனுடைய இயல்பான நிலை காணாமல் போயிற்று. உடல் தேவையில்லாமல் நெளிந்தது.

"என்ன திவ்யா? சொல்லுங்க" என்றான்.

"முதல்ல நீங்க சொல்லுங்க. உங்க காலேஜ் பொண்ணுக்கு என்ன ப்ராப்ளம்?"

இப்போது ஆஷாவைப்பற்றிப் பேசுவதைக் காட்டிலும், அவள் சொல்ல வந்ததென்ன என்று அறிந்து கொள்ளும் ஆர்வம்தான் அதிகம் மேலிட்டது. மனதில் சோகத்தின் அழுத்தம் குறைந்து போய் திவ்யாவைப் பற்றின சிந்தனை தான் சிறகடித்தது.

"அது அத்தனை அவசரம் இல்லை, திவ்யா, நீங்க சொல்லுங்க."

"மகாகவி பாரதியார் பத்தி ஒரு வீடியோ டாகுமெண்ட்ரி பண்ணப் போறேன் சத்யா. இதுபத்தி ரொம்ப



நாளா தகவல்களை சேகரிச்சு வச்சிருக்கேன். 'இதெல்லாம் எதுக்கு வெட்டித்தனமான வேலை''ன்னு எங்கப்பாவும், அம்மாவும் டிஸ்கரேஜ் பண்ணிட்டே இருந்தாங்க. நான் தொடர்ந்து போராடி நேத்துதான் அப்பாகிட்ட பர்மிஷன் வாங்கினேன். இதுக்காக அஞ்சு லட்சம் ரூபா அப்பா எனக்கு ஒதுக்கிக் கொடுத்திருக்கார்."

"வெரிகுட், ரொம்ப சந்தோஷங்க திவ்யா. நல்ல முயற்சி. இப்ப உள்ள ஜெனரேஷனுக்கு இதெல்லாம் ரொம்ப முக்கியங்க, ரொம்ப நல்லா, சிறப்பா செய்யுங்க."

"பார்த்திங்களா, கழண்டுக்கறிங்களே. செய்யுங்கன்னு சொன்னா எப்படி? செய்வோம்னு சொல்லக் கூடாதா?"

"யு மீன்..."

"இந்த வொர்க்ல ஸ்கிரிப்ட்டிஸ்கஷன்லேர்ந்து, ஷூட்டிங் முடிச்சு மியூசிக் போட்டு ஃபைனல் கேசட் ரெடி பண்ற வரைக்கும் எனக்கு வலது கரமா நீங்க முழு ஒத்துழைப்பு தரணும் சத்யா."

"கண்டிப்பா செய்றேன். இப்படி ஒரு அருமையான ப்ராஜெக்ட்ல ஈடுபடறதுக்கே கொடுத்து வெச்சிருக்கணுங்க."

"அதெல்லாம் சும்மா, உங்களுக்கு சமுதாயம் பத்தி நிஜமான அக்கறை இருக்குங்க சத்யா. தெளிவான அக்கறை இருக்குங்க சத்யா. தெளிவான பார்வை இருக்கு எதிலயும். நீங்க இதில எனக்கு உதவி பண்றதுக்கு நான்தான் கொடுத்து வெச்சிருக்கணும்."

கார் இப்போது ஒரு ஐஸ்கிரீம் கடை வாசலில் நின்றது.

"வாங்க சத்யா, எதாச்சும் கூலா குடிக்கலாம்."

இருவரும் கடைக்குள் வந்து ஒரு மேஜை தேர்வு செய்து அமர்ந்து கொண்டார்கள்.

''அங்கே ரகசியமாகக் கசிந்து கொண்டிருந்த இசையைக் கேட்ட திவ்யா, ''இது மியூசிச் ஆஃப் தி ரிவர்ஸ் கேசட் சத்யா, நீங்க கேட்டிருக்கிங்களா??'

''இல்லை.''

''எங்கிட்ட இருக்கு தர்றேன். கேட்டுப் பாருங்க, அற்புதமா இருக்கும். ராத்திரில தனியா படுத்துக்கிட்டுக் கேக்கணும். நம்மளை எங்கயோ வேற ஒரு உலகத்துக்கு அழைச்சுக்கிட்டுப் போகும்.''

''வேற பிரச்சினைகள் இல்லாதவங்களாலதான் இந்த மாதிரி ரசனைகளை வளர்த்துக்க முடியுங்கறது என் அபிப்பிராயம்.''

''நியாயம்தான் நாலு நாளா தண்ணி வரல்லையேன்னு அதிகாலைல எந்திரிச்சு வரப்போற தண்ணி லாரிக்காக காத்துக்கிட்டிருக்கிற கூட்டத்தில் குடத்தை வெச்சிட்டு தவிப்போட காத்துக்கிட்டிருக்கிற கூட்டத்துக்கிட்டப் போய் மியூசிக் கேளுங்கம்மான்னு சொன்னா உதைக்க வருவாங்க அவங்களுக்கு வேண்டியது தண்ணி? இசை இல்லை. எனக்குத் தெரியும்.''

''திவ்யா, நம்ம நாட்ல பெண்களோட நேரம் எல்லாம் எத்தனை வகையான விஷயங்கள்ல வீணாகுது தெரியுமா? தண்ணிக்காக காத்துக்கிட்டிருக்கிறது... ரேஷன் கடையில காத்துக்கிட்டிருக்கிறது... கவர்ன்மெண்ட் ஹாஸ்பிடல்ல காத்துக்கிட்டிருக்கிறது...''

''சினிமா தியேட்டர்ல காத்துக்கிட்டிருக்கிறதை விட்டுட்டிங்களே.''

''அது இப்ப குறைஞ்சி போச்சுங்கறதுதான் உண்மை. ஒரு காலகட்டத்தில் பெண்கள்தான் சினிமாவோட வெற்றிக்குக் காரணமா இருந்தாங்க. இப்போ டெலிவிஷன் வீட்டுக்குள்ளே வந்தப்புறம் மிடில் கிளாஸ் பெண்கள்



சினிமாவுக்கு அவங்க புருஷங்களை தொந்தரவு பண்றதில்லை. இன்னைக்கு இண்டஸ்ட்ரி சர்வைவ் பண்றது ஸ்கூல், காலேஜ் ஸ்டுடன்ட்சை நம்பித்தான். எல்லாப் படங்களும் அவங்க ரசனையை மனசில வெச்சுக்கிட்டுதான் பண்றாங்க.''

மேஜைக்கு வெய்ட்டர் வர, குளிர்பானங்கள் ஆர்டர் செய்தார்கள். ஒரு அமைதி இடைவெளி ஏற்பட்டது.

''உங்க காலேஜ் பொண்ணு பத்தி சொல்றேன்னிங்க சத்யா.''

''அதுக்கு முன்னாடி உங்களை சில கேள்விகள் கேக்கணும்.''

''கேளுங்க.''

''ஒரு பொண்ணும், ஆணும் நெருங்கி நேசமா பழகறாங்க, கல்யாணம் பண்ணிக்கிறதா இருக்காங்க. அந்த நம்பிக்கைல அவங்களுக்குள்ளே உடல் ரீதியான தொடர்பும் ஏற்பட்டுடுது. இதைப் பத்தி உங்க கருத்து என்ன திவ்யா?''

''கல்யாணத்துக்கு முன்னாடி உடலுங்வுறக்றது இப்பல்லாம் மேலை நாடுகள்ல குறைஞ்சிட்டிருக்கு. ஆனா இப்ப நம்ம நாட்ல அதிகரிச்சுட்டு இருக்கு. என்னைக் கேட்டா... அது தப்புதான்.''

''பண்பாட்டு அடிப்படையில சொல்றிங்களா?''

''ஆமாம். அதைவிட முக்கியமா சில காரணங்கள் இருக்கு. காதலுக்கும் கல்யாணத்துக்கும் நடுவில எது வேணும்னாலும் நடக்கலாம். அந்தக் காதலன் திடீர்னு ஒரு விபத்துல இறந்துட்டா அவளோட கதி என்ன சத்யா? வெறும் பழக்கத்தோட மட்டும் இருந்தா கொஞ்சம் நாள் கவலைக்கு அப்புறம் அந்தப் பொண்ணு வேற ஒருத்தனைக் கல்யாணம் பண்ணிக்கிறதைப் பத்தி யோசிக்க முடியும். உடல் ரீதியான பழக்கம் இருந்திருந்தா அவ மனசாட்சி

உறுத்த ஆரம்பிச்சிடுமே. அதை ஏமாத்தி வேற ஒரு கல்யாணம் பண்ணிக்கவே முடியாது. அதிலயும் வயத்துல கரு எதுவும் வளர்ந்துட்டா இன்னும் மோசம்! அவ எதிர்காலமே போய்டும். கல்யாணம் ஆகாமலேயே விதவை ஆகறது கொடுமை இல்லையா?''

''இன்னொரு பாய்ண்ட் நான் சொல்றேன் திவ்யா. நெருக்கமா பழகி அனுபவிச்சிட்டு காதலியை அம்போன்னு கைவிட்டுட்டு அவன் வேற ஒருத்தியைக் கட்டிக்க முடிவு செஞ்சுட்டான்னாலும்... இதே பாதிப்புதானே அவளுக்கு.''

''நிச்சயமா''

''அப்படி பாதிப்புக்கு உள்ளான ஒரு பொண்ணுதான் ஆஷா. எங்க காலேஜ் பொண்ணு. பாவம், அப்பாவி! ஒரு பணக்காரப் பையன் சொன்ன ஆசை வார்த்தைகளுக்கு மயங்கிட்டா, தன்னைக் கல்யாணம் செய்துக்கப் போறான்ற நம்பிக்கைல தன்னையே கொடுத்துட்டா. இப்போ அவன் 'உன்னை அனுபவிக்கிறதுக்காகக் காதலிக்கிற மாதிரி நான் நடிச்சேன். போய்ட்டு வாம்மா'ன்னுட்டான்.''

''ப்ளடி. ராஸ்கல்! அப்புறம்?''

''இந்த அதிர்ச்சியை அவளால தாங்க முடியலை. ஹாஸ்டல்ல தற்கொலைக்கு முயற்சி செஞ்சிட்டா. நல்ல வேளையா ஃப்ரெண்ட்ஸ் சேர்ந்து உடனே ஹாஸ்பிடல்ல சேர்த்து அவளைக் காப்பாத்திட்டாங்க. அவ விஷம் குடிச்சதால அவ வயத்தில வளர்ற கருவை வளர விடறது சரியில்லைன்னு கருக்கலைப்பு செஞ்சிட்டாங்க டாக்டர்ஸ்.''

''ஸோ பேத்தடிக்! அந்தப் பொண்ணுக்குத்தான் நீங்க உதவியா இருந்திங்களா சத்யா?''

''ஆமாம்.''



''ஸாரி, நான் பாட்டுக்கு விஷயம் தெரியாம உங்களை இன்டல் செஞ்சுட்டேன்.''

''பரவால்லை. அந்தப் பொண்ணை காலேஜ்லேர்ந்து டிஸ்மிஸ் பண்றதா பிரின்சிபால் முடிவு செஞ்சார். நான் போய் வாதம் செஞ்சு அவர் முடிவை மாத்தினேன். அவளைக் கெடுத்தவனைக் கூப்பிட்டு பிரின்சிபால் விசாரிச்சப்ப அவன் ஆஷாவைக் காதலிக்கவே இல்லைன்னு சொல்லிட்டான். அது மட்டும் இல்லை. மந்திரி மகன் அவன். அந்தத் திமிர்ல அலட்சியமா பேசிட்டுப் போய்ட்டான். ஆஷாவோட அப்பா ஏற்கனவே ஹார்ட் பேஷண்ட். தங்கைகள் வேற இருக்காங்க. அதனால ஆஷா வீட்டுக்குத் தகவல் சொல்ல வேணாம்னு முடிவு செஞ்சோம். அழுதுகிட்டே இருக்கற ஆஷாவுக்கு ஆறுதலும், தைரியமும் சொல்லிட்டிருக்கேன்.''

''அந்த மந்திரியைப் போய்ப் பார்த்து எல்லாத்தையும் எடுத்துச் சொல்லி ஆஷாவை அவர் மகன் கல்யாணம் செய்துக்க ஏற்பாடு செய்ய முடியாதா சத்யா?''

''தான் ஏமாற்றப்பட்ட அவமானத்தில இருக்கா அவ. அவன் மேல வெச்சிருந்த ஆசை, அபிமானம் எல்லாம் இப்போ தூள் தூளா நொறுங்கிப் போய்டுச்சி திவ்யா. இப்போ அவனே மனசு மாறி அவளைக் கல்யாணம் பண்ணிக்க முன் வந்தாக்கூட அவ சம்மதிக்கத் தயாரா இல்லை.''

''வெரிகுட்! இந்தத் துணிச்சல் எனக்குப் பிடிச்சிருக்கு சத்யா.''

''அசட்டுத்தனம், துணிச்சல் எல்லாம் கலந்து இருக்கிற அவளுக்கு இப்போ ஒரு அதிர்ச்சியான விஷயமும் இருக்குங்க.''

''என்ன?''

"அவளோட ரத்தத்தைப் பரிசோதனை செஞ்சி பார்த்தப்ப ஒரு மகா அதிர்ச்சியான தகவல் தெரிஞ்சிருக்கு திவ்யா. அவ ரத்தத்தில் ஹெச். ஐ. வி. பாசிடிவ்!"

குடித்துக் கொண்டிருந்த குளிர் பானத்தை வைத்து விட்டாள் திவ்யா-அதிர்ச்சியில்.

"மை காட்!" என்றாள்.

"பாவம்! சோதனைக்கு மேல சோதனை அவளுக்கு."

"இது அவளுக்குத் தெரியுமா?"

"தெரியாது. டாக்டருக்கும் எனக்கும்தான் தெரியும். இப்ப உங்களுக்குத் தெரியும். அவளோட இந்த அந்தரங்க மான தகவலை எதுக்காக உங்ககிட்ட சொன்னேன்னா, அந்தப் பொண்ணை இந்த சமுதாயத்தில நம்பிக்கையோட வாழ வைக்கிறதுக்கு எனக்கு உங்க ஒத்துழைப்பு தேவைப் படுது."

"தாராளமா செய்றேன், என்ன செய்யணும்னு சொல் லுங்க சத்யா."

"நாளைக்கு அவளை டிஸ்சார்ஜ் செய்றாங்க. ஒரு பத்து நாளைக்கு அவ உங்க வீட்ல உங்க கெஸ்ட்டா தங்கி இருக்க அனுமதிப்பீங்களா? உங்க நட்பு அவளுக்கு வேணும். பக்கத்திலேயே இருந்து மென்மையா, இதமா நீங்க சொல்ற ஆறுதல் அவளுக்கு தெம்பு தரும்."

"கண்டிப்பா செய்றேன். ஆமாம், அந்த ஆஷாவை இப்படி ஒரு மோசமான நிலைமைக்கு ஆளாக்கினது யாரு சத்யா?"

"தீபக்னு பேரு."

"மினிஸ்டர் தெய்வநாயகி பையன் தீபக்கா?" என் றாள் ஆச்சரியத்துடன் இவள், "ஆமாம்" என்றதும் அவள் முகம் கடுமையாக மாறியது.

# 20

**நிறையப்பேரின் தீர்மானமான எண்ணங்களை விட அவனுடைய சந்தேகங்கள் சிறப்பானவை.**

**—ஃபிலிப் யார்க்**

"ஏன் திவ்யா, நான் சொல்ற தீபக்கை உங்களுக்கு ஏற்கனவே தெரியுமா?" என்றான் சத்யா.

"தெரியும்" என்றாள் திவ்யா.

"எப்படி?"

"எங்க வீட்லதான் தடுக்கி விழுந்ததுக்கெல்லாம் கூட பார்ட்டி வைப்பாங்களே. வழக்கமா வீட்ல பார்ட்டி நடந்தா நான் ஃபிரெண்ட்ஸ் வீட்டுக்குப் போயிடுவேன். நான் கலந்துக்க மாட்டேன். எனக்குப் பிடிக்காது. ஆறு மாசம் இருக்கும்னு நினைக்கிறேன். அன்னைக்கு ஒரு பார்ட்டி ஏற்பாடு செஞ்சிருந்தாங்க எங்கம்மா."

"சரி."

"வழக்கம் போல நான் நழுவிடறதா இருந்தேன். அமைச்சர் தெய்வநாயகி வர்றாங்க. அவங்ககிட்ட உன்னை இன்ட்ரட்யூஸ் செய்யணும். அதனால நீ இருன்னு எங்கம்மா என்னை வற்புறுத்தி பார்ட்டில இருக்க வெச்சிட்டாங்க. நான் வேண்டா வெறுப்பா வீட்ல இருந்தேன். பார்ட்டி ஆரம்பிச்சது. தெய்வநாயகி அவங்க பையனோட வந்தாங்க. தீபக்னு சொல்லி எல்லாருக்கும் அறிமுகப்படுத்தி வெச் சாங்க. எங்கம்மா என்னை அமைச்சருக்கு அறிமுகப்படுத்தி வைச்சாங்க. அன்னைக்கு பார்ட்டியில புடவை கட்டி யிருந்த ஒரே பொம்பளை நான்தான்."

"மினிஸ்டர்?"

"அவங்ககூட சூரிதார்லதான் வந்தாங்க. அந்த தீபக்கை முதல் பார்வையிலேயே எனக்குப் பிடிக்கலை. பெரியவங் கன்ற மரியாதை எதுவும் இல்லை. உதட்ல சிகரெட்டை வெச்சிக்கிட்டேதான் பேசினான். அது மட்டும் இல்லை. கிட்ட வந்தப்ப மது வாசனை அடிச்சது. பார்ட்டிக்கு வர்றப்பவே குடிச்சிட்டு வந்திருந்தான். வகை வகையா ஹோட்டல் அயிட்டம்ஸ் இருந்திச்சு. தண்ணி சப்ளையும் இன்னொரு ரூம்ல இருந்திச்சு, நான் பத்து நிமிஷத்தில நழுவப் போனப்ப அந்த தீபக் என்கிட்ட வந்து வழிஞ்சான். நான் அழகா இருக்கிறதா அசடு வழிஞ்சான். என்னோட நட்பு வேணும்' அது இதுன்னு பினாத்த ஆரம்பிச்சிட்டான். எனக்கு தர்மசங்கடமாப் போயிடுச்சி. அவன் மந்திரி பிள்ளையா இல்லாம, எங்க கெஸ்ட்டா வராம இருந் திருந்தா அவன் கேட்ட சில கேள்விகளுக்கு அறைஞ்சிருப் பேன் சத்யா."

"அவனுக்கு மேனர்ஸ் தெரியாது திவ்யா."

"ஒரு அடிப்படை நாகரீகம்கூட வேணாமா? பார்த்த பத்தாவது நிமிஷம் ஒரு பொண்ணுகிட்ட உனக்கு பாய் ஃபிரண்ட்ஸ் இருக்காங்களா, டேட்டிங் போவியான்னெல் லாம் கேட்டா எப்படி?"

"அறைஞ்சிருக்க வேண்டியது தானே?"

"எப்படிங்க சத்யா? எங்கம்மா இன்வைட் பண்ணி பார்ட்டிக்கு வந்திருக்கிற மினிஸ்டர் மகன்? அதனாலேயே சகிச்சுக்கிட்டு அவனை விட்டு நைஸா நழுவி என் ரூமுக்குப் போயிட்டேன்."

"அப்புறம்?"

"நான் ஒரு புக் எடுத்து வெச்சுக்கிட்டு படிக்க ஆரம் பிச்சிட்டேன். ராஸ்கல்! மோப்பம் பிடிச்சுக்கிட்டு என் ரூமுக்குள்ளேயே வந்து நின்னு உள்ளே வரலாமான்னு கேட்டான்."



"ப்சை, ராஸ்கல்!"

"எனக்கு பயங்கரமா கோபம் வந்துடுச்சு. என்ன வேணும் உங்களுக்கு. எதுக்கு இங்க வந்திங்கன்னு கடுப்பா கேட்டேன். உன்னோட கொஞ்ச நேரம் பேசிட்டிருக்க லாம்னுதான் வந்தேன்னு சொன்னான். 'ஸாரி, ஐ'ம் நாட் இன்ட்ரெஸ்டட். நீங்க முதல்ல ரூமை விட்டுப் போங்க. இப்படி வந்தது சரியில்லை'ன்னு பளிச்சின்னு சொல்லிட் டேன். என்னை ஒரு நிமிஷம் முறைப்பாப் பார்த்துட்டு 'யு ஆர் லவ்லி பேபி'ன்னு சொல்லிட்டுப் போயிட்டான். அவன் ரூமை விட்டுப் போற வரைக்கும் எனக்கு பக்கு பக்குன்னு ஆய்டுச்சி. அந்த ராஸ்கல் நீங்க சொல்ற ஆஷா மாதிரி இன்னும் நூறு பேரை ஏமாத்தியிருப்பான் சத்யா."

"காதல்ல மட்டும் ஏமாந்தா பரவால்லைங்க திவ்யா. மனசை சரிப்படுத்திக்கலாம். கட்டில்லயும் ஏமாந்தா...அது மனசுலயும் பாதிப்பு. உடம்புலயும் பாதிப்பு. இவன்கிட்ட ஏமாந்தா... உயிர்லயும் பாதிப்பு!"

"என்ன சொல்றிங்க?"

"புரியலையா? இவனோட பழகின ஆஷாவுக்கு இப்ப ஹெச்.ஐ.வி. கிருமி இருக்குன்னா என்ன அர்த்தம்?"

"அட! ஆமாம்! அப்படின்னா தீபக் ஒரு ஹெச்.ஐ.வி. பேஷண்ட்! அப்படித் தானே இருக்க முடியும்!"

"ஆமாம் திவ்யா. இவன்கிட்ட இப்படி ஒரு கொடுமை யான பாதிப்பு இருக்குன்னு தெரியாமலேயே பல பேருக்கு இதைப் பரப்பிக்கிட்டிருக்கான். பாதிக்கப்பட்ட ஆஷாவுக்கு மன தைரியம் கொடுக்கறதோட நம்ம கடமை முடிஞ்சிடாது திவ்யா. இவனால புதுசா பலபேர் பாதிக்கப்படாம இருக்கறதுக்கும் நாம என்ன செய்ய முடியும்னு யோசிக் கணும்."

"யு ஆர் கரெக்ட். ஆமா, இப்ப எப்படி இதை ஹாண்டில் செய்றது?"

"டாக்டர் கிரிகிட்ட. கலந்துக்கலாம்னு எனக்குப் படுது."

"நிச்சயமா. அவர் கரெக்ட்டான யோசனையைச் சொல்லுவார் சத்யா" என்றாள் திவ்யா.

குளிர்பானங்கள் குடித்து முடித்து உதடுகளைத் துடைத்துக் கொண்டு பில்லுக்காகக் காத்திருந்தார்கள்.

"அம்மாவோட பணம், பதவி இதை எல்லாம் வெச்சுக்கிட்டு திமிரா இவன் ஆட்டம் போட்டுக்கிட்டிருந்தான். தனக்கு இந்த மாதிரி ஆகியிருக்குன்னு தெரிஞ்சா அப்படியே ஆடிப் போயிடுவான் சத்யா. அவனோட திமிர் எல்லாம் அடங்கிடும்."

"பார்க்கலாம்."

அங்கிருந்து புறப்பட்டு டாக்டர் கிரியைப் பார்க்க அவரின் வீட்டிற்கு வந்தார்கள். தனது சோதனை அறைக்குள் வேலையாக இருந்த கிரி வந்து மாடி பால்கனிக்கு அழைத்துச் சென்று மூங்கில் நாற்காலிகளில் உட்கார வைத்துவிட்டு, மனைவி வெளியே சென்றிருந்ததால் அவரே லைம்ஜூஸ் கலக்கி எடுத்து வந்தார்.

தொங்கும் மூங்கில் கூடையில் அவர் உட்கார்ந்து மெதுவாக அசைந்தபடி அவர்கள் இருவரையும் பார்த்தார்.

"என்ன ரெண்டு பேரும் சேர்ந்து வந்திருக்கீங்க?"

"ஒரு ஹெச்.ஐ.வி, கேஸ் டாக்டர். பொண்ணு. அந்தப் பொண்ணுக்கு திவ்யாவோட உதவி தேவைப்படும்னு எனக்குப் பட்டது. நான்தான் போன் பண்ணி வரவழைச்சேன்."

"யாரு சத்யா...?"

"ஆஷான்னு என்னோட காலேஜ் மேட் டாக்டர்" என்ற சத்யா நடந்தவற்றை எல்லாம் தெளிவாக விளக்கி



னான். ஆஷாவின் ரத்தச் சோதனை ரிப்போர்ட்களை எடுத்துக் கொடுத்தான்.

அவற்றை உன்னிப்பாகப் பார்த்தார் டாக்டர் கிரி. ரொம்ப நேரம் அமைதியாக இருந்தார்.

"ஏன் சத்யா, அந்தப் பொண்ணோட ஊருக்கு எந்தத் தகவலும் தராமலே இருந்தா சரிப்படுமா?" என்றார்.

"எப்படி டாக்டர் சொல்றது? நான்தான் சொன்னனே அவங்கப்பா ஒரு ஹார்ட் பேஷண்ட். தன் பொண்ணு காதலிச்சு கர்ப்பமாகி ஏமாந்து தற்கொலைக்கு முயற்சி செஞ்சி காப்பாத்திட்டாங்கன்ற தகவல் எவ்வளவு பெரிய அதிர்ச்சி டாக்டர்!"

"நியாயம்தான். ஆனா யதேச்சையா அவங்க குடும்பத்திலேர்ந்து யாராச்சும் ஆஷாவைப் பார்க்க இங்கே வந்தா உண்மை தெரிஞ்சி போயிடுமில்லையா?"

"ஆமாம்."

"அதனால நான் என்ன சொல்றேன்னா, டிஸ்சார்ஜ் ஆகி திவ்யா வீட்ல நாலு நாள் அந்தப் பொண்ணு ரெஸ்ட் எடுக்கட்டும். அவளுக்கு வாழ்க்கை மேல நம்பிக்கை ஊட்ட வேண்டியது திவ்யாவோட பொறுப்பு. எப்படி எப்படி எடுத்துச் சொல்லணும்னு நான் திவ்யாவுக்குச் சொல்றேன். அடுத்த கட்டமா அவ ஊருக்கு இயல்பாப் போற மாதிரி போய் ரெண்டு நாள் தன் குடும்பத்தோட தங்கியிருந்துட்டு வரட்டும். அதுக்கப்புறம் அவளுக்கு நான் ட்ரீட்மெண்ட் ஆரம்பிக்கிறேன். அவ ரத்தத்தில ஹெச்.ஐ.வி. கிருமி இருக்குன்றதை பக்குவமா எப்படிச் சொல்லணுமோ அப்படி நான் சொல்றேன். உடனே இல்லை. அந்த அதிர்ச்சியை ஒரு சின்ன தகவல் மாதிரி உள்வாங்கிக்கற ஒரு மனநிலையை அவளுக்கு ஏற்படுத்திட்டு அதுக்கப்புறம்தான் சொல்வேன்."

"சரி டாக்டர்."

"ஆனா... தீபக் மேட்டர்தான் ரொம்ப உடனே கவனிக்க வேண்டிய விஷயம். ஹெச். ஐ. வி. சோதனைக்கு அவனை உட்படுத்தியாகணும். அவனுடைய நிலையை எடுத்துச் சொல்லியாகணும்."

"இப்ப அதுதான் எப்படின்னு யோசிக்கணும் டாக்டர்."

கிரி சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தார்.

"ஏம்மா, உங்கம்மாவுக்கு மந்திரி தெய்வநாயகி நல்ல பழக்கமா?"

"ஆமாம் டாக்டர்."

"உங்கம்மா மூலமா மந்திரிகிட்ட ஒரு அப்பாயிண்ட் மெண்ட் வாங்க முடியுமில்லையா?"

"முடியும் டாக்டர்."

"எதுக்கு டாக்டர்?" என்றான் சத்யா.

"அவன் பயங்கரமான முரடன்னு சொல்றீங்களே... இந்த மேட்டரை நேரா அவனைக் கூப்பிட்டு சொன்னா சரியா வருமா? அவங்கம்மாவைப் பார்த்து உண்மையைச் சொல்வோம். அவங்க கூப்புட்டுப் பேசட்டுமே."

சற்றே யோசித்த திவ்யா, "சரி" என்றாள்.

"திவ்யா, உங்கம்மாவை போன்ல பிடிம்மா. எவ்வளவு சீக்கிரம் அப்பாயிண்ட் மெண்ட் வாங்க முடியும்னு பாரு" என்றார் டாக்டர் கிரி.

டாக்டர் கிரி, சத்யா இரண்டு பேரும் அமைச்சர் தெய்வநாயகியின் வீட்டு வரவேற்பறையில் காத்திருந் தார்கள். அவர்களைப் போல வேறு பலர் கட்சிக் கரை போட்ட வேட்டி உடுத்தி காத்திருந்தார்கள்.



உதவியாளர் பெயர் படித்து உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தான். கட்சி நபர்கள் எல்லோரும் போய்த் திரும்பிய பிறகு இறுதியாக இவர்கள் அழைக்கப் பட்டார்கள்.

குளிரூட்டப்பட்ட அந்த அறையில் அகலமான மேஜைக்கு அந்தப் பக்கம் அமர்ந்திருந்த தெய்வநாயகி கோல்டு பிரேம் கண்ணாடி அணிந்திருந்தார். மொட மொடப்பான காட்டன் சேலை. காதில் முத்துத் தோடுகள்.

"வாங்க வாங்க பர்சனல் மேட்டர் பேசணும்னு சொன்னதால் முதல்ல கட்சிக்காரங்களைப் பார்த்து அனுப்பி வெச்சேன். உக்காருங்க. நீங்க..."

"நான் டாக்டர் கிரி. இவர் சத்யா. உங்க பையன் தீபக்கும் இவரும் காலேஜ் மேட்ஸ்."

"அப்படியா? வணக்கம். சொல்லுங்க உங்களுக்கு என்ன செய்யணும் நான்?"

"எங்களுக்கு எந்த சலுகையும் எதிர்பார்த்து நாங்க வரலை மேடம். உங்க பையன் தீபக் பத்தி பேச வேண்டி யிருக்கு."

அப்போது அமைச்சரின் உதவியாளர் ஒருவர் "எக்ஸ் க்யூஸ் மி" என்று உள்ளே வந்து. "மேடம், பிரஸ்லேர்ந்து இன்விடேஷன்ஸ் கொடுத்துட்டுப் போயிருக்காங்க. உங்க பார்வைக்கு ஒண்ணு எடுத்துட்டு வந்தேன்" என்று அமைச் சரிடம் ஒரு பத்திரிகை தந்தார்.

அமைச்சர், "தீபக்குக்குத்தான் மேரேஜ்" என்றார் இவர்களிடம்.

# 21

**சத்தமான சிரிப்பு என்பது காலியான மனதைச் சொல்கிறது.**

**—ஆலிவர் கோல்ட்ஸ்மித்**

தீபக்குக்கு மேரேஜ்' என்று அமைச்சர் தெய்வநாயகி சொன்னதும் சத்யாவுக்குப் பகீரென்றது. டாக்டர் கிரியைப் பார்த்தான். அவரும் அதிர்ச்சியடைந்தது முகத்தில் தெரிந்தது. "ஒரு நிமிஷம்" என்று இவர்களிடம் சொல்லிவிட்டு அந்தத் திருமண அழைப்பிதழை வரிவரியாகப் படித்துப் பார்த்தார் தெய்வநாயகி.

பிறகு மூடி அதன் உறையில் போட்டுவிட்டு நிமிர்ந்து, "என்ன சொல்லுங்க. தீபக் பத்தி ஏதோ பேசணும்னு சொன்னீங்களே..." என்றார். சத்யாவுக்கு உள்ளே வார்த்தைகள் சுழன்றன. எங்கே, எப்படி ஆரம்பிப்பது என்று தவித்தான். டாக்டர் உதவிக்கு வருவார் என்று நினைத்தால், அவரோ அந்த அழைப்பிதழ் மேல் நிலைகுத்திய பார்வையுடன் அமைதியாக உட்கார்ந்திருந்தார்.

"டாக்டர், நீங்க சொல்றீங்களா?" என்றான் சத்யா.

கிரி தலையை அசைத்தார். அமைச்சரை நேராகப் பார்த்தார்.

"மேடம், முதல்ல ஒண்ணு தெளிவா புரிஞ்சுக்கங்க. நாங்க இப்போ ஒரு அமைச்சரைப் பார்க்க வரலை. ஒரு பொறுப்பான அம்மாவை பார்க்க வந்திருக்கோம்."

"சொல்லுங்க."

"நீங்க சராசரியான அம்மா இல்லை. உங்களுக்கு அரசியல்ல நிறைய அனுபவம் இருக்கு. பல தரப்பட்ட மனுஷங்களை, பலவிதமான பிரச்சனைகளைச் சந்திச்சிருப்



பீங்க. அதனால உங்களால சில கஷ்டமான விஷயங்களையும் தைரியமா எடுத்துக்க முடியும்னு நம்பறேன்."

"என்ன சார் பீடிகை பலமா இருக்கு?" என்று புன்னகைத்தார் அமைச்சர்.

"உங்க பையன் தீபக்கை விருப்பு வெறுப்பு இல்லாம, ஒரு அம்மா ஸ்தானத்தில் இல்லாம, ஒரு மூணாவது மனுஷியோட கோணத்தில உங்களால விமர்சிக்க முடியுமா மேடம்?"

தெய்வநாயகி சில விநாடிகள் அமைதியாக இருந்துவிட்டு, "முடியும்" என்றார்.

"சொல்லுங்களேன். தீபக்கைப் பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க?"

"இப்ப நான் அம்மாவா சொல்லலை. அவன் ஒரு ஒண்ணாம் நம்பர் தறுதலை. இவனைப் பெத்ததுக்காக நான் ஒரே ஒரு விதத்திலதான் பெருமைப்பட்டுக்க முடியும். அதாவது இவன் பிறந்ததால இந்த சமுதாயத்துக்கு நான் மலடி இல்லைன்னு நிரூபிக்க முடிஞ்சது. இதைத் தவிர பெருமைப் பட்டுக்கற மாதிரி இவன் எதுவும் செய்யலை. ஏகப்பட்ட செல்லம் கொடுத்து, முழு சுதந்திரம் கொடுத்து தப்பா வளர்த்துட்டேன். தீபக் ஒரு நல்ல பையன் இல்லைங்க. ரொம்ப மோசம். எல்லா கெட்ட பழக்கங்களும் உண்டு. இவனால நாங்க பல தடவை அவமானப்பட்டாச்சு. ஆனா கௌரவத்தை விட்டுக் கொடுக்க முடியாம சமாளிச்சிட்டு வந்திருக்கேன். இப்ப நீங்க ரெண்டு பேரும் என்ன விஷயமா என்னைப் பார்க்க வந்திருக்கீங்கன்னு என்னால கரெக்ட்டா சொல்லிட முடியும். உங்களுக்கு வேண்டிய ஏதோ ஒரு பொண்ணு தீபக்கால பாதிக்கப்பட்டிருக்கா. அதுக்கு நியாயம் கேட்டு வந்திருக்கீங்க. சரியா? வேற ஒரு இடம்னா அறுவாளைத் தூக்கிட்டுப் போய் ஆவேசமா பேசியிருப்பீங்க. நான் அமைச்சர்ங்கிறதால அப்பாயிண்ட்

மெண்ட் வாங்கிட்டு வந்து அமைதியா பேசிட்டிருக்கீங்க என்ன, நான் சொல்றதெல்லாம் சரியா?''

சத்யாவால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

ஆணவத்தோடும், அதிகாரத்தோடும் அலட்சியமாகப் பேசுவார் என்று நினைத்த அமைச்சர் அப்படியே உள்ளத்தைப் படிப்பதுபோல பேசியது ஆச்சரியமாகத்தான் இருந்தது.

''கரெக்ட்டுதான் மேடம்'' என்றான்.

''யாரு அந்தப் பொண்ணு?''

''ஆஷான்னு பேரு. காலேஜ்ல எங்ககூட படிக்கிற பொண்ணு. வெளியூர் இங்க ஹாஸ்டல்ல தங்கி படிச்சிட்டிருந்திச்சு. தீபக் அவளோட சிரிச்சுப் பேசி காதலிக்கிறதா சொல்லி நெருக்கமாய் பழகி...''

''இப்ப அந்தப் பொண்ணு கர்ப்பமா இருக்கா. இவன் பணம் தர்றேன் போய் கலைச்சுக்கோன்னு சொல்றான் அதானே?'' என்று வாக்கியத்தை தெய்வநாயகி முடித்தார்.

''கரெக்ட்டு ஆனா அதுக்கப்புறம் நிறைய நடந்து போச்சுங்க.''

''என்ன ஆச்சு?''

''தீபக் ஏமாத்திட்ட அதிர்ச்சில மனசொடிஞ்சுபோன ஆஷா தற்கொலை முயற்சில இறங்கி... கடைசி நிமிஷத்தில காப்பாத்திட்டோம். டாக்டர்ஸ் அவளோட கார்ப்பத்தைக் கலைச்சிட்டாங்க. இப்ப அந்தப் பொண்ணு ஆஸ்பத்திரில பிரமை பிடிச்சவ மாதிரி இருக்கா.''

''ரைட்டு எவ்வளவு பணம் எதிர்பார்க்கறா அவ?''

''என்ன மேடம் இப்படிப் பேசறீங்க?''



''தீபக் பிடிவாதக்காரன். திமிர் பிடிச்சவன். இந்த மாதிரி அப்பாவிப் பொண்ணுங்களோட வாழ்க்கையில விளையாடறது அவனுக்குப் பொழுது போக்காய்டுச்சி. நியாயம்னு பார்த்தா இவனை மிரட்டி அந்தப் பொண்ணு கழுத்தில தாலி கட்டச் சொல்லணும். அது சரியா வராது. அப்படி இவனால பாதிக்கப்பட்ட பொண்ணுக்கெல்லாம் இவன் தாலி கட்றதுன்னா ஏற்கனவே இவனுக்குப் பல தடவை கல்யாணம் பண்ணியிருக்கணும். நீங்க சொல்ற ஆஷா இவனால பாதிக்கப்பட்ட முதல் பொண்ணு இல்லைங்க.''

''தப்பா எடுத்துக்காதீங்க மேடம், நீங்க மக்களோட பிரதிநிதி. மக்களுக்குப்பாதுகாப்புத் தரவேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கு. உங்க பையன் இந்த மாதிரி தப்பு செய்ய ஆரம்பிச்சப்பவே இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணாம வளரவிட்ருக்கீங்களே. உங்க பையனால பாதிக்கப்பட்டவங்க வந்தா பணத்தைத் தூக்கிக் கொடுத்து விஷயம் வெளில வரா்ம பார்த்துக்கறதோட உங்க கடமை முடிஞ்சி போச்சா?'' என்றார் கிரி சற்றே சூடாக.

''நல்லா கேளுங்க, உங்களுக்கு இப்படி எல்லாம் கேக்க உரிமை இருக்கு. இதுக்கு எங்கிட்ட நேர்மையான பதில் இல்லைதான். யாருமே நூறு சதவீதம் லட்சியவாதியா இருக்க முடியாதுங்க. என் பையனை நான் கண்டிக்காமயா இருந்திருப்பேன்! அடிச்சி வீட்டைவிட்டே துரத்தியிருக்கேன் ரெண்டு தடவை. ஆனா பெத்த மனசு கேக்க மாட்டேங்குது. இனிமே திருந்திடுவான்னு ஒவ்வொரு தடவையும் நம்பிக்கை வெச்சு தோத்துப் போயிட்டிருக்கேன். ஒரு கல்யாணம் பண்ணி வெச்சி அவனுக்குன்னு ஒரு பொண்டாட்டி வந்து உரிமையோட கேள்வி கேக்க ஆரம்பிச்சா திருந்திடுவான்னு நம்பித்தான் ஒரு மாசமா அவனைக் கெஞ்சி, கூத்தாடி இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிக்க வெச்சிருக்கேன்.''

"மன்னிக்கனும் மேடம். நீங்க இந்தக் கல்யாணத்தை நிறுத்திடுங்க" என்றார் டாக்டர்.

"ஏன்?"

"இந்தக் கல்யாணத்தால இன்னும் ஒரு பொண்ணு பாதிக்கப்படக் கூடாது."

"கல்யாணத்துக்கப்புறம் ஒழுங்கா இருக்கிறதா என் பையன் எனக்கு வாக்குக் கொடுத்திருக்கான்."

"நான் சொல்றது வேற அர்த்தத்தில் மேடம்."

"புரியலை."

ஒரு விநாடி தயங்கின டாக்டர், "எதையும் நாங்க மறைக்க விரும்பலை. நாங்க சொன்ன அந்தப் பொண்ணு ஆஷாவோட ரத்தத்தில் எய்ட்ஸ் நோயை உருவாக்கக்கூடிய ஹெச். ஐ. வி. கிருமிகள் இருக்குன்னு தெரிய வந்திருக்கு" என்றார்.

"அதனால என்ன?" என்றார் அமைச்சர் சரியாகப் புரிந்து கொள்ளாமல்.

"இந்தக் கிருமிகள் ஒருத்தரோட உடல்ல புகுறதுக்கு பல சந்தர்ப்பங்கள் இருக்கு. உங்களுக்குத் தெரிஞ்சிருக்கலாம். ஆண்—பெண் உடலுறவால மட்டும் இது பரவலை. ஒருத்தருக்கு உபயோகிச்ச ஊசி, பிளேடு, ஆபரேஷன் தியேட்டர் கருவிகள், ரத்த தானம்— இப்படி எல்லாம் கூட வாய்ப்பு இருக்கு. ஆனா உடலுறவு மூலமா பரவறது தான் அதிகமான சதவீதம். இப்ப ஆஷாவுக்கு அந்தக் கிருமி இருக்குன்னா அந்தக் கிருமி உங்க பையன்கிட்டேர்ந்து வந்திருக்க வாய்ப்பு இருக்கு இல்லையா?"

தெய்வநாயகி திடுக்கிட்டார். தடுமாறிப் போனார்.

"எ...என்ன...என்ன சொல்றீங்க? என் பையனுக்கு... எ...எய்ட்ஸா?"



"எய்ட்ஸ் இல்லை மேடம். அது ஒரு நிலை. அந்த நிலைக்குத் தள்ற கிருமிதான் ஹெச். ஐ. வி. உங்க பையன் ஒழுக்க விஷயத்துல கட்டுப்பாடு இல்லாம இருந்திருக்கிறதால, அவருக்கு இந்தக் கிருமி இருக்கலாம்னு கொஞ்சம் ஸ்ட்ராங்காவே நாங்க சந்தேகப்படறோம்."

தெய்வநாயகியின் நெற்றியில் வியர்வைத் துளிகள் துளிர்த்தன.

"பதட்டப்படாதீங்க. இது ஒரு யூகம்தான், ஊர்ஜிதமா சொல்ல முடியாது. ஆஷாவுக்கு வேறு வகையில கூட இந்தக் கிருமி வந்திருக்கலாம். ஆனா உங்க பையனை உடனடியா சோதிச்சிடணும் இல்லையா? இந்தச் சூழ்நிலையில நாங்க வந்திருக்கிறது தீபக்கோட ஹெல்த்மேல உள்ள அக்கறையாலதானே ஒழிய ஆஷாவுக்கு வாழ்க்கை கேட்டு இல்லை. தீபக்கே இப்ப அவளைக் கல்யாணம் பண்ணிக்க முன் வந்தாலும், அவள் தயாரா இல்லை. அதனால முதல் காரியமா கல்யாண ஏற்பாடுகளை நிறுத்துங்க!"

தெய்வநாயகி கர்சீப் எடுத்து நெற்றி, கழுத்தெல்லாம் ஒற்றிக் கொண்டார். செருமிக் கொண்டார். ஏதோ சொல்ல வந்தார். காற்றுதான் வந்தது.

"எ...எனக்கு பயமா இருக்கு சார். என் பையன் இத்தனை நாளா தன் இஷ்டப்படி நடந்துக்கிட்டதுக்கு இவ்வளவு பெரிய தண்டனையா? எனக்கு ஒரே பிள்ளை சார். அவனோட எதிர்காலமே பாதிச்சிடும் சார்,"

"மேடம், பதறாதீங்கன்னு சொன்னனே. உங்க பையனோட ரத்தத்தைப் பரிசோதனை பண்ணிப் பார்க்காம எந்த முடிவுக்கும் வரவேணாம், இப்ப உங்க பையனை சோதனைக்கு ஒத்துக்க வைக்கணும்."

"அய்யோ! அவன் இடிஞ்சு போயிடுவானே!"

"இந்தப் பரிசோதனை வேற காரணத்துக்காகன்னு சொல்லுங்க."

"அது எப்படிச் சொல்ல முடியும்?"

"முடியும், இப்ப எல்லாம் ஜாதகங்கள் பொருத்தம் பார்க்கற மாதிரி சில இடங்கள்ல உடம்பை பரிசோதனை செஞ்சி டாக்டர் சர்ட்டிஃபிகேட்ஸ் வாங்கிப் பார்க்கறாங்க- கல்யாணத்துக்கு முன்னாடி. நீங்க சம்பந்தம் செஞ்சிருக்கிற பொண்ணு வீட்டுக்காரங்க அந்த மாதிரி ஒரு டாக்டர் சர்ட்டிஃபிகேட் கேக்கறதா உங்க பையன்கிட்ட சொல் லுங்க. ஜெனரல் செக்கப்தான்னு சொல்லி எங்கிட்ட அனுப்பி வைங்க." என்றார் கிரி.

"இது நல்ல யோசனைதான். ஆண்டவா! அவன் ரத்தத்தில எந்தக் குறையும் இருக்கக்கூடாது" என்று நெகிழ்ச்சியுடன் சொன்ன தெய்வநாயகியை வியப்பாகப் பார்த்தான் சத்யா.

## 22

இயற்கை செய்த ஒரே தவறு, மனிதன்.
—டபிள்யூ எஸ். கில்பெர்ட்

"இவங்க திவ்யா. இவங்க வீட்லதான் நீ கொஞ்ச நாளைக்கு தங்கப் போறே ஆஷா" என்றான் சத்யா.

ஆஸ்பத்திரி வார்டு கட்டிலில் அமர்ந்திருந்த ஆஷா அவனை நிமிர்ந்து பார்த்து உலர்ந்த புன்னகையோடு கை கூப்பினாள்.

பதிலுக்கு கைகூப்பிய திவ்யா அவள் கையைப் பிடித்துக் கொண்டு "என்னை உங்க ஃபிரண்டா நினைச்சுக்



கங்க ஆஷா. எல்லா விஷயமும் சத்யா சொன்னார். உங் களுக்கு என்ன உதவி வேணும்னாலும் தயங்காம என்கிட்ட கேக்கலாம்" என்றாள்.

திவ்யாவின் பொருள்கள் ஒரு சூட்கேசிலும், வலைக் கூடையிலும் எடுத்து வைக்கப்பட்டுத் தயாராக இருந்தன.

தனபால் உள்ளே வந்து, "ஹாஸ்பிடல் பில் செட்டில் பண்ணிட்டேன் சத்யா. இந்தா ரசீது. வார்டு பாய், ஆயா எல்லாருக்கும் டிப்ஸ் கொடுத்தாச்சு. புறப்படலாம்" என்றான்.

ஆஷாவின் கையோடு தன் கையைக் கோர்த்துக் கொண்டு திவ்யா நடக்க, சத்யாவும், தனபாலும் பொருள் களை எடுத்துக் கொண்டார்கள்.

வெளியே திவ்யாவின் காருக்கு வந்து டிக்கியில் வைத் ததும், "ஆஷா, காலேஜுக்கு டைம் ஆச்சி. நீ இவங்களோட போ. நான் ஈவினிங் வந்து பார்க்கறேன்" என்றான் சத்யா.

ஆமோதிப்பாகத் தலையசைத்து விட்டு காரில் ஏறிக் கொண்டாள்.

"திவ்யா."

"ஆஷா இனிமே என் பொறுப்பு. நான் பார்த்துக் கறேன். நிம்மதியா போங்க சத்யா" என்ற திவ்யா காரை ஸ்டார்ட் செய்தாள்.

கார் போனதும் ஒரு நீண்ட பெருமூச்சை வெளியேற்றின சத்யா, "போகலாமா தனபால் என்றான்?" அவனோடு பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்த தனபால் சத்யா ஆஷா விஷயத்துல அவளுக்கு உதவணும்னு நீ எடுத்துக்கற அக்கறை எனக்குப் புரியுது. ஆனா ரொம்ப அப்செட்டா இருக்கியே. அது ஏன்ப்பா?"

ஆஷாவுக்கு ஏற்பட்டுள்ள உண்மையான உடல் பாதிப் பைப் பற்றி அறியாத தனபாலிடம் தன் மன உளைச்சலை

எப்படிப் பகிர்ந்து கொள்வது என்று புரியாமல் தவித்தான் சத்யா.

இது ஆஷாவின் மிகவும் அந்தரங்கமான விஷயம் ரகசியம். இதை சர்வ சாதாரணமாக யாரிடமும் பகிர்ந்து கொள்ள முடியாது. இவன் நல்லவன் தான். ஆனால் உணர்ச்சி வசப்பட்டு இவனுடைய நம்பிக்கைக்குரிய நண்பர்களிடம் மட்டுமாவது பகிர்ந்து கொண்டு விடுவான். அவர்கள் அவர்களின் நம்பிக்கை வட்டத்துக்குச் சொல்லி... விஷயம் சிட்டத்தட்ட எல்லோருக்கும் பரவி விடும்.

"என்ன சத்யா, பதிலே சொல்ல மாட்டேங்கற. ஆஷா இரக்கப்பட வேண்டியவதான். ஆனா அவ செஞ்ச தப்பையும் யோசிக்க வேண்டியிருக்கே. படிக்க வந்த இடத்துல எதுக்கு காதல்? அதிலயும் ஒரு வரம்புக்குள்ளே இருக்க வேணாமா? இஷ்டம்படி ஆட்டம் போட்டதுக்கு தண்டனை தான் இதெல்லாம். நீ இரக்கப்படு வேணாங்கலை. ரொம்பவும் இன்வால்வ் பண்ணிக்கிறியேன்னு தான் கேட்டேன். அவ டிஸ்சார்ஜ் ஆனதும் எங்கயோ தங்கிட்டுப் போறா எதுக்கு நீ அந்தப் பொறுப்பெல்லாம் எடுத்துக்கறே?"

"தனபால், அவளோட நிலைமை உனக்குப் புரியாது. டாக்டர்ஸ் உயிரைக் காப்பாத்திட்டாங்க. ஆனா மனசு செத்திருக்கு. அதுக்கு உயிர் கொடுக்கணும். இப்ப அவளுக்கு ஒரு நல்ல நட்பான அரவணைப்பும் ஆறுதலான வார்த்தைகளும் வேணும். அது திவ்யாகிட்ட அவளுக்குக் கிடைக்கும். அதனால்தான் அவ வீட்ல கெஸ்ட்டா தங்க ஏற்பாடு செஞ்சேன்."

"எனக்கென்னவோ நீ செய்றது கொஞ்சம் அதிகப்படியாதான் படுது" என்ற தனபால் தன் பேண்ட் பாக்கெட்டைத் தொட்டுப் பார்த்துக் கொண்டு, "அடடா! மறந்துட்டனே" என்றான்.



"என்ன?"

"ஆஷாவோட ரூம்மேட் அவளுக்கு வந்த தபாலை என்கிட்ட கொடுத்து ஆஸ்பத்திரிக்குப் போறப்ப கொடுத்துடுங்கன்னு சொன்னா. நான் ஆஷா கிட்ட கொடுக்க மறந்துட்டேன் சத்யா."

தனபால் தன் பேண்ட் பாக்கெட்டிலிருந்து அந்த ஒரு ரூபாய் தபால் கவரை எடுத்துக் காட்டினான். அது ஓரம் கிழிக்கப்பட்டிருந்தது.

"என்னடா இது, தபாலை நீ பிரிச்சியா?"

"நான் இல்லப்பா, நம்ம லேடீஸ் ஹாஸ்டல் சிஸ்டம் அப்படி. தபால்ல ஃப்ரம் அட்ரஸ் போட்டு வந்தா பிரிக்காம ஒப்படைச்சுடுவாங்களாம். ஃப்ரம் அட்ரஸ் இல்லாம வந்திச்சின்னா பிரிச்சிப் பார்த்துட்டுதான் ஒப்படைப்பாங்களாம். இந்தக் கவர்ல ஃப்ரம் அட்ரஸ் இல்லை பாரு. அதனால வார்டன் பிரிச்சிப் பார்த்துட்டு ஒப்படைச்சிருக்காரு."

"சரி, கொடு. ஈவினிங் நான் திவ்யா வீட்டுக்குப் போவேன். அப்ப ஒப்படைச்சிடறேன்" என்று அந்தக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டான் சத்யா.

"சத்யா, ஆஷாவுக்கு நடந்ததெல்லாம் இதுவரைக்கும் அவ குடும்பத்துக்குத் தெரியாது இல்லையா?"

"ஆமாம்."

"இந்த லெட்டர் ஒரு வேளை அவ குடும்பத்திலேர்ந்து போட்ருந்தா? ரெண்டு நாள்ல அவளைப் பார்க்கறதுக்கு வர்றதா ஏதாவது தகவல் இருந்தா? அதையும் சமாளிக்கணும். ஆபத்துக்குப் பாவம் இல்லை. லெட்டர்ல யாரு என்ன எழுதிருக்காங்கன்னு படிச்சிடலாமா? உன் கிட்ட கேட்டுட்டுதான் செய்யணும்னு நான் படிக்காம அப்படியே எடுத்துட்டு வந்துட்டேன்."

"இது ஆஷாவுக்கு வந்திருக்கிற பர்சனல் லெட்டர். இதை..."

"ஆஷாவோட எல்லா பர்சனல் மேட்டரும் இப்ப நமக்குத் தெரியும். இதெல்லாம் விடவா ஒரு பர்சனல் மேட்டர் இருக்க முடியும். அதுவும் லெட்டர் ஏற்கனவே வார்டன் பிரிச்சு படிச்சதுதான், இதில் எதுவும் அவசரமான செய்தி இருக்காதுன்னு நீ நினைச்சேன்னா வேணாம். ஈவினிங் அவகிட்ட ஒப்படைச்சுடு. அவ படிச்சிட்டு சொல்ல வேண்டியதா இருந்தா சொல்லிட்டுப் போகட்டும்."

"இப்ப ஆஷா இருக்கிற மனநிலையில அவளுக்கு அதிர்ச்சி தர்ற செய்தி எதுவும் இந்த லெட்டர்ல இருந்துடக் கூடாது தனபால். அவ ஏற்கனவே ரொம்ப நொந்து போயிருக்கா. தப்பில்லை. படிச்சிப் பார்ப்போம்."

சத்யா அந்தக் கவருக்குள்ளிருந்த காகிதத்தை எடுத்துப் பிரித்தான். அருகில் மர நிழல் பார்த்து நகர்ந்து நின்று கொண்டான். தனபாலும் கடிதத்தைப் பார்த்தான்.

"அன்புள்ள சௌபாக்கியவதி ஆஷாவுக்கு உன் அப்பா அநேக ஆசீர்வாதங்களுடன் எழுதிக் கொண்டது. இங்கு நான், உன் அம்மா, தங்கைகள் அனைவரும் நலமாக இருக்கிறோம். நீ அங்கு நலமாக இருக்கிறாயா?

எங்கள் அனைவருக்கும் எப்போதும் உன் ஞாபகம்தான். நீ இங்கு வந்து பல நாட்கள் ஆகிறது. எப்போது உனக்கு விடுமுறை கிடைக்கும்? உன்னைச் சந்திக்க ஆசையாக இருந்தாலும் டாக்டர் என்னை இதய நோய் காரணமாக பயணங்களைத் தவிர்க்கச் சொல்லி கண்டிப்பாகச் சொல்லி இருப்பதால் யோசனையாக இருக்கிறது.

இப்போது எனக்கு நெஞ்சு வலி இல்லை என்றாலும் களைப்பு அதிகமாக இருக்கிறது. அடிக்கடி சோர்ந்து போகிறேன். நிறைய ஓய்வு தேவைப்படுகிறது.



இந்த குடும்பத்திற்கு நான் செய்ய வேண்டிய கடமைகள் நிறைய இருக்கின்றன ஆஷா. முதல் கடமை உனக்குத் திருமணம் செய்வது, அடுத்த கடமைகள் உன் தங்கைகளுக்குத் திருமணம் செய்வது.

போன வருடமே நாங்கள் திருமணப் பேச்சை எடுத்த போது, படிப்பு முடியட்டும் என்று நீ சொல்லி விட்டாய். இந்த வருடத்தோடு உனக்கு படிப்பு முடிவதால் நான் உன் ஜாதகத்தைப் பல உறவினர்களுக்கு அனுப்பி நல்ல மாப்பிள்ளையின் ஜாதகங்கள் வாங்கித்தரச் சொல்லியிருந்தேன்.

பல ஜாதகங்கள் வந்தன. அதில் கரூரைச் சேர்ந்த ஒரு மாப்பிள்ளையின் ஜாதகம் உன் ஜாதகத்திற்கு மிகவும் பொருத்தமாக இருப்பதாக நமது ஜோதிடர் கூறினார். அவர்களுக்குக் கடிதம் எழுதினோம். நானும், உன் அம்மாவும் சென்று மாப்பிள்ளையைப் பார்த்து வந்தோம்.

மாப்பிள்ளை மிகவும் லட்சணமாக, சிவப்பாக இருக்கிறார். கடைத் தெருவில் பெரிய ரெடிமேட் கடை வைத்திருக்கிறார். எம். எஸ். ஸி. படித்திருக்கிறார். இனிமையாகப் பேசுகிறார். கடைக்கு அழைத்துச் சென்று காட்டினார். பெரிய கடைதான். முப்பது பேர் அங்கே வேலை பார்க்கிறார்கள். வீட்டையும், கடையையும் பார்த்ததும் நாங்கள் பிரமித்து விட்டோம்.

நம் அந்தஸ்துக்கும், அவர்களின் அந்தஸ்துக்கும் கொஞ்சம்கூடப் பொருந்தி வராதே. இந்த இடம் எப்படி கூடி வரும் என்று நாங்கள் கலங்கினோம். ஆனால் மாப்பிள்ளை பையனும் அவர் அப்பாவும் வெளிப்படையாகப் பேசினார்கள். 'எங்களுக்கு வரதட்சணை என்று ஒரு பைசா தேவையில்லை. கல்யாணச் செலவையும் நாங்களே ஏற்கத் தயாராய் இருக்கிறோம்-பெண் மட்டும் பிடித்தால் போதும்' என்று சொன்னார்கள்.

தாங்கள் கையோடு எடுத்துச் சென்றிருந்த உன்னுடைய புகைப் படத்தை அவர்களிடம் காட்டினோம். புகைப் படத்தில் உன்னைப் பார்த்ததுமே அவர்களுக்குப் பிடித்து விட்டது. எதற்கும் நேரில் பார்த்து விடுகிறோம் என்றார்கள். உங்களுக்குச் சௌகரியப்படும் தேதியைச் சொல்லுங்கள். தாங்கள் வருகிறோம் என்றார்கள்.

நான் ஊருக்கு வந்ததும் ஜோதிடரைப் பார்த்தேன். வருகிற 12—ஆம் தேதி வெள்ளிக்கிழமை நல்ல நாள் என்றார். இந்த சம்பந்தம் அமைய மிகவும் கொடுத்து வைத்திருக்க வேண்டும். ஆஷா, உண்மையில் நீ மிகவும் அதிர்ஷ்டக்காரி.

'பெண் படிப்பு இன்னும் முடியாததால் கல்யாணத்தை அவள் படிப்பு முடிந்த பிறகுதான் வைத்துக் கொள்ள வேண்டி வரும்' என்று நான் அவரிடம் தெரிவித்தபோது 'அதனால் என்ன நிச்சயம் மட்டும் செய்து விட்டு கல்யாணத்தை படிப்பு முடிந்த பிறகே வைத்துக் கொள்ள லாம் என்று அவர்கள் சொன்னார்கள்.

அதனால் உன் சம்மதத்தை அறிய அவகாசம் இல்லாத சூழ்நிலையில் 12—ஆம் தேதி பெண் பார்க்க வரலாம் என்று அவர்களுக்கு நான் கடிதம் எழுதிப் போட்டு விட்டேன். எனவே, இரண்டு நாட்கள் லீவு போட்டுவிட்டு 11-ஆம் தேதியே நீ ஊருக்குப் புறப்பட்டு வந்துவிடு. மற்ற விபரங் களை நேரில் பேசிக் கொள்ளலாம்.

உன் அன்பான அப்பா,
சிவநேசன்.

படித்து முடித்த சத்யா தனபாலைப் பார்த்தான்.

"நல்ல வேளை, நாம பிரிச்சது நல்லதாப் போச்சு. 12-ஆம் தேதின்னா இன்னும் ஏழு நாள் தானே இருக்கு சத்யா. இந்த புதுச் சிக்கலை எப்படி தீர்க்கப் போறோம்?" என்றான் தனபால்.

# 23

**காதலின் நாக்கு கண்களில் இருக்கிறது.**
**—பி. ஃப்ளெட்சர்**

ஆஷாவுக்கு அவள் அப்பா எழுதியிருந்த அந்தக் கடிதத்தைப் படித்ததும் சத்யா குழப்பமுற்றான். அமைதி யாக மடக்கி அதன் கவரில் போட்டான்.

"இப்ப இந்த லெட்டரை ஆஷாகிட்ட காட்டப் போறியா சத்யா?" என்றான் தனபால்.

"யோசிக்கணும் தனபால். ஆஷாவோட நிலைமையில இருந்து நீ யோசிச்சுப் பாரு. இப்படி ஒரு லெட்டரைப் படிச்சா உன் ரியாக்ஷன் என்னவா இருக்கும்.

"நொந்துடுவேன் சத்யா. வீட்ல இப்படி ஒரு அருமை யான மாப்பிள்ளையை செலக்ட் பண்ணி கல்யாண ஏற்பாடு கள் செய்துகிட்டிருக்கிற சூழ்நிலையில முட்டாள்தனமா மனசையும், உடம்பையும் கெடுத்துக்கிட்டமேன்னு ரொம்ப வருத்தப்படுவேன்."

"நொந்துபோன மனநிலையில இருக்கிற ஆஷாவுக்கு இந்த புது வருத்தத்தை நாம் கொடுக்கணுமா தனபால்?"

"லெட்டர் வந்ததையே மறைச்சிடலாம்னு சொல் றியா?"

"என்னால் எந்த முடிவுக்கும் வர முடியலை."

"ஊர்ல அவளை எதிர்பார்த்துக்கிட்டிருப்பாங்க சத்யா. குறிப்பிட்ட தேதில அந்த கரூர் மாப்பிள்ளை வீட்டுக்காரங்க பொண்ணு பார்க்க வருவாங்க. அப்ப பொண்ணு வீட்ல இல்லைன்னா ஆஷாவோட அப்பாவுக்கு பெரிய அவமானம். சரியான காரணம் தெரியாம குழம்பிப் போயிடுவாங்க. புறப்பட்டு நேர்லயே வந்துடுவாங்க."

இருவரும் நடந்து அருகில் இருந்த ஒரு சிறிய காபி கடை வாசலுக்கு வந்தார்கள். தனபால் இரண்டு காபி சொன்னான். போடப்பட்டிருந்த பெஞ்சில் அமர்ந்தார்கள்.

"சத்யா எனக்கொரு யோசனை தோணுது."

"என்ன தனபால்?"

"ஆஷாவைத் தன் ஆசைக்குப் பயன்படுத்திக்கிட்டு கை கழுவிட்ட தீபக் மனசு மாறி அவளை ஏத்துக்க முன் வருவான்னு நீ எதிர் பார்க்கறியா?"

"தீபக்கைப் பொறுத்தவரைக்கும் ஆஷா அவனோட லிஸ்ட்ல ஒரு நம்பர். அவ்வளவுதான். அவமேல அவனுக்கு கொஞ்சம்கூட காதல் கிடையாது. அவளுக்கு ஏற்பட்ட பாதிப்புக்காக வருத்தப்படறதா இல்லை. அவன் திருந்துவான்னு எதிர்பார்க்க முடியாது. அப்படியே மனசு மாறி அவளை ஏத்துக்க முன் வந்தாலும் இப்ப ஆஷா தயாரா இல்லை தனபால். அவன் செஞ்ச துரோகம் ஒரு பெரிய முள்ளா அவ மனசுல உக்காந்து கீறிக்கிட்டே இருக்கு. அவளால அவனை மன்னிக்க முடியாது."

"ரைட்டு, அப்படியிருக்கறப்ப அந்த அயோக்யனால ஏற்பட்ட பாதிப்பை நினைச்சிக்கிட்டே இவ வாழ்க்கை பூரா சோகமா இருக்கணும்னு தலையெழுத்தா? அது அநியாயம் இல்லையா?"

"அநியாயம்தான். அதனாலதான் அவளை இந்த சோகத்திலேர்ந்து வெளில கொண்டாரணும்னும், வாழ்க்கை மேல் ஒரு நம்பிக்கை ஏற்படுத்தணும்னும் நான் அக்கறை எடுத்துக்கறேன்."

"ரைட்டு. இப்ப நான் சொல்ற யோசனை சரியா வருமான்னு பாரு. ஆஷாவோட அப்பா ஏற்பாடு செஞ்சிருக்குற மாப்பிள்ளையோட இந்த கல்யாணம் நடந்தா என்ன?"



"விளையாடறியா? இவ்வளவு நடந்தப்புறம் எப்படி வேற ஒருத்தன் அவளை கல்யாணம் செய்துக்குவான்?"

"இவ்வளவு நடந்தது யாருக்குத் தெரியும்? இங்கே கொஞ்சம் பேருக்குத்தானே தெரியும்? ஆஷாவே சொன்னாத்தானே தெரியும்? மணமேடையில உக்கார்ற எல்லா மாப்பிள்ளைங்களும் தப்பே செய்யாதவங்கன்னு சொல்ல முடியுமா சத்யா?"

"இதெல்லாம் சரியா வராது தனபால். அதாவசியத்துக்கு சிக்கல் வரும். உண்மையை மறைச்சி இப்படி ஒரு கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு ஆஷா முதல்ல சம்மதிக்க மாட்டா. அப்படியே அவ சம்மதிச்சி ஒத்துழைச்சி இந்தக் கல்யாணம் நடந்தாலும் அவளால் நிம்மதியா வாழ முடியுமா? எப்போ உண்மை தெரிய வந்து குடும்பத்தில் விரிசல் வரும்னு ஒரு பயத்தோடவேதான் ஒவ்வொரு நாளையும் அவ நகர்த்த வேண்டி வரும்."

"ரைட்டு. அந்த மாப்பிள்ளைகிட்ட எல்லாத்தையும் முன்கூட்டியே எடுத்துச் சொல்லிடலாம். உண்மையைப் புரிஞ்சுக்கிட்டு விசாலமான மனசோட அவன் ஏத்துக்கிட்டா? கற்பழிக்கப்பட்ட பொண்ணுங்களுக்கு எத்தனை பேர் வாழ்க்கை தர்றாங்க?"

"இதெல்லாம் பேசவும், கேக்கவும் நல்லாருக்கும் தனபால். அவ்வளவு பெரிய தியாக மனசோட உள்ள நபர்கள் ரொம்ப ரொம்ப கம்மி. ஆஷாவுக்கு இப்ப தேவை கல்யாணம் இல்லை ஆறுதலும், தைரியமும். கல்யாணம் பண்ணிக்கிற மனநிலையிலயும் அவ இல்லை. உடல் நிலையிலயும் அவ இல்லை."

"ஏன். உடம்புக்கு என்ன? அதான் காப்பாத்திட்டாங்களே?"

"அதில்லை தனபால், அவளுக்கு..." சற்று நிதானப்படுத்திக் கொண்ட சத்யா, "நிறைய ஓய்வு தேவைப்படற

சூழ்நிலை இது. நிறைய ரத்தம் இழந்திருக்கா. அதுக்காக சொன்னேன்'' என்றான்.

"இந்த லெட்டரைப் பத்தி என்ன செய்யப் போறே?''

"டைம் இருக்கு. நல்லா யோசிச்சி ஒரு முடிவுக்கு வரலாம். ஒரு நல்ல யோசனை வர்றதுக்கு முன்னாடி அவசரப்பட்டு ஆஷாவுக்கு லெட்டரைக்காமிக்க வேணாம்னு தான் நினைக்கிறேன்'' என்றான் சத்யா.

ஃ ஃ ஃ

தெய்வநாயகி தன் படுக்கை அறையில் மேஜை விளக்கைப் போட்டுக் கொண்டு அமர்ந்து இருந்தார். மேஜை மேல் அச்சடித்து வந்திருந்த கல்யாணப் பத்திரிகை களில் கொஞ்சம் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பார்த்துக் கொண்டிருந்த அரசாங்கக் கோப்பில் அவர் மனம் ஈடுபட வில்லை. மூடி வைத்து விட்டு கண்ணாடியைக் கழற்றினார். திருமண அழைப்பிதழ்களின் மேல் அவர் பார்வை விழுந்தது. உடனே மனம் திடுக்கிட்டுக் கலங்கியது.

ஒன்றைக் கையில் எடுத்துப் பார்த்தார்.

'தீபக்' என்ற தன் மகளின் தங்கப் பெயரை பார்வை தடவியது. கடவுளே! இருக்கக் கூடாது! இவனுக்கு அந்தக் கொடுமையான நிலை வந்துவிடக் கூடாது! வளர்ந்த விதம் தப்பா, இல்லை வளர்த்த விதம் தப்பா? இவன் செய்த பாவங்களுக்கெல்லாம் தண்டனையா? பணத்தால் பிரச் சினைகளைத்தான் சமாளிக்க முடிந்திருக்கிறது. பாவத்தை? அதை எப்படி அழிக்க முடியும்?

தெய்வநாயகியின் கண்கள் கலங்கின.

அறைக் கதவைத் திறந்து கொண்டு சூயிங்கம் மென்ற படி உள்ளே வந்தான் தீபக் அறையை சிகரெட் நெடி ஆக்கிரமித்துக் கொண்டது.



"என்னம்மா, உங்களைப் பார்த்துட்டு படுக்கப் போகச் சொன்னீங்களாம்? '

"உக்காரு தீபக். உங்கப்பா என்னை டைவர்ஸ் செஞ்சிப் போனப்ப கூட நான் இவ்வளவு கலங்கலை தீபக் ஆனா இப்ப எனக்கு ரொம்ப கலக்கமா இருக்குப்பா.''

"என்னம்மா இது, நல்ல காரியம் நடக்கப் போகுது. சந்தோஷப்பட வேண்டிய சூழ்நிலையில் எதுக்காக சங்கடப் பட்டுகிட்டிருக்கீங்க?''

"இந்தக் கல்யாணம் நல்லபடியா நடந்துடுமாங்கிற சந்தேகம் எனக்கு ஏற்பட்டிருக்கு தீபக்.''

"ஏம்மா? அதில் என்ன பிரச்சினை? எல்லா ஏற்பாடும் நடந்துகிட்டிருக்கு. என்ன உங்களுக்கு திடீர் சந்தேகம்?''

"நாளைக்குக் காலைல ஒன்பது மணிக்கு நீ வீட்ல இரு தீபக்.''

"சரி எதுக்கும்மா? யாராச்சும் வர்றாங்களா?''

"ஒரு டாக்டரை வரச் சொல்லிருக்கேன்.''

"டாக்டரா? எதுக்கு?''

"உன் உடம்பை செக் பண்றதுக்கு உன் உடம்புலேர்ந்து ப்ளட் சாம்ப்பிள் எடுக்கறதுக்கு.''

"எனக்கென்னம்மா? நான் நல்லாத்தானே இருக்கேன்?''

"நீ நல்லாத்தான் இருக்கேன்னு அந்த டாக்டர் பொண்ணு வீட்டுக்காரங்க கிட்ட சொல்லிடட்டும்.''

"எனக்கு ஒண்ணும் புரியலை.''

"சம்பந்தி போன் செஞ்சார் தீபக். பொண்ணோட ஒரு மாமா அமெரிக்கால டாக்டரா இருக்காராம். ஜாதகப் பொருத்தம் மட்டும் பார்க்காதீங்க. ஹெல்த் ரீதியா பொண்ணும் மாப்பிள்ளையும் கய்யாணத்துக்கு கூட்ட

பிளான்னும் பார்த்துடுங்கன்னு அவர் சொன்னாராம். அதனால பொண்ணோட ஹெல்த் ரிப்போர்ட் அனுப்பி வைக்கிறோம். மாப்பிள்ளையோட ஹெல்த் ரிப்போர்ட் ஒண்ணு அனுப்பி வைச்சிடுங்கன்னு சொன்னார் சம்பந்தி?''

''நான்சென்ஸ் நீங்க எப்படிம்மா ஒத்துக்கிட்டீங்க? இது என்னை இன்சல்ட் பண்ற மாதிரி இல்லையா?''

''இதில அவமானம் என்ன இருக்கு தீபக்? அவங்களும் பெண்ணோட ஹெல்த் ரிப்போர்ட் அனுப்பறாங்களே. அவமானம்னு பார்த்தா அந்தப் பொண்ணுக்கும் இது மாதிரி பார்த்துக்கறது புதுசுஇல்லை தீபக். நிறைய கேள்விப் பட்டிருக்கேன் நான். நல்ல சம்பந்தம் இது பெரிய இண்டஸ்ட்ரியலிஸ்ட்டோட பொண்ணு. அவங்க கேட்ட படி உன்னை டெஸ்ட் செஞ்சி ரிப்போர்ட் அனுப்பி வைக்கிறதா நான் வாக்கு கொடுத்துட்டேன் தீபக்.''

''நம்ம மாப்பிள்ளை வீட்டுக்காரங்க நமக்கு அவுங்க என்ன கண்டிஷன் போடறது?''

''கண்டிஷன் இல்லை. ரிக்வெஸ்ட் நியாயமாதான் இருக்கு. இதில உனக்கென்ன பிரச்னை?''

''எனக்கு...எனக்கெதுவும் பிரச்சினை இல்லை. ஆனா இந்தக் கல்யாணம் நடக்குமான்னு சந்தேகமா இருக்குன்னு எதுக்கு நீங்க சொன்னீங்க?''

''உன்னைப் பத்தி அரசல்புரசலா அவங்களுக்கு ஏதாச்சும் தகவல் கிடைச்சு அதனாலதான் ஹெல்த் ரிப்போர்ட் கேக்கறாங்களோன்னு ஒரு கவலை.''

''ஒரு அமைச்சர் இப்படி கவலைப் படலாமா?''

''அமைச்சருக்கு எந்தக் கவலையும் இல்லைடா. உன் அம்மாவுக்குத்தான் கவலை எல்லாம். நான் எத்தனையோ



தடவை எடுத்துச் சொல்லியும் உன் போக்கை நீ மாத்திக் காமலே இருந்திட்டே, அதனாலதான் கவலைப்பட வேண்டியதா இருக்கு.''

''கல்யாணத்துக்கப்புறம் ஒழுங்கா இருப்பேன்னு நான் தான் உங்ககிட்ட ப்ராமிஸ் பண்ணிருக்கேனேம்மா. இந்த ஹெல்த் செக்-அப் கண்டிப்பா செய்துக்கணுமா?''

''ஆமாம் தீபக்.''

''சரிம்மா!'' என்றுவிட்டு அவன் வெளியேற. பெருமூச்சு விட்டார் தெய்வநாயகி.

ஃ ஃ ஃ

மறுநாள் மாலை.

டாக்டர் கிரியின் வீட்டுக்கு வந்த சத்யா அவருக்காக வரவேற்பறையில் காத்திருந்தான்.

கிரி வெளிப்பட்டு உள் அறைக்கு அழைத்துச் சென்றார்.

''சத்யா, நாம சந்தேகப்பட்டபடி தீபக் உடம்புல ஹெச். ஐ. வி. கிருமிகள் இருக்கு. டெஸ்ட் ரிப்போர்ட் சொல்லுது. இதை இன்னும் தீபக் அம்மாகிட்ட சொல்லலை. அவங்க எப்படி ரியாக்ட் பண்ணப் போறாங்கன்னு தெரியலை'' என்றார் டாக்டர்.

டெலிபோன் ஒலித்தது. எடுத்து ''ஹலோ, கிரி ஹியர்'', என்றார்.

''டாக்டர் நான் தெய்வநாயகி பேசறேன். என்னாச்சு டாக்டர் என் பையனோட ரிசல்ட்?'' என்றார் தெய்வநாயகி.

# 24

திரைப்படங்களில் ஒரு ஆரம்பம், ஒரு நடுப் பகுதி மற்றும் ஒரு முடிவு இருக்க வேண்டும். ஆனால் அதே வரிசையில் இருக்க வேண்டும் என்று அவசியமில்லை.

—ஜீன்-லுக்-கோடார்ட்

போனில் தெய்வநாயகி தன் மகனுடைய ரிசல்ட் என்னாயிற்று என்று கேட்டதும் டாக்டர் கிரி தடுமாறினார்.

"அது...வந்து...மேடம்...கிராஸ் செக் பண்ணிக்கிறதுக்காக இன்னொரு லேபரட்டரிலவும் டெஸ்ட் கொடுத்திருக்கேன். ஈவினிங்தான் ரிசல்ட் தெரியும்."

"தெரிஞ்சதும் உடனே எனக்கு போன் பண்றிங்களா?"

"சரி மேடம், ஈவினிங் எங்கே இருப்பீங்க?"

"இன்னைக்கு பூரா எல்லா நிகழ்ச்சிகளையும் ரத்து பண்ணிட்டு வீட்லதான் இருக்கேன். எனக்கு ரொம்ப டென்ஷனா இருக்கு டாக்டர்."

"தைரியமா இருங்க மேடம்."

போனை வைத்த டாக்டர் கிரி, "அமைச்சர் குரலே பிசிறுது. என்ன தான் பையனோட மோசமான நடவடிக்கைகளுக்காக தண்டனை இதுன்னு ஒரு நியாய சமாதானத்தை மனசுக்கு சொன்னாலும், பெத்த மனசு கேக்குமா?" என்றார்.

சத்யா ஆமோதிப்பதாகத் தலையசைத்தான்.

"என்ன செய்யலாம் டாக்டர்?"



"ஈவினிங் மினிஸ்டரைப் பார்த்து பக்குவமா சொல்லலாம். நடக்கப்போற கல்யாணத்தை முதல்ல நிறுத்தச் சொல்லணும்.?'

"திடீர்னு என்ன காரணம் சொல்லுவாங்க இவங்க?"

"எதாச்சும் கற்பனையா சொல்ல வேண்டியதுதான். 'பையன் ஒரு பொண்ணை லவ் பண்றானாம். இந்தக் கல்யாணத்துக்கு என் பிடிவாதத்தாலதான் சம்மதிச் சானாம். என்னை மன்னிச்சிடுங்க'—ன்னு அமைச்சர் போன் பண்ணி சொல்லிட வேண்டியதுதான்."

"தீபக்கிட்டே எப்போ, எப்படி சொல்லப் போறீங்க டாக்டர்?"

"அதான் இப்ப சிக்கலான பகுதி. மெதுமெதுவா அவன் மனசை இந்த அதிர்ச்சியான செய்திக்கு இப்போ ஆஷாவை திவ்யா மூலமா தயார் படுத்தற மாதிரி தயார் படுத்தறதுக் கான அவகாசம் இல்லை. ஏன்னா முதல்ல கல்யாணத்தை நிறுத்தணும். அதுக்கு பொண்ணு வீட்டுக்காரங்களுக்கு முன்னாடி இவன் காரணம் கேப்பான்."

"நிச்சயமா?"

"இந்த ஹெச்.ஐ.வி. பாசிடிவ் மேட்டர் இருக்கே, ரொம்ப சென்சிடிவான மேட்டர். திடீர்னு சொல்லிட்டா சியாக்ஷன் சில பேருக்கு கொடுமையா இருக்கும். முடிஞ்ச வரைக்கும் இதமா சொல்லலாம். ஆஷா எப்படி இருக்கா?"

"திவ்யா வீட்டுக்குப் போயிட்டுதான் வர்றேன். திவ்யா ஒரு பெஸ்ட் ஃபிரண்டு மாதிரி கூடவே இருந்து கவனிச்சுக் சுறாங்க. வெளில அழைச்சிட்டுப் போறாங்க. அரட்டை அடிக்கிறாங்க. இன்னைக்குத்தான் ஆஷா முகத்தில லேசா ஒரு புன்னகையைப் பார்த்தேன்."

"வெரிகுட்."

“இன்னொரு பிரச்சினை வந்திருக்கு டாக்டர்.”

“என்ன?”

“ஆஷாவுக்கு அவங்கப்பா ஒரு மாப்பிள்ளை பார்த்து
வெச்சிருக்கார்.”

“போச்சுடா!”

“எல்லா ஏற்பாடும் முடிஞ்சி அவங்களை பொண்ணு
பார்க்க வரச்சொல்லிட்டார். ஆஷாவுக்கு விபரமா எழுதி
ஊருக்கு வரச் சொல்லி தபால் போட்ருக்கார். வர்ற
12ஆம் தேதி அவங்களை வரச்சொல்லி இருக்கார். 11ஆம்
தேதி இவளை ஊருக்கு வரச் சொல்லியிருக்கார்.”

“இந்தத் தபால் மேட்டர் ஆஷாவுக்கு...”

“தெரியாது டாக்டர். ஏற்கனவே வார்டன் பிரிச்சி
படிச்சிருந்த லெட்டரா இருந்ததால, ஏதாச்சும் அதிர்ச்சி
யான தகவல் இருந்துடப்போகுதேன்னுதான் நான் படிச்சுப்
பார்த்துட்டேன். அந்த லெட்டர் இப்ப என்கிட்டதான்
இருக்கு.”

டர்க்டர் கிரி பெருமூச்சு விட்டார்.

தன் கையில் இருந்த மருத்துவப் புத்தகத்தின் பக்கங்
களை விர்ரென்று சிந்தனையாகப் புரட்டினார்.

“டாக்டர், இந்த லெட்டர் படிச்சதுக்கப்புறம் எனக்கு
ஒரு யோசனை தோணிச்சு.”

“சொல்லு சத்யா.”

“ஏன் டாக்டர், ஹெச்.ஐ.வி. பாசிடிவ் உள்ள ஒரு
நபர் வேற யாரையாவது கல்யாணம் பண்ணிக்கிட்டா அந்த
நபருக்கு கண்டிப்பா அந்தக் கிருமிகள் பரவிடுமில்லையா?”

“பாதுகாப்பு ஏற்பாடுகள் எதுவுமில்லாம உறவு
வெச்சிக்கிட்டா!”



“ரைட்! ஒரு ஹெச்.ஐ.வி. பாசிடிவ் நபர் இன்னொரு
ஹெச்.ஐ.வி. பாசிடிவ் நபரைக் கல்யாணம் பண்ணிக்
கிட்டா?”

“பண்ணிக்கலாமே. உடல் ஊனமுற்றவங்க ரெண்டு
பேர் கல்யாணம் பண்ணிக்கிறதில்லையா?”

“தீபக் செஞ்ச தப்புக்கு பிராயச்சித்தமாவும் ஆயிடும்.
ஆஷாவுக்கும் ஒரு வாழ்க்கை வேணும். தீபக் ஆஷாவை
கல்யாணம் செய்துக்கற மாதிரி நாம் ஏன் ஏற்பாடு செய்யக்
கூடாது டாக்டர்?

“நல்ல யோசனைதான். ஆனா ஆஷா அவன் மேல
கோபமா இருக்காளே.”

“இல்லை டாக்டர், கோபம் அவன் மேல இல்லை;
அவன் செஞ்ச துரோகத்து மேல! தீபக் மனசார
திருந்தி, உணர்ந்து மன்னிப்பு கேட்டா நிச்சயம் அவ மனசு
இரங்கிடுவா டாக்டர். தீபக் தனக்கு ஏற்பட்டிருக்கிற
பாதிப்பைத் தெரிஞ்சுக்கிட்டா முதல்ல அதிர்ச்சி அடை
வான். அப்புறம் உணர்வான் டாக்டர். அவனும் ஒரு
மனுஷன்தானே?”

“சத்யா, எந்த விஷயத்தையும் மறைச்சி ஒரு கல்யா
ணத்தை நடத்தக்கூடாது. ஆஷாவுக்கு இன்னும் இந்த
அதிர்ச்சியான தகவல் தெரியாது. தெரிஞ்சா இதுக்கும்
காரணமான தீபக் மேல இன்னும் ஆத்திரம் பல மடங்கு
அதிகமாகும். தீபக் என்னதான் மனசுருகி மன்னிப்புக்
கேட்டாலும் அவ கோபம் தணியாது. உன்னோட
ஆதங்கம் புரியுது சத்யா. இப்போ முதல்ல தீபக் மேட்ட
ரைப் பார்ப்போம்” என்றார் டாக்டர் கிரி.

ஃ ஃ ஃ

அமைச்சர் தெய்வநாயகி கர்சீப் எடுத்துத் தன் நெற்றி
யில் துளிர்த்த வியர்வைத் துளிகளை ஒற்றிக் கொண்டார்.

எதிரே அமர்ந்திருந்த டாக்டர் கிரியையும், சத்யாவையும் படபடப்பாகப் பார்த்தார்.

"சொல்லுங்க டாக்டர், எந்தச் செய்தியையும் ஏத்துக்க என் மனசைத் தயார்படுத்திக்கிட்டேன் நான்" என்றார்.

"மேடம், என்னோட தயக்கத்திலேர்ந்தே ரிசல்ட்டை நீங்க புரிஞ்சிட்டிருக்கலாம். உங்க பையன் தீபக் ஒரு ஹெச்.ஐ.வி. பாசிடிவ் மேன்தான்!"

அமைச்சர் அதிர்ந்து போனார்.

எதிரே அவர்கள் இருப்பதையும் பொருட்படுத்தாமல் வாய்விட்டுக் கொஞ்ச நேரம் அழுதார் தெய்வநாயகி. கைக்குட்டை எடுத்துத் துடைத்துக் கொண்டார்.

"டாக்டர், நான் அமைச்சரா இருக்கலாம். ஆனா எய்ட்ஸ் பத்தி எனக்கு விபரமாத் தெரியாது. என் பையனை எய்ட்ஸ்லேர்ந்து காப்பாத்த வழி இருக்கா, இல்லையா?" என்றார் பரிதாபமாக.

"மேடம், இப்ப அவருக்கு எய்ட்ஸ் இல்லை. எய்ட்ஸ்ங்கிற பாதிப்பான ஒரு நிலையை உருவாக்கக்கூடிய கிருமிகள் அவர் ரத்தத்தில இருக்கு. அவ்வளவுதான்."

"எத்தனை வருஷம் இவன் உயிரோட இருப்பான் டாக்டர்?"

"இவர் உடம்புல உள்ள கிருமிகளோட தீவிரத்தைப் பொறுத்தது. இவர் உடம்புல எப்போ இந்தக் கிருமிகள் வந்திச்சின்றது எல்லாம் விரிவான ஆராய்ச்சி செய்யணும் மேடம். இனிமே இவர் எடுக்கற நடவடிக்கைகளால் எய்ட்ஸ் நிலை வர்றதை நிச்சயமா தள்ளிப் போடமுடியும். பதினைஞ்சு வருஷத்துக்கு மேல எந்தப் பாதிப்பும் ஏற்படாதவங்க எல்லாம் நிறைய பாஸிடிவ் பீப்பிள் இருக்காங்க."



"இந்தக் கிருமிகளை ஒழிக்கறதுக்கு வழியே இல்லையா?"

"சாரி மேடம். இதுவரைக்கும் இல்லை."

"சித்த வைத்தியத்தில் ஏதோ மருந்திருக்கிறதா மூலிகை வைத்தியத்தில குணப்படுத்தறதா அப்பப்ப பேப்பர்கள்ல விளம்பரம் வருதே..."

"அதெல்லாம் சும்மா ஒரு வியாபாரத் தந்திரம்தான். எந்த வைத்திய முறையிலயும் இதுக்கு மருந்து இல்லை. இதுக்கு முதல் மருந்து நம்பிக்கை! உடம்பை எப்படி ஆரோக்யமா வெச்சுக்கிறது, மனசை எப்படி தைரியமா வெச்சுக்கிறதுன்னு நாங்க சொல்லித் தரத் தயாரா இருக்கோம். எங்களோட ஒத்துழைச்சா பாதிப்பு நாட்களைத் தள்ளிப் போட்டு, வாழ்ற நாட்களை அதிகப்படுத்திக்க முடியும்."

"தள்ளிப் போடத்தான் முடியும். தடுக்க முடியாதில்லையா?"

"முடியாது மேடம். ஆனா இன்னைக்கு இருக்கிற விஞ்ஞான வளர்ச்சில எப்பவும் எதுவும் நிகழலாம். உலகம் பூரா எத்தனையோ விஞ்ஞானிகள் இதுக்கு மருந்து கண்டுபிடிக்கிற தீவிரமான ஆராய்ச்சிகள்ல இருக்காங்க. திடீர்னு அது கண்டுபிடிக்கப்படலாம். அந்த நம்பிக்கையையும் சேர்த்துக்கிட்டு வாழணும்."

தெய்வநாயகி நிலைகுத்திய பார்வையுடன் சற்று நேரம் அமர்ந்திருந்தார்.

"இப்போ நான் என்ன செய்யணும்?" என்றார் உலர்ந்த குரலில்.

"தீபக்குக்கு நடக்க இருக்கிற கல்யாணத்தை நிறுத்தறதுதான் நியாயம்!"

"கண்டிப்பா! இவனோட பாதிப்பு இவனோட போகட்டும்!"

"இவரோட மட்டும் போகலை மேடம். நாங்க சொன்னமே ஆஷான்னு ஒரு பொண்ணு, அவளோட ரத்தத்திலயும் ஹெச்.ஐ.வி. பாசிடிவ்!" என்றான் சத்யா.

"கொடுமை!"

"தீபக்கால இன்னும் எத்தனை பெண்கள் பாதிக்கப்பட்டிருக்காங்களோ, நமக்குத் தெரியாது."

"இப்போ இதை எப்படி நான் தீபக்கிட்டே சொல்வேன்?" என்றார் தெய்வநாயகி.

"அதுக்கு அவசியமில்லை" என்ற குரல் கேட்டு அறையின் வாசல் பக்கம் மூன்று பேரும் திரும்பிப் பார்த்தார்கள்.

சூயிங்கம் மென்றபடி உள்ளே மெதுவாக நடந்து வந்தான் தீபக்.

"தீபக்...நீ...நீ... இங்க பேசிட்டிருந்ததை எல்லாம்...?"

"எல்லாம் கேட்டுட்டேம்மா" என்ற தீபக் பதட்டமே இல்லாமல் வந்து அமர்ந்து சூயிங்கத்தைத் தொடர்ந்து மென்றான்.

இவன் எப்படி எந்த அதிர்ச்சியும் இல்லாமல் சாதாரணமாக இருக்கிறான் என்று புரியாமல் பார்த்தான் சத்யா.

"மிஸ்டர் தீபக், உங்க ரத்தத்தில..." என்றார் டாக்டர் கிரி.

"தெரியும் டாக்டர். நான் ஒரு ஹெச்.ஐ.வி. பாசிடிவ் மேன். இது எனக்கு நல்லாத் தெரியும். இப்ப இல்லை, எப்பவோ எனக்கு நல்லாத் தெரியும்" என்றான் தீபக்.

# 25

இந்த வருடத்தின் நாகரீகங்களுடன் பொருத்திக் கொள்வதற்காக என் மனசாட்சியைக் கொலை செய்ய முடியாது.

—லிலியன் ஹெல்மேன்

தான் ஒரு ஹெச்.ஐ.வி. பாசிடிவ் நபர் என்பது தனக்கு எப்போதோ தெரியும் என்று தீபக் சாதாரணமாகச் சொன்னதும் டாக்டர் கிரி அமைச்சர் தெய்வநாயகி, சத்யா மூவருக்கும் பெரிய அதிர்ச்சியாக இருந்தது. "தீபக். என்ன சொல்றே நீ? உனக்கு ஏற்கெனவே தெரியுமா?" என்றான் சத்யா.

"ஆமாம்."

"எப்போ தெரியும்?" என்றார் டாக்டர்.

"ஒரு வருஷத்துக்கு முன்னாடியே தெரியும். வேற ஒரு பிரச்சினைக்காக பிளட் டெஸ்ட் பண்ணிக்க வேண்டியிருந்திச்சி. அப்படியே ஹெச்.ஐ.வி. டெஸ்ட்டும் பண்ணிடுங்கன்னு சொன்னேன். ரிசல்ட் எதிர்பார்த்த மாதிரிதான் இருந்தது. ஏன்னா...பெண்கள் விஷயத்தில் நான் கொஞ்சம் ஈடுபாடா இருக்கிறவன்."

தெய்வநாயகி அவனை உற்றுப் பார்த்தார். அவர் முகம் சிவந்திருந்தது.

"ஏண்டா, உனக்கு இப்படி ஒரு அபாயமான பிரச்சினை இருக்குன்னு தெரிஞ்சும் எப்படிடா கல்யாணத்துக்கு சம்மதிச்சே?"

"ஏன். ஹெச்.ஐ.வி. பேஷண்ட் கல்யாணம் பண்ணிக்கக் கூடாதுன்னு எந்த சட்டத்திலயாவது சொல்லியிருக்குதா?"

"தீபக், உனக்கு இந்த பாதிப்பு அதிர்ச்சியா இல்லையா? இதை உன்னால இயல்பா எடுத்துக்க முடியுதா" என்றான் சத்யா.

"எப்படி முடியும் சத்யா? ரிசல்ட் தெரிஞ்சிகிட்டதுக்கப் புறம் எனக்கு பைத்தியம் பிடிச்ச மாதிரி ஆய்டுச்சி. ஒரு வாரத்துக்கு பெங்களூர்ல போய் ஓவரா குடிச்சிட்டு சுத்தினேன். தங்கியிருந்த ஹோட்டல் ஏழாவது மாடி லேர்ந்து குதிச்சிடலாமான்னு ரெண்டு தடவை நினைப்பு வந்திச்சு."

"அப்புறம்?"

"லேபுல என் ரத்தத்தை சோதனை செஞ்சி ரிசல்ட் சொன்ன டாக்டர் என்னை உக்கார வெச்சு ரெண்டு மணி நேரம் ஆறுதலா என்னென்னவோ சொன்னார். நம்ம வாழ் நாள் எவ்வளவுன்னு தெரியாம இருக்கிறதில சில சௌகரியங்கள் இருக்கு. தெரிஞ்சிக்கிறதில சில சௌகரியங் கள் இருக்குன்னாரு. எல்லாம் போச்சேன்னு புத்தி பேதலிச்சுப் போனேன் நான். யார்கிட்டயும் சொல்லிக்கிற விஷயமா இது? இல்லையே! ஒரு மாசம் நான் எனக் குள்ளேயே புழுங்கிக்கிட்டேன். அப்புறம் திடீர்னு எனக்கே ஒரு தெளிவு வந்துடுச்சி. இன்னும் ஏழெட்டு வருஷம்தான் வாழ்க்கைன்னு ஆயிடுச்சி. அதுக்குள்ளே நமக்குப் பிடிச்ச விஷயங்களைமேக்சிமம் அனுபவிச்சி சந்தோஷமாஇருந்துட்டு செத்துப் போய்டலாமே! எதுக்காக உம்முன்னு வெச்சுக் கிட்டு மனசை பாரமா வெச்சுக்கிட்டு ஒவ்வொரு நிமிஷமும் சாகணும்? எனக்கு ரொம்பப் பிடிச்ச விஷயம்... பெண்கள் அதனால நான் பாட்டுக்கு ஜாலியா, உற்சாகமா திரிய ஆரம்பிச்சிட்டேன்" என்றான் தீபக்.

"தீபக் இதனால ஏற்படற விளைவுகளைப் பத்தி நீங்க யோசிச்சுப் பார்க்கவே இல்லையா?" என்றார் கிரி.

"என்ன விளைவுகள்?"



"நீங்க ஜாலியா பழகற ஒவ்வொரு பொண்ணுக்கும் உங்க உடலோட பாதிப்பு தொத்திக்கும்னு உங்களுக்குத் தெரியாதா?"

"தெரியும். நல்லாத் தெரியும்."

"தெரிஞ்சும்...ஏன்?"

"நான் பழகின ஏதோ ஒரு பெண்கிட்டேர்ந்துதானே எனக்கு இந்த பாதிப்பு வந்திச்சு? அதனால... நான் சாகறதுக்குள்ளே முடிஞ்ச வரைக்கும் நிறைய பெண்களுக்கு இந்த பாதிப்பை ஏற்படுத்திட்டுதான் போறதுன்னு தீர்மானிச்சிருக்கேன். எனக்கு மட்டும்தான் அல்பாயுசா? வரட்டுமே, என்னோட ஒரு கூட்டமே துணைக்கு வரட்டுமே." வாய்விட்டுச் சிரித்தான் தீபக்.

"என்ன முட்டாள்தனமான யோசனை இது!" என்று கொதித்துப் போனான் சத்யா. "உன் வீடு தீப்பிடிச்சி எரியுதுங்கறதுக்காக எல்லா வீட்டையும் கொளுத்தி விடறது என்ன நியாயத்தில சேர்த்தி? நீ காதலிக்கிறதா சொல்லி ஏமாத்தி அனுபவிச்சியே ஆஷா...இப்ப அவளும் ஹெச்.ஐ.வி. பாசிடிவ் பேஷண்ட்! தெரியுமா?"

"அப்படியா? வெரிகுட்! நான் மட்டும் தனியா சாகலைப்பா!"

"தீபக்!" கத்தினார் தெய்வநாயகி.

மூவரும் அந்தக் குரலில் அதிர்ந்து திரும்ப... தெய்வ நாயகி ஆவேசமாக நின்று கொண்டிருந்தார். அவர் கையில் ஒரு ரிவால்வர் இருந்தது.

அவர் அதை எங்கிருந்து எப்போது எடுத்தார் என்பதை யாருமே கவனிக்கவில்லை.

கையில் பிடித்திருந்த ரிவால்வரை தீபக்கை நோக்கி உயர்த்திப் பிடித்திருந்தார் அவர். அவர் கண்கள் சிவந் திருந்தன.

"ராஸ்கல்! உனக்கு ஏற்பட்ட பாதிப்பை இன்னும் நிறைய பேருக்கு ஏற்படுத்திட்டுத்தான் சாகணும்னு எப்ப நீ தீர்மானிச்சியோ, அந்த நிமிஷத்திலேர்ந்து நீ மனுஷன் இல்லைடா! மிருகம்! மத்த மனுஷ உயிர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தற கொடூரமான மிருகம்! போதும்! உன்னால மத்தவங்க பாதிக்கப்பட்டது போதும்! இனி புதுசா யாரும் பாதிக்கப்படக் கூடாது! உன்னைப் பெத்ததுக்காக பெருமைப்பட்டேன் தீபக். இப்போ...உன்னை சாகடிக்கிறதுக்காக பெருமைப்படறேன்."

படபடப்பாகப் பேசிய தெய்வநாயகி ரிவால்வரின் ட்ரிக்கரில் ஒரு விரலை வைக்க...

"மேடம்! வேணாம். நான் சொல்றதைக் கேளுங்க. அவசரப்படாதீங்க!" என்று டாக்டர் கிரி பதற...

சத்யா, "ப்ளீஸ்... முதல்ல ரிவால்வரை கீழே வைங்க" என்று கத்த...

"அம்மா! நான் உன் புள்ளைம்மா! என்னைக் கொன்னுடாதே!" என்று விழிகளில் மரண பயம் மின்ன தீபக் உச்சக்குரலில் சத்தமிட...

எதையும் காதில் வாங்கிக் கொள்ளத் தயாரில்லாத அமைச்சர் தெய்வநாயகி தன் மகனைக் குறி பார்த்து மூன்று முறை தொடர்ச்சியாகச் சுட்டார்!

ரத்தம் பீய்ச்சியடிக்க அலறிக் கொண்டு கீழே சாய்ந்தான் தீபக். அவன் உடல் அவசரமாகத் துடித்து அடங்கியது.

தெய்வநாயகி பிரமை பிடித்தவர் போல அப்படியே நின்று கொண்டிருந்தார். டாக்டர் கிரி வேகமாக தீபக் அருகில் அமர்ந்து அவன் கையைப் பிடித்து நின்றதை உணர்ந்து மெதுவாக எழுந்தார்.



சத்யாவால் எதையும் நம்பவே முடியவில்லை.

இரண்டு நிமிடங்களுக்குள் எவ்வளவு அதிர்ச்சிகள்!

தீபக் அந்த அறைக்குள் நுழைந்து இரண்டு நிமிடங்கள் தான் ஆகியிருக்கும்!

சற்றுமுன்...தன் மகனின் உடலில் உள்ள பாதிப்பை அறிந்ததும் வாய் விட்டு அழுத அதே தாய்தானா இவர்? எத்தனை அவசரமாகத் தீர்மானித்து செயல்படுத்தியும் விட்டார்!

தெய்வநாயகி சோபாவில் தொப்பென்று விழுந்தார்.

துப்பாக்கிச் சத்தம் கேட்டதும் அந்த அறைக்குள் அமைச்சரின் காரியதரிசி, வேலைக்காரர்கள், செக்யூரிட்டி, டிரைவர் என்று அனைவரும் ஓடி வந்து நின்று ரத்தத்தில் மிதந்த தீபக்கைப் பார்த்து விக்கித்துப் போனார்கள்.

தெய்வநாயகி துப்பாக்கியை டீப்பாய் மேல் வைத்து விட்டு தன் செகரெட்டரியைப் பார்த்தார்.

"நம்ம ஏரியா போலீஸ் ஸ்டேஷனுக்கு போன் பண்ணி தகவல் சொல்லுங்க. இன்ஸ்பெக்டரை வந்து என்னை அரெஸ்ட் பண்ணச் சொல்லுங்க" என்றார் உணர்ச்சியற்ற வார்த்தைகள்!

"என்ன மேடம் இதெல்லாம்?" என்றான் அந்த இளைஞன் பதட்டம் தணியாமல்.

"ஒரு நச்சுப் பாம்பைத்தான் கொலை செஞ்சுட்டேன். இந்த சமூகத்துக்கு நல்லது செய்றதுக்காகத்தான் மக்கள்

எனக்கு இந்தப் பதவியைக் கொடுத்திருக்காங்க. அந்த மக்களோட உயிரைப் பாதுகாக்க வேண்டியதுதான் என் முதல் கடமை அதைத்தான் நான் செஞ்சிருக்கேன்' என்றார் தெய்வநாயகி.

செகரட்டரி ஸ்தம்பித்து நின்றான்.

“போங்க, போன் பண்ணுங்க'' என்றதும் விலகினான்.

சத்யா தன் உலர்ந்த உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டான்.

“ரொம்ப அதிகமான, தண்டனை இது'' என்றான். “மேடம்... போலீஸ்ல இந்த சம்பவத்துக்கு உண்மையான காரணத்தை...''

“கண்டிப்பா சொல்வேன் தெரிஞ்சுக்கட்டும். இப்படி ஒரு மோசமான பிள்ளையை நான் பெத்து வளர்த்தேன்னு எல்லாரும் தெரிஞ்சுக்கட்டும். இப்படி ஒரு பாதிப்பு ஏற்பட்டதால் இந்த மாதிரி வெறி பிடிச்சி பலரோட வாழ்க்கைல இவன் விளையாடினதெல்லாம் எல்லாருக்கும் தெரியணும். பலபேருக்கு பாடமா இருக்கட்டும். அந்த வகையிலயாவது இவன் உபயோகமா இருக்கட்டும் இந்த சமூகத்துக்கு. ஒரே பிள்ளைன்னு செல்லம் கொடுத்து எதுக்குமே கண்டிக்காம வளர்த்து...''மேற்கொண்டு பேச முடியாமல் குரலடைத்துப் போன தெய்வநாயகி சேலையின் முந்தானையை வாயில் பொத்தி அழத் துவங்கினார்.

மறுநாள் செய்தித்தாள்களில்...

**அமைச்சர் தெய்வநாயகி கைது!**



**தன் மகனை சுட்டுக் கொன்றார்!!**

**மகனுக்கு எய்ட்ஸ்!!!**

அலறின தலைப்புகளுக்குக் கீழே அமைச்சரின் மிகமிக விரிவான வாக்கு மூலம் வெளியிடப்பட்டிருந்தது.

அதில் அவர் எதையுமே மறைக்கவில்லை, தன் மகனின் லீலைகள், கண்டித்தும் திருந்தாதது, திருமண ஏற்பாடு டாக்டர் கிரி, சத்யா சந்தித்தது, ரத்த சோதனை, தீபக் தனக்கு ஏற்கனவே தெரியும் என்றது, பலரை என்னோடு துணையாக அழைத்துச் செல்வேன் என்று அவன் சொன்னது. என்று எல்லாவற்றையும் விளக்கமாகக் குறிப்பிட்டிருந்தார்.

திவ்யாவின் வீட்டில் ஆஷா அந்த செய்தித்தாளில் எல்லாவற்றையும் படித்துவிட்டு அதிர்ச்சியோடு நிமிர்ந்து, “திவ்யா இதைப் படிச்சீங்களா? அய்யோ! அப்படின்னா தீபக்கோட பழகின எனக்கும் அந்த பாதிப்பு ஏற்பட்டிருக்குமா!'' என்றாள் திகிலாக.

## 26

> புகைப்படம் என்பது. உண்மை. சினிமா என்பது விநாடிக்கு 24 முறை உண்மை.
>
> —ஜே. எல். கோடார்ட்

செய்தித்தாளில் கைதான தெய்வநாயகியின் விரிவான வாக்குமூலத்தைப் படித்து விட்டு தனக்கும் அந்தப் பாதிப்பு

ஏற்பட்டிருக்குமா என்று கேட்ட ஆஷாவுக்கு என்ன பதில் சொல்வதென்று புரியாமல் திகைத்தாள் திவ்யா.

இப்போதுதான் ஆஷாவின் மனம் தற்கொலை எண்ணத்திலிருந்து வெளியே வந்து சகஜ நிலைக்குத் திரும்பியிருக்கிறது. தீபக் செய்த துரோகத்தால் மனதில் ஏற்பட்டிருந்த வெம்மை இப்போதுதான் தணிந்திருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் இந்தப் பத்திரிகைச் செய்தியை இவள் படித்துவிட்டாளே! இப்போது என்ன சமாதானம் சொன்னால் எடுபடும்?

"சொல்லுங்க திவ்யா" என்றாள் ஆஷா படபடப்பாக.

"என்ன?"

"தீபக் ஒரு ஹெச். ஐ. வி. நோயாளின்னா அவனோட பழகின எனக்கும் அந்தப் பாதிப்பு ஏற்பட்டிருக்கணுமே?"

"நீயா ஏன் ஆஷா அப்படி கற்பனை செஞ்சுக்கறே? அப்படி இருந்தா உன்னை டிஸ்சார்ஜ் செஞ்சப்போ மெடிக்கல் ரிப்போர்ட்ல டாக்டர் அதை எழுதியிருப்பாரில்லையா? உன் ரிப்போர்ட்டை நான் படிச்சுப் பார்த்தேன். அதில் எதுவும் அப்படி இல்லை. ஆஷா, தைரியமா இரு"

"எங்கே அந்த ரிப்போர்ட்? நான் ஒரு தடவை பார்த்துடறேன். அப்பதான் எனக்கு மனசுக்குத் திருப்தியா இருக்கும்."

"நீ இங்கேயே இரு ஆஷா. நான் எடுத்துட்டு வர்றேன்."



தோட்டத்து ஊஞ்சலில் அமர்ந்திருந்த ஆஷாவை அங்கேயே விட்டு விட்டு பங்களாவுக்குள் வந்த திவ்யா அவசரமாக டாக்டர் கிரிக்கு போன் செய்தாள்.

அவர் மனைவிதான் எடுத்தார்.

"ஹலோ ஆன்ட்டி, நான் திவ்யா பேசறேன்."

"சொல்லும்மா. எப்படி இருக்கே?"

"நல்லாருக்கேன். நீங்க?"

"ஃபைன். அந்தப் பொண்ணு ஆஷா எப்படி இருக்கா?"

"அவளைப் பத்திதான் நான் டாக்டர்கிட்ட பேசணும்."

"குளிச்சிட்டிருக்கார். லைன்ல இருக்கியா? இப்ப வந்துடுவார். பேப்பர் பார்த்தியா திவ்யா, தீபக் மேட்டர் தெரியுமா?"

"தெரியும் ஆன்ட்டி. நான் நேத்து ராத்திரி சத்யாகூட பேசினேன். அப்பவே எல்லாம் தெரிஞ்சுக்கிட்டேன். பேப்பர்ல செய்தி வருமே, அதை ஆஷா படிப்பாளேன்னு தோணலை. இயல்பா ஆஷாவை பேப்பர் படிக்கச் சொன்னேன். இப்ப அவ எனக்கும் ஹெச். ஐ. வி. இருக்குமா?"னு கேக்கறா.

"போச்சுடா! இதோ டாக்டரே வந்துட்டார். பேசு."

"ஹலோ, கிரி பேசறேன். என்னம்மா திவ்யா?"

"டாக்டர், பேப்பர்ல வந்த நியூஸ் பூரா ஆஷா படிச்சிட்டா."

"ரைட்டோ, என்ன அவளோட ரியாக்ஷன்?"

"தீபக் செத்ததைப் பத்தி கொஞ்சம்கூட வருத்தம் இல்லை. ஆனா அவனுக்கு ஹெச். ஐ. வி. இருந்ததைப் படிச்சிட்டு அப்செட் ஆகிட்டா. எனக்கும் அந்தப் பாதிப்பு ஏற்பட்டிருக்குமோன்னு கேட்டா."

"நீ என்ன பதில் சொன்னே?"

"அப்படி எதுவும் இருக்காது. இருந்திருந்தா உன்னை டிஸ்சார்ஜ் செஞ்ச டாக்டர் உன்னோட மெடிக்கல் ரிப்போர்ட்ல அதை எழுதிருப்பாருன்னு சொன்னேன். ரிப்போர்ட்ல அதைப் பத்தி எழுதலைன்னு பொய் சொன்னேன்."

"நம்பிட்டாளா?"

"இல்லை. மெடிக்கல் ரிப்போர்ட்டைப் பார்க்கணும்னு சொன்னா. அவ தோட்டத்தில உக்கார்ந்திருக்கா. நான் இதோ எடுத்துட்டு வர்றேன்னு வந்து உங்களுக்கு போன் பண்ணிட்டிருக்கேன் டாக்டர்."

"நான் அங்க வர்றேன் திவ்யா. சத்யா இங்கதான் இருக்கான். என்னைப் பார்க்க வந்தான். அவனையும் அழைச்சிட்டு வர்றேன். ஆஷாகிட்ட பக்குவமா எடுத்துச் சொல்லிடலாம்."

"பயமா இருக்கு டாக்டர்."

"என்ன பயம்?"

"ஏற்கனவே மனசு வெறுத்து தற்கொலை செஞ்சிக்கப் பார்த்தவ. தனக்கு ஹெச்.ஐ.வி. இருக்குன்னு தெரிஞ்சா



அவளோட ரியாக்ஷன் என்னவா இருக்கும்னு புரியலை. இப்பத்தான் கொஞ்சம் சிரிக்க ஆரம்பிச்சா."

"கவலைப்படாதேம்மா. பக்குவமா சொல்றேன். இதுக்கு மேல மறைக்க வேணாம். அந்தப் பொண்ணுக்கு நிறைய அட்வைஸ் பண்ண வேண்டியிருக்கு. நாங்க வர்ற வரைக்கும் வேற ஏதாச்சும் பேச்சுக் கொடும்மா. அந்த மெடிக்கல் ரிப்போர்ட்டைக் காட்ட வேணாம்."

"சரி டாக்டர்" என்று போனை வைத்துவிட்டுத் திரும்பிய திவ்யா அதிர்ந்தாள்.

அவளுக்கு நேர் பின்னால் சற்று தூரத்தில் கைகளைக் கட்டியபடி நின்று கொண்டிருந்தாள் ஆஷா. அவளையே உற்றுப் பார்த்தாள். அவள் முகத்தில் எந்த உணர்ச்சிகளும் இல்லை.

இவள் எப்போது வந்தாள்? ஏதாவது கேட்டிருப்பாளா?

"ஆஷா, ஒரு முக்கியமான போன் செய்ய வேண்டியிருந்திச்சு."

"டாக்டர் கிரி என்ன சொன்னார்?" என்றாள் ஆஷா.

"ஒண்ணும் சொல்லலையே உன்னைப் பார்க்க வர்றேன்னார்."

"வந்து...?"

"இதென்ன கேள்வி. சும்மா வர்றார்."

"வந்து ... செத்துக்கிட்டிருக்கிற என்னை பிழைக்க வெச்சிடுவாரா?" விரக்தியின் வெறுப்பாக வந்து விழுந்தன அவள் வார்த்தைகள்.

மிரண்டு போனாள் திவ்யா.

"என்ன பேச்சு இதெல்லாம்?"

"தெரிஞ்சிருச்சிங்க திவ்யா. எல்லாம் தெரிஞ்சிருச்சு" என்ற திவ்யா அப்படியே சோபாவில் சாய்ந்து விட்டாள். தன் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு முகம் கவிழ்த்து, முதுகு குலுங்க அழத் துவங்கினாள்.

"ஆஷா ... ப்ளீஸ்...தைரியமா இரு." அவளருகில் அமர்ந்து அவளைத் தோளோடு அணைத்துக் கொண்டு ஆறுதல் சொல்ல வார்த்தைகள் கிடைக்காமல் பரிதவித்தாள் திவ்யா.

திவ்யா அழுகையினூடே, "ஏன் என்னை மெனக்கெட்டு காப்பாத்தினாங்க? இந்த மாதிரி அதிர்ச்சி எல்லாம் தெரிஞ்சுக்காமலே நான் செத்துப் போயிருப்பேனே நிம்மதியா" என்றாள்.

"ஏம்மா ஆஷா, நீ எதுக்கு சாகணும்? நீ எந்தத் தப்பும் செய்யலையேம்மா."

"தப்பு செஞ்சதோட விளைவாத்தானே எல்லா அசிங்கமும், அவமானமும்! பத்தாதுன்னு இப்போ எவ்வளவு பெரிய பாதிப்பு."

"இது நீ செஞ்ச தப்பு இல்லை ஆஷா—தீபக் செஞ்ச தப்பு! உன்னை நம்ப வச்சி கழுத்தறுத்துட்டான். அதுக்கான தண்டனையை அனுபவச்சிட்டான் ராஸ்கல்!"

"தண்டனை அவனுக்கில்லைங்க திவ்யா. நிம்மதியா ஒரே செகண்ட்ல செத்துட்டான். நான் அணு அணுவா



சாகப் போறேன் — இதான் தண்டனை. திமிர் எடுத்துப் போய் நல்லவனா, கெட்டவனான்னு புரிஞ்சுக்காம மனசைப் பறிகொடுத்து ... உடம்பையும் கொடுத்தேன் பாருங்க. அதுக்கான தண்டனை! மாடர்னா இருக்கிறதா நினைப்பு எனக்கு. 'கல்யாணத்துக்கு முன்னாடி செக்ஸ் வச்சிக்கிட்டா என்னடி தப்பு? இட் ஈஸ் எ மியர் ஃபன்!' அப்படின்னு தோளைக் குலுக்கிக்கிட்டு ஸ்டைலா என் ஃபிரண்ட்ஸ்கிட்ட நானே கேட்ருக்கேன் தெரியுமா? பெரியவங்க சில கட்டுப்பாடுகளை நிர்ணயிச்சதெல்லாம் முட்டாள் தனமா இல்லைங்க திவ்யா. பண்பாடு, கலாச்சாரம், கற்பு இதெல்லாம் பத்தாம்பசலித்தனம் இல்லை! வாழ்க்கைக்கு அத்தியாவசியமான கோட்பாடுகள்! இதைப் பட்டுத் தெரிஞ்சுக்கிட்டிருக்கேன். இப்ப தெரிஞ்சிக்கிட்டு என்ன பிரயோஜனம்? என் வாழ்க்கை போயிடுச்சே!"

மேலும் அழுதாள் ஆஷா.

அவள் தலையைத் தடவிக் கொடுத்தவாறு அமைதியாக இருந்தாள் திவ்யா.

காரில் டாக்டர் கிரியும், சத்யாவும் வந்தபோது, ஆஷா அழுகையை நிறுத்தி வெற்றுப் பார்வை பார்த்து, வறண்ட சிரிப்பை உதிர்த்தாள்.

"டாக்டர், ஆஷாவுக்குத் தெரிஞ்சிடுச்சி" என்றாள் திவ்யா. அங்கே சில நிமிடங்களுக்கு ஆழமான அமைதி உலவியது.

"டாக்டர்" என்றாள் மெதுவான குரலில் ஆஷா.

"என்னம்மா?"

"எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா?"

"என்ன உதவி செய்யணும், சொல்லு. அதுக்காகத் தான் வந்திருக்கேன். உன் வாழ்க்கையைச் சீரமைக்க வேண்டியது என்னோட பொறுப்பும்மா. நான் என்ன செய்யணும், சொல்லு."

"என் வாழ்க்கையை முடிச்சுத் தரணும். நான் அமைதியா, நிம்மதியா, நிரந்தரமா தூங்கறதுக்கு ஒரே ஒரு சுலபமான ஊசி போடுங்க டாக்டர்! கருணைக் கொலையா நினைச்சுக்கங்க."

"ஒரு டாக்டரோட வேலை அது இல்லைம்மா."

"இனிமே என்ன இருக்கு டாக்டர் என் வாழ்க்கையில?"

"என்ன இல்லைன்னு கேளு. இப்ப என்ன ஆகிப்போச்சு? ரோட்ல போற லட்சம் பேர்ல எத்தனை பேருக்கு இந்த நோய் இருக்குன்னு யாருக்கும்மா தெரியும்? உன் ரத்தத்தை சோதனை செஞ்சதால உனக்கு இந்தப் பாதிப்பு இருக்கிறது தெரிஞ்சது. தெரியாம எத்தனை லட்சம் பேரு வாழ்ந்துட்டு இருக்காங்க தெரியுமா? எய்ட்ஸ் பாதிப்புனால நடந்த மரணம்னு தெரியாமலேயே நாட்ல எத்தனை மரணங்கள் நடந்துட்டு இருக்கு தெரியுமா? உனக்குத் தெரிஞ்சி போச்சு அவ்வளவுதான் வித்தியாசம்.

நம்பிக்கையை வளர்த்துக்கணும் ஆஷா. இருக்கப்போற நாட்கள்ல என்ன உருப்படியா செய்யலாம்னு லட்சியங்களை அமைச்சிக்கணும். பாதிப்பாயிடுச்சேன்னு நொந்துபோற தால என்ன ஆயிடப்போகுது? இயற்கையா மரணம் நடக்கறப்போ நடந்துட்டுப் போகுது. அதுவரைக்கும் ஏதாச்சும் சாதிக்கலாமே ஆஷா.



யாராச்சும் மரணத்திலேர்ந்து விதி விலக்கு மரம் வாங்கிட்டு பொறந்து வந்திருக்காங்களா? உனக்காச்சும் மரண அறிவிப்பு கிடைச்சிருக்கு எத்தனை பேருக்கு எந்த அறிவிப்பும் இல்லாம திடீர்னு நடந்துடுது! சொஸைட்டி உன்னைப்பத்தி என்ன வேணும்னாலும் நினைச்சிட்டுப் போகுது! நீ இந்த சொஸைட்டி பத்தி அக்கறையோட நினைக்கலாம் ஆஷா. உதவியா இருக்கலாம். உனக்கு ஏற்பட்டிருக்கிற ஒரு தெளிவை. விழிப்புணர்ச்சியை உன்னால முடிஞ்சவரைக்கும் மத்தவங்களுக்குக் கொடுக்கறதுக்கு இந்த வாழ்க்கையை பயன்படுத்திக்கக் கூடாதா?"

"டாக்டர், இதெல்லாம் சொல்றது சுலபம் ஹெச். ஐ. வி. ங்கிற கொடுமையான கிருமி நமக்குள்ளே பரவிக்கிட்டிருக்கின்ற நினைப்போட எப்படி நிம்மதியா இருக்க முடியும்?" என்றாள் ஆஷா.

டாக்டர் கிரி புன்னகைத்து. "முடியும் ஆஷா. மனசுல உறுதியும், நம்பிக்கையும் இருந்தா முடியும். ஏழு வருஷமா நான் அப்படித்தான் இருக்கேன்" என்றார்.

சத்யா அதிர்ந்துபோய் அவரைப் பார்த்தான்.

## 27

வரலாறும், அனுபவமும் நமக்குக் கற்றுத் தருவது இதுதான். வரலாற்றிலிருந்தும், அவை தரும் பாடங்களிலிருந்தும் எந்த நாடும், அரசாங்கமும் எதையும் கற்றுக் கொள்ளவுமில்லை, அதன் படி நடப்பதும் இல்லை.

—ஜி. டபிள்யூ. எஃப். ஹெகல்

டாக்டர் கிரி அமைதியாகச் சொன்ன அந்த வார்த்தைகள் சத்யா, திவ்யா, ஆஷா மூவரையும் உலுக்கி விட்டன.

அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தார்கள்.

கிரி மெதுவாக மூவரையும் பார்த்தார். பேசினார்.

"நான் சொன்னது உங்களுக்கெல்லாம் அதிர்ச்சியா இருக்கா? ஆனா அது உண்மை. நான் ஒரு ஹெச்.ஐ.வி. மேன்? எனக்குள்ளே ஏழு வருஷத்துக்கு முன்னால மெதுவா நுழைஞ்ச அந்தக் கிருமி நல்லா வேர்விட்டு வளர்ந்துகிட்டிருக்கு. இன்னும் ரெண்டு மூணு வருஷத்தில நான் எய்ட்ஸ் பேஷண்ட்!"

"டாக்டர்!" என்றான் சத்யா உலர்ந்த குரலில்.

"ஏழு வருஷம் முன்னாடி எனக்கு ஒரு ஸ்கூட்டர் ஆக்ஸிடெண்ட். லாரிக்காரன் அடிச்சிட்டு நிறுத்தாமப் போயிட்டான். யாரோ இரக்கப்பட்டவங்க பார்த்து ஹாஸ்பிடல்ல சேர்த்தாங்க. ஏராளமான ரத்தம் போயிடுச்சின்னு எனக்கு அவசரமா ரெண்டு பாட்டில் ரத்தம் ஏத்தினாங்க, அது சரியா பரிசோதனை செய்யப்படாத ரத்தம். அந்த ஆக்ஸிடெண்ட்லேர்ந்து நான் பொழைச்சி ரெண்டு மூணு மாசம் கழிச்சி நான் சந்தேகத்துக்கு ஒரு பரிசோதனை பண்ணிக்கலாமேன்னு என் ரத்தத்தைப் பரிசோதனை பண்ணிக்கிட்டேன். அப்பதான் என் ரத்தத்தில் ஹெச்.ஐ.வி. இருக்கிறது தெரிய வந்தது. என்னதான் டாக்டரா இருந்தாலும், நானும் மனுஷன் தானே?

ரொம்ப அப்செட் ஆயிட்டேன். பைத்தியம் பிடிச்ச மாதிரி ஆயிடுச்சி. நானோ கல்யாணமானவன். என் மூலமா என் மனைவிக்கும் இந்த ஹெச்.ஐ.வி. பரவிடக்கூடாதேங்கிற கவலை பெரிய கவலையாயிடுச்சி. அப்பதான் இந்த எய்ட்ஸ்



பத்தியும், ஹெச்.ஐ.வி. பத்தியும் நிறைய படிச்சேன். இதில ஸ்பெஷலைஸ் செஞ்ச டாக்டர்களைச் சந்திச்சேன். முதல்ல நான் தைரியப்படுத்திக்கிட்டேன். என் வைஃப் வருஷத்தில ரெண்டு தடவை ரத்த தானம் செய்வா. அதுக்கு முன்னாடி அவ ரத்தத்தை நான் சோதிச்சு பார்த்தேன். நல்ல வேளையா அவளுக்கு எங்கிட்டேர்ந்து ஹெச்.ஐ.வி. பரவலை. பேற்கொண்டு பரவிடாம எப்படி தாம்பத்யம் நடத்தணும்னு டாக்டர்ஸ்கிட்ட தெரிஞ்சிக்கிட்டு இந்த ஏழு வருஷமா எச்சரிக்கையா நடந்துகிட்டிருக்கேன்."

"அப்படின்னா உங்களுக்கு ஏற்பட்டிருக்கிற இந்தப் பாதிப்பு பத்தி அவங்களுக்கு..."

"இந்த நிமிஷம் வரைக்கும் தெரியாது. நான் தெரிவிக்க விரும்பலை. நான் கமர்ஷியலா பிராக்டிஸ் பண்றதை நிறுத்திட்டு எய்ட்ஸ் ஆராய்ச்சில இறங்கி ரிசர்ச் பண்ணிட்டிருக்கிறதுக்கு அவ எந்த எதிர்ப்பும் சொல்லலை. அநாவசியமா அவளுக்கு உண்மையைத் தெரிவிச்சி அதிர்ச்சித் தர நான் விரும்பலை. தெரிய வர்றப்போ தெரிய வரட்டும். என் மனைவியோட வாழ்க்கைக்குத் தேவையான சொத்துக்களை முறையா ஒதுக்கி வெச்சிட்டேன். உயில் ரெடி. மரண தேவதை வாடாப்பான்னு கூப்பிடற வரைக்கும் எய்ட்ஸ் ரிசர்ச்சும், எய்ட்ஸ் பத்தின விழிப்புணர்ச்சியை முடிஞ்ச அளவுக்கு நிறைய மக்களுக்கு ஏற்படுத்தறதையும் லட்சியமா வெச்சிக்கிட்டு வாழ்ந்துடறதுன்ற தீர்மானத்தில என் வேலைகளைத் தொடர்ந்துகிட்டிருக்கேன். உண்மை தெரிஞ்சப்போ ஒரு மாசத்துக்கு குழப்பமா இருந்திச்சி. அப்புறம் அந்த உண்மையை ஆணித்தரமா ஏத்துக்கிட்டப்

புறம் பயம், படபடப்பு எல்லாம் போயிடுச்சி. இப்ப என் மனசு இந்த விநாடிகூட மரணத்தைச் சந்திக்கத் தயாரா இருக்கு.''

சத்யாவின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

அவன் டாக்டரை நெருங்கி அவர் கைகளைப் பற்றிக் கொண்டு குரல் நடுங்க, ''டாக்டர், யு ஆர் கிரேட். யு ஆர்...'' என்றான்.

''நான் எதுவுமே செய்யலை. உண்மையை எதிர்த்துப் பிரயோஜனமில்லைன்னு புரிஞ்சுக்கிட்டேன். அதை ஆழமா ஏத்துக்கிட்டேன். பிறவியிலேயே கண் பார்வை இல்லாம பிறந்து வளர்றவங்களை நினைச்சுப் பாரு சத்யா. பார்வைன்னா என்னன்னு அவங்களுக்கு அறிவு ரீதியா தெரிஞ்சு, உணர்வா தெரியாதப்போ என்ன ஒரு தவிப்பும், ஏக்கமும் இருக்கும். அது எத்தனை நாளைக்கு இருக்கும்? வாழ்க்கை பூராவா? இல்லை! அந்த உண்மையை அழுத்தமா ஏத்துக்கற வரைக்கும்தான். அந்த மாதிரிதான் நான் செஞ்சதும்'' என்ற கிறி அமர்ந்து கொண்டார்.

திவ்யாவுக்கு கண்கள் பளபளத்தன.

ஆஷா டாக்டரை நெருங்கினாள். அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளை நிமிர்ந்து பார்த்தார்.

''என்னம்மா ஆஷா அப்படிப் பார்க்கறே?''

''எனக்கு இப்ப கொஞ்சம் கலக்கம் போயிருக்கு டாக்டர். ஒரே செகண்ட்ல உயிரைப் போக்கிக்கத் தயாரா இருந்த நான் இப்ப எதுக்காக மரணத்தை நினைச்சுக்



கவலைப்படறேன்? இது அபத்தம் இல்லையா? இனிமே கலங்கறதில்லைன்னு தீர்மானிச்சிட்டேன் டாக்டர். ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருக்கு டாக்டர். லட்சியங்களை ஏற்படுத்திக்கிட்டு அதை நோக்கி செயல்பட்டுக்கிட்டு இருக்கணும்னு தோணுது டாக்டர். தேங்க் யூ டாக்டர். மறுபடி சாகத் துணிஞ்சதுக்கு வெக்கப்படறேன். வெக்கப்பட வெச்சதுக்கு தேங்க் யூ.''

ஆஷா அவர் கால்களில் விழ... அவள் தோளைத் தொட்டுத் தூக்கினார் டாக்டர்.

''எந்திரிம்மா. தைரியமா இரு. நம்பிக்கையா இரு. சத்யா, நீ ஆஷாவோட ஊருக்குப் போய் அவுங்க செஞ்சிருக்கிற கல்யாண ஏற்பாட்டை நிறுத்தச் சொல்லு. பொருத்தமா காரணம் ஏதாவது சொல்லு. இதைச் சொல்ல வேணாம்'' என்றார் டாக்டர்.

''கல்யாண ஏற்பாடா?'' என்றாள் ஆஷா.

''ஆமாம் ஆஷா. உனக்கு ஒரு லெட்டர் போட்டிருக்காரு உங்கப்பா. படிச்சுப் பாரு.''

சத்யா அந்தக் கடிதத்தை பாக்கெட்டிலிருந்து எடுத்துத் தர...அதை எடுத்துப் படித்தாள்.

சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்த ஆஷா, ''நானே ஊருக்குப் போறேன் டாக்டர். என் குடும்பத்துக்கு நான் எதையும் மறைக்க விரும்பலை. நடந்த எல்லாத்தையும் சொல்லத்தான் போறேன். இப்ப எனக்கு ஏற்பட்டிருக்கிற நிலையையும் சொல்லிடறேன். உண்மையை ஜீரணிச்சுத்தான் ஆகணும் அவங்க.''

“அவசரப்படாதே ஆஷா” என்றாள் திவ்யா. “உன் மனசு பக்குவப்படலாம். உன் குடும்பத்திலே இருக்கிற எல்லாருக்கும் பக்குவப்படணும்னு எதிர்பார்க்கறது சரி யில்லை. உன் குடும்பம் உன்னை வெறுத்து ஒதுக்கலாம். உன்னை வீட்ல இருக்க அனுமதிக்காமக் கூடப் போகலாம்.”

“இனி நான் வீட்ல இருக்கப் போறதில்லைங்க திவ்யா. உண்மையை எடுத்துச் சொல்லிட்டு வந்துடுவேன். மெட்ராசுக்கு வந்து டாக்டர் சாரோட முயற்சிகளுக்கு என்னால முடிஞ்ச உதவிகளைச் செய்துகிட்டு, இருக்கப் போறேன். எய்ட்ஸ் விழிப்புணர்வை பரப்பற சமூகப் பணியில என்னை முழுமையா ஈடுபடுத்திக்கப் போறேன். டாக்டர் இதுக்கு என்னை நீங்க அனுமதிப்பீங்களா, ப்ளீஸ்...?”

டாக்டர் மெல்ல அவள் தலையைத் தடவி, “சமூகப் பணி செய்றதுக்கு யாரோட அனுமதியும் தேவை யில்லைம்மா” என்றார்.

ஃ ஃ ஃ

கடற்கரையில் திவ்யாவும், சத்யாவும் மணல்வெளியில் அமர்ந்திருந்தார்கள். சரம் சரமாக அலைகள் வந்து கொண்டேயிருந்தன. மாலைச் சூரியனின் சிகப்புத் தீற்றல் களுடன் வானம் நிறம் இழந்து கொண்டிருந்தது.

சத்யா அலைகளைப் பார்த்தான்.

திவ்யா அலைகளைப் பார்த்தாள்.

பிறகு இருவரும் மௌனமாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.



“திவ்யா, டாக்டர் வாழ்க்கைல இப்படி ஒரு சோகத்தை நான் எதிர் பார்க்கவே இல்லை. அவரை மாதிரி வயசு வித்தியாசமில்லாம கலகலப்பா பழக முடியாது. எத்தனை பேர் சுத்தியிருந்தாலும் எல்லாரையும் சிரிக்க வைச்சிட்டே இருப்பார். சில வருஷங்கள்ல அவரை இழக்கப் போறோம்னு நினைக்கிறப்போ எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்குங்க.”

“என்ன பண்றது? தட் ஈஸ் லைஃப். ஆதாம்-ஏவாள் இந்த உலகம் ஆரம்பிச்சப்போ எந்தக் கவலையும், பிரச்சினையும் இல்லாமத்தான் இருந்தது. மனித சக்தி வளர வளர, ஆக்கபூர்வமா, அழிவுபூர்வமா... ரெண்டு பக்கமுமே நிறைய கண்டு பிடிச்சாச்சு. இன்னைக்கு சமூகத்துக்கு தொண்டு செய்ற உள்ளங்கள் நிறைய தேவைப் படுது சத்யா.”

“ஆனா பாதிக்கப்பட்டவங்கதான் சமூகப் பணியில இறங்கணும்னு இல்லை. யாரும் இறங்கலாம். மனசுல அன்பு கசிஞ்சா போதும்.”

“சத்யா, என்னால முடிஞ்ச ஒரு சின்ன வேலை செய்யப் போறேன். அதுக்கு உங்க உதவி வேணும்.”

“என்னங்க திவ்யா?”

“பாரதியாரைப் பத்தி டாகுமெண்ட்ரி படம் எடுக்கற ப்ளான் பத்தி சொன்னனே. அந்த சப்ஜெக்ட்டை மட்டும் மாத்திடலாம். ஹெச்.ஐ.வி. எய்ட்ஸ் பத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தற மாதிரி படம் எடுக்கலாம்னு ஐடியா...”

"என் முழு நேரத்தையும் இதுக்கு ஒதுக்கிடப்போறேன் திவ்யா."

"இந்தப் படம் எடுத்து திரையிட்டப்புறம்..."

"திரையிட்டப்புறம்?"

"உங்ககிட்ட ஒண்ணு சொல்லணும்."

"என்ன?"

அவள் பதில் சொல்லவில்லை. குறுகுறுப்பாக அவனைப் பார்த்தாள். அவனுக்குப் புரிந்தது.

"காத்துக்கிட்டிருக்கேன்" என்றான்.

"எதுக்கு?"

"சீக்கிரம் இந்த ப்ராஜெக்ட் ஆரம்பிக்கிறதுக்கு", என்றான்.

இருவரும் பார்வைகளை நகர்த்தி அலைகளைப் பார்த்தார்கள். ஓய்வில்லாமல் அவை தொடர்ந்து கரை நோக்கி வந்து கொண்டேயிருந்தன. வானத்தில் இன்னும் கொஞ்சம் இருட்டு சேர்ந்திருந்தது. கலங்கரை விளக்கத்தின் சக்தி வாய்ந்த விளக்கு எரியத் துவங்கி சுழலத் துவங்கியது. அந்த வெளிச்சக் கத்தி இருட்டை வெட்டி நகர்ந்து கொண்டிருந்தது.

★